நலக்கவளித் தெனக்கணவன் மொழிகடவா விருந்தோம்பு
நலஞ்சால் சீர்த்தி
இலக்குமியாம் பெண்ணரசி யீன்றெடுத்த தனிப்பால
னின்னுங் கேண்மின். (௯)

நலமருவு வாய்மைமுதற் பலகுணமு நிறைந்துசிவ
ஞானம் பத்தி
இலகுறப்பூண் டகங்கார மறவிடுத்துத் துலாக்கோலி
னியல்பி தென்ன
நிலமிசையோர் புகழ்ந்துரைப்ப நீதிபதி யதிகார
நிகழ்த்து சீரான்
வலமருவு தணிகேச னடிபணிசுப் பிரமணிய
மகிபன் றானே. (௧௦)

உ

முருகமயம்.

வெற்றிவே லுற்ற துணை.

திருப்புகழ்ச் சிறப்புப் பாயிரம்.

[இப்பாயிரம் பூர்வத்துள்ள அபியுக்தர்களாற் செய்யப்பட்டுப் புராதன பிரதிகளில் எழுதி வழங்கிவருவது.]

நூற் சிறப்பு.

எல்லாரு ஞானத் தெளிஞரே கேளீர்சொல்
கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ—பொல்லாக்
கருப்பூகழைக் கேட்குமோ கானமயில் வீரன்
திருப்புகழைக் கேட்குஞ் செவி. (க)

மாணிக்கம் பூண்பார்க்கு மற்றொருகல் வேண்டுமோ
ஆணிப்பொன் கையுறுவார்க் கையுறவேன்—பேணிப்பின்
செவ்வேல் விநோதன் திருப்புகழ்சிந் தித்திருப்பார்க்
கெவ்வேலை வேண்டு மினி. (உ)

சீராந் திருப்புகழைச் செவ்வேள்மே லன்பாக
ஆராய்ந் துரைத்தான் அருணகிரி—நேராக
அந்தப் புகழை யநுதினமு மோதாமல்
எந்தப் புகழோது வீர். (ங)

அருணகிரி நாத னகிலதலத் துன்னைக்
கருணையினாற் பாடுங் கவிபோற்—பிரியமுற
வேறுமோர் புன்கவிகள் வேலோனே நின்செவியி
லேறுமோ என்னே யினி. (ச)

ஆனைமுக வற்கிளைய ஐயா அருணகிரி
தேனனைய சொல்லான் திருப்புகழை—யானினைந்து
போற்றிடவு நின்னைப் புகழ்ந்திடவும் பொற்கமலஞ்
சாத்திடவு மோதிடவுந் தா. (ரு)

திருப்புகழ்ச் சிரவணத்தால் வேதார்த்தர்தி அனைத்தும் அறியலாம்; ஆதலால் அதனையே கேட்க என்றது.

வேதம்வேண் டாஞ்*சகல வித்தைவேண் டாங்கீத
நாதம்வேண் டாம்ஞான நூல்வேண்டாம்—ஆதி
குருப்புகழை மேவுகின்ற கொற்றவன்தாள் போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம். (௬)

நூற் பயன்.

ஞானம் பெறலாம் நலம்பெறலாம் எந்நாளும்
வானம் அரசாள் வரம்பெறலாம்—மோனவீ
டேறலாம் யானைக் கிளையான் திருப்புகழைக்
கூறினார்க் காமேயிக் கூறு. (௭)

ஆறுமுகந் தோன்றும் அழகியவேல் தோன்றுமவன்
ஏறுமயில் தோன்று மெழில்தோன்றும்—சீறிவரு
சூரன் முடியைத் துணித்தோன் திருப்புகழைப்
பாரில் வழுத்தினோர் பால். (அ)

அன்பர் வினவ ஆண்டவன் விடையருளியதாக மேலயதை வற்புறுத்தியது.

பொருப்பது பொடிப்பட விடுத்திடுகை வேலா
இருப்பிட முனக்கெது எனக்கரு ளியம்பாய்;
உருக்கநல் விழுக்குல மொழுக்கமில ரேனுந்
திருப்புகழ் படிப்பவர் மனத்தினி திருப்பாம். (௯)

அங்ஙனம் அருளக்கேட்ட அன்பர் ஆண்டவனை நோக்கிக் கூறியதாகத் திருப்புகழ் படிப்போர் தீரங் கூறியது.

திருப்புகழ் படிக்குமவர் சிந்தைவலு வாலே
ஒருத்தரை மதிப்பதிலை யுன்றனரு ளாலே
பொருப்புக மிகப்பொருது வென்றுமயில் மீதே
தரித்தொரு திருத்தணியில் நின்ற பெருமாளே. (௧௦)

---

* சகல வித்தை=அறுபத்து நான்கு கலைஞானங்கள்.

நூலாசிரியர் பெயரோடு நூற்பண்பும் பெயரும் உணர்த்தி அதனைத் துதிப்போர் பேறுங் கூறியது.

ஓராறு மாமுகனும் உச்சிதமெய்ஞ் ஞானகுகன்
போரால் அருணகிரி பேருலகிற்—சீராருந்
தோத்திரம தாகத் துதிக்குந் திருப்புகழை
ஏத்தினவ ரீடேறு வார். (கக)

வள்ளிமணவாளன் மயிலேறும் வள்ளல்தனைத்
தெள்ளுதமி ழாற்புனைந்து சீர்பெறவே—உள்ளபடி
வைப்பாம் அருணகிரி வாழ்த்துந் திருப்புகழைக்
கற்பார் கரையேறு வார். (கஉ)

திருப்புகழ் இன்ன இன்னதற்கு இன்ன இன்னதாம் எனல்.

அருணகிரி நாதர்பதி னாறு யிரமென்
றுரைசெய் திருப்புகழை யோதீர்—பரகதிக்கஃ
தேணி யருட்கடலுக் கேற்ற மனத்தளர்ச்சிக்
காணி பிறவிக் கரம். (கங)

திருப்புகழ் வழிபாட்டாற் கூற்றையும் வெல்லலாம் எனக் கெடிபெற உரைத்தது.

திருப்புகழைக் கற்கத் திருப்புகழைக் கேட்கத்
திருப்புகழை நித்தஞ் செபிக்கத்—திருப்புகழை
அர்ச்சிக்க முத்தியெளி தாகுமே கூற்றைவென்று
கெர்ச்சிக்க லாமே கெடீ. (கச)

திருப்புகழின் பிரபாவம்.

மடங்க னடுங்குந் தனைச்சுடு மீதென்று மாதிரத்தோர்
அடங்கி நடுங்குவர் சூலாயுதமென் றசுரர்கடல்
ஒடுங்கி நடுங்குவர் வேலா யுதமென் றுரகனுங்கீழ்க்
கிடங்கி னடுங்கு மயிலோன் திருப்புகழ் கேட்டளவே. (கரு)

திருப்புக ழடியார் பெருமை.

திருப்புகழ் வல்ல சுரர்மகள் நாயகன் சங்கரற்குக்
குருப்புகழ் வல்ல குமரேசன் ஷண்முகன் குன்றெறிந்தோன்
மருப்புகழ் வல்ல அருண கிரிபெயர் வள்ளல்சொன்ன
திருப்புகழ் வல்லவர் சீர்பாதத் தூளியென் சென்னியதே. (கசு)

திருப்புகழ்ச் சிறப்புப் பாயிரம் முற்றிற்று.

☞ புத்தகத்தைப் படிக்கத் தொடங்குமுன் பின்வரும் திருத்தங்களைச் செய்துகொள்க. எழுத்துச் சிதைவினாலும் அச்சுப் பிறழ்வினாலும் சிற்சில இடங்களி லுண்டான பிழைகளை ஆங்காங்குத் தக்கவாறு திருத்திக்கொள்க.

பிழை திருத்தம்.

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
அ௱	103	13	ராவி	ராலி
௱கரு	,,	9	நல்லத்தம்	நாலாட்டின்
௱கஎ	,,	2	5 மைல்	9 மைல்
,,	,,	2,3	மேல்	அடிவாரத்தில்

இரண்டாம் பாகத்தில் பேறைநகர் 726 - ஆம் பாடல்பெற்றது. குன்றுதோறாடல் ஸ்தலங்களுள் ஒன்றாதலின் இம் முதற்பாகத்தில், திருக்கழுக்குன்றத்துக்குப் பின்னும் மயிலத்துக்கு முன்னுமாகக் சொள்ளப்படல் வேண்டும்.

* முருகக் கடவுள் துதி.

ஆசிரிய விருத்தம்.

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
    ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
    குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
    வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
    *ஆதியம ராவதிய மர்ந்தபெரு மாளே.

வேலு மயிலுந் துணை.

---

* 'ஆதி யருணசல மமர்ந்த பெருமாளே'—என்றும் பாடம்.

உ

கணபதி துணை.

திருத்தணிகேசன் துணை.

சிவமயம்.

அருணகிரிநாதர் அருளிச்செய்த

திருப்புகழ்.

விநாயகர் துதி.

கைத்தல *நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்-
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்;
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை-
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே;
முத்தமி ழடைவினை †முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே-
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா;
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை ‡யிபமாகி-
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே. (க)

---

* 'நிறையுவல் முப்பழ மொடுபொரி' என்றும் பாடம்.

† முற்படு கிரி = மேரு மலை.

‡ இபம் = யானை.

இதன் முடிபு.

கரிமுகன் அடிபேணி...அடியவர் புத்தியி லுறைபவ! கற்பகம்! என, வினை...எகும். (ஆதலால் யான்)...அரன்மகன்...மதயானை, (ஆகிய) மத்தள வயிறனை, உத்தமி புதல்வனை ... மலர்கொடு பணிவேன். (என்செய்து, எதன்பொருட்டுப் பணிவேன் எனில்)... முதல்வோனே!...அதிதீரா!...பெருமாளே! (எனத் துதிசெய்து, எடுத்துக்கொண்ட துதினூ லாகிய இப் பிரபந்தம் இடையூ றின்றி யினிது முடிதற்பொருட்டுப் பணிவேன் என்க.)

---

*உம்பர்தருத் தேநுமணிக் கசிவாகி—
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி;
இன்பரசத் தேபருகிப் பலகாலும்—
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே;
தம்பிதனக் காகவனத் தணைவோனே—
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே;
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே—
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே. (உ)

†பக்கரைவி சித்ரமணி பொற்‡கலணை யிட்டநடை
பக்ஷியெனு முக்ரதுர கமுநீபப்-
பக்குவம லர்த்தொடையும் அக்குவடு பட்டொழிய
பட்டுருவ விட்டருள்கை வடிவேலும்;
திக்கதும திக்கவரு குக்குடமும் ரக்ஷைதரு
சிற்றடியு முற்றியப னிருதோளும்-
§செய்ப்பதியும் வைத்துயர்தி ருப்புகழ்வி ருப்பமொடு
செப்பென எனக்கருள்கை மறவேனே;

---

* உம்பர்தரு = சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிஜாதம், கற்பகம் என்னும் ஐவகைத் தெய்வத விருக்ஷங்கள். தேநு = காமதேநு என்னும் தெய்வப் பசு. மணி = சிந்தாமணி யென்னும் தெய்வத ரத்நம். இம் மூன்றும் தம்மை யடைந்தோர்க்கு அவர்கள் விரும்பிய பொருள்களைத் தரவல்லன.

† பக்கரை = அங்கவடி. ‡ கலணை = கல்லணை: குதிரைச்சேணம்.

§ செய்ப் பதி = வய லூர்.

*இக்கவரை நற்கனிகள் சர்க்கரைப ருப்புடனெய்
எட்பொரிய வற்றுவரை யிளநீர்†வண்-
டெச்சில்பய றப்பவகை பச்சரிசி பிட்டுவெள
ரிப்பழமி டிப்பல்வகை தனிமூலம்;

மிக்கஅடி சிற்கடலை பக்ஷணமெ னக்கொளொரு
விக்கிநச மர்த்தனெனு மருளாழி-
வெற்பகுடி லச்சடில விற்பரம ரப்பரருள்
வித்தகம ருப்புடைய பெருமாளே. (௩)

விடமடைசு வேலை யமரர்படை சூலம்
விசையன்விடு பாண மெனவேதான்-
விழியுமதி பார விதமுமுடை மாதர்
வினையின்விளை வேது மறியாதே;

கடியுலவு பாயல் பசலிரவெ னூது
கலவிதனில் மூழ்கி வறிதாய-
கயவனறி வீன னிவனுமுயர் நீடு
கழலிணைகள் சேர அருள்வாயே;

இடையர்சிறு பாலை திருடிகொடு போக
இறைவன்மகள் வாய்மை யறியாதே-
இதயமிக வாடி யுடையபிளை நாத
கணபதியெ னுமை முறைகூற;

அடையலவ ராவி வெருவஅடி கூர
அசலுமறி யாம லவரோட-
அகல்வதென டாசொ லெனவுமுடி சாட
அறிவருளும் ஆனை முகவோனே. (௪)

நினது திருவடி சத்திம யிற்கொடி
நினைவு கருதிடு புத்திகொ டுத்திட
நிறைய அமுதுசெய் முப்பழ மப்பமு நிகழ்பால்தேன்-

---

* இக்கு + அவரை; இக்கு = கரும்பு.

† வண்டு எச்சில் = தேன்.

நெடிய வளைமுறி யிக்கொடு லட்டுகம்
நிறவி லரிசிப ருப்பவ லெட்பொரி
நிகரி லினிகத லிக்கனி வர்க்கமு மிளநீரும்;

மனது மகிழ்வொடு தொட்டக ரத்தொரு
மகர சலநிதி வைத்தது திக்கர
வளரு கரிமுக வொற்றைம ருப்பனை வலமாக-

மருவு மலர்புனை *தொத்திர சொற்கொடு
வளர்கை குழைபிடி †தொப்பண குட்டொடு
வனச பரிபுர பொற்பத அர்ச்சனை மறவேனே;

தெனன தெனதென தெத்தென னப்பல
‡சிறிய அறுபத மொய்த்துதி ரப்புனல்
திரளு முறுசதை பித்தநி ணக்குடல் செறிமூளை-

செருமு வுதரநி ரப்புசெ ருக்குட
னிரைய வமவநி றைத்தக ளத்திடை
திமித திமிதிமி மத்தளி டக்கைகள் செகசேசே;

எனவெ துகுதுகு துத்தென வொத்துகள்
துடிக ளிடிமிக வொத்துமு ழக்கிட
டிமுட டிமுடிமு டிட்டிமெ னத்தவி லெழுமோசை-

இகலி யலகைகள் கைப்பறை கொட்டிட
இரண பயிரவி சுற்றுந டித்திட
எதிரு நிசிசர ரைப்பெலி யிட்டருள் பெருமாளே. (௫)

---

* தொத்திர சொற்கொடு=தோத்திர சொல் கொண்டு.

† தொப்பணம்=தோப்பணம்: தோப்புக்கரணம்.

‡ சிறிய அறுபதம்=ஈ.

பொன்னைத் தணிகைமி
னின்றாங் கெழுபுவி
யென்றுஞ் செயவல்
பெருமானை
வள்ளியம்மை
தெய்வயானையம்மை

உ

சிவமயம்.

திருப்புகழ்.

நூல்.

1. *முத்தைத்தரு பத்தித் திருநகை
†அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்—
முக்கட்பர மற்குச் ‡சுருதியின்
முற்பட்டது கற்பித் §திருவரு
முப்பத்துமு வர்க்கத் தமரரு மடிபேணப்;

பத்துத்தலை தத்தக் கணை ||தொடு
ஒற்றைக் ¶கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியி லிரவாகப்-
oபத்தற்கிர தத்தைக் கடவிய
$பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பக்ஷத்தொடு ரக்ஷித்தருள்வது மொருநாளே;

---

* 'முத்தைத் தரு' என்னும் இச் செய்யுள் அருணகிரிநாதர் ஆதியில் அருளிச் செய்ததாக ஆன்றோர் வரைந்து வழங்கி வருதலின் முதலில் வைக்கப்பட்டது.

'முத்தித்தரு பத்தித் திருநகை' என்றும் பாடம்.

† அத்தி=தெய்வயானை. ‡சுருதியின் முற்பட்டது=பிரணவம்.

§ இருவர்=பிரம விஷ்ணுக்கள்.

|| தொட்டு எனற்பாலது தொடு எனத் தொகுக்கப்பட்டது.

¶ கிரி மத்தைப் பொருது=மந்தரகிரியாகிய மத்தைக்கொண்டு (திருப்பாற்கடலைக்) கடைந்து.

o பத்தன்=அருச்சுனன்.

$ பச்சைப் புயல்=விஷ்ணு.

திக்கித்தெது வொத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு *கழுதாடத்-

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக எனவோதக்;

கொத்தும்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை-

கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே.

இதன் முடிபு.

அத்திக்கிறை! ... சரவண!... குருபர! எனவோதும் பரமற்கு...கற்பித்து, இருவரும்...அமரரும் அடிபேண,...பயிரவி நடிக்க,...கழுது ஆட,...அட்ட பயிரவர்.. ஓத, பறை கொட்ட,... கூகை புக்குப் பிடி யென,...அவுணரை வெட்டிப் பலியிட்டு,...கிரி குத்துப்பட...பொரவல பெருமாளே!...தலைதத்தக் கணைதொட்டு, ... கிரிமத்தைப் பொருது, ... பகல்...இரவாக ... இரதத்தைக் கடவிய பச்சைப்புயல் மெச்சத்தகு பொருளே! (நீ எளியேனை) ரக்ஷித்தருளும் ஒருநாளும் உளதோ?

---

* கழுது=பேய்.

முருகக்கடவுளின் முக்கிய திருப்பதிகள் ஆறனுள்

முதலாவது

திருப்பரங்குன்றம்.

[மதுரைக்குத் தென்மேற்கு 4-மைல். சம்பந்த ஸ்வாமிகள் சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் இவர்களுடைய பாடல் பெற்றது. முருகக் கடவுள் தெய்வயானையம்மையை மணந்த ஸ்தலம். தீர்த்தம்—சரவணப் பொய்கை. மலைவலம் வரலாம். நக்கீரதேவர் பூதத்தாற் குகையி லடைக்கப்பட அவர் திருமுருகாற்றுப்படை பாடி வேலாயுதத்தி னுதவியாற் குகையினின்றும் வெளிவந்த அரும்பதி. நிரம்பவழகியர் பாடிய ஸ்தலபுராணமொன் றுளது.]

---

2. கனகந்திரள் கின்றபெ ருங்கிரி
தனில்வந்துத கன்தக னென்றிடு
கதிர்மிஞ்சிய செண்டை யெறிந்திடு கதியோனே-

கடமிஞ்சி யநந்த விதம்புணர்
கவளந்தனை யுண்டு வளர்ந்திடு
கரியின்றுணை யென்று பிறந்திடு முருகோனே ;

பனகந்துயில் கின்ற திறம்புனை
கடல்முன்பு கடைந்த பரம்பரர்
படரும்புய லென்றவ ரன்புகொள் மருகோனே-

பலதுன்ப முழன்று கலங்கிய
சிறியன்புலை யன்கொலை யன்புரி
பவமின்று கழிந்திட வந்தருள் புரிவாயே ;

அனகன்பெயர் நின்றுரு ளுந்திரி
புரமுந்திரி வென்றிட வின்புடன்
அழலுந்தந குந்திறல் கொண்டவர் புதல்வோனே-

அடல்வந்து முழங்கி யிடும்பறை
டுடுடுண்டுடு டுண்டுடு டுண்டென
அதிர்கின்றிட அண்ட நெரிந்திட வருசூரர் ;

மனமுந்தழல் சென்றிட வன்றவ
　　ருடலுங்குட லுங்கிழி கொண்டிட
　　மயில் *வென்றனில் வந்தரு ளுங்கன　　பெரியோனே-
ஊதியுங்கதி ருந்தட வும்படி
　　யுயர்கின்ற வனங்கள் பொருந்திய
　　வளமொன்று பரங்கிரி வந்தருள்　　பெருமாளே. (க)

3. சீருவும்படி †வந்தன னிங்கித
　　மதனின்றிட அம்புலி யுஞ்சுடு
　　தழல்கொண்டிட மங்கையர் கண்களின்　　வசமாகி
சயிலங்கொளு மன்றல் பொருந்திய
　　பொழிலின்பயில் தென்றலு மொன்றிய
　　தடவஞ்சனை துன்றி யெழுந்திட　　திராமாவே;
இரவும்பக லந்தியு நின்றிடு
　　குயில்வந்திசை தெந்தன வென்றிட
　　இருகண்கள் துயின்றிட லின்றியும்　　அயர்வாகி-
இவனெஞ்சு ‡பதன்பத னென்றிட
　　மயல்கொண்டுவ ருந்திய வஞ்சகன்
　　இனியுன்றன்ம லர்ந்தில ரும்பதம்　　அடைவேனோ;
திருவொன்றிவி ளங்கிய §அண்டர்கள்
　　மனையின்தயி ருண்டவ னெண்டிசை
　　திகழும்புகழ் கொண்டவன் ‖வண்டமிழ்　　பயில்வோர்பின்-

---

*வென் = முதுகு.

†வந்தனன் என்பது வந்து என்னும் பொருளைத் தரும் முற்றெச்சம்.

‡ பதன்பத னென்றிட = பதைபதைக்க.

§ அண்டர்கள் = இடையர்கள்.

‖ வண்டமிழ் பயில்வோர்பின் திரிகின்றவன் என்றது,

“கணிவண்ணன் செல்கென்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டாம் — துணிவொன்றிச்
செந்நாப் புலவோன்யான் செல்கின்றே னீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்” என்ற திருமழிசை
யாழ்வார் பின் சென்றதை.

திரிகின்றவன் மஞ்சு நிறம்புனை
பவன்மிஞ்சுதி றங்கொள வென்றடல்
ஜெயதுங்க முகுந்தன் மகிழ்ந்தருள் மருகோனே;

மருவுங்கடல் துந்துமி யுங்குட
முழவங்கள்கு மின்குமி னென்றிட
வளமொன்றிய செந்திலில் வந்தருள் முருகோனே-

மதியுங்கதி ரும்புய லுந்தின
மறுகும்படி அண்ட மிலங்கிட
வளர்கின்ற பரங்கிரி வந்தருள் பெருமாளே. (உ)

4. அருக்கு மங்கையர் மலரடி வருடியெ
கருத்த றிந்துபி னரைதனி லுடைதனை
அவிழ்த்து மங்குள அரசிலை தடவியு மிருதோளுந்-

றணைத்து மங்கையி னடிதொறு நகமெழ
வுதட்டை மென்றுப லிடுகுறி களுமிட
அடிக்க ளந்தனில் மயில்குயில் புறவென மிகவாய்விட்;

டுருக்கு மங்கியின் மெழுகென வுருகிய
சிரத்தை மிஞ்சிடு மநுபவ முறுபல
முறக்கை யின்கனி நிகரென இலகிய முலைமேல்வீழ்ந்-

துருக்க லங்கிமெ யுருகிட வமுதுகு
பெருத்த வுந்தியின் முழுகிமெ யுணர்வற
வுழைத்தி டுங்கன கலவியை மகிழ்வது தவிர்வேனே;

இருக்கு மந்திர *மெழுவகை முனிபெற
வுரைத்த சம்ப்ரம சரவண பவகுக
இதத்த இங்கித மிலகிய அறுமுக எழில்வேளென்-

றிலக்க ணங்களு மியலிசை களுமிக
விரிக்கு மம்பல மதுரித கவிதனை
யியற்று செந்தமிழ் விதமொடு புயமிசை புனைவோனே;

செருக்கு மம்பல மிசைதனி லசைவுற
நடித்த சங்கரர் வழிவழி யடியவர்
திருக்கு ருந்தடி யருள்பெற அருளிய குருநாதர்-

*எழுவகை முனி = வசிஷ்டர் முதலிய சப்த ரிஷிகள்.

திருக்கு ழந்தையு மென அவர் வழிபடு
குருக்க ளின்திற மெனவரு பெரியவ
திருப்ப ரங்கிரி தனிலுறை சரவண பெருமாளே. (ரு)

5. உனைத்தி னந்தொழு திலனுன தியல்பினை
உரைத்திலன் பல மலர்கொடு னடியிணை
உறப்ப ணிந்தில னொருதவ மிலனுன தருள்மாறு-
உளத்து ளன்பின ருறைவிட மறிகிலன்
விருப்பொ டுன்சிக ரமும்வலம் வருகிலன்
உவப்பொ டுன்புகழ் துதிசெயவிழைகிலன் மலைபோலே;

கனைத்தெ ழும்பக டதுபிடர் மிசைவரு
கறுத்த வெஞ்சின மறலித னுழையினர்
கதித்த டர்ந்தெறி கயிறடு கதைகொடு பொருபோதே-
கலக்கு றுஞ்செய லொழிவற அழிவுறு
கருத்து நைந்தல முறுபொழு தளவைகொள்
கணத்தி லென்பய மறமயில் முதுகினில் வருவாயே;

வினைத்த லந்தனி லலகைகள் குதிகொள
விழுக் குடைந்துமெ யுகுதசை கழுகுண
விரித்த குஞ்சிய ரெனுமவு ணரையமர் புரிவேலா-
மிகுத்த பண்பயில் குயில்மொழி யழகிய
கொடிச்சி குங்கும முலைமுக டுழுநறை
விரைத்த சந்தனம்ருகமத புயவரை யுடையோனே;

தினத்தி னஞ்சதுர் மறைமுநி முறைகொடு
புனற்சொ ரிந்தலர் பொதிய விணவரொடு
சினத்தை நிந்தனை செயுமுநி வார்தொழ மகிழ்வோனே-
தெனத்தெ னந்தன எனவரி யளிநறை
தெவிட்ட அன்பொடு பருகுயர் பொழில்திகழ்
திருப்ப ரங்கிரி தனிலுறை சரவண பெருமாளே. (௪)

6. கறுக்கு மஞ்சன விழியிணை அயில்கொடு
நெருக்கி நெஞ்சற எறிதரு பொழுதொரு
கனிக்கு ளின்சுவை யமுதகு மொருசிறு நகையாலே.

* களக்கொ ழுங்கலி வலைகொடு விசிறியெ
மனைக்கெ ழுந்திரு மெனமன முருகவோர்
கவற்சி கொண்டிட மனைதனி லழகொடு கொடுபோகி;
நறைத்த பஞ்சணை மிசையினின் மனமுற
அணைத் †தகந்தனி லிணைமுலை யெதிர்பொர
நகத்த ழுந்திட அமுதிதழ் பருகியு மிடறூடே-
நடித்தெ ழுங்குரல் குமுகுமு குமுவென
இசைத்து நன்கொடு மனமது மறுகிட
நழுப்பு நஞ்சன சிறுமிகள் துயரற அருள்வாயே;
நிறைத்த தெண்டிரை மொகுமொகு மொகுவென
வுரத்த ‡கஞ்சுகி முடிநெறு நெறுவென
நிறைத்த அண்டமு கடுகிடு கிடுவென வரைபோலும்-
நிவத்த திண்கழல் நிசிசர ருரமொடு
சிரக்கொ டுங்குவை மலைபுரை தரவிரு
நிணக்கு ழம்பொடு குருதிகள் சொரிதர அடுதீரா;
திறற்க ருங்குழ லுமையவ ளருளுறு
புழைக்கை தன்கட கயமுக மிகவுள
சிவக்கொ ழுந்தன கணபதி யுடன்வரு மிளையோனே-
சினத்தொ டுஞ்சம னுதைபட நிறுவிய
பரற்கு ளன்புறு புதல்வநன் மணியுகு
திருப்ப ரங்கிரி தனிலுறை சரவண பெருமாளே. (௫)

7. **வ**டத்தை மிஞ்சிய புளகித வனமுலை
தனைத்தி றந்தெதிர் வருமிளை ஞர்களுயிர்
மயக்கி யைங்கணை மதனனை யொருஅரு மையினாலே-
§வருத்தி வஞ்சக நினைவொடு மெலமெல
நகைத்து நண்பொடு ‖வருமிரு மெனவுரை
வழுத்தி யங்கவ ரொடுசரு வியுமுடல் தொடுபோதே;

---

*களக் கொழுங் கலி—வளமான கண்டத் தொனி.

†ஆகம் என்பது அகம் எனத் திரிந்தது. ஆகம்=மார்பு.

‡கஞ்சுகி—பாம்பு; அதாவது, ஆதிசேஷன்.

§வருத்தி—வருவித்து.

‖வரு மிரும்—வாரும் இரும்.

விடத்தை வென்றிடு படைவிழி கொடுமுள
மருட்டி வண்பெரிருள் கவர்பொழு தினின்மயல்
விருப்பெ னும்படி மடிமிசை யினில்விழு தொழில்தானே-
விளைத்தி டும்பல கணிகையர் தமதுபொய்
மனத்தை நம்பிய சிறியனை வெறியனை
விரைப் பதந்தனி லருள்பெற நினைகுவ துளதோதான்;
குடத்தை வென்றிரு கிரியென எழில்தள
தளத்த கொங்கைகள் மணிவட மணிசிறு
குறக்க ரும்பின்மெய் துவள்பய னெனவரு வடிவேலா-
குரைக்க ருங்கடல் திருவணை எனமுனம்
அடைத்தி லங்கையி னதிபதி நிசிசரர்
குலத்தொ டும்பட வொருகணை விடுமரி மருகோனே;
திடத்தெ திர்ந்திடு மசுரர்கள் பொடிபட
அயிற்கொ டும்படை விடுசர வணபவ
திறற்கு சன்குரு பரனென வருமொரு முருகோனே-
செழித்த தண்டலை தொறுமில கியகுட
வளைக்கு லந்தரு தரளமு மிகுமுயர்
திருப்ப ரங்கிரி வளநகர் மருவிய பெருமாளே (சு)

8. கருவடைந்து பத்துற்ற திங்கள்
வயிறிருந்து முற்றிப் பயின்று
கடையில் வந்து தித்துக் குழந்தை வடிவாகி-
கழுவியங்கெ டுத்துச் சுரந்த
முலை *யருந்து விக்கக் கிடந்து
கதறியங்கை கொட்டித் தவழ்ந்து நடமாடி;
அரைவடங்கள் கட்டிச் சதங்கை
யிடுகுதம்பை பொற்சுட்டி தண்டை
யவையணிந்து முற்றிக் கிளர்ந்து வயதேறி-
அரிய பெண்கள் நட்பைப் புணர்ந்து
பிணியுழன்று சுற்றித் திரிந்த
தமையுமுன்க்ரு பைச்சித்த மென்று பெறுவேனோ;

*அருந்துவிக்க=அருத்த=ஊட்ட.

இரவி இந்த்ரன் வெற்றிக் குரங்கி
னரச ரென்று மொப்பற்ற *வுந்தி
யிறைவ †னெண்கி னக்கர்த்த னென்றும் நெடுநீலன்-
எரிய தென்றும் ருத்ரற் சிறந்த
அநும னென்றும் ஒப்பற்ற அண்டர்
எவரு மிந்த வர்க்கத்தில் வந்து புனமேவ ;

அரிய தன்ப டைக்காத்த ரென்று
அசுரர் தங்கி ளைக்கட்டை வென்ற
அரிமுகுந்தன் மெச்சுற்ற பண்பின் மருகோனே-
அயனை யும்பு டைத்துச் சினந்து
உலக மும்ப டைத்துப் பரிந்து
அருள்ப ரங்கி ரிக்குட் சிறந்த பெருமாளே. (எ)

9. **கா**தட ருங்கயல் கொண்டிசைந் தைம்பொறி
வாளிம யங்கம னம்பயந் தந்திருள்
கால்தர விந்துவி சும்பிலங் கும்பொழு தொருகோடி-
காய்கதி ரென்றொளிர் செஞ்சிலம் புங்கணை
யாழியு டன்கட கந்துலங் கும்படி
காமனெ டுஞ்சிலை கொண்டடர்ந் தும்பொரு மயலாலே;

வாது புரிந்தவர் செங்கைதந் திங்கித
மாக நடந்தவர் பின்திரிந் துந்தன
மார்பில ழுந்தவ ணைந்திடுந் துன்பம துழலாதே-
வாச மிகுந்தக டம்பமென் கிண்கிணி
மாலை கரங்கொளு மன்பர்வந் தன்பொடு
வாழ நிதம்புனை யும்பதந் தந்துன தருள்தாராய் ;

போதி லுறைந்தருள் கின்றவன் செஞ்சிர
மீது தடிந்துவி லங்கிடும் புங்கவ
போத வளஞ்சிவ சங்கரன் கொண்டிட மொழிவோனே-

---

* உந்தி யிறைவன்=பிரமன்.

† எண் கினக் கர்த்தன்=கரடிமுகச் சேனைகட்குத் தளகர்த்த னாகிய கரடிமுகமுள்ள ஜாம்புவான்.

பூக முடன்திகழ் *சங்கினங் கொண்டகி
　　ரீவ மடந்தைபு ரந்தரன் தந்தருள்
　　பூவைக ருங்குற மின்கலந் தங்குப னிருதோளா ;
தீதக மொன்றினர் வஞ்சகந் துஞ்சியி
　　டாதவர் சங்கரர் தந்தமெ தென் பும்பல
　　சேர்கிரு தன்குல மஞ்சமுன் சென்றடு திறலோனே -
சீதள முந்தும ணந்தயங் கும்பொழில்
　　சூழ்தர விஞ்சைகள் வந்திறைஞ் சும்பதி
　　தேவர்ப ணிந்தெழு தென்பரங் குன்றுறை
　　　　　　　　பெருமாளே. (அ)

10. சந்ததம் பந்தத் 　　　　தொடராலே -
　　சஞ்சலந் துஞ்சித் 　　　　திரியாதே ;
கந்தனென் றென்றுற் 　　　　றுனைநாளும் -
　　கண்டுகொண் டன்புற் 　　　　றிடுவேனோ ;
†தந்தியின் கொம்பைப் 　　　　புணர்வோனே -
　　சங்கரன் பங்கிற் 　　　　சிவைபாலா ;
செந்திலங் கண்டிக் 　　　　கதிர்வேலா -
　　தென்பரங் குன்றிற் 　　　　பெருமாளே. (கூ)

11. தடக்கைப் பங்கயங் கொடைக்குக் கொண்டல்தண்
　　டமிழ்க்குத் தஞ்சமென் 　　　　றுலகோரைத் -
தவித்துச் சென்றிரந் துளத்திற் புண்படுந்
　　தளர்ச்சிப் பம்பரந் 　　　　தனையூசற் ;
கடத்தைத் துன்பமண் சடத்தைத் துஞ்சிடுங்
　　கலத்தைப் பஞ்சஇந் 　　　　த்ரியவாழ்வைக் -
கணத்திற் சென்றிடந் திருத்தித் தண்டையங்
　　கழற்குத் தொண்டுகொண் 　　　　டருள்வாயே ;

---

* சங்கினங் கொண்ட = சங்கின் அம் (அழகு) கொண்ட ; அல்லது, சங்கு இனம் கொண்ட.

† தந்தியின் கொம்பு = தெய்வயானை.

படைக்கப் பங்கயன் துடைக்கச் சங்கரன்
புரக்கக் கஞ்சைமன் பணியாகப்-
பணித்துத் தம்பயந் தணித்துச் சந்ததம்
பரத்தைக் கொண்டிடுந் தனிவேலா,
குடக்குத் தென்பரம் பொருப்பிற் றங்குமங்
குலத்திற் கங்கைதன் சிறியோனே-
குறப்பொற் கொம்பைமுன் புனத்திற் செங்கரங்
குவித்துக் கும்பிடும் பெருமாளே. (௧0)

12. பதித்தசெஞ் சந்தப் பொற்குட நித்தம்
பருத்துயர்ந் தண்டத் திற்றலை முட்டும்
பருப்பதந் தந்தச் செப்பவை யொக்குந் தனபாரம்-
*படப்புயங் கம்பற் கக்கு கடுப்பண்
செருக்குவண் டம்பப் பிற்கய லொக்கும்
பருத்தகண் கொண்டைக் கொக்கு மிருட்டென்
றிளைஞோர்கள் ;
துதித்துமுன் கும்பிட் டுற்ற துரைத்தன்
புவக்கநெஞ் சஞ்சச் சிற்றிடை சுற்றுந்
துகிற்களைந் தின்பத் துர்க்க மளிக்குங் கொடியார்பால்-
துவக்குணும் பங்கப் பித்த னவத்தன்
புவிக்குளென் சிந்தைப் புத்தி மயக்கந்
துறக்கநின் தண்டைப் பத்ம மெனக்கென் றருள்வாயே;
குதித்துவெண் சங்கத் தைச்சுற வெற்றுங்
கடற்கரந் தஞ்சிப் புக்க வரக்கன்
குடற்சரிந் தெஞ்சக் குத்தி விதிர்க்குங் கதிர்வேலா-
குலக்கரும் பின்சொற் றத்தை யிபப்பெண்
தனக்கு வஞ்சித்துப் †பொச்சை யிடைக்குங்
குகுக்குகுங் குக்குக் குக்குகு குக்குங் குகுகூகூ ;

* படப் புயங்கம் பல் கக்கு கடு, பண் செருக்கு வண்டு, அம்பு, அப்பிற் கயல் எனப்பிரிக்க.

† பொச்சை யிடை=காட்டி னிடத்தில்.

திதித்திதிந் தித்தித் தித்தியெ னக்கொம்
பதிர்த்துவெண் சண்டைக் கட்கம் விதிர்த்தூந்
திரட்குவிந் தங்கட் பொட்டெழ வெட்டுங் கொலைவேடர்-
தினைப்புனஞ் சென்றிச் சித்த பெணைக்கண்
டுருக்கரந் தங்குக் கிட்டி யணைத்தொண்
திருப்பரங் குன்றிற் புக்கு ளிருக்கும் பெருமாளே. (கக)

13. பொருப்புறக் கொங்கையர் பொருட்கவர்ந் தொன்றிய
பிணக்கிடுஞ் சண்டிகள் வஞ்சமாதர்-
*புயற்குழன் றங்கமழ் அறற்குலந் தங்கவிர்
முருக்குவண் செந்துவர் தந்துபோகம்;
அருத்திடுஞ் சிங்கியர் தருக்கிடுஞ் செங்கய
லறச்சிவந் தங் †கையி லன்புமேவும்-
அவர்க்குழன் றங்கமு மறத்தளர்ந் தென்பய
னருட்பதம் பங்கய மன்புறுதோ;
மிருத்தணும் பங்கய னலர்க்கணன் சங்கரர்
விதித்‡தெனுங் கும்பிடு கந்தவேளே-
மிகுத்திடும் வன்சம ணரைப்பெருந் திண்கழு
மிசைக்கிடுஞ் செந்தமி ழங்கவாயா;
பெருக்குதண் சண்பக வனத்திடங் கொங்கொடு
திறற்செழுஞ் சந்தகில் துன்றிநீடு-
தினைப்புனம் பைங்கொடி தனத்துடன் சென்றணை
திருப்பரங் குன்றுறை தம்பிரானே. (கஉ)

14. மன்றலங் கொந்துமிசை தெந்தனந் தெந்தனென
வண்டினங் கண்டுதொடர் குழல்மாதர்-
மண்டிடுந் தொண்டையமு துண்டுகொண் டன்புமிக
வம்பிடுங் கும்பகன தனமார்பில்;

---

* புயல் குழன்ற அம் கமழ் எனப் பிரிக்க.
† கையில்=கைப் பொருளில்.
‡ என்றும் என்பது எண்ணும் என ழரீஇத் தொகுத்தல் விகார முற்றது.

ஒன்றலும் பொன்றுவிழி கன்றஅங் கங்குழைய
உந்தியென் கின்றமடு விழுவேனை-
உன்சிலம் புங்கனக தண்டையும் கிண்கிணியும்
ஒண்கடம் பும்புனையும் அடிசேராய்;
பன்றியங் கொம்புகம டம்புயங் கஞ்சுரர்கள்
பண்டையென் பங்கமணி பவர்சேயே-
பஞ்சரங் கொஞ்சுகிளி வந்துவந் தைந்துகர
பண்டிதன் தம்பியெனும் வயலூரா;
சென்றுமுன் குன்றவர்கள் தந்தபெண் கொண்டுவளர்
செண்பகம் பைம்பொன்மலர் செறிசோலை-
திங்களுஞ் செங்கதிரு மங்குலுந் தங்குமுயர்
தென்பரங் குன்றிலுறை பெருமாளே. (கங)

15. **வ**ரைத்தடங் கொங்கை யாலும்
வளைப்படுஞ் செங்கை யாலும்
மதர்த்திடுங் கெண்டை யாலு *மனைவோரும்-
வடுப்படுந் தொண்டை யாலும்
விரைத்திடுங் கொண்டை யாலும்
மருட்டிடுஞ் சிந்தை மாதர் வசமாகி;
எரிப்படும் பஞ்சு போல
மிகக்கெடுந் தொண்ட னேனும்
†இனற்படுந் தொந்த வாரி கரையேற-
இசைத்திடுஞ் சந்த பேத
மொழித்திடுந் தண்டை சூழும்
இணைப்பதம் புண்ட ரீக மருள்வாயே;
சுரர்க்குவஞ் சஞ்செய் சூர
னிளக்ரவுஞ் சந்த னோடு
துளக்கெழுந் தண்ட கோள மளவாகத்-

---

* அனைவோரும் வடுப்படுந் தொண்டை = பலராலும் வடுப் படுத்தப்படும் கொவ்வைக் கனி யொத்த இதழ்.

† இனற்படுந் தொந்த வாரி = துன்பப்படுகின்ற வினைத் தொடர்புள்ள பிறவிக் கடல்.

துரத்தியன் றிந்த்ர லோக
மழித்தவன் பொன்று மாறு
சுடப்பருஞ் சிண்ட வேலை விடுவோனே;
செருக்கெழுந் தும்பர் சேனை
துளக்கவென் றண்ட மூடு
தெழித்திடுஞ் சங்கபாணி மருகோனே-
தினைப்புனஞ் சென்று லாவு
குறத்தியின் பம்ப ராவு
திருப்பரங் குன்ற மேவு பெருமாளே. (கச)

உ

இரண்டாவது

திருச்சீரலைவாய் என்கின்ற

திருச்செந்தூர்.

[திருநெல்வேலியி லிருந்து 35-மைல். ரெயில்வே ஸ்டேஷன். இங்குள்ள சமுத்திரதீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்து ஐந்து தலைகளில் ஒன்றிழந்த பிரமதேவனுக்கு அற்ற தலை கிடைத்ததாலும், பாண்டிய ராஜன் புத்திரியாகிய அங்கசுந்தரி யென்பாளுக்குச் சாபத்தால் வந்த குதிரைமுகம் மாறி அழகிய முகம் கிடைத்ததாலும், அத் தீர்த்தத்துக்கு வதனாரம்ப தீர்த்தம் என்று பெயர். "சிகைத் தோகை" [51] என்னுங் கந்தரந்தாதிச் செய்யுளில் "மகள்வாசி கைத்தோ" என்பதன் பொருளைக் காண்க. "செந்திலை யுணர்ந் துணர்ந் துணர்வுற" [47], "கயிலைமலை யனைய செந்தில்" [51], "மகா புநிதந் தங்குஞ் செந்தில்" [95], என்னுந் திருப்புகழ்த் திருவாக்கால் இத் தலத்துப் பெருமை புலப்படும். "நஞ் செந்தின் மேய வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்" என்பது அப்பர் ஸ்வாமிகள் திருவாக்கு. ஸ்ரீ குமரகுருபர ஸ்வாமிகள் "கந்தர் கலிவெண்பா" பாடின திருப்பதி. இதற்கு ஸ்தலபுராணம் உண்டு.]

திருச்செந்தூர்.

16. தண்டையணி வெண்டையங் கிண்கிணிச தங்கையுந்
தண்கழல்சி லம்புடன் கொஞ்சவேநின்-
தந்தையினை முன்பரிந் தின்பவுரி கொண்டுநன்
* சந்தொடம ணைந்து †நின் றன்புபோலக்;
கண்டுறக டம்புடன் சந்தமகு டங்களுங்
கஞ்சமலர் செங்கையுஞ் சிந்துவேலும்-
கண்களுமு கங்களுஞ் சந்திர ‡நி றங்களுங்
கண்குளிர என்றன்முன் சந்தியாவோ;
புண்டரிக ரண்டமுங் கொண்டபகி ரண்டமும்
பொங்கியெழ வெங்களங் கொண்டபோது-
§பொன்கிரியெ னஞ்சிறந் தெங்கினும் வளர்ந்துமுன்
புண்டரிகர் தந்தையுஞ் சிந்தைகூரக்;
கொண்டநட னப்பதஞ் செந்திலிலு மென்றன்முன்
கொஞ்சிநட னங்கொளுங் கந்தவேளே-
கொங்கைகுற மங்கையின் சந்தமண முண்டிடுங்
கும்பமுநி கும்பிடுந் தம்பிரானே. (க)

17. ‖அமுதுததி விடமுமிழு செங்கட் டிங்கட்
பகவினொளிர் வெளிறெயிறு துஞ்சற் குஞ்சித்
தலையுமுடை யவனரவ தண்டச் சண்டச்
சமனோலை-

---

* சந்தொடம்=சந்தோஷம். † நின்ற அன்பு போல.
‡ நிறம்=காந்தி.
§ பொன்கிரி யென அம் சிறந்து எனப் பிரிக்க; அம்=அழகு
‖ அமுதுததி=அமுத+உததி=திருப்பாற் கடல்.

அதுவருகு மளவிலுயி ரங்கிட் டிங்குப்
பறைதிமிலை திமிர்தமிகு *தம்பட் டம்பற்
கரையவுற வினைசலற வுந்திச் சந்தித்
தெருவூடே;

எமதுபொரு ளெனுமருளை யின்றிக் குன்றிப்
பிளவளவு தினையள்வு பங்கிட் டுண்கைக்
கிளையுமுது வசைதவிர இன்றைக் கன்றைக்
கெனநாடா-

திடுககடி தெனுமுணர்வு பொன்றிக் கொண்டிட்
டுடுடுடு டுடுடுடு டுண்டுட் டுண்டுட்
டெனவகலு நெறிகருதி நெஞ்சத் தஞ்சிப்
பகிராதோ;

குமுதபதி வகிரமுது சிந்தச் சிந்தச்
சரணபரி புரசுருதி கொஞ்சக் கொஞ்சக்
குடிலசடை பவுரிகொடு தொங்கப் பங்கிற்
கொடியாடக்-

குல †தடினி அசையஇசை பொங்கப் பொங்கக்
கழலதிர டெகுடெகுட டெங்கட் டெங்கத்
தொகுகுகுகு தொகுகுகுகு தொங்கத் தொங்கத்
தொகுதீதோ;

திமிதமென முழவொலிமு ழங்கச் செங்கைத்
தமருகம ததிர்சதியொ டன்பர்க் கின்பத்
திறமுதவு பாதகுரு வந்திக் குஞ்சற்
குருநாதா-

திரளுமணி தரளமுயர் தெங்கிற் றங்கிப்
புரள எறி திரைமகர சங்கத் துங்கத்
திமிரசல நிதிதழுவு சேந்திற் கந்தப்
பெருமாளே. (௨)

---

* தம்பட்டம் பல் கரைய = தம்பட்டம் முதலிய பல வாத்தியங்கள் சப்திக்க.

† தடினி = ஆறு; குல தடினி = சிரேஷ்டமான கங்கை யாறு.

18. கொடியனைய இடைதுவள அங்கமும் பொங்கஅங்
குமுதஅமு திதழ்பருகி யின்புறுஞ் சங்கையன்
குலவியணை முகிலளக முஞ்சரிந் தன்பினின்
பண்புலாவக்-

கொடியவிரல் நகநுதியில் புண்படுஞ் சஞ்சலன்
குனகியவ ருடனினிது சம்ப்ரமங் கொண்டுளங்
குரலழிய அவசமுறு குங்குணன் கொங்கைவிழ்ந்
தொன்று பாய்மேல்;

விடமனைய விழிமகளிர் கொங்கையின் பன்புறும்
வினையனியல் பரவுமுயிர் வெந்தழிந் தங்கமும்
மிதமொழிய அறிவில்நெறி பண்பிலண் டுஞ்சகன்
செஞ்செநீடும்-

வெகுகனக வொளிகுலவும் அந்தமன் சேந்திலேன்
றவிழுவுள முருகிவரு மன்பிலன் *தந்திலன்
விரவுமிரு சிறுகமல பங்கயந் தந்துகந்
தன்புறுமோ ;

படமிலகு மரவினுட லங்கமும் பங்கிடந்
துதறுமொரு கலபிமிசை வந்தெழுந் தண்டர்தம்
பகையசுர ரனைவருடல் சந்துசந் துங்கதஞ்
சிந்தும்வேலா-

படியவரு மிமையவரும் நின்றிறைஞ் செண்குணன்
பழையஇறை யுருவமிலி யன்பர்பங் கன்பெரும்
பருவரல்செய் புரமெரிய விண்டிடுஞ் செங்கணன்
கங்கைமான்வாழ்;

சடிலமிசை யழகுபுனை கொன்றையும் பண்புறுந்
தருணமதி யினகுறைசெய் துண்டமுஞ் செங்கையொண்
சகலபுவ னமுமொழிக தங்குறங் கங்கியும்
பொங்கிநீடும்-

சடமருவு விடையரவர் துங்க அம் பங்கினின்
றுலகுதரு கவுரியுமை கொங்கைதந் தன்புறுந்
தமிழ்விரக வுயர்பரம சங்கரன் கும்பிடுந்
தம்பிரானே. (ந)

---

* தந் திலன்—சாஸ்திர ஆராய்ச்சி யில்லாதவன்.

19. *அம்பொத் தவிழித் தந்தக் கலகத்
தஞ்சிக் கமீலக் கணையாலே-
அன்றிற் குமனற் றென்றற் குமிளைத்
தந்திப் பொழுதிற் பிறையாலே;
எம்பொற் கொடி †மற் றுன்பக் கலனற்
றின்பக் கலவித் துயரானுள்-
என்பெற் றுலகிற் பெண்பெற் றவருக்
கின்பப் புலியுற் றிடலாமோ;
கொம்புக் கரிபட் டஞ்சப் பதுமக்
கொங்கைக் குறவிக் கினியோனே-
கொன்றைச் சடையற் கொன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழைப் பகர்வோனே;
செம்பொற் சிகரப் பைம்பொற் கிரியைச்
சிந்தக் கறுவிப் பொரும்வேலா-
செஞ்சொற் புலவர்க் கின்புற் றதிருச்
செந்திற் குமரப் பெருமாளே. (௪)

20. கொங்கைப் பணியிற் செம்பொற் செறிவிற்
கொண்டற் குழலிற் கொடிதான-
கொன்றைக் கணையொப் பந்தக் கயலிற்
கொஞ்சுக் கிளியுற் றுறவான;
‡சங்கத் தொனியிற் சென்றிற் கடையிற்
சந்திப் பவரைச் சருவாதே-
சந்தப் படியுற் §றென்றற் றலையிற்
சந்தப் பதம்வைத் தருள்வாயே;

---

* அம்பு ஒத்த விழி தந்த கலகத்து=அம்புபோன்ற கண்களை யுடைய பெண்கள் பேசும் கலகச் சொல்லாகிய அலர்மொழிக்கு.

† மன் துன்ப கலன் அற்று=தரித்திருக்கின்ற துன்பத்தைச் செய்யும் ஆபரணங்களை அறவிடுத்து.

‡ சங்கம்=சங்குபோன்ற கண்டம்.

§ என்றற் றலை=என்றன் தலை.

அங்கப் படைவிட் டன்றைப் படுகைக்
*கந்திக் கடலிற் கடிதோடா-
† அந்தப் பொழிலிற் ‡ சந்துத் தலையுற்
றஞ்சப் பொருதுற் றெழியாதே;
செங்கைக் கதிருற் றென்றக் கடலிற்
§ சென்றுற் றவர்தற் பொருளானாய்-
சிந்தைக் கனிவைத் தந்தப் பொழிலிற்
சேந்திற் குமரப் பெருமாளே. (ரு)

21. புகரப் புங்கப் பகரக் குன்றிற்
புயலிற் றங்கிப் பொலிவோனும்-
பொருவிற் றஞ்சச் சுருதிச் சங்கப்
பொருளைப் பண்பிற் புகல்வோனும்;
திகிரிச் செங்கட் செவியிற் றுஞ்சத்
திகிரிச் செங்கைத் திருமாலும்-
திரியப் பொங்கித் திரையற் றுண்டுட்
டெளிதற் கொன்றைத் தரவேணும்;
‖தகரத் தந்தச் சிகரத் தொன்றித்
¶ தடநற் கஞ்சத் துறைவோனே-
தருணக் கொங்கைக் குறவிக் கின்பத்
தையளித் தன்புற் றருள்வோனே;
பகரப் பைம்பொற் சிகரக் குன்றைப்
படியிற் சிந்தத் தொடும்வேலா-
பவளத் துங்கப் புரிசைச் சேந்திற்
பதியிற் கந்தப் பெருமாளே (சு)

---

* அந்திக் கடல்=செந்திலுக்கும் மகேந்திரபுரிக்கும் இடைச் சந்தியாக வுள்ள கடல்.

† அந்தப் பொழிலில்=அந்தப் பூமியாகிய மகேந்திரத்தில்.

‡ சந்துத் தலையுற்று=தூதாகச்சென்று.

§ சென்றுற்றவர்=போய் வந்தவ ராகிய வீரவாகுதேவர்.

‖ தகரத் தந்தச் சிகரம்=தகரவித்தை யென்கின்ற வேதசிரோமுடி யாகிய ப்ரும்மஸ்தானம்.

¶ தட நற் கஞ்சம்=இருதய கமலம்.

22. அளகபார மலைந்துகு லைந்திட
வதனம் வேர்வுது லங்கிநு லங்கிட
அவச மோகமி விளைந்துத ளர்ந்திட அணைமீதே-
அருண வாய்நகை சிந்திய சம்ப்ரம
அடர்ந காருதி பங்கவி தஞ்செய்து
அதர பானம ருந்திம ருங்கிற முலைமேல்வீழ்ந்;
துளமும் வேறுப டும்படி யொன்றிடு
மகளிர் தோதக இன்பின் முயங்குத
லொழியு மாறு தெளிந்துள மன்பொடு சிவயோகத்-
துருகு ஞானப ரம்பர தந்திர
அறிவி னோர்கரு தங்கொள் சிலம்பணி
உபய சீதள பங்கய மென்கழல் தருவாயே;
இளகி டாவளர் சந்தன குங்கும
களப பூரண கொங்கை நலம்புனை
யிரதி வேள்பணி தந்தையும் அந்தண மறையோனும்-
இனிது றுதெகி ரிந்திர னண்டரும்
ஹரஹ ராசிவ சங்கர சங்கர
எனமி காவரு நஞ்சினை யுண்டவ ருள்பாலா;
வளர்நி சாசரர் தங்கள்சி ரம்பொடி
படவி ரோதமி டுங்குல சம்ப்ரமன்
மகர வாரிக டைந்தநெ டும்புயல் மருகோனே-
வளரும் வாழைபு மஞ்சளு மிஞ்சியும்
இடைவி டாதுநெ ருங்கிய மங்கல
மகிமை மாநகர் செந்திலில் வந்துறை பெருமாளே (எ)

23. கமல மாதுட னிந்திரை யுஞ்சரி
சொலவொ ணாதம டந்தையர் சந்தன
களப சீதள கொங்கையி லங்கையி லிருபோதேய்-
களவு நூல்தெரி வஞ்சனை யஞ்சன
விழியின் மோகித கந்த சுகந்தரு
கரிய வோதியி லிந்து முகந்தனின் மருளாதே;

அமல மாகிய சிந்தைய டைந்தகல்
தொலைவி லாதஅ றம்பொரு ளின்பமு
மடைய வோதியு ணர்ந்தத ணந்தபின் அருள்தானே-
அறியு மாறுபெ றும்படி யன்பினி
னினிய நாதசி லம்புபு லம்பிடு
மருண ஆடக கிண்கிணி தங்கிய அடிதாராய்;
குமரி காளிப யங்கரி சங்கரி
கவுரி நீலிப ரம்பரை யம்பிகை
குடிலை யோகினி சண்டினி குண்டலி யெமதாயி-
குறைவி லாளுமை மந்தரி யந்தரி
வெகுவி தாகம சுந்தரி தந்தருள்
குமர மூஷிக முந்திய ஐங்கர கணராயன்-
மமவி நாயக னஞ்சுமிழ் கஞ்சுகி
அணிக ஜானன விம்பனெ ரம்புலி
மவுலி யானுறு சிந்தையு கந்தரு ளிளையோனே-
வளரும் வாழையு மஞ்சளு மிஞ்சியும்
இடைவி டாது நெருங்கிய மங்கல
மகிமை மாநகர் செந்திலில் வந்துறை பெருமாளே.

24. *அவனிபெ றுந்தோட் டம்பொற்
குழையட ரம்பாற் புண்பட்
டரிவையர் தம்பாற் கொங்கைக் கிடையேசென்-
றணைதரு பண்டாட் டங்கற்
றுருகிய கொண்டாட் டம்பெற்
றழிதரு திண்டாட் டஞ்சற் றொழியாதே;
பவமற நெஞ்சாற் சிந்தித்
திலகுக டம்பார்த் தண்டைப்
பதயுக ளம்போற் றுங்கொற் றமுநாளும்-
பதறிய அங்காப் பும்பத்
தியுமறி வும்போய்ச் சங்கைப்
படுதுயர் கண்பார்த் தன்புற் றருளாயோ;

* அவனி பெறும் தோட்டு அம் பொற் குழை=பூமியை விலை மதிக்கும்படியான தோடாகிய அழகிய பொற் குழை.

தவநெறி குன்றாப் பண்பிற்
றுறவின ருந்தோற் றஞ்சத்
தனி *மல ரஞ்சாட் புங்கத் தமராடி-

தமிழினி †தென்காற் கன்றிற்
றிரிதரு ‡கஞ்சாக் கன்றைத்
தழலெழ வென்றோர்க் கன்றற் புதமாகச்;

சிவவடி வங்காட் டுஞ்சற்
குருபர தென்பாற் சங்கத்
திரள்மணி சிந்தாச் சிந்துக் கரைமோதும்-

தினகர திண்டேர்ச் சண்டப்
பரியிட றுங்கோட் டிஞ்சித்
திருவளர் சேந்தூர்க் கந்தப் பெருமாளே. (சு)

25. **தொ**டரிய மன்போற் றுங்கப்
படையைவ ளைந்தோட் டுங்ஙுட்
டரையிள குந்தோட் கொங்கைக் கிடுமாயத்-

துகில்விழ வுஞ்சேர்த் தங்கத்
துளைவிர குஞ்சூழ்த் தண்டித்
துயர்விளை யுஞ்சூட் டின்பத் தொடுபாயற்;

கிடைகொடு சென்றீட் டும்பொற்
§பணியரை மென்றேற் றங்கற்
றனையென இன்||றோட் டென்¶றற் கிடுமாதர்க்-

கினிமையி லொன்றாய்ச் சென்றுட்
படுமன முன்றாட் கன்புற்
றியலிசை கொண்டேத் தென்றுட் டருவாயே;

---

* மலர் அஞ்சு ஆர் புங்கத்து=ஐவகைப் புஷ்ப பாணத்தால்.

† தென்கால் கன்றில்=இளந் தென்றற் காற்றில்.

‡ கஞ்சாக் கன்று=மன்மதன்.

§ திட்டரை, பணியரை=திட்டர்க்கு, பணியர்க்கு. இவை உருபு மயக்கம்.

|| ஓட்டென்று=ஒடென்று.

¶ அற்கிடும்=அல்கிடும்=அன்பு சுருங்கும்.

நெடிதுத வங்கூர்க் குஞ்சற்
புருடரும் நைந்தேக் கழ்பெற்
றயர்வுற நின்றார்த் தங்கட் கணையேவும்-
நிகரில்ம தன்தோர்க் குன்றற்
றெரியில்வி ழுந்தோர்ப் பொன்றச்
சிறிதுநி னைந்தாட் டங்கற் றிடுவார்முன் ;
திடமுறு அன்பாற் சிந்தைக்
*கறிவிட முஞ்சேர்த் தும்பர்க்
கிடர்களை யும்போர்ச் செங்கைத் திறல்வேலா-
தினவரி வண்டார்த் தின்புற்
றிசைகொடு வந்தேத் திஞ்சித்
திருவளர் சேந்தூர்க் கந்தப் பெருமாளே. (கo)

26. அணிச்சங் †கார்முகம் வீசிட மாசறு
துவட்பஞ் சானத டாகம்வி டாமட
அனத்தின் தூவிகு லாவிய சீறடி மடமானார்-
அருக்கன் போலொளி வீசிய மாமர
கதப்பைம் பூணணி வார்முலை மேல்முகம்
அழுத்தும் பாவியை யாவி ‡யிடேறிட நெறிபாரா ;
வினைச்சண் டாளனை வீணனை நீணிதி
தனைக்கண் டாணவ மானநிர் மூடனை
§விடக்கன் பாய்நகர் பாழனை வோர்மொழி பகராதே-
விகற்பங் கூறிடு மோகவி காரனை
அறத்தின் பாலொழு காதமு தேவியை
விளித்துன் பாதுகை நீதர நானருள் பெறுவேனோ;
முனைச்சங் கோலிடு நீலம கோததி
அடைத்தஞ் சாதஇ ராவண னீள்பல
முடிக்கன் றோர்கணை யேவுமி ராகவன் மருகோனே-

* அறிவிடம்=தெளிவு.
† கார்முகம்=பஞ்சு கொட்டும் வில்.
‡ இ டேறிட=ஈ டேறிட.
§ விடக்கு=மாமிசம்.

முளைக்குஞ் சீதநி லாவொட ராவிரி
திரைக்கங் காநதி தாதகி கூவிள
முடிக்குஞ் சேகரர் பேரரு ளால்வரு முருகோனே;
தினைச்செங் கானக வேடுவ ரானவர்
திகைத்தந் தோவென வே*கணி யாகிய
திறற்கந் தாவளி நாயகி காமுறும் எழில்வேலா-
சிறக்குந் தாமரை யோடையில் மேடையில்
நிறக்குஞ் சூல்வளை பால்மணி வீசிய
திருச்செந் தூர்வரு சேவக னேசுரர் பெருமாளே.()

பு. 27. உருக்கம் பேசிய நீலியர் காசுகள்
பறிக்குந் தோஷிகள் மோகவி காரிகள்
உருட்டும் பார்வையர் மாபழி காரிகள் மதியாதே-
உரைக்கும் பீரிகள் கோளர வாமென
வுடற்றுந் தாதியர் காசள வேமனம்
உறைக்குந் தூரிகள் மீதினி லாசைகள் புரிவேனோ;
அருக்கன் போலொளி வீசிய மாமுடி
யனைத்துந் தானழ காய்நல மேதர
அருட்கண் பார்வையி னலடி யார்தமை மகிழ்வோடே-
அழைத்துஞ் சேதிகள் பேசிய காரண
வடிப்பந் தானென வேயெனை நாடொறும்
அதிக்கஞ் சேர்தர வேயரு ளாலுட னினிதாள்வாய்;
இருக்குங் காரண மீறிய வேதமும்
இசைக்குஞ் சாரமு மேதொழு தேவர்கள்
இடுக்கண் தீர்கன னேயடி யார்தவ முடன்மேவி-
இலக்கந் தானென வேதொழ வேமகிழ்
விருப்பங் கூர்தரு மாதியு மாயுல
கிறுக்குந் தாதகி சூடிய வேணிய னருள்பாலா;
திருக்குந் தாபதர் வேதிய ராதியர்
துதிக்குந் தாளுடை நாயக னாகிய
செகச்செஞ் சோதியு மாகிய மாதவன் மருகோனே-

* கணி=வேங்கை மரம்.

செழிக்குஞ் சாலியு மேகம ளாவிய
கருப்பஞ் சோலையும் வாழையு மேதிகழ்
திருச்செந் தூர்தனில் மேவிய தேவர்கள் பெருமாளே.

பு. 28. நிறுக்குஞ் *சூதன மெய்த்தன முண்டைகள்
கருப்பஞ் சாறொடு ரைத்துள வுண்டைகள்
நிழற்கண் காண †வு ணக்கிம ணம்பல தடவாமேல்-
நெருக்கும் பாயலில் வெற்றிலை யின்புறம்
ஒளித்தன் பாகஅ ளித்தபி னிங்கெனை
நினைக்கின் றீரிலை மெச்சலி தஞ்சொலி யெனவோதி;
உறக்கண் டாசைவ லைக்குள ழுந்திட
விடுக்கும் பாவிகள் பொட்டிகள் சிந்தனை
யுருக்குந் தூவைகள் செட்டைகு ணந்தனி லுழலாமே-
உலப்பின் றூறெனு மக்கர முங்கமழ்
கடப்பந் தாருமு கப்பரை யுந்தினம்
உளத்தின் பார்வையிடத்தினினைந்திட அருள்வாயே;
கறுக்குந் தூயமி டற்றன ருஞ் ‡சிலை
யெடுக்குந் தோள §னி றத்தம ரெண்கரி
கடக்குந் தானவ னைக்கொல ரும்புயன் மருகோனே-
கனத்தஞ் சாபுரி சிக்கல்வ லஞ்சுழி
திருச்செங் கோடு இடைக்கழி ||தண்டலை
களர்ச்செங் காடு குறுக்கைபு றம்பயம் அமர்வோனே;
சிறுக்கண் கூர்மத அத்தி ¶சயிந்தவ
நடக்குந் தோரணி கப்படை கொண்டமர்
செலுத்தும் பாதகன் அக்ரமன் வஞ்சனை யுருவானேன்-
செறுக்குஞ் சூரக லத்தை யிடந்துயிர்
குடிக்குங் கூரிய சத்திய மர்ந்தருள்
திருச்செந்தூர்நகரிக்குள்வி ளங்கிய பெருமாளே. (கரு).

---

* சூது + அன்ன ; † உணக்கி = உலர்த்தி.
‡ சிலை = மலை, § நிறம் = மார்பு.
|| தண்டலை = தண்டலை நீணெறி.
¶ சயிந்தவம் = குதிரை.

29. கரிக்கொம்பந் தனித்தங்கங்
குடத்தின்பந் தனத்தின்கண்
கறுப்புந்தன் சிவப்புஞ்செம் பொறிதோள்சேர்-
கணைக்கும்பண் டுழைக்கும்பங்
களிக்கும்பண் பொழிக்குங்கண்
கழுத்துஞ்சங் கொளிக்கும்பொன் குழையாடச்;
சரக்குஞ்சம் புடைக்கும்பொன்
றுகிற்றந்தந் தரிக்குந்தன்
சடத்தும் *பண் பிலுக்குஞ்சம் பளமாதர்-
சலித்தும்பின் சிரித்துங்கொண்
டழைத்துஞ்சண் பசப்பும்பெண்
தனத்துன்பந் தவிப்புண்டிங் குழல்வேனோ;
சுரர்ச்சங்கந் துதித்தந்தஞ்
செழுத்தின்பங் களித்துள்பண்
சுகத்துய்ந்தின் பலர்ச்சிந்தங் கசுராரைத்-
துவைத்தும்பந் தடித்துஞ்சங்
கொலித்துங்குன் றிடித்தும்பண்
சுகித்துங்கண் களிப்புங்கொண் டிடும்வேலா;
சிரப்பண்புங் கரப்பண்புங்
கடப்பந்தொங் கலிற்பண்புஞ்
சிவப்பண்புந் தவப்பண்புந் தருவோனே-
தினைத்தொந்தங் குறப்பெண்பண்
சசிப்பெண்கொங் கையிற்றுஞ்சுஞ்
செழிக்குஞ்சேந் தியிற்றங்கும் பெருமாளே. (௧௪)

30. கருப்பந்தங் கிரத்தம்பொங்
†கரைப்புண்கொண் டுருக்கும்பெண்
களைக்கண்டங் கவர்ப்பின்சென் றவரோடே-

---

* பண் பிலுக்கல் = தகுதியாகிய வஸ்துக்களைக் கொண்டு ஆடம்பரமாக அலங்கரித்தல்.

† அரைப்புண் = அல்குல்.

கலப்புண்டுஞ் சிலுப்புண்டுந்
துவக்குண்டும் பிணக்குண்டுங்
கலிப்புண்டுஞ் சலிப்புண்டுந் தடுமாறிச்;
செருத்தண்டந் தரித்தண்டம்
புகத்தண்டந் தகற்கென்றுந்
திகைத்தந்திண் செகத்* தஞ்சுங் கொடுமாயும்-
தியக்கங்கண் டுயக்கொண்டென்
பிறப்பங்கஞ் சிறைப்பங்கஞ்
சிதைத்துன்றன் பதத்தின்பந் தருவாயே;
அருக்கன்சஞ் சரிக்குந்தெண்
டிரைக்கண்சென் றரக்கன்பண்
பனைத்தும்பொன் றிடக்கன்றுங் கதிர்வேலா-
அணிச்சங்கங் கொழிக்குந்தண்
டலைப்பண்பெண் டிசைக்குங்கொந்
தளிக்குஞ்செந் திலிற்றங்குங் குமரேசா;
புரக்குஞ்சங் கரிக்குஞ்சங்
கார்க்குஞ்சங் கார்க்கின்பம்
புதுக்குங்கங் கையட்குந்தஞ் சுதனைப்-
புனக்குன்றந் திளைக்குஞ்செந்
தினைப்பைம்பொன் குறக்கொம்பின்
புறத்தண்கொங் கையிற்றுஞ்சும் பெருமாளே. (௩௰)

31. குழைக்குஞ்சந் தனச்செங்குங்
குமத்தின்சந் தநற்குன்றங்
குலுக்கும்பைங் கொடிக்கென்றிங் கியலாலே-
குழைக்குங்குண் குமிழ்க்குஞ்சென்
றுரைக்குஞ்செங் கயற்கண்கொண்
டழைக்கும்பண் தழைக்குஞ்சிங் கியாலே;
உழைக்குஞ்சங் கடத்துன்பன்
சுகப்பண்டஞ் சுகித்துண்டுண்
டுடற்பிண்டம் பருத்தின்றிங் குழலாதே-

---

* அஞ்சு=பஞ்சேந்திரியம்.

உதிக்குஞ்செங் கதிர்ச்சிந்தும்
ப்ரபைக்கொன்றுஞ் சிவக்குந்தண்
டியர்க்குங்கிண் கிணிச்செம்பஞ் சடிசேராய்;

தழைக்குங்கொன் றையைச்செம்பொன்
சடைக்கண்டங் கியைத்தங்குந்
தாரத்தஞ்செம் *புயத்தொன்றும் பெருமானார்-

தனிப்பங்கின் புறத்தின்செம்
பரத்தின்பங் கயத்தின்சஞ்
சரிக்குஞ்சங் கரிக்கென்றும் பெருவாழ்வே;

கழைக்குங்குஞ் சரக்கொம்புங்
கலைக்கொம்புங் கதித்தென்றுங்
கயற்கண்பண் பளிக்குந்திண் புயவேளே-

கறுக்குங்கொண் டலிற்பொங்குங்
கடற்சங்கங் கொழிக்குஞ் செந்
திலிற்கொண்டன் பினிற்றங்கும் பெருமாளே. (கூ)

32. †மனத்தின்பங் கெனத்தங்கைம்
புலத்தென்றன் குணத்தஞ்சிந்
த்ரியத்தம்பந் தனைச்சிந்தும் படிகாலன்-

மலர்ச்செங்கண் கனற்பொங்குந்
திறத்தின்தண் டெடுத்தண்டங்
கிழித்தின்றிங் குறத் ‡தங்கும் பலவோரும்;

எனக்கென்றிங் குனக்கென்றங்
கினத்தின்கண் கணக்கென்றென்
றிளைத்தன்புங் கெடுத்தங்கங் கழிவாமுன்-

இசைக்குஞ்செந் தமிழ்க்கொண்டங்
கிரக்கும்புன் றொழிற்பங்கங்
கெடத்துன்பங் கழித்தின்பந் தருவாயே;

---

* புயம் = கை.

† மனத்தின் பங்கென தங்கு ஐம்புலன் = மனம் செல்வதற்கு வேறு வேறு வாயில்களாகப் பொருந்தியிருக்கும் ஐம்புலன்.

‡ தங்கும் பலவோர் = தத்துவக் கூட்டம்.

கனைக்குந்தண் கடற்சங்கங்
　　காத்தின்கண் 'தரித்*தெங்குங்
　　கலக்கஞ்சிந் திடக்கண்டுஞ் 　　சிடுமாலும்-

†கதித்தொண்பங் கயத்தன்பண்
　　பனைத்துங்குன் றிடச்சுந்தங்
　　களிக்குஞ்சம் புவுக்குஞ்செம் 　　பொருளீவாய்;

தினைக்குன்றந் தனிற்றங்குஞ்
　　சிறுப்பெண்குங் குமக்கும்பந்
　　திருச்செம்பொன் புயத்தென்றும் 　　புனைவோனே-

செழிக்குங்குண் டகழ்ச்சங்கங்
　　கொழிக்குஞ்சந் தனத்தின்பைம்
　　பொழிற்றண்சேந் திலிற்றங்கும் பெருமாளே. (கஎ)

33. பருத்தந்தத் தினைத்தந்திட்
　　டிருக்குங்கச் சடர்த்துந்திப்
　　பருக்கும்பொற் ப்ரபைக்குன்றத் 　　தனமானார்-

பரிக்குந்துற் சரக்கொன்றத்
　　திளைத்தங்குற் பலப்பண்பைப்
　　பரக்குஞ்சக் கரத்தின்சத் 　　தியைநேரும்;

துரைச்செங்கட் கடைக்கொன்றிப்
　　பெருத்தன்புற் றிளைத்தங்குத்
　　துணிக்கும்புத் தியைச்சங்கித் 　　தறியேனைத்-

துணைச்செம்பொற் பதத்தின்புற்
　　றெனக்கென்றப் பொருட்டங்கத்
　　தொடுக்குஞ்சொற் றமிழ்த்தந்‡திப் 　　படியாள்வாய்;

---

* எங்கும் கலக்கம் சிந்திட கண் துஞ்சிடு மால்=தன் வியாபகத்துக் குட்பட்ட சர்வான்மாக்களும் கலக்கமற்றுச் சுகமுற அனந்தல் கொள்ளுந் திருமால்.

† கதித்தொண் பங்கயத்தன்=கதித்த ஒண் பங்கயத்தன்; பங்கயத்தன்=பங்கயத்தனும்.

‡ இப் படி=இப் பூமியில்.

* தருத்தங்கப் பொலத்தண்டத்
தினைக்கொண்டச் சுரர்க்கஞ்சத்
தடத்துன்பத் தினைத்தந்திட் டெதிர்சூரன்-

சமர்க்கெஞ்சிப் படித்துஞ்சக்
கதிர்த்துங்கத் தயிற்கொண்டத்
தலத்தும்பர்ப் பதிக்கன்புற் றருள்வோனே ;

திருக்கஞ்சத் தனைக்கண்டித்
துறக்†கங்குட் டிவிட்டுஞ்சற்
சிவற்கன்றப் பொருட் கொஞ்சிப் பகர்வோனே-

செயத்துங்கக் கொடைத்துங்கத்
திருத்தங்கித் தரிக்கும்பொற்
றிருச்செந்திற் பதிக்கந்தப் பெருமாளே. (௧௮)

34. பெருக்கச்சஞ் சலித்துக்கந்
தலுற்றுப்புந் தியற்றுப்பின்
பிழைப்பற்றுங் குறைப்புற்றும் பொதுமாதர்-

ப்ரியப்பட்டங் கழைத்துத்தங்
கலைக்குட்டங் கிடப்பட்சம்
பிணித்துத்தந் தனத்தைத்தந் தணையாதே ;

புரக்கைக்குன் பதத்தைத்தந்
தெனக்குத்தொண் டுறப்பற்றும்
புலத்துக்கண் செழிக்கச்செந் தமிழ்பாடும்-

புலப்பட்டங் கொடுத்தற்கும்
கருத்திற்கண் படக்கிட்டும்
புகழ்ச்சிக்குங் க்ருபைச்சித்தம் புரிவாயே ;

தருக்கிக்கண் களிக்கத்தெண்
டனிட்டுத்தண் புனத்திற்செங்
குறத்திக்கன் புறச்சித்தந் தளர்வோனே-

---

* தரு தங்கு அ பொலத்து அண்டத்தினை=கற்பக விருக்ஷம் தங்கிய அந்தப் பொன் னுலகத்தை.

† கம்=சிரம்.

சலிப்புற்றங் குரத்திற்சம்
ப்ரமித்துக்கொண் டலைத்துத்தன்
சமர்த்திற்சங் கரிக்கத்தீதண் டியசூரன் ;

சிரத்தைச்சென் றறுத்துப்பந்
தடித்துத்திண் குவட்டைடக்கண்
டிடித்துச்செந் திலிற்புக்கங் குறைவோனே-

சிறக்கற்*கஞ் செழுத்தத்தந்
திருச்சிற்றம் பலத்தத்தன்
செவிக்குப்பண் புறச்செப்பும் பெருமாளே. (கக)

35\. காலனார் வெங்கொடுந் தூதர்பா சங்கொடென்
காலி†னார் தந்துடன் கொடுபோகக்-

காதலார் மைந்தருந் தாயராருஞ்சுடுங்
கானமே பின்தொடர்ந் தலறுமுன் ;

சூலம்வாள் தண்டுசெஞ் சேவல்கோ தண்டமுஞ்
சூடுதோ ளுந்தடந் திருமார்புந்-

தூயதாள் தண்டையுங் காணஆர் வஞ்செயுந்
தோகைமேல் கொண்டுமுன் வரவேணும் ;

ஆலகா லம்பரன் பாலதா கஞ்சிடுந்
தேவர்வா ழன்றுகந் தமுதீயும்-

ஆரவா ரஞ்செயும் வேலைமேல் கண்வளர்ந்
தாதிமா யன்றனன் மருகோனே ;

சாலிசேர் சங்கினம் வாவிசூழ் பங்கயஞ்
சாரலார் செந்திலம் பதிவாழ்வே-

தாவுசூ ரஞ்சிமுன் சாயவே கம்பெறுந்
தாரைவே லுந்திடும் பெருமாளே. (உ0)

---

* அஞ்செழுத்து அத்தம்=பிரணவ பஞ்சாக்ஷரப் பொருள்.

† ஆர்தந்து=கட்டி.

36. சங்கைதா னென்றுதா னின்றியே நெஞ்சிலே
சஞ்சலா ரம்பமாயன்-
சங்கொடே குங்குமா லங்க்ருதா டம்பரா
சம்ப்ரமா னந்தமாயன்;
மங்கைமார் கொங்கைமீ சரங்கமோ கங்களால்
வம்பிலே துன்புறுமே-
வங்குகா நின்சொரூ பம்ப்ரகா சங்கொடே
வந்துநீ யுன்பிலாள்வாய்;
கங்கைசூ டும்பிரான் மைந்தனே அந்தனே
கந்தனே விஞ்சையூரா-
கம்பியா திந்த்ரலோ கங்கள் *கா வென்றவா
கண்டலே சன்சொல்வீரா;
செங்கைவேல் வென்றிவேல் கொண்டுசூர் பொன்றவே
சென்றுமோ தும்ப்ரதாபா-
செங்கண்மால் †பங்கஜா னன்தொழா னந்தவேள்
சேந்தில்வாழ் தம்பிரானே. (உக)

37. சங்குபோல் மென்கழுத் தந்தவாய் தந்தபற்
சந்தமோ கின்பமுத் தெனவானிற்-
றங்குகார் பைங்குழற் கொங்கைநீள் தண்பொருப்
பென்றுதாழ் வொன்றறுத் துலகோரைத்;
துங்கவேள் செங்கைபொற் கொண்டல்நீ யென்றுசொற்
கொண்டு ‡தாய் நின்றுரைத் துழலாதே-
துன்பநோய் சிந்தநற் கந்தவே ளென்றுனைத்
தொண்டினு §லொன்றுரைக் கருள்வாயே;

---

* கா என்று அ ஆகண்டலேசன் எனப் பிரித்துக்கொள்க; ஆகண்டலேசன்=தேவேந்திரன்.

† பங்கஜாஸனன் என்பது பங்கஜானன் என்றாயிற்று.

‡ தாய்=தாவி.

§ ஒன்றுரைக் கருள்வாயே=ஒன்ற உரைக்க அருள்வாயே.

வெங்கண் *வ்யா ளங்கொதித் தெங்கும்வே மென்றெடுத்
துண்டுமே லண்டருக் கமுதாக-
விண்டநா தன்திருக் கொண்டல்பா கன்செருக்
குண்டுபே ரம்பலத் தினிலாடி;
செங்கண்மால் பங்கயக் கண்பெறு தந்தரத்
தின்கணு டுந்திறற் கதிராழித்-
திங்கள்வா ழுஞ்சடைத் தம்பிரா னன்புறச்
சேந்தில்வாழ் செந்தமிழ்ப் பெருமாளே. (உ௨)

38. பங்கமே வும்பிறப் பந்தகா ரந்தனிற்
பந்தபா சந்தனிற் றடுமாறிப்-
பஞ்சபா ணம்படப் புண்படா வஞ்சகப்
பண்பிலா டம்பரப் பொதுமாதர்;
தங்களா லிங்கனக் கொங்கையா கம்படச்
சங்கைமால் கொண்டிளைத் தயராதே-
தண்டைசூழ் கிண்கிணிப் புண்டரீ கந்தனைத்
தந்துநீ யன்புவைத் தருள்வாயே;
அங்கைவேல் கொண்டரக் கன்ப்ரதா பங்கெடுத்
தண்டவே தண்டமுட் படவேதான்-
அஞ்சவே திண்டிறற் †கொண்டலா கண்டலற்
கண்டலோ கங்கொடுத் தருள்வோனே;
திங்களார் கொன்றைமத் தந்துழாய் துன்றுபொற்
செஞ் ‡சடா பஞ்சரத் துறுதோகை-
சிந்தையே தென்றிசைத் தென்றல்வீ சும்பொழிற்
சேந்தில்வாழ் செந்தமிழ்ப் பெருமாளே. (உ௩)

---

* வ்யாளம் = பாம்பு; இங்கே அதனிடத்திருந்து எழுந்த விஷத்தைக் குறித்தது.

† கொண்டல் ஆகண்டலற்கு = மேகவாகன ஞகிய தேவேந்திரனுக்கு,

‡ சடா பஞ்சரத் துறு தோகை = சடையாகிய கூட்டி லிருக்குங் கங்கை.

39. சத்தமிகு மேழுகட லைத்தேனை
யுற்றமது தோடுகலை யைப்போர்கொள்
சத்திதனை மாவின்வடு வைக்காவி தனைமீறு—
தக்கமணம் வீசுகம லப்பூவை
மிக்கவிலை வான்கடு வைச்*சீறு
ஒத்துகளும் வாளையடு மைப்பாவு விழிமாதர் ;
மத்தகிரி போலுமொளிர் வித்தார
முத்துவட மேவுமெழில் மிக்கான
வச்சிரகி ரீடநிகர் செப்பான தனமீதே—
வைத்தகொடி தானமயல் விட்டான
பத்திசெய ஏழையடி மைக்காக
வஜ்ரமயில் மீதிலினி யெப்போது வருவாயே ;
சித்ரவடி வேல்பனிரு கைக்கார
பத்திபுரி வோர்கள் பனு வற்கார
திக்கினு நடாவுபுர விக்கார குறமாது—
சித்தஅநு ராககல விக்கார
துட்டஅசு ரேசர்கல கக்கார
சிட்டர்பரி பாலலளி தக்கார அடியார்கள் ;
முத்திபெற வேசொல்வச னக்கார
தத்தைநிகர் தூயவநி தைக்கார
முச்சகர்ப ராவுசர ணக்கார இனிதான—
முத்தமிழை யாயும்வரி சைக்கார
பச்சைமுகில் தாவுபுரி சைக்கார
முத்துலவு வேலைநகர் முத்தேவர் பெருமாளே.

40. சந்தனச வாதுநிறை கற்பூர
குங்குமப டீரவிரை கத்தூரி
தண்புழுக ளாவுகள பச்சீத வெகுவாச—

---

* சீறு உதத்து உகளும் எனப் பிரிக்க ; உதத்து=யுத்தத்து.

சண்பக*க லாரவகு ளத்தாம
வம்புதுகி லாரவபி ரக்கோவை
தங்கியக டோரதர வித்தார பரிதான;

மந்தரம தானதன மிக்காசை
கொண்டுபொருள் தேடுமதி நிட்டூ
வஞ்சகவி சாரஇத யப்பூவை யனையார்கள்-

†வந்தியிடு மாயவிர கப்பார்வை
அம்பிலுளம் வாடுமறி வற்றேனை
வந்தடிமை யாளஇனி யெப்போது நினைவாயே;

இந்த்ரபுரி காவல்முதன் மைக்கார
சம்ப்ரம ம யூரதுர கக்கார
என்றுமக லாதஇளை மைக்கார குறமாதின்-

இன்பஅநு போகசர சக்கார
வந்த அசு ரேசர்கல கக்கார
எங்களுமை சேயெனரு மைக்கார மிருபாவின்;

செந்தமிழ்சொல் நாலுகவி தைக்கார
குன்றெறியும் வேலின்வலி மைக்கார
செஞ்சொலடி யார்களெளி மைக்கார எழில்மேவும்-

‡திங்கள்முடி நாதர்சம யக்கார
மந்த்ரவுப தேசமகி மைக்கார
செந்திநகர் வாழுமரு மைத்தேவர் பெருமாளே. ()

41. மூந்துதமிழ் மாலை கோடிக் கோடி
சந்தமொடு நீடு பாடிப் பாடி
§முஞ்சர்மனை வாசல் தேடித் தேடி யுழலாதே-

முந்தைவினை யேவ ராமற் போக
மங்கையர்கள் காதல் தூரத் தேக
முந்தடிமை யேனை யாளத் தானு முனைமீதே;

---

* கலாரம் = கல் லாரம் = செங்குவளை.

† வந்தியிடும் = வருத்தத்தை உண்டுபண்ணும்.

‡ திங்கள்முடி நாதர் சமயம் = சைவ சமயம்.

§ முஞ்சர் = செத்துப்போவோர்.

திந்திதிமி தோதி தீதித் தீதி
தந்ததன தான தானத் தாள
செஞ்செணகு சேகு தாளத் தோடு நடமாடுஞ்-
செஞ்சிறிய கால்வி சாலத் தோகை
துங்கஅநு கூல பார்வைத் தீர
செம்பொன்மயில் மீதி லேயெப் போது வருவாயே;

அந்தண்மறை வேள்வி காவற்கார
செந்தமிழ்சொல் பாவின் மாலைக் கார
அண்டருப கார சேவற் கார முடிமேலே-
அஞ்சலிசெய் வோர்கள் நேயக் கார
குன்றுருவ ஏவும் வேலைக் கார
அந்தம்வெகு வான ரூபக் கார எழிலான;

*சிந்துரமின் மேவு போகக் கார
விந்தைகுற மாது வேளைக் கார
செஞ்சொலடி யார்கள் வாரக் கார எதிரான-
செஞ்†சமரை மாயு மாயக் கார
துங்கரண சூர சூறைக் கார
செந்திநகர் வாழு மாண்மைக் கார பெருமாளே.

42. தண்டே னுண்டே வண்டார் வஞ்சேர்
‡தண்டார் மஞ்சக் குழல்மாதர்-
தம்பா லன்பார் நெஞ்சே கொண்டே
சம்பா வஞ்சொற் றடிநாயேன்;
மண்§டோ யந்தீ மென்கால் விண்டோய்
வண்கா யம்போய்க் குடில்வேறாய்-
வன்கா னம்போ யண்டா முன்பே
வந்தே நின்பொற் கழல்தாராய்;

---

* சிந்துர மின் = தெய்வயானை.

† சமரை மாயும் = யுத்தத்திற் பகைவரை மாய்க்கும்.

‡ தண்டார் = தண் தார்.

§ தோயம் = நீர்.

கொண்டா டும்பர் கொண்டா டுஞ்சூர்
கொன்றாய் வென்றிக் குமரேசா-
கொங்கார் வண்டார் பண்வா டுஞ்சீர்
குன்று மன்றற் கிரியோனே;
*கண்டா கும்பா லுண்டா யண்டார்
கண்டா †கந்தப் புயவேளே-
‡கந்தா மைந்தா ரந்தோள் மைந்தா
கந்தா செந்திற் பெருமாளே. (உஎ)

43. வெங்கா ளம்பா ணஞ்சேல் கண்பால்
மென்பா கஞ்சொற் குயில் §மாலை-
மென்கே சந்தா னென்றே கொண்டார்
மென்றோ ளொன்றப் பொருள்தேடி;
வங்கா ளஞ்||சோ னஞ்சீ னம்போய்
வன்பே துன்பப் படலாமோ-
¶மைந்தா ருந்தோள் மைந்தா அந்தா
வந்தே யிந்தப் பொழுதாள்வாய்;
கொங்கார் பைந்தே னுண்டே வண்டார்
குன்றாள் கொங்கைக் கினியோனே-
குன்றோ டுஞ்சூ ○ழம்பே ழுஞ்சூ
ரும்போய் மங்கப் பொருகோபா;

---

* கண்டாகும் பால் = கற்கண்டுபோலும் இனிமையுள்ள பால்; தேவியார் பொற்கிண்ணத்துக் கறந்து ஊட்டிய திருமுலைப் பால்.

† கந்தப் புயம் = வாசனை தங்கிய புயம்.

‡ கந்து ஆம் மைந்து ஆர் அம் தோள் மைந்தா = கம்பத்துக்குச் சமானமாகிய வலிமை பொருந்திய அழகிய தோள்களை யுடைய பராக்கிரமனே.

§ மாலை = இருள்.

|| சோனம் = சோனகம் (ஐம்பத்தாறு தேசத்தில் ஒன்று).

¶ மைந்து = வலிமை.

○ அம்பேழும் = ஏழு கடலும்.

கங்கா ளஞ்சேர் மொய்ம்பர் ரன்பார்
கன்றே யும்பர்க் கொருநாதா-
* கம்பூர் சிந்தார் தென்பால் வந்தாய்
கந்தா செந்திற் பெருமாளே. (உஅ)

44. விதிபோ லுந் †முந்த விழியா லுமிந்து
நுதலா லு ‡மொன்றி யிளைஞோர்தம்-
விரிவான சிந்தை யுருவாகி நொந்து
விறல்வேறு சிந்தை வினையாலே;
இதமாகி யின்ப மதுபோத வுண்டு
இனிதாளு மென்று மொழிமாதர்-
இருளாய துன்ப மருள்மாயை வந்து
எனையீர்வ தென்றும் ஒழியாதோ;
மதிசூடி யண்டர் பதிவாழ மண்டி
வருமால முண்டு விடையேறி-
மறவாத சிந்தை யடியார்கள் பங்கில்
வருதேவ சம்பு தருபாலா;
அதிமாய மொன்றி வருசூர் பொன்ற
அயில்வேல்கொ டன்று பொரும்வீரா-
அழகான செம்பொன் மயில்மே லமர்ந்து
அலைவா யுகந்த பெருமாளே. (உக)

45. விறல்மார னைந்து மலர்வாளி சிந்த
மிகவானி லிந்து வெயில்காய-
மிதவாடை வந்து தழல்போல வொன்ற
வினைமாதர் தந்தம் வசைகூற;
குறவாணர் குன்றி லுறைபேதை கொண்ட
கொடிதான துன்ப மயல்தீர-

---

* கம்பு ஊர் சிந்து = சங்குகள் தவழும் சமுத்திரம்.
† உந்தவிழி = உந்து அ விழி.
‡ 'ஒன்றி...உருவாகி நொந்து . மொழி மாதர்' எனக் கூட்டுக.

குளிர்மாலை யின்க ணணிமாலை தந்து
குறைதீர வந்து குறுகாயோ ;
மறிமா னுகந்த இறையோன் மகிழ்ந்து
வழிபாடு தந்த மதியாளா-
* மலைமாவு சிந்த அலைவேலை யஞ்ச
வடிவே லெறிந்த அதிதீரா ;
அறிவா லறிந்து னிருதா ளிறைஞ்சு
மடியா ரிடைஞ்சல் களைவோனே-
அழகான செம்பொன் மயில்மே லமர்ந்து
அலைவா யுகந்த பெருமாளே. (ருO)

46. அங்கை மென்குழ லாய்வார் போலே
சந்தி நின்றய லோடே போவா
ரன்பு கொண்டிட நீரோ போறீ றறியீரோ-
அன்று வந்தொரு நாள்நீர் போனீர்
பின்பு கண்டறி யோநா மீதே
அன்று மின்றுமொர் போதோ போகா துயில்வாரா;
எங்க ளந்தரம் வேறா ரோர்வார்
பண்டு தந்தது போதா தோமே
வின்று தந்துற வோதா னீதே னிதுபோதா-
திங்கு நின்றதென் வீடே வாரீ
ரென்றி ணங்கிகள் மாயா லீலா
இன்ப சிங்கியில் வீணே வீழா தருள்வாயே ;
மங்கு லின்புறு வானாய் வானா
டன்ற ரும்பிய காலாய் நீள்கால்
மண்டு றுப்பகை நீறா வீறா எரிதீயாய்-
வந்தி ரைந்தெழு நீராய் நீர்சூழ்
அம்ப ரம்புனை பாராய் பாரேழ்
மண்ட லம்புகழ் நீயாய் நானாய் மலரோனாய் ;

---

*மலை மாவு சிந்த=கிரௌஞ்சகிரியும் (சூரனாகிய) மாமரமுஞ்
சிந்த.

உங்கள் சங்கரர் தாமாய் நாமார்
*அண்ட பந்திகள் தாமாய் வானாய்
ஒன்றி னுங்கலை தோயா மாயோன் மருகோனே—
ஒண்த டம்பொழில் நீடூர் கோடூர்
சேந்தி லம்பதி வாழ்வே வாழ்வோர்
உண்ட நெஞ்சறி தேனே வானோர் பெருமாளே. ()

47. அந்தகன்வ ருந்தினம் பிறகிடச்
சந்ததமும் வந்துகண் டரிவையர்க்
கன்புருகு சங்கதந் தவிரமுக் குணமாள—
† அந்திபக லென்றிரண் டையுமொழித்
திந்திரிய சஞ்சலங் களையறுத்
தம்புய பதங்களின் பெருமையைக் கவிபாடிச்;
செந்திலை யுணர்ந்துணர்ந் துணர்வுறக்
‡ கந்தனை யறிந்தறிந் தறிவினிற்
சென்றுசெரு குந்தடந் தெளிதரத் தணியாத—
சிந்தையு மவிழ்ந்தவிழ்ந் துரையொழித்
தென்செய லழிந்தழிந் தழியமெய்ச்
சிந்தைவர என்றுநின் தெரிசனைப் படுவேனோ;
கொந்தவிழ் சரண்சரண் சரணெனக்
கும்பிடு புரந்தரன் பதிபெறக்
குஞ்சரி குயம்புயம் பெறஅரக் கருமாளக்—
குன்றிடிய அம்பொனின் திருவரைக்
கிண்கிணி கிணின்கிணின் கிணினெனக்
குண்டல மசைந்திளங் குழைகளிற் ப்ரபைவீசத்;
தந்தன தனந்தனந் தனவெனச்
செஞ்சிறு சதங்கைகொஞ் சிடமணித்
தண்டைகள் கலின்கலின் கலினெனத் திருவான—

---

* அண்டபந்திகள் தாம் ஆய் வான் ஆய் எனப் பிரிக்க.

† அந்திபகல் = கேவலசகலம்.

‡ கந்தனை = கந்தனாகிய நின்னை; இஃது இடவழுவமைதி.

சங்கரி மனங்குழைந் துருகமுத்
தந்தர வருஞ்செழுந் தளர்நடைச்
சந்ததிச கந்தொழுஞ் சரவணப் பெருமாளே. (௩உ)

48. அருணமணி மேவு பூஷித ம்ருகமத படீர லேபன
அபிநவ விசால பூரண *
அம்பொற் கும்பத் தனமோதி-

அளிகுலவு மாதர் லீலையின் முழுகியபி ஷேக மீதென
அறவுமுற வாடி நீடிய
அங்கைக் கொங்கைக் கிதமாகி;

*இருணிறைய மோதி மாலிகை சருவி யுறவான வேளையி
விழைகலைய மாத ரார்வழி
யின்புற் றன்புற் றழியாநீள்-

இரவுபகல் மோக னாகியெ படியில்மடி யாமல் யானுமுன்
இணையடிகள் பாடி வாழவெ
னெஞ்சிற் செஞ்சொற் றருவாயே;

தருணமணி யாட ராவணி குடிலசடி லாதி யோதிய
சதுர்மறையி னாதி யாகிய
சங்கத் துங்கக் குழையாளர்-

தருமுருக மேக சாயலர் தமரமக ராழி சூழ்புவி
தனைமுழுதும் வாரி யேயமு
துண்டிட் டண்டர்க் கருள்கூரும்;

செருமுதலி மேவு மாவலி யதிமதகபோல மாமலை
தெளிவினுடன் மூல மேயென
முந்தச் சிந்தித் தருள்மாயன்-

திருமருக சூரன் மார்பொடு சிலையுருவ வேலை யேவிய
ஜெயசரவ ணாம னோகர
சேந்திற் கந்தப் பெருமாளே. (௩௩)

---

* இருள் நிறை அம் ஓதி; ஓதி=கூந்தல்.

49. அறிவழிய மயல்பெருக வுரையுமற விழிசுழல
அனலவிய மலமொழுக அகலாதே-
அனையுமனை யருகிலுற வெருவியழ வுறவுமழ
அழலினிகர் மறலியெனை யழையாதே;
செறியுமிரு வினைகரண மருவுபுல னொழியவுயர்
திருவடியி லணுகவர மருள்வாயே-
சிவனைநிகர் பொதியவரை முநிவனக மகிழஇரு
செவிகுளிர இனியதமிழ் பகர்வோனே;
நெறிதவறி யலரிமதி நடுவன்மக பதி*முளரி
நிருதிநிதி பதிகரிய வனமாலி-
நிலவுமறை யவனிவர்க ளலையஅர சுரிமைபுரி
நிருதனுர மறஅயிலை விடுவோனே;
மறிபரசு கரமிலகு பரமனுமை யிருவிழியு
மகிழமடி மிசைவளரு மிளையோனே-
† மதலைதவ ழுததியிடை வருதரள மணிபுளின
மறையவுயர் கரையிலுறை பெருமாளே. (௩௪)

50. அனைவரு மருண்ட ருண்டு கடிதென வெகுண்டி யம்ப
அமரஅடி பின்தொ டர்ந்து பிணநாறு-
மழுகுபிணி கொண்டு விண்டு புழுவுட னெலும்ப லம்பு
மவலவுட லஞ்சு மந்து தடுமாறி;
மனைதொறு மிதம்ப கர்ந்து வரவர விருந்த ருந்தி
மனவழி திரிந்து மங்கும் வசைதீர-
மறைசதுர் விதந்தெ ரிந்து வகைசிறு சதங்கை கொஞ்ச
மலரடி வணங்க என்று பெறுவேனோ;
தினமிசை சுகங்க டிந்த புனமயி லிளங்கு ரும்பை
திகழிரு தனம்பு ணர்ந்த திருமார்பா-
ஜெகமுழுது முன்பு தும்பி முகவனொடு தந்தை முன்பு
திகிரிவலம் வந்த செம்பொன் மயில்வீரா;

---

* முளரி = அக்கினி. † மதலை = மரக்கலம்.

இனியகனி மந்தி சிந்து மலைகிழவ செந்தில் வந்த
இறைவகுக கந்த என்று மிளையோனே-
எழுகடலு மெண்சி லம்பும் நிசிசரரும் அஞ்ச அஞ்சு
மிமையவரை யஞ்ச லென்ற பெருமாளே. (௫௫)

51. இயலிசையி லுசித வஞ்சிக் கயர்வாகி-
இரவுபகல் மனது சிந்தித் துழலாதே;
உயர்கருணை புரியு மின்பக் கடல்மூழ்கி-
உனையெனது ளறியு மன்பைத் தருவாயே;
*மயில் தகர்க லிடைய ரந்தத் தினைகாவல்-
வனசகுற மகளை வந்தித் தணைவோனே;
கயிலைமலை யனைய செந்திற் பதிவாழ்வே-
கரிமுகவ னிளைய கந்தப் பெருமாளே. (௫௬)

52. இருகுழை யெறிந்த கெண்டைகள் ஒருகுமி ழடர்ந்து வந்திட
இணைசிலைநெ ரிந்தெ ழுந்திட அணைமீதே-
இருளளக பந்தி வஞ்சியி லிருகலையு டன்கு லைந்திட
இதழமுத ருந்து சிங்கியின் மனமாய;
முருகொடுக லந்த சந்தன அளறுபடு குங்கு மங்கமழ்
முலைமுகடு கொண்டெ ழுந்தொறு முருகாரா-
முழுமதிபு ரிந்த சிந்துர அரிவையரு டன்க லந்திடு
†முகடியுந லம்பி றந்திட அருள்வாயே;
எரிவிடநி மிர்ந்த குஞ்சியி னிலவொடு மெழுந்த கங்கையு
மிதழியொ டணிந்த சங்கரர் களிகூரும்-
இமவரைத ருங்கருங்குயில் மரகதநி றந்த ருங்கிளி
யெனதுயிரெ னுந்த்ரி யம்பகி பெருவாழ்வே;
அரைவடமலம்பு கிண்கிணி பரிபுர நெருங்கு தண்டைக
ளணிமணிச தங்கை கொஞ்சிட மயில்மேலே-
அகமகிழ்வு கொண்டு சந்ததம் வருகுமர முன்றி லின்புறம்
அலைபொருத செந்தில் தங்கிய பெருமாளே. (௫௭)

* மயில் தகர் கல் இடையர்=மயிலும் ஆடும் நிறைந்த குன்றி னிடத்தில் வசிக்கும் வேடுவர்.

† முகடியும்=மூகடிக்கும்; முகடி=மூதேவி.

53. இருள்விரி குழலை விரித்துத் தூற்றவு
மிறுகிய துகிலை நெகிழ்த்துக் காட்டவு
மிருகடை விழியு முறுக்கிப் பார்க்கவு மைந்தரோடே-
இலைபிள வதனை நடித்துக் கேட்கவு
மறுமொழி பலவு மிசைத்துச் சாற்றவு
மிடையிடை சிறிது நகைத்துக் காட்டவு
மெங்கள் வீடே;
வருகென வொருசொ லுரைத்துப் பூட்டவும்
விரிமல ரமளி யணைத்துச் சேர்க்கவும்
வருபொரு ளளவி லுருக்கித் தேற்றவு நிந்தையாலே-
வனமனை புகுதி லடித்துப் போக்கவு
மொருதலை மருவு புணர்ச்சித் தூர்த்தர்கள்
வசைவிட நினது பதத்தைப் போற்றுவ
தெந்தநாளோ;
குருமணி வயிர மிழித்துக் கோட்டிய
கழைமட வுருவு வெளுத்துத் தோற்றிய
*குளிறிசை யருவி கொழித்துத் தூற்றிய
மண்டுநீ †ளூர்-
குழிபடு ‡கலுழி வயிற்றைத் தூர்த்தெழு
திடர்மண லிறுகு துருத்திக் §காப்பொதி
குளிர்நிழ லருவி கலக்கிப் பூப்புனை வண்டலாடா;
முருகவிழ் துணர்க ளுகுத்துக் காய்த்தினை
விளைநடு விதணி லிருப்பைக் காட்டிய
முகிழ்முலை யிளைய குறத்திக் காட்படு
செந்தில்வாழ்வே-
முளையிள மதியை யெடுத்துச் சாத்திய
சடைமுடி யிறைவர் தமக்குச் சாத்திர
முறையருள் முருக தவத்தைக் காப்பவர்
தம்பிரானே. (௫௮)

---

* குளிறு இசை; குளிறு=சப்திக்கின்ற.
† ஊர்=செல்லுகின்ற. ‡ கலுழி=கான்யாறு.
§ துருத்தி கா=திட்டினிடத்துள்ள சோலை.

54. இன்பமுந் துன்பமுஞ் சந்ததங் கொண்டுசென்
றிங்குமங் குஞ்சுழன் றிடுமாயத்-
துன்பவெண் கும்பியங் கந்தவிர்ந் துன்பெருந்
தொண்டனென் றுய்ந்துளங் களியேனோ;
புன்குருந் தந்தியஞ் சந்தனஞ் சிந்திமுன்
பொங்கிவெண் சங்கெறிந் தலைவீசும்-
தன்*பொருந் தம்பசும் பொன்சொரிந் தெங்கணுந்
தந்திடுஞ் செந்திலம் பெருமாளே. (௩௬)

55. உததியறல் மொண்டு சூல்கொள்கரு
முகிலெனஇ ருண்ட நீலமிக
வொளிதிகழு மன்ற லோதிநரை பஞ்சுபோலாய்-
உதிரமெழு துங்க வேலவிழி
மிடைகடையொ துங்கு பீளைகளு
முடைதயிர்பி திர்ந்த தோஇதென வெம்புலாலாய்;
மதகரட தந்தி வாயினிடை
சொருகுபிறை தந்த சூதுகளின்
வடிவுதரு கும்ப மோதிவளர் கொங்கைதோலாய்-
வனமழியு மங்கை மாதர்களி
னிலைதனையு ணர்ந்து தாளினுறு
வழியடிமை யன்பு கூருமது சிந்தியேனோ;
இதழ்பொதிய விழ்ந்த தாமரையின்
மணவறைபு குந்த நான்முகனு
மெறிதிரைய லம்பு பானுததி நஞ்சராமேல்
இருவிழிது யின்ற நாரணனு
முமைமருவு சந்த்ர சேகரனு
மிமையவர்வ ணங்கு வாசவனு நின்றுதாழும்;
முதல்வசுக மைந்த பீடிகையி
லகிலசக அண்ட நாயகிதன்
முகிழ்முலைசு ரந்த பாலமுத முண்டவேளே-

* பொருந்தம் = தாமிரபர்ணி.

முளைமுருகு சங்கு வீசியலை
முடுகி*மைதவழ்ந்த வாய்பெருகி
முதலிவரு சேர்தில் வாழ்வுதரு தம்பிரானே. (சo)

56. ஏவினை நேர்விழி மாதரை மேவிய
ஏதனை மூடனை நெறிபேணு-
ஈனனை வீணனை யேடெழு தாமுழு
ஏழையை மோழையை அகலாநீள் ;
மாவினை மூடிய நோய்பிணி யாளனை
வாய்மையி லாதனை யிகழாதே-
மாமணி நூபுர சீதள தாள்தனி
வாழ்வுற ஈவது மொருநாளே ;
நாவலர் பாடிய நூலிசை யால்வரு
நாரத னார்புகல் குறமாதை-
நாடியெ கானிடை கூடிய சேவக
நாயக மாமயி லுடையோனே ;
தேவிம நோமணி ஆயிப ராபரை
தேன்மொழி யாள்தரு சிறியோனே-
சேணுயர் சோலையி னீழலி லேதிகழ்
சீரலை வாய்வரு பெருமாளே. (சக)

57. ஓரா தொன்றைப் பாரா தந்தத்
தோடே வந்திட் டுயிர்சோர-
ஊடா நன்றற் றார்போல் நின்றெட்
டாமால் தந்திட் டுழல்மாதர் ;
கூரா வன்பிற் சோரா நின்†றக்
கோயா நின்றுட் குலையாதே-
கோடார் செம்பொற் றோளா நின்சொற்
கோடா தென்கைக் கருள்தாராய் ;

---

* மை தவழ்ந்தவாய் = மேகம் தவழ்ந்ததுபோல.

† அக்கு—எலும்போடு கூடிய சரீரம்.

தோரா வென்றிப் போரா மன்றற்
றோளா குன்றைத் தொளையாடு-
சூதா யெண்டிக் கேயா வஞ்சச்
சூர்மா அஞ்சப் பொரும்வேலா;
சீரார் கொன்றைத் தார்மார் பொன்றச்
சேவே றெந்தைக் கினியோனே-
தேனே யன்பர்க் கேயா மின்சொற்
சேயே செந்திற் பெருமாளே. (சஉ)

58. கட்டழகு விட்டுத் தளர்ந்தங் கிருந்துமுன
மிட்டபொறி தப்பிப் பிணங்கொண்ட தின்சிலர்கள்
கட்டணமெ டுத்துச் சுமந்தும் பெரும்பறைகள்
முறையோடே-
வெட்டவிட வெட்டக் கிடஞ்சங் கிடஞ்சமென
மக்களொரு மிக்கத் தொடர்ந்தும் புரண்டும்வழி
விட்டுவரு மித்தைத் தவிர்ந்துன் பதங்களுற
வுணர்வேனோ;
பட்டுருவி நெட்டைக் க்ரௌஞ்சம் பிளந்துகடல்
முற்றுமலை வற்றிக் குழம்புங் குழம்பமுனை
பட்டஅயில் தொட்டுத் திடங்கொண் டெதிர்ந்தவுணர்
முடிசாயத்-
தட்டழிய வெட்டிக் கவந்தம் பெருங்கழுகு
நிர்த்தமிட ரத்தக் குளங்கண் டுமிழ்ந்துமணி
சற்சமய வித்தைப் பலன் கண்டு செந்திலுறை
பெருமாளே. (சங)

59. கண்டுமொழி*கொம்பு கொங்கை வஞ்சியிடை அம்பு நஞ்சு
கண்கள்குழல் கொண்ட லென்று பலகாலும்-
கண்டுளம்வ ருந்தி நொந்து மங்கையர்வ சம்பு ரிந்து
கங்குல்பக லென்று நின்று விதியாலே;

---

* கொம்பு=யானைக்கொம்பு.

பண்டைவினை கொண்டு மூன்று வெந்துவிழு நின்றல் கண்டு
பங்கயப தங்கள் தந்து புகழோதும்-
பண்புடைய சிந்தை யன்பர் தங்களினு டன்க லந்து
பண்புபெற அஞ்ச லஞ்ச லெனவாராய்;
வண்டுபடு கின்ற தொங்கல் கொண்டறநெ ருங்கி*யிண்டு
வம்பினைய டைந்து †சந்தின் மிகமூழ்கி-
‡வஞ்சியை முனிந்த கொங்கை மென்குறம டந்தை செங்கை
வந்தழகு டன்க லந்த மணிமார்பா;
திண்டிறல்பு னைந்த அண்டர் தங்களப யங்கள் கண்டு
செஞ்§சமர்பு னைந்து துங்க மயில்மீதே-
சென்றசுர ரஞ்ச வென்று குன்றிடை மணம்பு ணர்ந்து
செந்தில்நகர் வந்த மர்ந்த பெருமாளே. (சச)

60. களப மொழுகிய புளகித முலையினர்
கடுவு மமிர்தமும் விரவிய விழியினர்
கழுவு சரிபுழு கொழுகிய குழலின ரெவரோடுங்-
கலக மிடுகய லெறிகுழை விரகியர்
பொருளி லிளைஞரை வழிகொடு மொழிகொடு
தளர விடுபவர் தெருவினி லெவரையு நகையாடிப்;
பிளவு பெறிலதி லளவள வொழுகியர்
நடையி லுடையினி லழகொடு திரிபவர்
பெருகு பொருள்பெறி லமளியி லிதமொடு
குழைவோடே-
பிணமு மணைபவர் வெறிதரு புனலுணும்
அவச வனிதையர் முடுகொடு மணைபவர்
பெருமை யுடையவ ருறவினை விடஅருள்
புரிவாயே;

---

* இண்டு—ஈண்டு என்பதன் விகாரம்; ஈண்டு = நெருங்கிய.
† சந்து = சந்தனம்.
‡ வஞ்சியை முனிந்த = கொடிபோலும் இடையை வருத்துகின்ற.
§ சமர் புனைந்து = போர்க்கோலங் கொண்டு.

*அளையி லுறைபுலி பெறு†மக வயிறரு
பசுவி னிரைமுலை யமுதுண ‡நிரைமகள்
§வசவ னெடுபுலி முலையுண மலையுட னுருகாநீள்-
அடவி தனிலுள ||வுலவைகள் தளிர்விட
மருள மதமொடு களிறுகள் பிடியுடன்
அகல வெளியுயர் பறவைகள் நிலம்வர
விரல்சேரேழ் ;
தொளைகள் விடுகழை விரன்முறை தடவிய
இசைகள் பலபல தொனிதரு கருமுகில்
சுருதி யுடையவ னெடியவன் மனமகிழ்
மருகோனே-
துணைவ குணதர சரவண பவநம
முருக குருபர வளரறு முககுக
துறையி லலையெறி திருநக ருறைதரு
பெருமாளே. (சரு)

61. கனங்கள் கொண்ட குந்த ளங்க ளுங்கு லைந்த லைந்து விஞ்சு
கண்க ளுஞ்சி வந்த யர்ந்து களிகூரக்-
கரங்க ளுங்கு விந்து நெஞ்ச கங்க ளுங்க சிந்தி டுங்க
றங்கு பெண்க ளும்பி றந்து விலைகூறிப் ;
பொனின்கு டங்க ளஞ்சு மென்த னங்க ளும்பு யங்க ளும்பொ
ருந்தி யன்பு நண்பு பண்பு முடனாகப்-
புணர்ந்து டன்பு லர்ந்து பின்க லந்த கங்கு ழைந்த வம்பு
ரிந்து சந்த தந்தி ரிந்து படுவேனோ ;
அனங்க னைந்து நைந்து வெந்து குந்து சிந்த அன்று கண்தி
றந்தி ருண்ட கண்டர் தந்த அயில்வேலா-
அடர்ந்த டர்ந்தெ திர்ந்து வந்த வஞ்ச ரஞ்ச வெஞ்ச மம்பு
ரிந்த அன்ப ரின்ப நண்ப உரவோனே ;

---

* அளை = மலைக்குகை.
† மக வயிறரு = மகவு அயில்தரு ; அயில்தால் = குடித்தல்.
‡ நிரை மகள் = பசுவின் பெண்கன்று.
§ வசவன் = ஆண்கன்று. || உலவைகள் = மரங்கள்.

சினங்கள் கொண்டி லங்கை மன்சி ரங்கள் சிந்த வெஞ்ச ரந்தெ
ரிந்த வன்ப ரிந்த இன்ப மருகோனே-
சிவந்த செஞ்ச தங்கை யுஞ்சி லம்பு தண்டை யும்பு னைந்து
செந்தில் வந்த கந்த எங்கள் பெருமாளே. (௬௬)

62. கன்றிலுறு மானை வென்றவிழி யாலெ
கஞ்சமுகை மேவு முலையாலே-
கங்குல்செறி கேச மங்குல்குலை யாமை
கந்தமலர் சூடு மதனாலே ;
நன்றுபொருள் தீர வென்றுவிலை பேசி
நம்பவிடு மாத ருடனாடி-
*நஞ்சுபுசி தேரை யங்கமது வாக
நைந்துவிடு வேனை யருள்பாராய் ;
குன்றிமணி போல்வ செங்கண்வரி †போகி
கொண்டபடம் வீசு மணிகூர்வாய் ;
கொண்ட மயிலேறி அன்றசுரர் சேனை
கொன்றகும ரேச குருநாதா ;
மன்றல்கமழ் பூக தெங்குதிரள் சோலை
வண்டுபடு வாவி புடைசூழ-
மந்தி நடமாடு செந்தினகர் மேவு
மைந்தஅம ரேசர் பெருமாளே. (௬௭)

63. குகர மேவுமெய்த் துறவினின் மறவாக்
கும்பிட் டுந்தித் தடமூழ்கிக்-
குமுத வாயின்முற் றமுதினை நுகராக்
கொண்டற் கொண்டைக் குழலாரோ ;
டகரு தூளிகர்ப் புரதன இருகோட்
டன்புற் றின்பக் கடலூடே-
அமிழு வேனைமெத் தெனவொரு கரைசேர்த்
தம்பொற் றண்டைக் கழல்தாராய் ;

---

* நஞ்சு=நஞ்சையுடைய பாம்பு. இஃது ஆகுபெயர்.
† போகி=பாம்பு.

ககன கோளகைக் கணவிரு மளவாக்
கங்கைத் துங்கப் புனலாடும்—
கமல வாதனற் களவிட முடியாக்
கம்பர்க் கொன்றைப் பூகல்வோனே;
சிகர கோபுரத் தினுமதி யினுமேற்
செம்பொற் கம்பத் தளமீதும்—
தெருவி லேயுநித் திலமெறி யலைவாய்ச்
செந்திற் கந்தப் பெருமாளே. (சஅ)

64. சூடர்நினை மென்பு சலமல மண்டு
குருதிந ரம்பு சீயூன் பொதிதோல்—
குலவு குரம்பை முருடு சுமந்து
குனகிம கிழ்ந்து நாயேன் தளரா;
அடர்மத னம்பை யனையக ருங்க
ணரிவையர் தங்கள் தோடோய்ந் தயரா—
அறிவழி கின்ற குணமற வுன்றன்
அடியிணை தந்து நீயாண் டருள்வாய்;
தடவியல் சேந்தி விறையவ நண்பு
தருகுற மங்கை வாழ்வாம் புயனே—
சரவண கந்த முருகக டம்ப
தனிமயில் கொண்டு பார்சூழ்ந் தவனே;
சுடர்படர் குன்று தொளைபட அண்டர்
தொழுமொரு செங்கை வேல்வாங் கியவா—
*துரிதப தங்க இரதப்ர சண்ட
சொரிகடல் நின்ற சூராந் தகனே. (சகூ)

65. கொங்கைகள்கு லுங்கவளை செங்கையில்வி ளங்கஇருள்
கொண்டலைய டைந்தகுழல் வண்டுபாடக்—
கொஞ்சிய†வ னங்குயில்கள் ‡பஞ்சநல்வ னங்கிளிகள்
கொஞ்சியதெ னுங்குரல்கள் கெந்துபாயும்:

---

* துரித பதங்க இரத ப்ரசண்ட=வேகத்தோடு செல்லும் மயிலாகிய இரதத்தையுடைய பிரசண்டனே.

† வன அம் குயில்கள்=சோலையில் வசிக்கும் அழகிய குயில்கள்.

‡ பஞ்ச நல் வனம் கிளிகள்=நல்ல பஞ்சவர்ணக் கிளிகள்.

வெங்கயல் மிரண்டவிழி அம்புலிய டைந்தநுதல்
விஞ்சையர்கள் தங்கள்மயல் கொண்டுமேலாய்-
வெம்பிணியு மூன்றி*பவ சிந்தனைநி னைந்துனது
மின்சரண பைங்கழலொ டண்டஆளாய்;
சங்கமுரா சந்திமிலை துந்துமித தும்பவளை
தந்தனத னந்தமென வந்தசூரர்-
சங்கைகெட மண்டிதிகை யெங்கிலும டிந்துவிழ
தண்கடல்கொ ளுந்தநகை கொண்டவேலா;
சங்கரனு கந்தபரி வின்குருவெ னுஞ்சுருதி
தங்களின்ம கிழ்ந்துருகு மெங்கள்கோவே-
சந்திரமு கஞ்செயல்கொள் சுந்தரகு றம்பெணொடு
சம்புகழ் செந்தில்மகிழ் தம்பிரானே. (௬0)

66. கொம்பனை யார்காது மோதிரு
கண்களி லாமோத சீதள
குங்கும பாடீர பூஷண நகமேவு-
கொங்கையி†னீராவி மேல்வளர்
செங்கழு நீர்மாலை சூடிய
கொண்டையி லாதார சோலையில் மருளாதே;
உம்பர்கள் ஸ்வாமீ நமோநம
எம்பெரு மானே நமோநம
ஒண்டொடி மோகா நமோநம எனநாளும்-
உன்புக ழேபாடி நானினி
அன்புட னாசார பூசைசெய்
துய்ந்திட வீணாள்ப டாதருள் புரிவாயே;
பம்பர மேபோல ஆடிய
சங்கரி வேதாள நாயகி
பங்கய சீபாத நூபுரி கரசூலி-
பங்கமி லாநீலி மோடிப
யங்கரி மாகாளி யோகினி
பண்டுசு ராபான சூரனொ டெதிர்போர்கண்;

---

* பவ சிந்தனை = பிறவிக்கடலில் அலைபவனை.

† நீ ராவி = நீர்த் தடாகம்.

டெம்புதல் வாவாழி வாழியெ
னும்படி வீரன வேல்தர
என்றுமு ளானேம நோகர வயலூரா-
இன்சொல்வி சாகாக்ரு பாகர
சேந்திலில் வாழ்வாகி யேயடி
யென்றனை யீடேற வாழ்வருள் பெருமாளே. (௬க)

67. கொலைமத கரியன ம்ருகமத தனகிரி
கும்பத் தனமுானுர்-
குமுதஅ முதஇதழ் பருகியு ருகிமயல்
கொண்டுற் றிடுநாயேன்;
நிலையழி கவலைகள் கெடவுன தருள்விழி
நின்றுற் றிடவேதான்-
நின திரு வடிமல ரிணைமன தினிலுற
நின்பற் றடைவேனோ;
சிலையென வடமலை யுடையவ ரருளிய
செஞ்சொற் சிறுபாலா-
திரைகட லிடைவரு மசுரனை வதைசெய்த
செந்திற் பதிவேலா;
*விலைநிகர் நுதலிப மயில்குற மகளும்வி
ரும்பிப் புணர்வோனே-
விருதணி மரகத மயில்வரு குமரவி
டங்கப் பெருமாளே. (௬உ)

68. சேமக் கோமள பாதத் தாமரை
சேர்தற் கோதும நந்தவேதா-
தீதத் தேயவி ரோதத் தேகுண
சீலத் தேமிக அன்புறாதே;
காமக் ரோதவு லோபப் பூதவி
காரத் தேயழி கின்றமாயா-
காரியத் தேபசு பாசத் தேசிலர்
காமுற் றேயும தென்கொலோதான்;

* விலை=வில்லை.

நேமிச் சூரொடு மேருத் தூளெழ
நீளக் காளபு யங்ககால-
நீலக் ரீபக லாபத் தேர்விடு
நீபச் சேவக செந்தில்வாழ்வே;
ஓமத் தீவழு வார்கட் கூர்சிவ
லோகத் தேதரு மங்கைபாலா-
யோகத் தாறுப தேசத் தேசிக
வூமைத் தேவர்கள் தம்பிரானே. (ருங)

69. தகரநறை பூண்ட விந்தைக்
குழலியர்கள் தேய்ந்த இன்பத்
தளருமிடை யேந்து தங்கத் தனமானார்-
தமைமனதில் வாஞ்சை பொங்கக்
கலவியொடு சேர்ந்து மந்த்ரச்
சமயஜெப நீங்கி யிந்தப் படிநாளும்;
புகலரிய தாந்த்ரி சங்கத்
தமிழ்பனுவ லாய்ந்து கொஞ்சிப்
புவியதனில் வாழ்ந்து வஞ்சித் துழல்மூடர்-
புகிதமிலி மாந்தர் தங்கட்
புகழ்பகர்தல் நீங்கி நின்பொற்
புளகமலர் பூண்டு வந்தித் திடுவேனோ;
தகுடதகு தாந்த தந்தத்
திகுடதிகு தீந்த மிந்தித்
தகுகணக தாங்க ணங்கத் தனதான-
தனனதன தாந்த னந்தத்
தெனநடன மார்ந்த துங்கத்
தனிமயிலை யூர்ந்த சந்தத் திருமார்பா;
திகையசுரர் மாண்ட மூந்தத்
திறலயிலை வாங்கு செங்கைச்
சிமையவரை யீன்ற மங்கைக் கொருபாலா-
திகழ்வயிர மேந்து கொங்கைக்
குறவனிதை காந்த சந்த்ரச்
சிகாமுகி லோங்கு செந்திற் பெருமாளே. (ருச)

70. தந்த பசிதனைய றிந்து முலையமுது
தந்து முதுகுதட்ட வியதாயார்-
தம்பி பணிவிடைசெய் தொண்டர் பிரியமுள
தங்கை மருகருயி ரெனவேசார்;
மைந்தர் மனைவியர்*கடும்பு கடனுதவு
மந்த வரிசைமொழி பகர்கேடா-
வந்து†தலைநவிர விழ்ந்து தரைபுகம
யங்க வொருமகிட மிசையேறி;
அந்த கனுமெனைய டார்ந்து வருகையினி
லஞ்ச லெனவலிய மயில்மேல்நீ-
அந்த மறலியொடு கந்த மனிதனம
தன்ப னெனமொழிய வருவாயே;
சிந்தை மகிழுமலை மங்கை நகிலிணைகள்
சிந்து‡பயமயிலு மயில்வீரா-
திங்க ளரவுநதி துன்று சடிலரருள்
சேந்தி னகரிலுறை பெருமாளே. (௫௫)

71. தரிக்குங்கலை நெகிழ்க்கும்பர
தவிக்குங்கொடி மதனேவிற்-
றகைக்குந்தனி திகைக்குஞ்சிறு
தமிழ்த்தென்றலி னுடனேநின்;
றெரிக்கும்பிறை யெனப்புண்படு
மெனைப்புன்கவி சிலபாடி-
இருக்குஞ்சிலர் திருச்செந்திலை
யுரைத்துய்ந்திட அறியாரே;
அரிக்குஞ்சதுர் மறைக்கும்பிர
மனுக்குந்தெரி வரிதான-
அடிச்செஞ்சடை முடிக்கொண்டிடு
மரற்கும்புரி தவபாரக்;

* கடும்பு = சுற்றம். † தலை நவிர் = தலை மயிர். ‡ பயம் = பால்.

கிரிக்கும்பரன் முநிக்குங்க்ருபை
வரிக்குங்குரு பாவாழ்வே-
கிளைக்குந்திற லரக்கன்கிளை
கெடக்கன்றிய பெருமாளே. (௬௬)

72. **து**ன்பங்கொண் டங்க மெலிந்தற
நொந்தன்பும் பண்பு மறந்தொளி
மங்கும்பெண் சஞ்சல மென்பதி லணுகாதே-
இன்பந்தந் தும்பர் தொழும்பத
கஞ்சந்தந் தஞ்ச மெனும்படி
யென்றென்றுந் தொண்டு செயும்படி யருள்வாயே;
நின்பங்கொன் றுங்குற மின்சா
ணங்கண்டுந் தஞ்ச மெனும்படி
நின்றன்பின் றன்படி கும்பிடு மிளையோனே-
பைம்பொன்சிந் தின்றுறை தங்கிய
குன்றெங்குஞ் சங்கு வலம்புரி
பம்புந்தென் சேந்திலில் வந்தருள் பெருமாளே. (௬௭)

73. **தெ**ருப்பு றத்துத் துவக்கியாய்
முலைக்கு வட்டைக் குலுக்கியாய்
சிரித்து ருக்கித் தருக்கியே பண்டைகூள மெனவாழ்-
சிறுக்கி ரட்சைக் கிதக்கியாய்
மனத்தை வைத்துக் கனத்தபேர்
தியக்க முற்றுத் தவிக்கவே கண்டுபேசி யுடனே;
இருப்ப கத்துத் தளத்துமேல்
விளக்கெ டுத்துப் படுத்துமே
விருத்தி வைத்துப் பசப்பியே கொண்டுகாசு தணியா-
திதுக்க துக்குக் கடப்படா
மெனக்கை கக்கக் கழற்றியே
இளைக்க விட்டுத் துரத்துவார்
தங்கள்சேர்வை தவிராய்;
பொருப்பை யொக்கப் பணைத்ததோ
ரிரட்டி பத்துப் புயத்தினால்
பொறுத்த பத்துச் சிரத்தினால் மண்டுகோப முடனே-

பொரப்பொ ருப்பிற் கதித்தபோ
ரரக்கர் பட்டுப் பதைக்கவே
புடைத்து முட்டத் துணித்தமா
லன்புகூரு மருகா ;

வரப்பை யெட்டிக் குதித்துமே
விடத்தில் வட்டத் தளத்திலே
மதர்த்த முத்தைக் குவட்டியே
நின்றுசேலி னினம்வாழ்-

வயற்பு றத்துப் புவிக்குள்நீள்
திருத்த ணிக்குட் சிறப்பில்வாழ்
வயத்த நித்தத் துவத்தனே
சேந்தில்மேவு குகனே. (௫அ)

74. தொந்தி சரிய மயிரே வெளிறநிரை
தந்த மசைய முதுகே வளையஇதழ்
தொங்க வொருகை தடிமேல் வரமகளிர் நகையாடி-

தொண்டு கிழவ னிவனா ரெனஇருமல்
கிண்கி ணெனமு னுரையே குழறவிழி
துஞ்சு குருடு படவே செவிடுபடு செவியாகி ;

வந்த பிணியு மதிலே மிடையுமொரு
பண்டி தனுமெ யுறுவே தனையுமிள
மைந்த ருடைமை கடனே தெனமுடுக துயர்மேவி-

மங்கை யழுது விழவே யமபடர்கள்
நின்று சருவ மலமே யொழுகவுயிர்
மங்கு பொழுது கடிதே மயிலின்மிசை வரவேணும் ;

எந்தை வருக ரகுநா யகவருக
மைந்த வருக மகனே யினிவருக
என்கண் வருக எனதா ருயிர்வருக அபிராம-

இங்கு வருக அரசே வருகமுலை
யுண்க வருக மலர்சூ டிடவருக
என்று பரிவி னொடுகோ சலைபுகல வருமாயன் ;

சிந்தை மகிழு மருகா குறவரிள
வஞ்சி மருவு மழகா அமரர்சிறை
சிந்த அசுரர் கிளைவே ரொடுமடிய அடுதீரா-
திங்க ளரவு நதிசூ டியபரமர்
தந்தகுமர அலையே கரைபொருத
செந்தினகரி லினிதே மருவிவளர் பெருமாளே. (௫௯)

75. தோலொடு மூடிய கூரையை நம்பிப்
பாவையர் தோதக லீலைநி ரம்பிச்
சூழ்பொருள் தேடிட வோடிவ ருந்திப் புதிதான-
தூதொடு நான்மணி மாலைப்ர பந்தக்
கோவையு லாமடல் கூறிய முந்தித்
தோமுறு காளையர் வாசல்தொ றும்புக் கலமாருங்;
காலனை வீணனை நீதிகெ டும்பொய்க்
கோளனை மானமி லாவழி நெஞ்சக்
காதக லோபவ்ரு தாவனை நிந்தைப் புலையேனைக்-
காரண காரிய லோகப்ர பஞ்சச்
சோகமெ லாமற வாழ்வுற *நம்பிற்
காசறு வாரிமெய்ஞ் ஞான தவஞ்சற் றருளாதோ;
†பாலன மீதும னான்முக செம்பொற்
பாலனை மோதப ராதன பண்டப்
பாரிய மாருதி தோள்மிசை கொண்டுற் றமராடிப்-
பாவியி ராவண னார்தலை சிந்திச்
சீரிய வீடணர் வாழ்வுற மன்றற்
பாவையர் தோள்புணர் மாதுலர் சிந்தைக்
கினியோனே;
சீலமு லாவிய நாரதர் வந்துற்
றீதவள் வாழ்புன மாமென முந்தித்
தேமொழி பாளித கோமள இன்பக் கிரிதோய்வாய்-
சேலொடு வாளைவ ரால்கள் கிளம்பித்
தாறுகொள் பூகம ளாவிய இன்பச்
சீரலை வாய்நகர் மேவிய கந்தப் பெருமாளே. (௬௰)

---

* நம்பில்=விருப்பத்தினால். நம்பு=விருப்பம்.
† பால் அன்னம் மீது மன் நான்முக.

76. நாலு மைந்து வாசல் கீறு தூறு டம்பு கால்கை யாகி
நாரி யென்பி லாகு மாக மதனூடே-
நாத மொன்ற ஆதி வாயில் நாட கங்க ளான ஆடி
நாட றிந்தி டாம லேக வளராமுன்;
நூல நந்த கோடி தேடி மூல்மி குந்து பாரு ளோரை
நூறு செஞ்சொல் கூறி மாறி விளைதீமை-
நோய்க லந்த வாழ்வு றாமல் நீக லந்து ளாகு ஞான
நூல டங்க வோத வாழ்வு தருவாயே;
காலன் வந்து பால னாவி காய வென்று பாசம் வீசு
காலம் வந்து வோல மோல மெனுமாதி-
காம னைந்து பாண மோடு வேமி னென்று காணு மோனர்
காள கண்ட ரோடு வேத மொழிவோனே;
ஆல மொன்று வேலை யாகி யானை யஞ்சல் தீரு மூல
ஆழி யங்கை ஆயன் மாயன் மருகோனே-
ஆர ணங்கள் தாளை நாட *வார ணங்கை மேவு மாதி
யான செந்தில் வாழ்வ தான பெருமாளே. (கூக)

77. நிதிக்குப் †பிங்கலன் பதத்துக் கிந்திரன்
நிறத்திற் கந்தனென் றினைவோரை-
நிலத்திற் றன்பெரும் பசிக்குத் தஞ்சமென்
றரற்றித் துன்பநெஞ் சினில்நாளும்;
புதுச்சொற் சங்கமொன் றிசைத்துச் சங்கடம்
புகட்டிக் கொண்டிடும் பழிமாயும்-
புலத்திற் சஞ்சலங் குலைத்திட் டுன்பதம்
புணர்க்கைக் கன்புதந் தருள்வாயே;
மதித்துத் திண்புரஞ் சிரித்துக் கொன்றிடும்
மறத்திற் றந்தைமன் றினிலாடி-
மழுக்கைக் கொண்டசங் கரர்க்குச் சென்றுவண்
டமிழ்ச்சொற் சந்தமொன் றருள்வோனே;
குதித்துக் குன்றிடந் தலைத்துச் செம்பொனுங்
கொழித்துக் கொண்ட சேந் திலின்வாழ்வே-
குறப்பொற் கொம்பைமுன் புனத்திற் செங்கரங்
குவித்துக் கும்பிடும் பெருமாளே. (கூஉ)

---

* வாரணம்=கோழிக்கொடி. † பிங்கலன் = குபேரன்.

78. நிலையாப் பொருளை *யுடலாக் கருதி
நெடுநாட் பொழுது மவமேபோய்-
நிறைபோய்ச் செவிடு குருடாய்ப் பிணிகள்
நிறைவாய்ப் பொறிகள் தடுமாறி;
மலநீர்ச் சயன மிசையாப் பெருகி
மடிவேற் குரிய நெறியாக-
மறைபோற் றரிய வொளியாய்ப் பரவு
மலர்தாட் கமல மருள்வாயே;
கொலைகாட் டவுணர் கெடமாச் சலதி
குளமாய்ச் சுவற முதுசூதம்-
குறிபோய்ப் பிளவு படமேற் கதுவு
கொதிவேற் படையை விடுவோனே;
அலைவாய்க் கரையின் மகிழ்சீர்க் குமர
அழியாப் புநித வடிவாகும்-
அரனார்க் கதித பொருள்காட் டதிப
அடியார்க் கெளிய பெருமாளே. (௱௩)

79. பஞ்ச பாதக முறுபிறை யெயிறெறி
குஞ்சி கூர்விட மதர்விழி பிலவக
பங்க வாண்முக முடுகிய நெடுகிய திரிசூலம்-
பந்த பாசமு மருவிய காதல
மிஞ்சி நீடிய கருமுகி லுருவொடு
பண்பி லாதொரு பகடது முதுகினில் யமராஜன்;
அஞ்ச வேவரு மவதா மதிலொரு
தஞ்ச மாகியெ வழிவழி யருள்பெறும்
அன்பி னாலுன தடிபுக ழடிமையெ னெதிரேநீ-
அண்ட கோளகை வெடிபட இடிபட
எண்டி சாமுக மடமட நடமிடும்
அந்த மோகர மயிலினி லியலுடன் வரவேணும்;
மஞ்சு போல்வள ரளகமு மிளகிய
ரஞ்சி தாம்ருத வசனமு நிலவென
வந்த தூயவெண் முறுவலு மிருகுழை யளவோடும்-

* உடல்=பொன்.

மன்றல் வாரிச நயனமு மழகிய
குன்ற வாணர்த மடமகள் தடமுலை
மந்த ராசலமிசைதுயி லழகிய மணவாளா;
செஞ்சொல் மாதிசை வடதிசை குடதிசை
விஞ்சு கீழ்திசை சகலமு மிகல்செய்து
திங்கள் வேணியர் பலதளி தொழுதுயர் மகமேரு-
*செண்டு மோதின ராசரு ளதிபதி
தொண்ட ராதியும் வழிவழி நெறிபெறு
செந்தில் மாநக ரினிதுறை யமரர்கள்
பெருமாளே. (கூச)

80. படர்புவியின் மீது மீறி வஞ்சர்கள்
வியனினுரை பானு வாய்வி யந்துரை
பழுதில்பெரு சீல நூல்க ளுந்தெரி சங்கபாடல்-
பனுவல்கதை காவ்ய மாமெ ணெண்கலை
திருவளுவ தேவர் வாய்மை யென்கிற
பழமொழியை யோதி யேயு ணர்ந்துபல் சந்தமாலை;
மடல்பரணி கோவை யார்க லம்பக
முதலுளது கோடி கோள்ப்ர பந்தமும்
வகைவகையி லாசு சேர்பெ ருங்கவி சண்டவாயு-
மதுரகவி ராஜ †னனென் வெண்குடை
விருதுகொடி தாள மேள தண்டிகை
வரிசையொ டுலாவு மால கந்தைத விர்ந்திடாதோ;
அடல்பொருது பூச லேவி ளைந்திட
எதிர்பொரவொ ணுமலேக சங்கர
அரஹர சிவாம ஹாதே வென்றனி அன்றுசேவித்-
தவனிவெகு கால மாய்வ ணங்கியு
ளுருகிவெகு பாச கோச சம்ப்ரம
அதிபெல கடோர மாச லந்தர னைந்துவிழ;

---

* 'சென்று மோதின நரபதி யுலவிய
தொண்டை நாடினி லறநெறி முறைபயில்
செஞ்சி மாநக ரினிதுறை யமரர்கள் பெருமாளே.' என்றும் பாடம்.

† நா னென் = நா னென.

உடல்தடியு டாழி *தாவெ னம்புய
மலர்கள்தச நூறு தாளி டும்பக
லொருமலரி லாது †கோவ ணிந்திடு செங்கண்மாலுக்-
குதவியம கேசர் பால இந்திரன்
மகளைமண மேவி வீறு செந்திலி
லுரியஅடி யேனை யாள வந்தருள் தம்பிரானே.(கூரு)

81. பதும விருசரண் கும்பிட் டின்பக்
கலவி நலமிகுந் துங்கக் கொங்கைப்
பகடு புளகிதந் துன்றக் கன்றிக் கயல்போலும்-
பரிய கரியகண் செம்பொற் கம்பிக்
குழைகள் பொரமருண் டின்சொற் கொஞ்சிப்
பதற விதமுறுங் கந்துக் கொந்துக் குழல்சாயப்;
புதுமை நுதிநகம் பங்கத் தங்கத்
தினிது வரையவெண் சந்தத் திந்துப்
புருவ வெயர்வுடன் பொங்கக் கங்கைச் சடைதாரி-
பொடிசெய் தருள்மதன் தந்த்ரப் பந்திக்
கறிவை யிழவிடும் பண்புத் துன்பப்
பொருளின் மகளிர்தம் மன்புப் பண்பைத்
தவிரேனோ;
திதிதி தததிதந் திந்திந் தந்தட்
டிடிடி டடடடண் டிண்டிட் டண்டடத்
தெனன தனதனந் தெந்தத் தந்தத் தெனனூனூ-
திகுர்தி தகிர்ததிந் திந்தித் திந்தித்
திரிரி தாரவென் றென்றெப் பின்றித்
திமிலை பறையறைந் தெண்டிக் கண்டச்
சுவர்சோரச்;
சதியில் வருபெருஞ் சங்கத் தொங்கற்
புயவ சுரர்வெருண் டஞ்சிக் குஞ்சித்
தலைகொ டடிபணிந் தெங்கட் குன்கட்
க்ருபைதரவென்-

* தா வெ னம்புய=தா என அம்புய. † கோ=கண்.

சமர குமரகஞ் சஞ்சுற் றுஞ்செய்ப்
பதியில் முருகமுன் பொங்கித் தங்கிச்
சலதி யலைபொருஞ் செந்திற் கந்தப்
பெருமாளே. (சூசூ)

82. பரிமள களபசு கந்தச் சந்தத் தனமானார்-
படையம படையென *அந்திக் குங்கட் கடையாலே;
வரியளி நிரைமுரல் கொங்குக் கங்குற் குழலாலே-
மறுகிடு மருளனை யின்புற் றன்புற் றருள்வாயே;
அரிதிரு மருகக டம்பத் தொங்கற் றிருமார்பா-
அலைகுமு குமுவென வெம்பக் கண்டித் தெறிவேலா;
திரிபுர தகனரும் வந்திக் குஞ்சற் குருநாதா-
ஜெயஜெய ஹரஹர செந்திற் கந்தப் பெருமாளே.(சூஎ)

83. பாத நூபுரம் பாடகஞ் சீர்கொள்நடை
யோதி மோகுலம் போலசம் போகமொடு
†பாடி பாளிதங் காருகம் ‡பாவையிடை
வஞ்சிபோலப்-
பாகு பால்குடம் போலிரண் டானகுவ
டாட நீள்வடஞ் சேரலங் காரகுழல்
பாவ மேகபொன் சாபமிந் தேபொருவ ரந்தமீதே;
மாதர் கோகிலம் போல்கரும் பானமொழி
தோகை வாகர்கண் டாரைகொண் டாடிதகை
வாரும் வீடெயென் றோதிதம் பாயல்மிசை
யன்புளார்போல்-
வாச §பாசகஞ் சூதுபங் தாடஇழி
வேர்வை பாயசிந் தாகுகொஞ் சாரவிழி
வாகு தோள்கரஞ் சேர்வைதங் தாடுமவர்
சந்தமாமோ;

---

* அந்திக்கும்=சந்திக்கும்.

† பாடி-இது படி என்பதன் விகாரம்; படி=குணம்,

‡ பாவை=பாவு ஐ.

§ பாசகஞ் சூது=சூதாடு கருவியை யொத்த கொங்கை.

தீத தோதகந் தீதகிந் தோதிதிமி
டுடு டுந்டுண் டுடுண் டுடுடு
டகு டகுகம் போலவொண் பேரிமுர சங்கள்வீறச்-
சேடன் மேருவுஞ் சூரனுந் தாருகனும்
வீழ எழ்தடந் தூளிகொண் டாடமரர்
சேசெ சேசெயென் றாடநின் றாடிவிடு
மங்கிவேலா;

தாதை காதிலங் கோதுசிங் காரமுக
மாறும் வாகுவுங் கூரசங் தானசுக
தாரி மார்பலங் காரியென் பாவைவளி
யெங்கள்மாதைத்-

தாரு பாளிதஞ் சோரசிங் தாமணிக
ளாட வேபுணர்ந் தாடிவங் காரமொடு
தாழை வானுயர்ந் தாடுசெந் தூரிலுறை
தம்பிரானே. (கூஅ)

84. பூரண வார கும்ப சீத படீர கொங்கை
மாதர் விகார வஞ்ச லீலையி லேயு ழன்று
போதவ மேயி ழந்து போனது மான மென்ப தறியாத-
பூரிய னாகி நெஞ்சு காவல் படாத பஞ்ச
பாதக னாய றஞ்செ யாதடி யோடி றந்து
போனவர் வாழ்வு கண்டு மாசையி லேய முந்து
மயல்தீரக்;

காரண காரி யங்க ளானதெ லாமொ ழிந்து
யானெனு மேதை விண்டு பாவக மாயி ருந்து
காலுட லூடி யங்கி நாசியின் மீதி ரண்டு விழிபாயக்-
காயமு நாவு நெஞ்சு மோர்வழி யாக அன்பு
காயம் விடாம லுன்ற னீடிய தாள்நி னைந்து
காணுதல் கூர்த வஞ்செய் யோகிக ளாய்வி ளங்க
அருள்வாயே;

ஆரண சார மந்த்ர வேதமெ லாம்வி ளங்க
ஆதிரை யானை நின்று தாழ்வனெ னுவ ணங்கு
மாதர வால்வி ளங்கு பூரண ஞான மிஞ்சு
மூரவோனே-

ஆர்கலி யூடெ ழுந்து மாவடி வாகி நின்ற
சூரனை மாள வென்று வானுல காளு மண்ட
ரானவர் கூர ரந்தை தீரமு னாள்ம கிழ்ந்த
முருகேசா ;
வாரண மூல மென்ற போதினி லாழி கொண்டு
வாவியின் மாடி டங்கர் பாழ்பட வேயெ றிந்த
மாமுகில் போலி ருண்ட மேனிய னாமு குந்தன்
மருகோனே-
வானுக மீது வண்ட லோடிய காலில் வந்து
சூல்நிறை வான சங்கு மாமணி யீன வுந்து
வாரிதி நீர்ப ரந்த சீரலை வாயு கந்த பெருமாளே. ()

85. மங்கை சிறுவர் தங்கள் கிளைஞர்
வந்து கதற வுடல்தீயின்-
மண்டி யெரிய விண்டு புனலில்
வஞ்ச மொழிய விழஆவி ;
வெங்கண் மறலி தன்கை மருவ
வெம்பி யிடறு மொருபாச-
விஞ்சை விளையு மன்று னடிமை
வென்றி யடிகள் தொழவாராய் ;
சிங்க முழுவை தங்கு மடவி
சென்று மறமி னுடன்வாழ்வாய்-
சிந்தை மகிழ அன்பர் புகழு
சேந்தி லுறையு முருகோனே ;
எங்கு மிலகு திங்கள் கமல
மென்று புகலு முகமாதர்-
இன்பம் விளைய அன்பி னணையு
மென்று மிளைய பெருமாளே. (௭௦)

86. மஞ்செ னுங்குழ லும்பிறை யம்புரு
வங்க ளென்சிலை யுங்கணை யங்கயல்
வண்டு புண்டரி கங்களை யும்பழி சிந்துபார்வை-

மண்டலஞ்சுழ லுஞ்செவி யங்குழை
தங்க வெண்டர ளம்பதி யும்பலு
*மண்ட லந்திக ழுங்கமு கஞ்சிறு கண்டமாதர் ;
கஞ்சு கங்குர லுங்கழை யம்புய
கொங்கை செங்கிரி யும்பவ ளம்பொறி
கந்த சந்தன மும்பொலி யுந்துகில் வஞ்சிசேருங்-
கஞ்ச மண்டுளி னின்றிர சம்புகு
கண்ப டார்ந்திட ரம்பையெ னுந்தொடை
கண்கை யஞ்சர ணஞ்செயல் வஞ்சரை
நம்புவேனோ ;
சஞ்ச சஞ்சக ணஞ்சக டுண்டுடு
டுண்டு டிண்டிமி டண்டம டுண்டுடு
தந்த னந்தன திந்திமி சங்குகள் பொங்குதாரை -
சம்பு விங்கும ரன்புல வன்பொரு
கந்த னென்றிடு துந்துமி யுந்துவ
சங்க ளங்கொளி ருங்குடை யுந்திசை
விஞ்சவேகண் ;
டஞ்ச வஞ்சசு ரந்திர ளுங்குவ
டன்ற டங்களும் வெந்துபொ ரிந்திட
அண்ட ரிந்திர னுஞ்சர ணம்புக வென்றவேளே-
†அம்பு யந்தண ரம்பைகு றிஞ்சியின்
மங்கை யங் ‡குடில் மங்கையொ டன்புடன்
அண்டருந்தொழு செந்திலி லின்புறு தம்பிரானே.()

87. மனைகனக மைந்தர் தமதழகு பெண்டிர்
வலிமைகுல நின்ற நிலையூர்பேர்-
வளரிளமை தஞ்ச முனைபுனைவ ளங்கள்
வரிசைதம ரென்று வருமாயக் ;
கனவுநிலை யின்ப மதனையென தென்று
கருதிவிழி யின்ப மடவார்தம் -

---

* மண் டலம்=மண் தலம்.

† அம்புய அம் தண் அரம்பை எனப் பிரித்துக்கொள்க.

‡ குடில்=ஆகாயம் ; விண்ணுலகம். குடில் மங்கை=தெய்வயானை.

கலவிமயல் கொண்டு பலவுடல்பு ணர்ந்து
கருவில்விழு கின்ற இயல்போதான்;
நினையுநின தன்பர் பழவினைக ளைந்து
நெடுவரைபி ளந்த கதிர்வேலா-
நிலமுதல் விளங்கு நலமருவு செந்தில்
நிலைபெறஇ ருந்த முருகோனே;
புனைமலர்பு னைந்த புனமறம டந்தை
புளகஇரு கொங்கை புணர்மார்பா-
பொருதுடனெ திர்ந்த நிருதர்மகு டங்கள்
பொடிபடந டந்த பெருமாளே. (எஉ)

88\. மாய வாடைதி மிர்ந்திடு கொங்கையில்
மூடு சீலைதி றந்தம ழுங்கிகள்
வாசல் தோறுந டந்துசி ணுங்கிகள் பழையோர்மேல்-
வால நேசநி னைந்தழு வம்பிகள்
ஆசை நோய்கொள்ம ருந்திடு சண்டிகள்
*வாற பேர்பொருள் கண்டுவி ரும்பிக
ளெவரேனும்;
நேய மேகவி கொண்டுசொல் மிண்டிகள்
காசி லாதவர் தங்களை யன்பற
நீதி போலநெ கிழ்ந்தப றம்பிக ளவர்தாய்மார்-
நீலி நாடக மும்பயில் மண்டைகள்
பாலை யூறுக ளுண்டிடு தொண்டிகள்
நீச ரோடுமி ணங்குக டம்பிக ளுறவாமோ;
பாயு மாமத தந்திமு கம்பெறு
மாதி பாரத மென்ற பெருங்கதை
பார மேருவி லன்று வரைந்தவ னிளையோனே-
பாவை யாள்குற மங்கை செழுந்தன
பார மீதில ணைந்து முயங்கிய
பாகு மாகிய சந்தன குங்கும மணிமார்பா;

* 'வருகிற' என்பது 'வாற' என மருவிற்று.

சிய மாயுரு வங்கொடு வங் *தசு
ரேசன் மார்பையி டந்து பசுங்குடர்
சேச வாரிய ணிந்த நெடும்புயன் மருகோனே-
தேனு லாவுக டம்ப மணிந்தகி
ரீட சேகர சங்கரர் தந்தருள்
தேவ நாயக செந்திலு கந்தருள் பெருமாளே. (எங)

பு. 89. மான்போற்கண் பார்வை பெற்றிடு
†மூஞ்சாற்பண் பாடு மக்களை
வாய்ந்தாற்பொன் கோடு செப்பெனு முலைமாதர்-
வாங்காத்தின் டாடு சித்திர
நீங்காச்சங் கேத முக்கிய
வாஞ்சாற்செஞ் சாறு மெய்த்திடு மொழியாலே;
‡என்காற்பங் காக §நற்புறு
பூங்காற்கொங் காரு மெத்தையில்
எய்ந்தாற்பொன் சாரு பொற்பண முதல்நீதா-
ஈந்தாற்கன் றோர மிப்பென
ஆன்பாற்‖றென் போல செப்பிடும்
ஈண்டாச்சம் போக மட்டிக ளுறவாமோ;
கான்பாற்சந் தாடு பொற்கிரி
தூம்பாற்¶பைந் தோளி கட்கடை
காண்பாற்றுஞ் சாமல் நத்திடும் அசுரேசன்-
oகாம்பேய்ப்பக் தாட விக்ரம
வான்றோய்க்கெம் பீர விற்கணை
$காண்டேர்க்கொண் டேவு மச்சுதன் மருகோனே;
தீம்பாற்கும் பாகு சர்க்கரை
காம்பாற்செந் தேற லொத்துரை
தீர்ந்தார்க் **கங் காளி பெற்றருள் புதல்வோனே-

---

* அசுரேசன்=இரணியன்.

† மூஞ்சி மூஞ்செனத் திரிந்தது; ஆகுபெயராய் வாயை உணர்த்தி நின்றது. ‡ என்=என். § நற்பு=நன்மை.
‖ தென்=தேன். ¶ பைந்தோளி=சீதை. o காம்=கம்=தலை.
$ காண்=அழகு. **கங்காளி=பார்வதி.

*தீண்பார்க்குன் போத முற்றுற
மாண்டார்க்கொண் டோது முக்கிய
தேன்போற்செந் தூரில் மொய்த்தருள்
பெருமாளே. (எச)

90. முகிலாமெனு மளகங் காட்டி
மதிபோலுயர் நுதலுங் காட்டி
முகிழாகிய நகையுங் காட்டி அமுதூறு-
மொழியாகிய மதுரங் காட்டி
விழியாகிய கணையுங் காட்டி
முகமாகிய கமலங் காட்டி மலைபோலே;
வகையாமிள முலையுங் காட்டி
யிடையாகிய கொடியுங் காட்டி
வளமானகை வளையுங் காட்டி யிதமான-
மணிசேர்கடி தடமுங் காட்டி
மிகவேதொழி லதிகங் காட்டு
மடமாதர்கள் மயலின் சேற்றி லுழல்வேனோ;
நகையால்மத னுருவந் தீத்த
சிவனாருள் சுதனென் றூர்க்கு
நலனேயரு ளமர் செந் தூர்க்கு ளுறைவோனே-
நவமாமணி வடமும் பூத்த
தனமாதெனு மிபமின் சேர்க்கை
நழுவாவகை பிரியங் காட்டு முருகோனே;
அகமேவிய நிருதன் போர்க்கு
வரவேசமர் புரியுந் தோற்ற
மறியாமலு மபயங் காட்டி முறைகூறி-
அயிராவத முதுகின் தோற்றி
யடையாமென இனிதன் பேத்து
மமரேசனை முழுதுங் காத்த பெருமாளே. (எரு)

---

* தீண்பார்=திண் பார்.

91. மூலமு கந்தி மிர்ந்த கலவை யுந்து லங்கு
முறுவ லுஞ்சி வந்த கனிவாயும்-
முருக விழ்ந்து திர்ந்த மலர்க ளுஞ்ச ரிந்த
முகிலு மின்ப சிங்கி விழிவேலும்;
சிலைமு கங்க லந்த திலத முங்கு லிர்ந்த
திருமு கந்த துப்பு குறுவேர்வும்-
தெரிய வந்து நின்ற மகளிர் பின்சு ழன்று
செயல ழிந்து ழன்று திரிவேனோ;
*மலைமு கஞ்சு மந்த புலவர் †செஞ்சொல் கொண்டு
வழிதி றந்த செங்கை வடிவேலா-
வளர்பு னம்ப யின்ற குறம டந்தை கொங்கை
மணிவ டம்பு தைந்த புயவேளே;
அலைமு கந்த வழ்ந்து சினைமு திர்ந்த சங்க
மலறி வந்து கஞ்ச மலர்மீதே-
அளிக லந்தி ரங்க இசையு டன்து யின்ற
அரிய செந்தில் வந்த பெருமாளே. (எசு)

92. மூப்புற் றுச்செவி கேட்பற் றுப்பெரு
மூச்சுற் றுச்செயல் தடுமாறி-
மூர்க்கச் சொற்குரல் காட்டிக் கக்கிட
மூக்குக் குட்சளி ‡யிளையோடும்;
கோப்புக் கட்டி §யி ணைப்பிச் செற்றிடு
கூட்டிற் ||புக்குயி ரலையாமுன்-
¶கூற்றத் தத்துவ நீக்கிப் பொற்கழல்
கூட்டிச் சற்றருள் புரிவாயே;

* மலை முகம் சுமந்த புலவர் = கற்கிமுகி என்னும் பூதத்தால் மலைக்குகையில் அடைக்கப்பட்ட நக்கீரர்.

† செஞ்சொல் = (அவரால் துதிக்கப்பட்ட) திருமுருகாற்றுப்படை.

‡ இளை = ஈளை : கோழை.

§ இணை பிச்சு எற்றிடு கூட்டில் = துன்பம் சிதைத்து வருத்தும் உடலில்.

|| புக்கு உயிர் அலையாமுன் = புகுந்து உயிரை வதைப்பதற்கு முன்.

¶ கூற்றத் தத்துவம் = உடல்வேறு உயிர்வேறாகக் கூறுபடுத்தும் யமவேதனைத் தன்மை.

காப்புப் பொற்கிரி கோட்டிப் பற்றலர்
காப்பைக் *கட்டவர் குருநாதா-
காட்டுக் குட்குற வாட்டிக் குப்பல
காப்புக் குத்திர மொழிவோனே;
வாய்ப்புற் றத்தமிழ் மார்க்கத் திட்பொருள்
வாய்க்குச் சித்திர முருகோனே-
வார்த்தைச் சிற்பர தீர்த்தச் சுற்றலை
வாய்க்குட் பொற்பமர் பெருமாளே. (எஎ)

93. மூளும்வினை சேர மேல்கொண்டி டாஐந்து
பூதவெகு வாய மாயங்கள் தானெஞ்சில்
மூடிநெறி நீதி யேதுஞ்செ யாவஞ்சி யதிபார-
மோகவினை வான போகஞ்செய் வேனண்டர்
தேடஅரி தாய †ஞேயங்க ளாய்நின்ற
மூலபர யோக மேல்கொண் டிடாநின்ற துளதாகி;
நாளுமதி வேக கால்கொண்டு தீமண்ட
வாசியன லூடு போயொன்றி வானின்க
ணாமமதி மீதி லூறுங்க லாஇன்ப அமுதூறல்-
நாடியதன் மீது போய்நின்ற ஆநந்த
மேலைவெளி யேறி நீயின்றி நானின்றி
நாடியினும் வேறு தானின்றி வாழ்கின்ற தொருநாளே;
காளவிட மூணி மாதங்கி வேதஞ்சொல்
பேதைநெடு நீலி பாதங்க ளால்வந்த
காலன்விழ மோது சாமுண்டி பாரம்பொ டனல்வாயு-
காதிமுதிர் வான மேதங்கி வாழ்வஞ்சி
ஆடல்விடை யேறி பாகங்கு லாமங்கை
காளிகட மாடி நாளன்பர் தாம்வந்து தொழுமாது;
வாளமுழு தாளு மோர்தண்டு மூர்தங்கு
சோதிமணி மார்ப மாலின்பி னளின்சொல்
வாழுமுமை மாத ராள்மைந்த னேயெந்தை யிளையோனே-

---

* கட்டவர்=களைந்தவர்

† ஞேயம்=ஞானத்தினல் அறியப்படுபொருள்.

மாசிலடி யார்கள் வாழ்கின்ற வூர்சென்று
தேடிவிளை யாடி யேயங்க ணேநின்று
வாழுமயில் வீர னேசெந்தில் வாழ்கின்ற
பெருமாளே. (எஅ)

94. *வஞ்சங்கொண் டுந்திட ராவண
னும்பந்தென் திண்பரி தேர்கரி
மஞ்சின்பண் புஞ்சரி யாமென வெகுசேனை-
வந்தம்பும் பொங்கிய தாகஎ
திர்ந்துந்தன் சம்பிர தாயமும்
வம்புந்தும் பும்பல பேசியு மெதிரேகை;
மிஞ்சென்றுஞ் சண்டைசெய் போதுகு
ரங்குந்துஞ் சுங்கனல் போலவெ
குண்டுங்குன் றுங்கர டார்மர மதும்வீசி-
மிண்டுந்துங் கங்களி னலெதி
கர்ந்தங்கங் கங்கர மார்பொடு
மின்சிந்துஞ் சிங்கிநி சாசரர் வகைசேர;
வுஞ்சண்டன் தென்றிசை நாடிவி
ழுந்தங்குஞ் சென்றெம தூதர்க
ளுந்துந்துந் தென்றிட வேதசை நிணமூளை-
உண்டுங்கண் டுஞ்சில கூளிகள்
டிண்டிண்டென் றுங்குதி போடவு
யர்ந்தம்புங் கொண்டுவெல் மாதவன்
மருகோனே;
தஞ்சந்தஞ் சஞ்சிறி யேன்மதி
கொஞ்சங்கொஞ் சந்துரை யேயருள்
தந்தென்றின் பந்தரு வீடது தருவாயே-
சங்கங்கஞ் சங்கயல் சூழ்தட
மெங்கெங்கும் பொங்கம காபுநி
தந்தங்குஞ் செந்திலில் வாழ்வுயர் பெருமாளே. (எகூ)

---

* வஞ்சம் கொண்டும் திட ராவணனும் எனப் பிரித்துக்கொள்க.

95. வஞ்சத் துடனொரு நெஞ்சிற் பலநினை
வஞ்சிக் கொடியிடை மடவாரும்-
*வந்திப் புதல்வரும் †அந்திக் கிளைஞரு
மண்டிக் கதறிடு வகைகூர;
‡அஞ்சக் கலைபடு பஞ்சிப் புழுவுடல்
அங்கிக் கிரையென் வுடன்மேவ-
அண்டிப் பயமுற வென்றிச் சமன்வரும்
அன்றைக் கடியிணை தரவேணும்;
கஞ்சப் பிரமனை அஞ்சத் துயர்செய்து
கன்றச் சிறையிடு மயில்வீரா-
கண்டொத் தனமொழி அண்டத் திருமயில்
§கண்டத் தழகிய திருமார்பா;
செஞ்சொற் புலவர்கள் சங்கத் தமிழ்தெரி
செந்திற் பதிநக ருறைவோனே-
செம்பொற் குலவட குன்றைக் கடலிடை
சிந்தப் பொரவல பெருமாளே. (அ0)

96. வந்து வந்து முன்த வழ்ந்து
‖வெஞ்சு கந்த யங்க நின்று
¶மொஞ்சி மொஞ்சி யென்ற முங்கு ழந்தையோடு-
மண்ட லங்கு லுங்க அண்டர்
விண்ட லம்பி ளங்கெ ழுந்த
செம்பொன் மண்ட பங்க ளும்ப யின்றவீடு;
கொந்த ளந்த குந்த ளந்த
ழைந்து குங்கு மந்த யங்கு
கொங்கை வஞ்சி தஞ்ச மென்று மங்குகாலம்-
○கொங்$க டம்பு **கொங்கு பொங்கு
பைங்க டம்பு தண்டை கொஞ்சு
செஞ்ச தங்கை தங்கு பங்க யங்கள்தாராய்;

---

* வந்தி=வணங்கும். † அந்தி=நெருங்கிய.

‡ அஞ்சக் கலைபடு=அம்சம் கலைபடு=தத்துவப் பகுதிகள் பிரிபட்டுப் போகின்ற. § கண்டத்து=கண் தத்து.

‖ வெஞ் சுகம்=விருப்பமாகிய இன்பம். ¶மொஞ்சி=முலை.

○ கொங்கு=கோங்கு. $அடம்பு=ஒருவித கொடிப்பூ.

** கொங்கு பொங்கு=வாசனை மிகுந்த.

சந்த டார்ந்தே ழுந்த ரும்பு
*மந்த ரஞ்செ ழுங்க ரும்பு
†கந்த ரம்பை ‡செண்ப தங்கொள் சேந்தில்வாழ்வே-
தண்க டங்க டந்து சென்று
§பண்க டங்க டார்ந்த ||இன்சொல்
திண்பு னம்பு குந்து கண்டி றைஞ்சுகோவே;
அந்த கன்க லங்க வந்து
¶கந்த ரங்க லந்த ℴசிந்து
ரஞ்சி றந்து வந்த லம்பு ரிந்தமார்பா-
அம்$பு னம்பு குந்த நண்பர்
சம்பு நன்பு ரந்த ரன் **த
ரம்ப லும்பர் ††கும்பர் நம்பு தம்பிரானே. ()

97. வரியார் கருங்கண் மடமாதர்-
மகவாசை தொந்த மதுவாகி;
இருபோது நைந்து மெலியாதே-
இருதாளி னன்பு தருவாயே;
பரிபால னஞ்செய் தருள்வோனே-
பரமேசு ரன்ற னருள்பாலா;
அரிகேச வன்றன் மருகோனே-
அலைவா யமர்ந்த பெருமாளே. (அஉ)

98. விந்ததி னூறி வந்தது காயம்
வெந்தது கோடி யினிமேலோ-
விண்டுவி டாம லுன்பத மேவு
விஞ்சையர் போல அடியேனும்;

---

*மந்தரம்=மந்தாரம்.

† கந்த ரம்பை=கந்த அரம்பை=கிழங்கோடு கூடிய வாழை.
‡செண் =சேண். §பண்க டங் கடார்ந்த=பண்கள்-தங்கு-அடார்ந்த.

|| இன்சொல்=இன்சொலுடைய வள்ளியம்மை.

¶ கந்தரம்=(அன்பர்களுடைய இருதயமாகிய)குகை.

ℴ சிந்துரம்=தெய்வயானை யம்மை.

$ புனம் புகுந்த நண்பர்=அரண்யவாசிகளாகிய தபோதனர்கள்.

**தரம் பலும்பர்=தரம் பல் உம்பர்=தரம்பெற்ற பல வும்பர்கள்.

†† கும்பர்=கும்பமுனி.

வந்துவி நாச முன்கலி தீர
வஞ்சிவ ஞான வடிவாகி-
வன்பத மேறி,யென்களை யூற
வந்தருள் பாத மலர்தாராய்;
எந்தனு ளேக செஞ்சுட ராகி
யென்கணி லாடு தழல்வேணி-
எந்தையர் தேடு மன்பர்ச காய
ரெங்கள்சு வாமி யருள்பாலா;
சுந்தர ஞான மென்குற மாது
தன்றிரு மார்பி லணைவோனே-
சுந்தர மான செந்திலில் மேவு
கந்தசு ரேசர் பெருமாளே. (அங)

99. வெஞ்ச ரோருக மோகடு நஞ்ச மோகய லோநெடு
வின்ப சாசர மோவடு வகிரோமுன்-
வெந்து போன புராதன சம்ப ராரி புராரியை
வென்ற சாயக மோகரு விளையோகண்;
தஞ்ச மோயம தூதுவர் நெஞ்ச மோவெனு மாமத
சங்க மாதர் பயோதர மதில்மூழ்கு-
சங்கை*யோவிரு கூதள கந்த மாலிகை தோய்தரு
தண்டை சேர்கழ லீவது மொருநாளே;
பஞ்ச பாதக தாருக தண்ட னீறெழ வானவர்
பண்டு போலம ராவதி குடியேறப்-
பங்க யாசனர் கேசவ ரஞ்ச லேயென மால்வரை
பங்க நீறெழ வேல்விடு மிளையோனே;
செஞ்ச டாடவி மீமிசை கங்கை மாமதி தாதகி
திங்கள் சூடிய நாயகர் பெருவாழ்வே-
செண்ப காடவி நீடிய துங்க மாமதிள் சூழ்தரு
†செந்தில் மாநகர் மேவிய பெருமாளே. (அச)

---

* ஓவிரு=ஓவ இரு; ஓவ=நீங்க.

† 'சிங்கை மாநகர்' என்றும் பாடம்.

மூன்றாவது

திருவாவினன்குடி-பழநி.

[ரெயில்வேஸ்டேஷன். மதுரை ஜில்லா திண்டுக்கல்லிலிருந்து 36-மைல். வையாபுரி, ஷண்முக நதி, முதலிய தீர்த்தங்கள் உள. திருவாவினன்குடி கோயில் மலையடிவாரத்தில் இருக்கின்றது. பழநியாண்டவர் கோயில் மலைமேலிருக்கின்றது. பழநி ஊரிலும் சுப்பிரமணிய ஸ்வாமி கோயில் இருக்கின்றது. பழநிக்குச் சிவகிரி, சிவமலை எனவுந் திருநாமங்கள் உண்டு. "படிக்கின்றிலை பழநித் திருநாமம் படிப்பவர்தாள் முடிக்கின்றிலை" [கந்தரலங்காரம்-75], "சிவமயமாம் நின்பழநி" [156], "பதிணுலகோர் புகழ் பழநி" [170], "காசியின் மீறிய பழநியங்கிரி" [194], "அதிசய மநேக முற்ற பழநிமலை" [214] என்பவற்றால் இத்தலத்துப் பெருமை விளங்கும். கிரிப்பிரதக்ஷணம் வரலாம். ஸ்தல புராண முண்டு.]

---

100. **நா**த விந்துக லாதீ நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டித ஸாமீ நமோநம வெகுகோடி-
நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம பாசூரர்;
சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீரா நமோநம *கிரிராஜ-
தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம அருள்தாராய்;

---

* கிரி ராஜன்=குறிஞ்சி வேந்தன்.

ஈத லும்பல *கோலால பூஜையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீர்பாத சேவையு மறவாத-

ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதே மனோகர
ராஜ கெம்பிர நாடாளு நாயக வயலூரா;

ஆத ரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி-

ஆதி யந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர் நனாடதில்
ஆவி னன்குடி வாழ்வான தேவர்கள்
பெருமாளே. (க)

101. போத கந்தரு கோவே நமோநம
நீதி தங்கிய தேவா நமோநம
பூத லந்தனை யாள்வாய் நமோநம பணியாவும்-

பூணு கின்றபி ரானே நமோநம
வேடர் தங்கொடி மாலா நமோநம
போத வன்புகழ் ஸாமீ நமோநம அரிதான;

வேத மந்திர ரூபா நமோநம
ஞான பண்டித நாதா நமோநம
வீர கண்டைகொள் தாளா நமோநம அழகான-

மேனி தங்கிய வேளே நமோநம
வான பைந்தொடி வாழ்வே நமோநம
வீறு கொண்டவி சாகா நமோநம அருள்தாராய்;

பாத கஞ்செறி சூராதி மாளவெ
கூர்மை கொண்டயி லாலே பொராடியெ
பார அண்டர்கள் வானுடு சேர்தர அருள்வோனே-

---

* கோலாகலம் என்பது கோலாலம் என்றாயிற்று; கோலாகலம் = சம்ப்ரமம்.

பாதி சந்திர னேசூடும் வேணியர்
சூல சங்கர னார்கீத நாயகர்
பார திண்புய மேசேரு சோதியர் கயிலாயர்;
ஆதி சங்கர னார்பாக மாதுமை
கோல அம்பிகை மாதா மநோமணி
ஆயி சுந்தரி தாயான நாரணி அபிராமி-
ஆவல் கொண்டு*வி ரூலே சிராடவெ
கோம ளம்பல சூழ்கோ யில்மீறிய
ஆவி னன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே.

102. வார ணந்தனை நேரான மாமுலை
மீத ணிந்திடு பூணார மாரொளி
வால சந்திர னேராக மாமுக மெழில்கூர-
வார ணங்கிடு சேலான நீள்விழி
யோலை தங்கிய வார்காது வாவிட
வான இன்சுவை மேலான வாயித ழமுதூறத்;
தோர ணஞ்செறி தார்வாழை யேய்தொடை
மீதில் நின்றிடை நூல்போலு லாவியெ
தோகை யென்றிட வாகாக வூரன சடைமானார்-
தோத கந்தனை மாமாயை யேவடி
வாக நின்றதெ னாஆய வோர்வது
தோணி டும்படி நாயேனுள் நீயருள் தருவாயே;
கார ணந்தனை யோராநி சாசரர்
தாம டங்கலு மீறாக வானவர்
காவ லிந்திர னாடாள வேயயில் விடும்வீரா-
கார்வி டந்தனை யூணாக வானவர்
வாழ்த ரும்படி மேனாளி லேமிசை
காள கண்டம காதேவ னார்தரு முருகோனே;
ஆர ணன்றனை வாதாடி யோருரை
ஓது கின்றென வாராதெ னாவவ
னாண வங்கெட வேகாவ லாமதி விடும்வேலா-

* விரூலே=வீரூலே.

ஆத வன்கதி ரோவாது லாவிய
கோபு ரங்கிளர் மாழாது மேவிய
ஆவி னன்குடி யோனேசு ராதிபர் பெருமாளே.

103. மூல மந்திர மோத லிங்கிலை
யீவ திங்கிலை நேய மிங்கிலை
மோன மிங்கிலை ஞான மிங்கிலை மடவார்கள்-
மோக முண்டதி தாக முண்டப
சார முண்டப ராத முண்டிடு
மூக னென்றொரு பேரு முண்டருள் பயிலாத;
கோல முங்குண வீன துன்பர்கள்
*வார்மை யும்பல வாகி வெந்தெழு
கோர கும்பியி லேவி ழுந்திட நினைவாகிக்-
கூடு கொண்டுழல் வேனை யன்போடு
ஞான நெஞ்சினர் பாலி ணங்கிடு
கூர்மை தந்தினி யாள வந்தருள் புரிவாயே;
பீலி வெந்துய ராவி வெந்தவ
சோகு வெந்தமண் மூகர் நெஞ்சிடை
பீதி கொண்டிட வாது கொண்டரு ளெழுதேடு-
பேணி யங்கெதி ராறு சென்றிட
மாற னும்பிணி தீர வஞ்சகர்
பீறு வெங்கழு வேற வென்றிடு முருகோனே;
ஆல முண்டவர் சோதி யங்கணர்
பாக மொன்றிய வாலை யந்தரி
ஆதி யந்தமு மான சங்கரி குமரேசா-
ஆர ணம்பயில் ஞான புங்கவ
சேவ லங்கொடி யான பைங்கர
ஆவி னன்குடி வாழ்வு கொண்டருள் பெருமாளே.

104. வேயி சைந்தெழு தோள்கள் தங்கிய
மாதர் கொங்கையி லேமு யங்கிட
வீணி லுஞ்சில பாத கஞ்செய அவமேதான்-

---

* வார்மை = ஒழுக்கம்.

வீறு கொண்டுட னேவ ருந்தியு
மேயு லைந்தவ மேகி ரிந்துள
மேக வன்றறி வேக லங்கிட வெகுதூரம்;
போய லைந்துழ லாகி நொந்துபின்
வாடி நைந்தென தாவி வெம்பியெ
பூத லந்தனி லேம யங்கிய மதிபோகப்-
போது கங்கையி னீர்சொ ரிந்திரு
பாத பங்கய மேவ ணங்கியெ
பூசை யுஞ்சில வேபு ரிந்திட அருள்வாயே;
தீயி சைந்தெழ வேயி லங்கையில்
ராவ ணன்சிர மேய ரிந்*தவர்
சேனை யுஞ்செல மாள வென்றவன் மருகோனே-
தேச மெங்கணு மேபு ரந்திடு
சூர்ம டிந்திட வேலின் வென்றவ
தேவர் தம்பதி யாள அன்புசெய் திடுவோனே;
ஆயி சுந்தரி நீலி பிங்கலை
போக அந்தரி சூலி குண்டலி
ஆதி யம்பிகை வேத தந்திரி யிடமாகும்-
ஆல முண்டர னாரி றைஞ்சவோர்
போத கந்தனை யேயு கந்தருள்
ஆவி னன்குடி மீதி லங்கிய பெருமாளே. ()

105. கோல குங்கும கற்புர மெட்டொன்
றான சந்தன வித்துரு மத்தின்
கோவை செண்பக தட்பம கிழ்ச்செங் கழுநீரின்-
கோதை சங்கிலி யுற்றக முத்தும்
பூஷ ணம்பல வொப்பனை மெச்சுங்
கூறு கொண்டப ணைத்தனம் விற்கும்
பொதுமாதர்;
பாலு டன்கனி சர்க்கரை சுத்தந்
தேனி னும்படி மெத்தரு சிக்கும்
பாத கம்பகர் சொற்களி விட்டம் பயிலாமே-

* அவர்—இஃது ஒருமையிற் பன்மை.

பாத பங்கய முற்றிட வுட்கொண்
டோது கின்றதி ருப்புகழ் நித்தம்
பாடு மன்பது செய்ப்பதி யிற்றந் தவனீயே;
தால முன்புப டைத்தப்ர புச்சந்
தேக மின்றிம திக்கவ திர்க்குஞ்
சாக ரஞ்சுவ றக்கிரி யெட்டுந் தலைசாயச்-
சாடு குன்றது பொட்டெழ மற்றுஞ்
சூர னும்பொடி பட்டிட யுத்தஞ்
சாத கஞ்செய்தி ருக்கைவி திர்க்குந் தனிவேலா;
ஆல முண்டக ழுத்தினி லக்குந்
தேவ ரென்புநி னைத்தெரி யிற்சென்
றூடு கின்றத கப்பனு கக்குங் குருநாதா-
ஆட கம்புனை பொற்குடம் வைக்குங்
கோபு ரங்களி னுச்சியு டுத்தங்
காவி னன்குடி வெற்பினி னிற்கும் பெருமாளே.

106. *அபகார நிந்தைபட் டுழலாதே-
அறியாத வஞ்சரைக் குறியாதே;
உபதேச மந்திரப் பொருளாலே-
உனைநானி னைந்தருட் பெறுவேனோ;
இபமாமு கன்தனக் கிளையோனே-
இமவான்ம டந்தையுத் தமிபாலா;
ஜெபமாலை தந்தசற் குருநாதா-
திருவாவி னன்குடிப் பெருமாளே. (எ)

107. கனமா யெழுந்துவெற் பெனவே யுயர்ந்துகற்
பூர†மா ரணந்துளுத் திடுமாதர்-
கனிவா யுகந்துசிக் கெனவே யணைந்துகைப்
பொருளே யிழந்துவிட் டயர்வாயே;

* 'அபசார நிந்தை' என்று சில பிரதிகளி லிருந்தபோதிலும், 'அபகாரநிந்தை' என்றே பழம் பிரதிகள் பலவற்றிலும் உள்ளது.

† மாரணம்=மந்திரவித்தையால் மரணத்தை உண்டுபண்ண எழும் கொலைக் கருவி; அஃதாவது இங்கே கொங்கை.

மனமே தளர்ந்துவிக் கலுமே யெழுந்துமட்
டறவே யுலந்துசுக் கதுபோலே-
வசமே யழிந்துவுக்கிடுநோய் துறந்துவைப்
பென்வே நினைந்துனைப் புகழ்வேனோ ;
புனவேடர் தந்தபொற் குறமாது இன்புறப்
புணர்காதல் கொண்டஅக் கிழவோனே-
புனலேழு மங்கவெற் பொடுசூர் சிரங்கள்பொட்
டெழவே லெறிந்தவுக் கிரவீரா ;
தினமேவு குங்குமப் புயவாச கிண்கிணிச்
சிறுகீத செம்பதத் தருளாளா-
சிவலோக சங்கரிக் கிறைபால பைங்கயத்
திருவாவி னன்குடிப் பெருமாளே. (அ)

108. காரணிந்தவரைப் பாரடர்ந்துவினைக்
காதல் நெஞ்சயாத் தடுமாறிக்-
கானரம்புதிரத் தோல்வழும்புறுபொய்க்
காய மொன்றுபொறுத் தடியேனும் ;
தாரிணங்குகுழற் கூரணிந்தவிழிச்
சாப மொன்றுநுதற் கொடியார்தம்-
தாள்பணிந்தவர்பொற் றோள்விரும்பிமிகத்
தாழ்வடைந்துலையத் தகுமோதான் ;
சூரனங்கம்விழத் தேவர் நின்றுதொழத்
தோய முஞ்சுவறப் பொரும்வேலா-
தூய்மை கொண்டகுறத் தோகை நின்றபுனச்
சூழ்பெருங்கிரியிற் றிரிவோனே ;
ஆரணன்கருடக் கேதனன்தொழமுற்
றால முண்டவருக் குரியோனே-
ஆலையும்பழனச் சோலையும்புடைசுற்
றாவி னன்குடியிற் பெருமாளே. (கூ)

109. சிவனார் மனங்குளிர உபதேச மந்த்ரமிரு
செவிமீதி லும்பகர்செய் குருநாத-
சிவகாம சுந்தரிதன் வரபால கந்தநின
செயலேவி ரும்பியுளம் நினையாமல் ;

அவமாயை கொண்டுலகில் விருதாவ லைந்துழலு
மடியேனை அஞ்சலென வரவேணும்-
அறிவாக மும்பெருக இடரான துன்தொலைய
அருள்ஞான இன்பமது புரிவாயே;
நவநீத முந்திருடி உரலோடெ யொன்றுமரி
ரகுராமர் சிந்தைமகிழ் மருகோனே-
நவலோக முங்கைதொழு நிசதேவ லங்கிருத
நலமான விஞ்சைகரு விளைகோவே;
*தெவயானை யங்குறமின் மணவாள சம்ப்ரமுறு
திறல்வீர மிஞ்சுகதிர் வடிவேலா-
திருவாவி னன்குடியில் வருவேள்ச வுந்தரிக
செகமேல்மெய் கண்டவிறல் பெருமாளே. (௧0)

110. பகர்தற்கரி தான செந்தமி ழிசையிற்சில பாட லன்பொடு
பயிலப்பல காவி யங்களை யுணராதே-
பவளத்தினை வீழியின்கனி யதனைப்பொருவாய்மடந்தையர்
பசலைத்தன மேபெ றும்படி விரகாலே;
சகரக்கடல் சூழு மம்புவி மிசையிப்படி யேதி ரிந்துழல்
சருகொத்துள மேய யர்ந்துடல் மெலியாமுன்-
தகதித்திமி தாகி ணங்கிண எனவுற்றெழு தோகையம்பரி
தனிலற்புத மாக வந்தருள் புரிவாயே;
நுகர்வித்தகமாகுமென்றுமை மொழியிற்பொழிபாலையுண்டிடு
நுவல்மெய்ப்புள பால னென்றிடு மிளையோனே-
நுதிவைத்தக ராம லைந்திடு களிறுக்கரு ளேபு ரிந்திட
நொடியிற்பரி வாக வந்தவன் மருகோனே;
†அகரப்பொருளாதியொன்றிடு முதலக்கரமானதின் பொருள்
அரனுக்கினி தாமொ ழிந்திடு குருநாதா-
அமரர்க்கிறை யேவ ணங்கிய பழநித்திரு வாவி னன்குடி
அதனிற்குடி யாயி ருந்தருள் பெருமாளே. (௧௧)

* தெவயானை = தேவயானை.

† அகரப்பொருளாதி ஒன்றிடு முத லக்கரம் = அகார உகார மகாராதிகள் அடங்கிய பிரணவம்.

பு. **111.** வஞ்சனை மிஞ்சிய மாய வம்பிகள்
வந்தவர் தங்களை வாதை கண்டவர்
வங்கண முங்தெரி யாம லன்புகள் பலபேசி-
மஞ்சமி ருந்தநு ராக விந்தைகள்
தந்தக டம்பிக ளூற லுண்டிடு
மண்டைகள் கண்டித மாய்மொ ழிந்திடு
முறையாலே;
சஞ்சல முந்தரு மோக லண்டிகள்
இன்சொல்பு ரிந்துரு காத தொண்டிகள்
சங்கம மென்பதை யேபு ரிந்தவ ளயராதே-
தங்களில் நெஞ்சக மேம கிழ்ந்தவர்
கொஞ்சிந டம்பயில் வேசை முண்டைகள்
தந்தசு கந்தனை யேயு கந்துடல் மெலிவேனோ;
கஞ்சன்வி டுஞ்சக டாசு ரன்பட
வென்றுகு ருந்தினி லேறி மங்கையர்
கண்கள்சி வந்திட வேக லந்தரு முறையாலே-
கண்டும கிழ்ந்தழ காயி ருந்திசை
கொண்டுவி ளங்கிய நாளி லன்பொடு
கண்குளி ருந்திரு மால்ம கிழ்ந்தருள்
மருகோனே;
குஞ்சர வஞ்சியு மான்ம டந்தையு
மின்பமி குந்திட வேய ணைந்தருள்
குன்றென வந்தருள் நீப முந்திய மணிமார்பா-
கொந்தவி ழுந்தட மேநி ரம்பிய
பண்புத ருந்திரு வாவி னன்குடி
குன்றுக ளெங்கினு மேவ ளர்ந்தருள் பெருமாளே.

~~~

112. கறுத்த குழலணி மலரணி பொங்கப்
பதித்த சிலைநுத லணி* தில தம்பொற்
கணைக்கு நிகர்விழி சுழலெழு கஞ்சச் சிரமான-

---

* திலதம்=சுட்டி.
~~~

கழுத்தி லுறுமணி வளைகுழை மின்கக்
குவட்டு முலையசை படவிடை யண்பைக்
கமைத்த கலையிறு குறுதுவள் வஞ்சிக்
கொடிபோலச்;
சிறுத்த களமிகு மதமொழு கின்சொற்
குயிற்க ளெனமட மயிலெகி னங்கட்
டிருக்கு நடைபழ கிகள்கள பங்கச் சுடைமாதர்-
*திகைத்த தனமொடு பொருள்பறி யொண்கட்
†குவட்டி யவர்வலை யழலுறு பங்கத்
திடக்கு தலைபுலை யவர்வழி யின்மைத்
தவிர்வேனோ;
பறித்த‡விழிதலை மழுவுழை செங்கைச்
செழித்த சிவபர னிதழிநல் தும்பைப்
§படித்த மதியற லரவணி சம்புக் குருநாதா-
பருத்த அசுரர்க ளுடன்மலை துஞ்சக்
கொதித்த அலைகட லெரிபட செம்பொற்
படைக்கை மணியயில் விடுநட னங்கொட்
கதிர்வேலா;
தெறித்து விழியர வுடல்நிமி ரம்பொற்
‖குவட்டொ டிகைகிரி பொடிபட சண்டச்
சிறப்பு மயில்மிசை பவுரிகொ ளும்பொற் றிருபாதா-
சிறக்கு மழகிய திருமகள் வஞ்சிக்
குறத்தி மகளுமை மருமகள் கொங்கைச்
சிலைக்கு ளணைகுக சிவமலை கந்தப் பெருமாளே.

113. குரம்பை மலசலம் வழுவளு நிணமொடு
எலும்பு அணிசரி தசையிரல் குடல்¶நெதி
குலைந்த செயிர்மயிர் குருதியொ டிவைபல கசுமாலக்-

---

*திகைத்த தனமொடு=(ஆடவரைத்) திகைப்பித்த தன்மையோடு.
† குவட்டி-இது கோட்டி என்பதன் மரூஉ.
‡ விழி தலை=விழிகளோடு கூடிய பிரமகபாலம்.
§ படித்த=படிந்த; அஃதாவது அமைந்த.
‖ குவட்டொ டிகைகிரி=குவட்டு ஒள் திகைகிரி.
¶நெதி=நேதி. இது நியதி என்பதன் மரூஉ. நியதி=முறைமை.

*குடின்பு குதுமவ ரவர்கடு கொடுமைய
ரிடும்ப ரொருவழி யிணையிலர் கசடர்கள்
குர்ங்க ரறிவிலர் நெறியிலர் மிருகணை விறலான;
சரம்ப ருறவனை நரகனை துரகனை
யிரங்கு கலியனை பரிவுறு சடலனை
சவுந்த ரிகமுக சரவண பதமொடு மயிலேறித்-
தழைந்த சிவசுடர் தனையென மனதினி
லழுந்த வுரைசெய வருமுக நகையொளி
தழைந்த நயனமு மிருமலர் சரணமு மறவேனே;
†இரும்பை வகுளமொ டியைபல முகில்பொழி
லுறைந்த குயிலளி யொளிபர விடமயி
லிசைந்து நடமிடு மிணையிலி புலிநகர் வளநாடா-
இருண்ட குவடிடி பொடிபட வெகுமுக
டெரிந்து‡மகர§மொ டிசைகரி‖குமுறுக
இரைந்த வசுரரொ டிபபரி யமபுரம் விடும்வேளே;
சிரம்பொ னயனெடு முநிவர்க ளமரர்க
ளரம்பை மகளிரொ டரகர சிவசிவ
செயம்பு வெனநட மிடுபத மழகியர் குருநாதா-
செழும்ப வளவொளி நகைமுக மதிநகு
சிறந்த குறமக ளிணைமுலை புதைபட
செயங்கொ டணைகுக சிவமலை மருவிய
பெருமாளே. (கச)

114. களபமுலை யைத்தி றந்து தளவநகை யைக்கொ ணர்ந்து
கயலொடுப கைத்த கண்கள் குழைதாவக்-
கரியகுழ லைப்ப கிர்ந்து மலர்சொருகு¶கொப்ப விழ்ந்து
கடியிருளு டுக்கு லங்க ளெனவீழ;
முழுமதி யெனச்சி றந்த நகைமுக மினுக்கி யின்ப
முருகிதழ்சி வப்ப நின்று விலைகூறி-

* குடின் புகுதும்=குடி புகுதும்.
† இரும்பை=இருப்பை; அஃதாவது இலுப்பைமரம்.
‡ மகரம்=மகரமீனுக் கிடமாகிய கடல்-இஃது ஆகுபெயர்.
§ ஒடிசை=ஒள்திசை. ‖குமுறுக=குமுற.
¶ கொப்பு=கோப்பு.

முதலுள து கைப்பு குந்து அழகுந்துகிலைத்தி றந்து
முடுகுமவ ருக்கி ரங்கி மெலிவேனோ;
இளமதி கடுக்கை தும்பை அரவணி பவர்க்கி சைந்து
இனியபொரு ளைப்ப கர்ந்த குருநாதா—
இபமுகவ னுக்கு கந்த இளையவ மருக்க டம்ப
எனதுதலை யிற்ப தங்க ளருள்வோனே;
* குழகென எடுத்து கந்த உமைமுலை பிடித்த ருந்து
குமர † சிவ வெற்ப மர்ந்த குகவேலா—
குடிலொடு மிகச்செ றிந்த இதணுள புனத்தி ருந்த
குறவர்மக ளைப்பு ணர்ந்த பெருமாளே. (௧௫)

115. ‡குன் றுங் குன் றுஞ் செண்டுங் கன் றும்
படிவளர் முலையினில் ம்ருகமத மெழுகியர்
இந்துஞ் சந்தந் தங்குந் தண்செங்
கமலமு மெனவொளிர் தருமுக வநிதையர்
கொஞ்சுங் கெஞ்சுஞ் §செஞ்சும் வஞ்சஞ்
சமரச முறவொரு தொழில்வினை புரிபவர்
விரகாலும்—
கும்பும் பம்புஞ் சொம்புந் தெம்புங்
குடியென வளர்தரு கொடியவர் கடியவர்
எங்கெங் கெம்பங் கென்றென் றென் றுந்
தனதுரி மையதென நலமுட னணைபவர்
கொஞ்சந் தங்கின் பந்தந் தெந்தன்
பொருளுள தெவைகளு நயமொடு கவர்பவர்
மயலாலும்;
என்றென் றுங் ||கன் றுந்துன் புங்கொண்
டுனதிரு மலரடி பரவிட மனதினில்

* குழகு = குழந்தை. † சிவவெற்பு என்பது பழநி.

‡ குன் றுங் குன் றும்படி, செண்டுங் கன் றும்படி எனத் தனித் தனி இயைக்க.

§ செஞ்சும்-செய்தும் என்பதன் மரூஉ.

|| கன் றுதலையுந் துன்பத்தையுங் கொண்டேன், கொண்டு = கொண்டேன்.

*குடின்பு குதுமவ ரவர்கடு கொடுமைய
றிடும்ப ரொருவழி யிணையிலர் கசடர்கள்
குரங்க ரறிவிலர் நெறியிலர் மிருகனை விறலான;
சரம்ப ருறவனை நரகனை துரகனை
யிரங்கு கலியனை பரிவுறு சடலனை
சவுந்த ரிகமுக சரவண பதமொடு மயிலேறித்-
தழைந்த சிவசுடர் தனையென மனதினி
லழுந்த வுரைசெய வருமுக நகையொளி
தழைந்த நயனமு மிருமலர் சரணமு மறவேனே;
†இரும்பை வகுளமொ டியைபல முகில்பொழி
லுறைந்த குயிலளி யொளிபர விடமயி
லிசைந்து நடமிடு மிணையிலி புலிநகர் வளநாடா-
இருண்ட குவடிடி பொடிபட வெகுமுக
டெரிந்து‡மகர§மொ டிசைகரி‖குமுறுக
இரைந்த வசுரரொ டிபபரி யமபுரம் விடும்வேளே;
சிரம்பொ னயனெடு முனிவர்க ளமரர்க
ளரம்பை மகளிரொ டரகர சிவசிவ
செயம்பு வெனநட மிடுபத மழகியர் குருநாதா-
செழும்ப வளவொளி நகைமுக மதிநகு
சிறந்த குறமக ளிணைமுலை புதைபட
செயங்கொ டணைகுக சிவமலை மருவிய
பெருமாளே. (௧௪)

114. களபமுலை யைத்தி றந்து தளவநகை யைக்கொ ணர்ந்து
கயலொடுப கைத்த கண்கள் குழைதாவக்-
கரியகுழ லைப்ப கிர்ந்து மலர்சொருகு¶கொப்ப விழ்ந்து
கடியிருளு டுக்கு லங்க ளெனவீழ;
முழுமதி யெனச்சி றந்த நகைமுக மினுக்கி யின்ப
முருகிதழ்சி வப்ப நின்று விலைகூறி-

---

* குடின் புகுதும்=குடி புகுதும்.
† இரும்பை=இருப்பை; அஃதாவது இலுப்பைமரம்.
‡ மகரம்=மகரமீனுக் கிடமாகிய கடல்-இஃது ஆகுபெயர்.
§ ஒடிசை=ஒள் திசை. ‖குமுறுக=குமுற.
¶ கொப்பு=கோப்பு.

முதலுளது கைப்பு குந்து அழகுந்துகிலைத்தி றந்து
முடுகுமவ ருக்கி ரங்கி மெலிவேனோ;
இளமதி கடுக்கை தும்பை அரவணி பவர்க்கி சைந்து
இனியபொரு ளைப்ப கர்ந்த குருநாதா-
இபமுகவ னுக்கு கந்த இளையவ மருக்க டம்ப
எனதுதலை யிற்ப தங்க ளருள்வோனே;
* குழகென எடுத்து கந்த உமைமுலை பிடித்த ருந்து
குமர † சிவ வெற்ப மர்ந்த குகவேலா-
குடியொடு மிகச்செ றிந்த இதணுள புனத்தி ருந்த
குறவர்மக ளைப்பு ணர்ந்த பெருமாளே. (கரு)

115. ‡ குன்றுங் குன்றுஞ் செண்டுங் கன்றும்
படிவளர் முலையினில் ம்ருகமத மெழுகியர்
இந்துஞ் சந்தந் தங்குந் தண்செங்
கமலமு மெனவொளிர் தருமுக வநிதையர்
கொஞ்சுங் கெஞ்சுஞ் § செஞ்சும் வஞ்சஞ்
சமரச முறவொரு தொழில்வினை புரிபவர்
விரகாலும்-
கும்பும் பம்புஞ் சொம்புந் தெம்புங்
குடியென வளர்தரு கொடியவர் கடியவர்
எங்கெங் கெம்பங் கென்றென் றென்றுந்
தனதுரி மையதென நலமுட னணைபவர்
கொஞ்சந் தங்கின் பந்தந் தெந்தன்
பொருளுள தெவைகளு நயமொடு கவர்பவர்
மயலாலும்;
என்றென் றும் ‖ கன் றுந்துன் புங்கொண்
டுன திரு மலரடி பரவிட மனதினில்

---

* குழகு = குழந்தை. † சிவவெற்பு என்பது பழநி.

‡ குன்றுங் குன்றும்படி, செண்டுங் கன்றும்படி எனத் தனித் தனி இயைக்க.

§ செஞ்சும்-செய்தும் என்பதன் மரூஉ.

‖ கன்றுதலையுந் துன்பத்தையுங் கொண்டேன், கொண்டு = கொண்டேன்.

நன்றென் றுங்கொண் டென்றுஞ் சென்றுந்
தொழுமகி மையினிலே யுணர்வினி னருள்பெற
இன்பும் பண்புந் தெம்புஞ் சம்பந்
தமுமிக வருள்பெற விடைதரு விதமுன
மருள்வாயே-

* எங்குங் கஞ்சன் வஞ்சன் கொஞ்சன்
அவன்விடு மதிசய வினையுறு மலகையை
வென்றுங் கொன்றுந் துண்டந் துண்டஞ்
செயுமரி யொருமுறை யிரணிய வுலனுயிர்
நுங்குஞ் சிங்கம் † வங்கந் தன்கண்
துயில்பவ ‡ னெகினனை யுதவிய கருமுகில்
மருகோனே;

§ ஒன்றென் றென்றுந் துன்றுங் குன்றுந்
தொளைபட மதகரி முகனுடல் நெரிபட
டுண்டுண் டுண்டுண் டிண்டிண் டிண்டிண்
டிடியென விழுமெழு படிகளு மதிர்பட
ஒண்சங் கஞ்சஞ் சஞ்சஞ் சஞ்சென்
றொலிசெய மகபதி துதிசெய அசுரரை
யடுவோனே-

உந்தன் தஞ்சந் தஞ்சஞ் தஞ்சஞ்
சிவனருள் குருபர வெனமுநி வரர்பணி
யுந்தொந் தந்தொந் தந்தொந் தந்தென்
றொலிபட நடமிடு பரனரு ளறுமுக
உண்கண் வண்டுங் கொண்டுந் தங்கும்
விரைபடு குரவல ரலர்தரு மெழில்புனை புயவீரா;

---

* எங்கும் என்பது குறுகிற்று.

† தோணிபோற் கடலிற் கண்வளர்பவன்; வங்கம்=தோணி.

‡ எகினன்=அன்னவூர்தியாகிய பிரமன்.

§ ஒன்றென்ற என்றுந் துன்றுங் குன்று=ஒன்றாகிய சூரிய மண்டலத்தை யளாவுங் கிரவுஞ்ச கிரி.

*அன்றென் றொன்றங் கொண்டன் பின்றங்
கடியவர் தமையிகழ் சமணர்கள் கழுவினில்
அங்கஞ் சிந்தும் பங்கந் துஞ்சும்
படியொரு தொகுதியி னுரைநதி யெதிர்பட
அன்பின் பண்பெங் குங்கண் டென்பின்
அரிவையை யெதிர்வர விடுகவி புகல்தரு
திறலோனே-
அண்டங் கண்டும் பண்டுண் டும்பொங்
கமர்தனில் விஜயவ னிரதமை நடவிய
துங்கன் வஞ்சன் சங்கன் மைந்தன்
தருமகன் †முநிதழல் வருதக ‡ ரிவர்வல
அங்கங் கஞ்சஞ் சங்கம் பொங்குங்
கயனிறை வளமுறு சிவகிரி மருவிய பெருமாளே. (கசு)

பு. **116.** கலகக் கயல்விழி போர்செய §வேள்படை
நடுவிற் புடைவரு பாபிகள் கோபிகள்
கனியக் கனியவு மேமொழி பேசிய விலைமாதர்-
கலவித் தொழிலை மேயினி தாமென
மனமிப் படிதின மேயுழ லாவகை
கருணைப் படியெனை யாளவு மேயருள்
தரவேணும்;
‖ இலவுக் கிளையெனும் வாய்வளி நாயகி
குழையத் தழுவிய மேன்மையி னுயர்
இசைபெற் றருளிய காமுக னாகிய வடிவோனே-
இதமிக் கருமறை வேதிய ரானவர்
புகலத் தயவுட னேயருள் மேன்மைகள்
இசையத் தருமநு கூலவ சீகர முதல்வோனே;

---

* அன்றென்ற ஒன்றுங்கொண்டு அன்பின்று=பிறமதங்கள் முத்திவழியன்று என்ற ஒன்றைமாத்திரங்கொண்டு அன்பில்லாமல்; அத்திநாத்தி யென்ற ஒன்றையே கொண் டென்றாலும் பொருந்தும்.
† முநி=நாரதமுநி. ‡ இவர் வல=ஏறி நடத்தவல்ல.
§ வேள்படை=மகளிர்.
‖ இலவுக் கிளை யெனும்=இலவ மலருக்கு உறவு (ஒப்பு) ஆகிய.

நிலவைச் சடைமிசை யேபுனை காரணர்
செவியிற் பிரணவ மோதிய தேசிக
நிருதர்க் கொருபகை யாளியு மாகிய சுடர்வேலா-
நிமலைக் குருபர ஆறிரு பார்வையும்
அருளைத் தரஅடி யார்தமை நாடொறும்
நிகரற் றவரென வேமகிழ் கூர்தரு முரியோனே ;
பலவிற் கனிபனை மீறிய மாமர
* முருகிற் கனியுட னேநெடு வாளைகள்
பரவித் தனியுதிர் சோலைகள் மேவிய வகையாலே-
பழனத் துழவர்க ளேரிட வேவிளை
கழனிப் புரவுகள் போதவு மீறிய
பழநிச் சிவகிரி மீதினி லேவளர் பெருமாளே.

117. புடவிக் கணிதுகி லெனவள ரந்தக்
† கடலெட் டையுமற குடிமுநி யெண்கட்
புனிதச் சததள நிலைகொள்ச யம்புச் சதுர்வேதன்-
புரமட் டெரியெழ விழிகனல் சிந்திக்
கடினத் தொடுசில சிறுநகை கொண்டற்
புதகர்த் தரகர பரசிவ னிந்தத் தனிமூவ ;
ரிடசித் தமுநிறை தெளிவுற வும்பொற்
செவியுட் பிரணவ ரகசிய மன்புற்
றிடவுற் பனமொழி யுரைசெய் குழந்தைக் குருநாதா-
எதிருற் றசுரர்கள் படைகொடு சண்டைக்
கிடம்வைத் திடஅவர் குலமுழு தும்பட்
டிடவுக் கிரமொடு வெகுளிகள் பொங்கக்
கிரியாவும் ;
பொடிபட் டுதிரவும் விரிவுறு மண்டச்
சுவர்விட் டதிரவு முகடுகி ழிந்தப்
புறமப் பரவெளி கிடுகெட னுஞ்சத் தமுமாகப்-
பொருதுக் கையிலுள அயில்நிண முண்கக்
குருதிப் புனலெழு கடலினு மிஞ்சப்
புரவிக் கனமயில் நடவிடும் விந்தைக் குமரேசா ;

---

*முருகு=வாசனை. †கடல் எட்டு=எட்டுத் திக்கிலு முள்ள கடல்.

படியிற் பெருமித தகவுயர் செம்பொற்
கிரியைத் தனிவலம் வரஅந னந்தப்
*பலனைக் கரிமுகன் வசமரு ளும்பொற் பதனாலே-
பரன்வெட் கிடவுள மிகவும்வெ குண்டக்
கனியைத் தரவிலை யெனஅருள் செந்திற்
பழநிச் சிவகிரி தனிலுறை கந்தப் பெருமாளே.

—∘∘✡∘∘—

118. ஆதா ளிகள்புரி கோலா கலவிழி
யாலே யமுதெனு மொழியாலே-
ஆழ்சீ ரிளநகை யாலே துடியிடை
யாலே மணமலி குழலாலே;
சூதா ரிளமுலை யாலே யழகிய
தோடா ரிருகுழை யதனாலே-
சோரா மயல்தரு மானா ருறவிடர்
சூழா வகையருள் புரிவாயே;
போதா ரிருகழல் சூழா ததுதொழில்
பூணா தெதிருற மதியாதே-
போரா டியஅதி சூரா பொறுபொறு
போகா தெனஅடு திறலோனே;
வேதா வுடனெடு மாலா னவனறி
யாதா ரருளிய குமரேசா-
வீரா புரிவரு கோவே பழநியுள்
வேலா இமையவர் பெருமாளே. (கக)

119. கோல மதிவதனம் வேர்வு தரஅளக
பாரம் நெகிழவிழி வேல்கள் சுழலநுவல்
கோவை யிதழ்வெளிற வாய்மை பதறியிள
முகையான-
கோக னகவுபய மேரு முலையசைய
நூலி னிடைதுவள வீறு பறவை வகை
கூற யினியகள மோல மிடவளைகள் கரமீதே;

* பலன்=பழம்.

காவி னணிகனக நூபு ரமுமொலிக
ளோல மிட அதிக போக மதுமருவு
காலை வெகுரசச லீலை யள்வுசெயு மடமானார்-
காதல் புரியுமது போக நதியினிடை
வீழு கினுமடிமை மோச மறவுனது
காமர் கழலிணைக ளான தொருசிறிது மறவேனே;
ஞால முழுதுமம ரோர்கள் புரியுமிக
லாக வருமவுணர் சேர வுததியிடை
நாச முறஅமர்செய் வீர தரகுமர. முருகோனே-
நாடி யொருகுறமின் மேவு தினைசெய்புன
மீதி லியலகல்கல் நீழ லிடைநிலவி
நாணம் வரவிரக மோது மொருசதுர புரிவேலா;
மேலை யமரர்தொழு மானை முகரானை
யோடி வலம்வருமுன் மோது திரைமகர
வேலை யுலகைவல மாக வருதுரக மயில்வீரா-
வீறு*கலிசைவரு சேவ கனதிதய
மேவு முதல்வவயல் வாவி புடைமருவு
வீரை வருபழநி ஞான மலையில்வளர் பெருமாளே.

120. சீயுதிர மெங்கு மேய்புழுநி ரம்பு
மாயமல பிண்ட நோயிடுகு ரம்பை
நீணரிகள் †கங்கு காகமிவை தின்ப தொழியாதே-
தீதுளகு ணங்க ளேபெருகு தொந்த
மாயையில்வ ளர்ந்த தோல்தசையெ லும்பு
சேரிடுந ரம்பு தானிவைபொ திந்து நிலைகாணு;
ஆயதுந மன்கை போகவுயி ரந்த
நாழிகையில் விஞ்ச ஊசிடுமி டும்பை
யாகியவு டம்பு பேணிநிலை யென்று
மடவார்பால்-

* கலிசைவரு சேவகன் என்பதும் காவேரி சேவகன் என்று பின்வரும் செய்யுட்களில் வருவனவும் கலிசை யென்னும் பதியில் அக்காலத்து அதிபனாயிருந்த ஒ ரன்பன்.

† கங்கு=கழுகு.

ஆசையைவி ரும்பி யேவிரக் சிங்கி
தானுமிக வந்து மேவிடம யங்கு
மாழ்துயர்வி ழுந்து மாளுமெனை யன்பு
புரிவாயே;

மாயைவல கஞ்ச னல்விடவெ குண்டு
பார்முழுது மண்ட கோளமுந டுங்க
வாய்பிளிறி நின்று மேகநிகர் தன்கை யதனாலே-

வாரியுற அண்டி வீறுடுமு ழங்கு
நீரைநுகர் கின்ற கோபமொடெ திர்ந்த
வாரண இரண்டு கோடொடிய வென்ற
நெடியோனும்;

வேயினிசை கொண்டு கோநிரைபு ரந்து
மேயல்புரி செங்கண் மால்மருக துங்க,
வேலகிர வுஞ்ச மால்வரையி டிந்து பொடியாக-

வேலைவிடு கந்த காவிரிவி ளங்கு
கார்கலிசை வந்த சேவகன்வ ணங்க
வீரைநகர் வந்து வாழ்பழநி யண்டர் பெருமானே.

121. சீற லசடன்வினை காரன் முறைமையிலி
தீமை புரிகபடி பவநோயே-

தேடு பரிசிகன நீதி நெறிமுறைமை
சீர்மை சிறிதுமிலி எவரோடுங்;

கூறு மொழியதுபொய் யான கொடுமையுள
கோள னறிவிலியு னடிபேணக்-

கூள னெனினுமெனை நீயு னடியரொடு
கூடும் வகைமையருள் புரிவாயே;

மாறு படுமவுணர் மாள அமர்பொருது
வாகை யுளமவுலி புனைவோனே-

மாக முகடதிர வீசு சிறைமயிலை
வாசி யெனவுடைய முருகோனே;

வீறு கலிசைவரு சேவ கனதிதய
மேவு மொருபெருமை யுடையோனே-

வீரை யுறைகுமர தீர தரபழநி
வேல இமையவர்கள் பெருமானே. (உஉ)

122. தோக்கமயி லேகமல மானேயு லாசமிகு
காமதுரை யூனமத வேள்பூவை யேயினிமை
தோயுமறு போகசுக லீலாவி னோதமுழு
துணர்தேனே--

சூதனைய சிதஇள நீரான பாரமுலை
மீதணைய வாருமிதழ் தாரீரெ னுணைமொழி
சோர்வதிலை யானடிமை யாவேனு மாணைமிக
மயலானேன் ;

ஆகமுற வேகமத காலேவி டாதஅடை
யாளமிட வாருமென வேமாத ரார்களுட
னுசைசொலி யேயுழலு மாபாத னீதியிலி
யுனையோதேன்--

ஆமுனது நேயஅடி யாரோடு கூடுகில
னீறுநுதல் மீதிடலி லாமுட னேதுமிலி
யாயினுமி யானடிமை யீடேற வேகழல்கள்
தருவாயே ;

மாகமுக டோடகில பாதாள மேருவுட
னேசுழல வாரியது வேதாழி யாவமரர்
வாலிமுத லானவர்க ளேனோர்க ளாலமுது
கடைநாளில்--

வாருமென வேயொருவர் நோகாம லாலவிட
மீசர்பெறு மாறுதவி யேதேவர் யாவர்களும்
வாழஅமு தேபகிரு மாமாய னரினிய
மருகோனே ;

மேகநிக ரானகொடை மானைய காதிபதி
வாரிகலி மாருதக ரோபாரி மாமதன
வேள்கவிசை வாழவரு காவேரி சேவகன
துளமேவும்--

வீரஅதி சூர்கிளை வேர்மாள வேபொருத
தீரகும ராகுவளை சேரோடை சூழ்கழனி
வீரைநகர் வாழ்பழநி வேலாயு தாவமரர்
பெருமாளே. (உங)

123. பாரி யானகொடைக் கொண்ட மேலிரு
வாழ்வி சாலதொலைத் திண்பு யாஎழு
பாரு மேறுபுகழ்க் கொண்ட நாயக அபிராம-
பாவ லோர்கள்கிளைக் கென்றும் வாழ்வருள்
சீல ஞாலவிளக் கின்ப சீவக
பாக சாதனவுத் துங்க மானத எனவோதிச்;
சீர தாகஎடுத் தொன்று மாகவி
பாடி னுலுமிரக் கஞ்செ யாதுரை
சீறு வார்கடையிற் சென்று தாமயர் வுறவீணே-
சேய பாவகையைக் கொண்டு போயறி
யாம லேகமிரிற் சிந்து வார்சிலர்
சேய னார்மனதிற் சிந்தி யாரரு குறலாமோ;
ஆரு நீர்மைமடுக் கண்க ராநெடு
வாயி னேர்படவுற் றன்று மூலமெ
னா வாரமதத் தந்தி தானுய அருள்மாயன்-
ஆதி நாரணனற் சங்க பாணிய
னோது வார்களுளத் தன்பன் மாதவ
னான நான்முகனற் றந்தை சீதரன் மருகோனே;
வீர சேவகவுத் தண்ட தேவகு
மார ஆறிருபொற் செங்கை நாயக
வீசு தோகைமயிற் றுங்க வாகன முடையோனே-
வீறு காவிரியுட் கொண்ட சேகர
னான சேவகனற் சிந்தை மேவிய
வீரை வாழ்பழநித் துங்க வானவர் பெருமானே.

124. அணிபட் டணுகித் திணிபட் டமனத்
தவர்விட் டவிழிக் கணையாலும்-
அரிசுற் றுகழைத் தவர்பெற் றவளத்
தவன்விட் டமலர்க் கணையாலும்;
பிணிபட் டுணர்வற் றவமுற் றியமற்
பெறுமக் குணமுற் றுயிர்மாளும்-

பிறவிக் கடல்விட் டுயர்நற் கதியைப்
பெறுதற் கருளைத் தரவேணும்;
கனிநற் சொருபத் தனைதயெடுத் துமிலைக்
கனியைக் *கணியுற் றிடுவோனே-
கமலத் தயனைப் ப்ரணவத் துரையைக்
கருதிச் சிறைவைத் திடுவோனே;
† பணியிப் பணியப் பரமர்ப் பரவப்
பரிவுற் றொருசொற் பகர்வோனே-
பவளத் தவளக் கனகப் புரிசைப்
பழநிக் குமரப் பெருமாளே. (உரு)

125. இருசெப் பெனவெற் பெனவட் டமுமொத்
திளகிப் புளகித் திடுமாதர்-
‡ இடையைச் சுமையைப் பெறுதற் குறவுற்
றிறுகக் குறுகிக் குழல்சோரத்;
தருமெய்ச் சுவையுற் றிதழைப் பருகித்
தழுவிக் கடிசுற் றணைமீதே-
§ சருவிச் சருவிக் குனகித் தனகித்
தவமற் றுழலக் கடவேனோ;
அரிபுத் திரசித் தஜனுக் கருமைக்
குரியத் திருமைத் துனவேளே-
அடல்குக் குடநற் கொடிபெற் றெதிருற்
றசுரக் கிளையைப் பொருவோனே;
பரிவுற் றரனுக் கருணற் பொருளைப்
பயனுற் றறியப் பகர்வோனே-
‖ பவனப் புவனச் செறிவுற் றுயர்மெய்ப்
பழநிக் குமரப் பெருமாளே. (உசு)

---

* கணி=கண்ணி=கருதி. † பணி அப்பு அணி அப் பரமர்.

‡ இடை யைச் சுமை=இடைக்கு அழகிய சுமையாக வுள்ள ஸ்தனம்.

§ சருவி=சரசஞ் செய்து.

‖ பவனப் புவனம்=வாயு மண்டலம்.

126\. கடலைச் சிறைவைத் துமலர்ப் பொழிலிற்
ப்ரமாத் தையுடற் பொறியிட் டுமடுக்
கமலத் தைமலர்த் திவிட்த் தையிரப் பவனுனைக்-
கருதிச் சருவிக் கயலைக் கயமுட்
படுவித் துழையைக் கவனத் தடைசிக்
கணையைக் கடைவித் துவடுத் தனையுப்
பினின்மேவி;

அடலைச் செயல்சத் தியையக் கினியிற்
புகுவித் துயமப் ப்ரபுவைத் துகைவித்
தரிகட் கம்விதிர்த் தமுறித் துமதித் தச்கோரம்-
அலறப் பணிரத் நமணிக் குழையைச்
சிலுகிட் டுமையிட் டொளிவிட் டுமருட்
டுதலுற் றபொறிச்சியர்கட் கடையிற் படுவேனோ;

சடிலத் தவனிட் டவிசிட் டகுலத்
தொருசெட் டியிடத் தினுதித் தருள்வித்
தகருத் ரஜன்மப் பெயர்செப் பியிடப் பரிவாலே-
* சநகர்க் குமகஸ்த் யபுலஸ்த் யசநற்
குமரர்க் குமறுக் க்ரக †மெய்ப் பலகைச்
‡சதுபத் துநவப் புலவர்க் கும்§விபத் தியில்ஞான;

படலத் துறுலக் கணலக் ய‖தமிழ்த்
த்ராயமத் திலகப் பொருள்வருத் தியினைப்
¶பழுதற் றுணர்வித் தருள்வித் தகசற் குருநாதா-
பவளக் கொடிசுற் றியபொற் கமுகிற்
றலையிற் குலையிற் பலமுத் துதிர்செய்ப்
பழநிப் பதிவெற் பினில்நிற் குமரப் பெருமாளே.

---

*சநகர்க்கும் என்பது முதலாகக்கூறிய இவர்களே சநகாதி நால்வர்.

† மெய்ப்பலகை=சங்கப்பலகை.

‡ சது பத்து நவப் புலவர்=சங்கத்தார் நாற்பத்தொன்பதின்மர்.

§ விபத்தி யில்=வேற்றுமை யில்லாத.

‖ தமிழ்த் த்ராய மத்தில்=தமிழ்த்திரயம் அதில்.

¶ பழுதற்று=பழுதற.

குறிப்பு.

விநாயகர் துதியில் விநாயகரை "முத்தமி ழடைவினை * * முற்பட எழுதிய முதல்வன்!" என்றார்; இங்கே முருகக்கடவுளை "தமிழ்த் த்ரயத்து அகப்பொருள் வ்ருத்தியினை உணர்வித்தருள் வித்தக சற்குருநாதன்" என்றார். இவற்றால் தமிழ் மற்றப்பாஷைகள் போலாகாது ஆதியாவுள்ள தெய்வபாஷை யென்பதும், அது கடவுளரெல்லாம் பயின்றுள்ளது என்பதும் வெளியாகின்றன.

ஆரியமும் தமிழுமே ஆதியிற் கடவுளால் உண்டாக்கப்பட்ட பாஷைகள். அவ்விரு பாஷைகளிலும் எல்லாப் பொருள்களும் உண்டு என்பதற்கு மேற்கோள்:—

திருமூலர் திருமந்திரம்.

"ஆரியமுந் தமிழும் முடனே சொலிக்
காரிகை யார்க்குங் கருணைசெய் தானே" எனவும்,

"அவிழ்க்கின்ற வாறும் அதுகட்டு மாறும்
சிமிட்டலைப் பட்டுயிர் போகின்ற வாறும்
தமிழ்ச்சொல் வடசொல் எனுமிவ் விரண்டும்
உணர்த்தும் அவனை யுணரலு மாமே." எனவும்

கூறியிருத்தல் காண்க. இவ்வுண்மை யுணராதார் தமிழ் அகஸ்தியரா லுண்டாக்கப்பட்டதென்றும் அது வடமொழிபோற் சிறந்ததன் றென்றுங் கூறுவர். அகஸ்தியர் ஆதிகாலத்தில் தாம் சிவபெருமானால் உணர்ந்த தமிழை தமது மாணுக்கர் வாயிலாக உலகத்திற் பரவச்செய்தவரேயன்றித் தமிழை உண்டாக்கினவரல்லர் என்பதை

"ஆதியிற் றமிழ்நூல் அகத்தியர்க் குணர்த்திய
மாதொரு பாகனை வழுத்துதுஉம்
போதமெய்ஞ் ஞான நலம்பெறற் பொருட்டே" என்னும்

தொல்சாப்பியப் பாயிர முகத்தா லுணர்க. 'அசலமேந்தி பெருந் தமிழ்' என்பர் பழநிப் புராணமுடையார் நூற்பெயர்ச் செய்யுளில்.

---

127. தகைமைத் தனியிற் பகைகற் றுறுகைத்
தருமுட் டவளைப் பவனாலே-
தாளத் திரளிற் புரளக் காளத்
தமரத் திமிரக் கடலாலே;
* உகைமுத் தமிகுத் ததெனப் பகல்புக்
கொளிமட் குமிகைப் பொழுதாலே-

* உற்கை யென்பது உகையென்றாயிற்று; உற்கை=நக்ஷத்திரம்.

உரையற் றுணர்வற் றுயிரெய்த் தகொடிக்
குனநற் *பிணையற் றாவேணும்;
†திசைபத் துமுகக் கமலத் தினைமுற்
சிறையிட் டபகைத் திறல்வீரா-
திகழ்கற் பகமிட் டவ்னக் கனகத்
திருவுக் குருகிக் குழைமார்பா;
பகலக் கிரணப் பரணச் சடிலப்
பரமற் கொருசொற் பகர்வோனே-
பவனப் புவனச் செறிவுற் றுயர்மெய்ப்
பழநிக் குமாப் பெருமாளே. (உஅ)

128. புடைசெப் பெனமுத் தணிகச் சறவுட்
பொருமிக் கலசத் திணையாய-
புளகக் களபக் கெருவத் தனமெய்ப்
புணரத் தலையிட் டமரேசெய்;
அடைவிற் றினமுற் றவசப் படுமெற்
கறிவிற் பதடிக் கவமான-
அசடற் குயர்வொப் பதில்நற் க்ருபையுற்
றடிமைக் கொருசொற் புகல்வாயே;
குடமொத் தகடக் காடக் கலுழிக்
குணமெய்க் களிறுக் கிளையோனே-
குடிபுக் கிடமிட் டசுரப் படையைக்
குறுகித் தகரப் பொரும்வேலா;
படலைச் செறிநற் கதலிக் குலையிற்
பழமுற் றெழுகப் புனல்சேர்நீள்-
பழனக் கரையிற் கழைமுத் துகுநற்
பழநிக் குமரப் பெருமாளே. (உகூ)

---

* பிணையல்=மாலை

† திசை பத்து முக=திசை பத்தும் உக=பத்துத் திக்கும் கலங்கும்படி.

129. கரிய பெரிய எருமை கடவு
கடிய கொடிய திரிசூலன்-
கறுவி யிறுகு கயிறொ டுயிர்கள்
கழிய முடுகி யெழுகாலன்;
திரியு நரியு மெரியு முரிமை
தெரிய விரவி யணுகாதே-
செறிவு மறிவு முறவு மனைய
திகழு மடிகள் தரவேணும்;
பரிய வரையி னரிவை மருவு
பரம ரருளு முருகோனே-
பழன முழவர் கொழுவி லெழுது
பழைய பழநி யமர்வோனே;
அரியு மயனும் வெருவ வுருவ
அரிய கிரியை யெறிவோனே-
அயிலு மயிலு மறமு நிறமு
மழகு முடைய பெருமாளே. (௩0)

130. தமரு மமரு மனையு மினிய
தனமு மரசும் அயலாகத்-
தறுகண் மறலி முறுகு கயிறு
தலையை வளைய எறியாதே;
கமல விமல மரக தமணி
கனக மருவு மிருபாதங்-
கருத அருளி யெனது தனிமை
கழிய அறிவு தரவேணும்;
குமர *சமர முருக பரம
குலவு பழநி மலையோனே-
†கொடிய பகடு முடிய முடுகு
குறவர் சிறுமி மணவாளா;

* 'சமர புரியின் முருக' என்றும் பாடம்.
† கொடிய பகடு=மத யானை.

அமர ரிடரு மவுண ருடனு
மழிய அமர்செய் தருள்வோனே-
அறமு நிறமும் மயிலு மயிலு
மழகு முடைய பெருமாளே. (௩க)

131. திமிர வுததி யனைய நரக
செனன மதனில் விடுவாயேல்-
செவிடு குருடு வடிவு குறைவு
சிறிது மிடியு மணுகாதே;
அமரர் வடிவு மதிக குலமு
மறிவு நிறையும் வரவேநின்-
அருள தருளி யெனையு மனதொ
டடிமை கொளவும் வரவேணும்;
சமர முகவெ லசுரர் தமது
தலைக ளுருள மிகவேநீள்-
சலதி யலற நெடிய பதலை
தகர அயிலை விடுவோனே;
*வெமர வணையி லினிது துயிலும்
விழிகள் நளினன் மருகோனே-
மிடறு கரியர் குமர பழநி
விரவு மமரர் பெருமாளே. (௩உ)

132. திகர நறுமலர் பொதுளிய குழலியர்
கலக கெருவித விழிவலை படவிதி
தலையி லெழுதியு மனைவயி னுறவிடு வதனாலே-
தனயர் அனைதமர் மனைவியர் சினெகிதர்
சுரபி விரவிய வகையென நினைவுறு
†தவன சலதியின் முழுகியெ யிடர்படு துயர்தீர;
அகர முதலுள பொருளினை யருளிட
இருகை குவிசெய்து ளுருகிட வுருகியெ
அமக ரெனவல னிடமுற எழிலுன திருபாதம்-

* வெம் அரவணை. † தவனம்=ஆசை.

அருள அருளுடன் மருளற இருளற
கிரண அயில்கொடு *குருக்கணி கொடியொடு
அழகு பெறமர கதமயில் மிசைவர இசைவாயே;
சிகர குடையினி னிரைவர இசைதெரி
சதுரன் விதுரனில் வருபவ னளையது
திருடி யடிபடு சிறியவ னெடியவன் மதுசூதன்-
திகிரி வளைகதை வசிதரு வுடையவ
னெழிலி வடிவின னரவுபொன் முடிமிசை
திமித திமிதிமி யெனநட மிடுமரி மருகோனே;
பகர புகர்முக மதகரி †யுழைதரு
வனிதை வெருவமுன் வரஅருள் புரிகுக
பரம குருபர இமகிரி தருமயில் புதல்வோனே-
பலவின் முதுபழம் விழைவுசெய் தொழுகிய
நறவு நிறைவயல் கமுகடர் பொழில்திகழ்
பழநி மலைவரு புரவல அமரர்கள் பெருமாளே. ()

133. முருகு செறிகுழல் முகிலென நகில்நறு
முளரி முகையென இயலென மயிலென
முறுவல் தளமென நடைமட வனமென
இருபார்வை-
முளரி மடலென இடைதுடி யதுவென
அதர மிலவென அடியிணை மலரென
மொழியு மமுதென முகமெழில் மதியென
மடமாதர்;
உருவ மினையன எனவரு முருவக
வுரைசெய் தவர்தரு கலவியி னிலவிய
வுலையின் மெழுகென வுருகிய கசடனை
யொழியாமல்-
உவகை தருகலை பலவுணர் பிறவியி
னுவரி தனிலுற மவலனை யசடனை
உனது பரிபுர கழலிணை பெறஅருள் புரிவாயே;

* குருகு = கோழி.
† உழை தரு வனிதை = வள்ளியம்மை.

அரவ மலிகடல் விடமமு துடனெழ்
அரிய யனு*நரை யிபன்முத லனைவரும்
அபய மிகவென அதையயி லிமையவ னருள்பாலா-

அமர்செய் நிசிசர ருடலவை துணிபட
அவனி யிடிபட அலைகடல் பொடிபட
அமரர் சிறைவிட அடலயில் நொடியினில்
விடுவோனே;

பரவு புனமிசை யுறைதரு குறமகள்
பணைகொ ளணிமுலை முழுகுப னிருபுய
பணில சரவணை தனில்முளை ரியின்வரு முருகோனே-

பரம குருபர எனுமுரை பரசொடு
பரவி யடியவர் துதிசெய மகிதவழ்
பழநி மலைதனி லினிதுறை யமரர்கள்
பெருமாளே. (௩௪)

134. கனத்திறுகிப் பெருத்திளகிப்
பணைத்துமணத் திதத்துமுகக்
கறுப்புமிகுத் தடர்த்துநிகர்த் தலமேராய்-

கவட்டையுமெத் தடக்கிமதர்த்
தறக்கெருவித் திதத்திடுநற்
கலைச்சவுளித் தலைக்குலவிக் களிகூருந்;

தனத்தியர்கட் கிதத்துமிகுத்
தனற்குண்மெழுக் கெனப்புவியிற்
றவித்திழிசொற் பவக்கடலுற் றபர்வாலே-

சலித்தவெறித் துடக்குமனத்
திடக்கனெனச் சிரிக்கமயற்
சலத்தின்வசைக் கிணக்கமுறக் கடவேனோ;

புனத்தின்மலைக் குறத்தியுயர்த்
திருக்குதனக் குடத்தினறைப்
புயத்தவநற் கருத்தையுடைக் குகவீரா-

* நரை யிபன் = வெள்ளையானையை யுடைய தேவேந்திரன்.

பொருப்பரசற் கிரக்கமொடுற்
றறற்சடிலத் தவச்சிவனிற்
*புலச்சிதனக் கித்தைமிகுத் திடுநாதா;
சினத்தெதிர்துட் டரக்கர்தமைத்
திகைத்துவிழக் கணப்பொழுதிற்
சிதைத்திடுநற் கதிர்க்கைபடைத் துடையோனே-
செருக்கொடுநற் றவக்கமலத்
தயற்குமரிக் கருட்புரிசைத்
திருப்பழநிக் கிரிக்குமரப் பெருமாளே.

135. குறித்தமணிப் பணித்துகிலைத்
திருத்தியுடுத் திருட்குழலைக்
குலைத்துமுடித் திலைச்சுருளைப் பிளவோடே-
†குதட்டியதுப் புதட்டைமடித்
தயிற்பயிலிட் டழைத்துமருட்
கொடுத்துணர்வைக் கெடுத்தநகக் குறியாலே;
பொறித்ததனத் தணைத்துமனச்
செருக்கினர்கைப் பொருட்கவரப்
புணர்ச்சிதனிற் பிணிப்படுவித் திடுமாதர்-
புலத்தலையிற் செலுத்துமனப்
ப்ரமத்தையறப் ப்ரசித்தமுறப்
புரித்தருளித் திருக்கழலைத் தருவாயே;
பறித்ததலைத் திருட்டமணக்
குருக்களசட் டுருக்களிடைப்
பழுக்களுகக் கழுக்கள்புகத் திருநீறு-
பரப்பிய‡தத் திருப்பதிபுக்
கனற்புனலிற் கனத்தசொலைப்
பதித்தெழுதிப் §புகட்டதிறற் கவிராசா;

---

* புலச்சி=ஞானமயமானவள்.

† குதட்டிய துப்பு உதட்டை எனப் பிரித்துக்கொள்க.

‡ தத் திருப்பதி=அந்தத் திருப்பதி; மதுரை.

§ புகட்ட=புகவிட்ட.

செறித்தசடைச் சசித்தரியத்
தகப்பன்*மதித் துகப்பனெனச்
†சிறக்கவெழுத் தருட்கருணைப் பெருவாழ்வே-
திகழ்ப்படு‡செய்ப் பதிக்குளெனைத்
தடுத்தடிமைப் படுத்தஅருட்
டிருப்பழநிக் கிரிக்குமரப் பெருமாளே. (நசு)

136. கலவியி லிச்சித் திரங்கி நின்றிரு
கனதனம் விற்கச் சமைந்த மங்கையர்
கயல்கள் சிவப்பப் பரிந்து நண்பொடு மின்பமூறிக்-
கனியித மூற்றுற் றருந்தி யங்குறு
மவச மிகுத்துப் பொருந்தி யின்புறு
கலகம் விளைத்துக் கலந்து மண்டணை §யங்கமீதே;
குலவிய நற்கைத் தலங்கொ டங்கணை
கொடியிடை மெத்தத் துவண்டு தண்புயல்
குழலள கக்கட் டவிழ்ந்து பண்டையி
லங்கம்வேறுய்க்-
குறிதரு வட்டத் தடர்ந்த சிந்தூர
முகதல முத்துப் பொலிந்தி லங்கிட
கொடிய மயற்செய்ப் பெருந்த டந்தனில்
மங்கலாமோ;
இலகிய சித்ரப் புனந்த னிந்துறை
குறமகள் கச்சுக் கிடந்த கொங்கைமி
னினிதுறு பத்மப் பதம்ப ணிந்தருள் கந்தவேளே-
எழுகடல் வற்றப் பெருங்கொ டுங்கிரி
யிடிபட மிக்கப் ப்ரசண்டம் விண்டுற
மிகலர்ப தைக்கத் தடிந்தி லங்கிய செங்கைவேலா;
பலவித நற்கற் படர்ந்த சுந்தரி
பயில்தரு வெற்புத் தருஞ்செ ழுங்கொடி
பணைமுலை மெத்தப் பொதிந்து பண்புறு
கின்றபாலைப்-

---

* மதித்து உகப்பன் என என்று பிரித்துக்கொள்க.
† சிறக்க எழுத்து அருள் = சிறப்புறும்படி பிரணவத்தை யுபதேசஞ்செய்த். ‡ செய்ப்பதி=வயலூர். § அங்கம் =கட்டில்.

பலதிசை மெச்சத் தெரிந்த செந்தமிழ்
பகரென இச்சித் துகந்து கொண்டருள்
பழநியில் வெற்பிற் றிகழ்ந்து நின்றருள்
தம்பிரானே. (௩எ)

137. முகிலளை கத்திற் கமழ்ந்த வண்பரி
மள அலர் துற்றக் கலந்தி டந்தரு
முகிழ்நுதி தைத்துத் துயர்ந்த மங்கைய ரங்கமீதே-
முகம்வெயர் வுற்றுப் பாந்து செங்கயல்
விழியிணை செக்கச் சிவந்து குங்கும
ம்ருகமத மத்தத் தனங்க ளின்மிசை யெங்குமேவி;
உகவுயி ரொத்துப் புயங்க ளின்புற
வுறவினை யுற்றுத் திரண்டு கொங்கள
வுறுமணை யுற்றுத் திரங்கு மஞ்சமி லொன்றிமேவி-
ஒளிதிகழ் பத்மக் கரங்க ளின்புற
முறுவளை யொக்கக் கலின்க லென்கவு
முயர்மய லுற்றுற் றிரங்கு மன்பதொ
ழிந்திடாதோ;
செகமுழு தொக்கப் பயந்த சங்கரி
அடியவர் சித்தத் துறைந்த சம்ப்ரம
சிவனொரு பக்கத் துறைந்த மங்கைசு மங்கைநீடு-
திகழ்வன பச்சைப் பசங்கி* யம்பண
கரதலி கச்சுற் றிலங்கு கொங்கையள்
திருவரு ணற்பொற் பரந்தி டும்பரை யண்டமீதே;
பகலிர வற்றிட் டுயர்ந்த அம்பிகை
திரிபுரை முற்றிட் டிரண்டொ டொன்றலர்
பரிவுற வொக்கச் செயும்ப ரம்பரமி யன்புகூரும்-
பதிவ்ரதை மிக்கச் சிறந்தெ ரிந்தருள்
பகிரதி வெற்பிற் பிறந்த பெண்தரு
பழநியில் வெற்பிற் றிகழ்ந்து நின்றருள்
தம்பிரானே. (௩அ)

---

* அம்பணம் = ஒருவகை யாழ்.

138. அவனிதனி லேபி றந்து மதலையென வேத வழ்ந்து
அழகுபெற வேந டந்து இளைஞோனய்-
அருமழலை யேமி குந்து குதலைமொழி யேபு கன்று
அதிவிதம தாய்வ ளர்ந்து பதினறுய்;
சிவகலைக ளாக மங்கள் மிகவுமறை யோது மன்பர்
திருவடிக ளேநி னைந்து துதியாமல்-
தெரிவையர்க ளாசை மிஞ்சி வெருகவலை யாயு ழன்று
திரியுமடி யேனை யுன்ற னடிசேராய்;
மவுன்வுப தேச சம்பு மதியறுகு வேணி தும்பை
மணிமுடியின் மீத ணிந்த மகதேவர்-
மனமகிழ வேய ணைந்து ஒருபுறம தாக வந்த
மலைமகள்கு மார துங்க வடிவேலா;
பவனிவர வேயு கந்து மயிலின்மிசை யேதி கழ்ந்து
படியதிர வேந டந்த கழல்வீரா-
பரமபத மேசெ றிந்த முருகனென வேயு கந்து
பழநிமலை மேலமர்ந்த பெருமாளே. (ந௬)

139. உலகபசு பாச தொந்த மதுவான-
உறவுகிளை தாயர் தந்தை மனைபாலர்;
மலசலசு வாச சஞ்ச லமதாலென்-
மதிநிலைகெ டாம லுன்ற னருள்தாராய்;
சலமறுகு பூளை தும்பை யணிசேயே-
சரவணப வாமு குந்தன் மருகோனே;
பலகலைசி வாக மங்கள் பயில்வோனே-
பழநிமலை வாழ வந்த பெருமாளே. (௪0)

140. கருவினுரு வாகி வந்து வயதளவி லேவ ளர்ந்து
கலைகள்பல வேதெ ரிந்து மதனுலே-
கரியகுழல் மாதர் தங்க ளடிசுவடு மார்பு தைந்து
கவலைபெரி தாகி நொந்து மிகவாடி;
அரகரசி வாய வென்று தினமுநினை யாமல் நின்று
அறுசமய நீதி யொன்று மறியாமல்-

அசனமிடு வார்கள் தங்கள் மனைகள்தலை வாசல் நின்று
அநுதினமு நாண மின்றி யழிவேனோ;
உரகபட மேல்வ ளர்ந்த பெரியபெரு மாள ரங்க
ருலகளவு மால்ம கிழ்ந்த மருகோனே-
உபயகுல தீப துங்க விருதுகவி ராஜ சிங்க
உறை*புகலி யூரி லன்று வருவோனே;
பரணிவனை மீதி லன்று ஒருபொழுது தூது சென்ற
பரமனரு ளால்வ ளர்ந்த குமரேசா-
பகையசுரர் சேனை கொன்று அமரர்சிறை மீள வென்று
பழநிமலை மீதில் நின்ற பெருமாளே. (சக)

141. சுருளளக பார கொங்கை மகளிர்வச மாயி சைந்து
சுரதக்ரியை யால்வி ளங்கு மதனாலே-
சுருதியென வேநி னைந்து அறிவிலிக ளோடி ணங்கு
தொழிலுடைய யானு மிங்கு னடியார்போல்;
அருமறைக ளேநி னைந்து மறநெறியி லேந டந்து
அறிவையறி வால றிந்து நிறைவாகி-
அகிலபுவ னாதி யெங்கும் வெளியுறமெய்ஞ் ஞான இன்ப
அமுதையொழி யாத ருந்த அருள்வாயே;
பருதிமகன் வாசல் மந்த்ரி அநுமனொடு நேர்ப ணிந்து
†பரிதகழை யாமுன் வந்து பரிவாலே-
பரவியவி பீஷ ணன்பொன் மகுடமுடி சூட நின்ற
படைஞரொடி ராவ ணன்ற னுறவோடே;
எரிபுகுத மாறி லண்டர் குடிபுகுத மாறு கொண்ட
ரகுபதியி ராம சந்த்ரன் மருகோனே-
இளயகுற மாது பங்க பழநிமலை நாத கந்த
இமயவர்த னால்ம கிழ்ந்த பெருமாளே. (சஉ)

142. வனிதையுடல் காய நின்ற வுதிரமதி லேயு ருண்டு
வயிறில்நெடு நாள லைந்து புவிமீதே-
மனிதருரு வாகி வந்து அநுதினமு மேவ ளர்ந்து
வயதுபதி னாறு சென்று வடிவாகிக்;

---

* புகலியூர்=ஸ்ரீகாழி. † பரித கழையா முன்=பரிவு தக அழையாமுன்=அன்புடன் அழைக்குமுன்.

கனகமுலை மாதர் தங்கள் வலையில்மிக வேயுழன்று
கனிவதுட னேய ணைந்து பொருள்தேடிக்-
கனபொருளெ லாமி ழந்து மயலில்மிக வேய லைந்த
கசடனெனை யாள வுன்ற னருள்தாராய்;
புனமதனில் வாழு கின்ற வனிதைரகு நாதர் தந்த
புதல்வியித ழூற லுண்ட புலவோனே-
பொருமதனை நீறு கண்ட அரியசிவ னருகந்த
புதியமயி லேறு கந்த வடிவேலா;
பனகமணி மாம தங்கி குமரிவெகு நீலி சண்டி
பரமகலி யாணி தந்த பெருவாழ்வே-
பகையசுரர் மாள வென்று அமரர்சிறை மீள வென்று
பழநிமலை மீதி னின்ற பெருமாளே. (சரு)

143. மருமலரி னன்து ரந்து விடவினைய ருந்த அந்தி
*மதியொடுபி றந்து முன்பெய் வதையாலே-
வகைதனைம றந்தெ ழுந்து முலைதனைய ருந்தி யந்த
மதலையென வந்து குன்றின் வடிவாகி;
இருமயல்கொ டுந்து வண்டு பொதுவையர கம்பு குந்து
இரவுபகல் கொண்டொ டுங்கி யசடாகும்-
இருவினைபொ திந்த இந்த ஜனனமர ணந்து றந்து
னிணையடிவ ணங்க என்று பெறுவேனோ;
திருவொடுபெ யர்ந்தி ருண்ட வனமிசைந டந்தி லங்கை
திகழெரியி டுங்கு ரங்கை †நெகிழாத-
திடமுளமு குந்தர் கஞ்சன் வரவிடுமெல் வஞ்ச கங்கள்
செறிவுடன றிந்து வென்ற பொறியாளர்;
பரிவொடும கிழ்ந்தி றைஞ்சு மருதிடைத வழ்ந்து நின்ற
பரமபத நண்ப ரன்பின் மருகோனே-
பதுமமிசை வண்ட லம்பு சுனைபலவி ளங்கு துங்க
பழநிமலை வந்த மர்ந்த பெருமாளே. (சச)

144. விரைமருவு மலர ணிந்த கரியபுரி குழல்ச ரிந்து
விழவதன மதிவி ளங்க அதிமோக-
விழிபுரள முலைகு லுங்க மொழிகுழற அணைபு குந்து
விரகமயல் புரியு மின்ப மடவார்பால்;

* மதியொடு=மதிபோல. † நெகிழாத=நெகிழவிடாத.

இரவுபக லணுகி நெஞ்ச மறிவழிய வுருகு மந்த
இருளகல வுனது தண்டை யணிபாதம்-
எனதுதலை மிசைய ணிந்து அமுதமுது னருள்வி ரும்பி
யினியபுகழ் தனைவிளம்ப அருள்தாராய்;
அரவில்விழி துயில்மு குந்த னலர்கமல மலர்ம டந்தை
அழகினொடு தழுவு கொண்டல் மருகோனே-
அடலசுர ருடல்பி ளந்து கிணமதனில் முழுகி யண்ட
அமரர்சிறை விடுப்ர சண்ட வடிவேலா;
பரவைவரு விடம ருந்து மிடறுடைய கடவுள் கங்கை
படர்சடையர் விடைய ரன்ப ருளமேவும்-
பரமரரு ளியக டம்ப முருக அறு மூகவ கந்த
பழநிமலை தனில மர்ந்த பெருமாளே. (௪௫)

145. இரவியென வடவையென ஆலால விடமதென
உருவுகொடு ககனமிசை மீதேகி மதியும்வர
இரதிபதி கணைகளொரு நாலேவ விருதுகுயி
லதுகூவ-
எழுகடலின் முரசினிசை வேயோசை விடையின்மணி
யிசைகுறுகி யிருசெவியி னூாச முறுவதென
இகல்புரிய மதன*குரு வோராத அனையர்கொடு
வசைபேச;
அராஹரென வநிதைபடு பாடோத அரிதரிது
அமுதமயி லதுகருதி யாரோடு மிகல்புரிவள்
அவசமுற அவசமுற ஆ†ரோமல் தரவுமிக
மெலிவானாள்-
‡அருதியிவள் தலையில்விதி யானாலும் விலகரிது
அடிமைகொள வுனதுபரம் ஆரூத வொருதனிமை
யவளையணை தரஇனிதி னேகாச பரியின்மிசை
வருவாயே;
நிரைபரவி வரவரையு ளோர்சீத மருதினொடு
பொருசகடு வுதையதுசெய் தாமாய மழைசொரிதல்
நிலைகுலைய மலைகுடைய தாவேகொள் காரமலன்
மருகோனே-

---

* குரு=பாரம். † ஓமல்=ஊர்பேச்சு. ‡அருதி=திக்கற்றவள்.

நிருமலிய திரிநயனி *வாள்வீச வருகுமரி
கவுரிபயி ரவியரவ பூஷணி திரிபுவனி
நிபுடமலை யாசனருள் வாழ்வான புரணவுமை
யருள்பாலா;

பரவைகிரி யசுரர்திரள் மாசேனை தவிடுபொடி
படஅமரர் துயரகல வேலேவி யமர்பொருத
பதுமகர தலமுருக நால்வேத கர்ரணிக
மயில்வீரா-

பனிதம்ருக மதகளப சேரூர வளருமுலை
வனிதைகுற மகள்மகிழும் லீலாவி தரமதுர
பதுவல்தரு பழநிவரு கோலாக லவவமரர்
பெருமாளே. (சகூ)

146. இருகனக மாமேரு வோகளப துங்க
கடகடின பாடீர வாரமுத கும்ப
மிணைசொலின நீரோக ராசல இரண்டு குவடேயோ-

இலகுமல ரேவாளி யாகியஅ நங்க
னணிமகுட மோதானெ னுமிகவ ளர்ந்த
இளமுலைமி னர்மோக மாயையில்வி ழுந்து
தணியாமல்;

பெருகியொரு காசேகொ டாதவரை யைந்து
தருவைநிக ரேயாக வேயெதிர்பு கழ்ந்து
பெரியதமி ழேபாடி நாடொறுமி ரந்து நிலைகாணப்-

பிணியினக மேயான பாழுடலை நம்பி
உயிரையவ மாய்நாடி யேபவ நிரம்பு
பிறவிதனி லேபோக மீளவுமு ழன்று திரிவேனோ;

கருணையுமை மாதேவி காரணிய நந்த
சயனகளி கூராரி சோதரி†பு ரந்த
கடவுளுடன் வாதாடு காளிமலை மங்கை யருள்பாலா-

* வாள் = ஒளி. †புராந்தகக் கடவுள் என்பது புரந்த கடவுள் என்றாயிற்று.

கருடனுடன் விரூன கேதனம்வி ளங்கு
மதிலினொடு மாமாட மேடைகள்து லங்கு
கவிசைவரு காவேரி சேககனொ டன்பு
புரிவோனே;

பரவையிடை யே*பாத காசுரர்வி ழுந்து
கதறியிட வேபாக சாதனனு நெஞ்சு
பலிதமென வேயேக வேமயிலில் வந்த குமரேசா-

பலமலர்க ளேதூவி யாரணந வின்று
பரவியிமை யோர்சூழ நாடொறுமி சைந்து
பழநிமலை மீதோர்ப ராபரனி றைஞ்சு பெருமாளே.

147. சிறுபறையு முரசுதுடி சத்தக் கணப்பறையு
மொகுமொகென அதிரவுட னெட்டிப் பிடித்துமுடி
சிறுகயிறு நெடிதுகொடு கட்டிட் டிழுக்கஇனி
யணுகாதே-

சிலதமர்க ளுறவுகிளை கத்திப் பிதற்றியெடு
சுடலைதனி லிடுகனலை யிட்டுக்கொளுத்துபுனல்
திரைகடலில் முழுகெனவு ரைக்கப் படிக்குடிலை
யொழியாதே;

மறைமுறையி னிறுதிநிலை முத்திக் கிசைத்தபடி
உடலுயிர்கள் கரணவெளி பட்டுக் குணத்திரயம்
வழிபடவும் நினதடிமை யிச்சைப் படுத்துவது
மொருநாளே-

வருதுரக மாயில்மணிகள் சத்திக்க நிர்த்தமிட
ஒருபதுட னிருபுயமு மட்டுத் தொடைக்கிசைய
மனமகிழ இனியமொழி செப்பிச் சிவத்தபத
மருள்வாயே;

நறையிதழி யறுகுபல புட்பத் திரட்களொடு
சிறுபிறையு மரவுமெழி லப்புத் திருத்தலையி
னளினமுற அணிசடையர் மெச்சிப் ப்ரியப்படவு
மயிலேறி-

---

* பாதகாசுரர்—பாதக அசுரர்.

நவநதிகள் குமுகுமென வெற்புத் திரட்சுழல
அகிலமுத லெழுபுவன் மெத்தத் திடுக்கிடவும்
நவமணிகள் உரகனுடல் கக்கத் துரத்திவரு
முருகோனே ;
குறவர்முனை கெடமனது வெட்கப் படக்குடிலில்
மலையிலெழு தினையிதணில் வைத்துச் சிறுக்கியிரு
குவிமுலையு மணியிடையு மெச்சிப் புணர்ச்சிசெயு
மணவாளா-
குறுமுநிவ னிருபொழுதும் அர்ச்சித்து முத்திபெற
அறிவுநெறி தவநிலைகள் செப்புத் தமிழ்க்கினிய
குருகுமர பழநிவளர் வெற்புத் தனிற்றிகழு
பெருமாளே. (சஅ)

148. சுருதிமுடி மோனஞ்சொல் சிற்பரம ஞானசிவ
சமயவடி வாய்வந்த அத்துவித மானபர
சுடரொளிய தாய்நின்ற நிட்களசொ ரூபமுத
லொருவாழ்வே-
துரியநிலை யேகண்ட முத்தரித யாகமல
மதனில்வினை யாநின்ற அற்புதசு போதசுக
சுயபடிக மாவின்ப பத்மபத மேஅடைய
உணராதே ;
கருவிலுரு வேதங்கு சுக்கிலநி தானவளி
பொருமஅதி லேகொண்ட முக்குணவி பாகநிலை
கருதவரி யாவஞ்ச கக்கபட மூடியுடல் வினைதானே-
கலகமிட வேபொங்கு குப்பைமல வாழ்வுநிஜ
மெனவுழலு மாயஞ்செ னித்தகுகை யேஉறுதி
கரு*தசுழ மாமிந்த மட்டைதனை யாளஉன
தருள்தாராய் ;
ஒருநியம மேவிண்ட சட்சமய வேதஅடி
முடிநடுவு மாயண்ட முட்டைவெளி யாகியுயி
ருடலுணர்வ தாயெங்கு† முற்பனம தாகஅம
ருளவோனே-

* அசுழம்=நாய். † உற்பனம்=தோற்றம்.

*உததரிச மாமின்ப புத்தமிர்த போகசுக
முதவுமம் லாநந்த சத்திகா†மேவுணா
வுருபிரண வாமந்த்ர கர்த்தவிய மாகவரு
குருநாதா;

பருதிகதி ரேகொஞ்சு நற்சரண நூபுரம
தசையநிறை பேரண்ட மொக்கநட மாடுகன
பதகெருவி தாதுங்க வெற்றிமயி லேறுமொரு
திறலோனே-

பணியுமடி யார்சிந்தை மெய்ப்பொருள் தாகநவில்
சரவணப வாவொன்று வற்கரமு மாகிவளர்
பழநிமலை மேனின்ற சுப்ரமணி யாவமரர்
பெருமாளே. (சகூ)

149. தலைவலி மருத்தீடு காமாலை சோகைசுரம்
விழிவலி வறட்சூலை காயாசு வாசம்வெகு
சலமிகு விஷப்பாக மாயாவி காரபிணி யணுகாதே-
தலமிசை யதற்கான பேரோடு கூறியிது
பரிகரி யெனக்காது கேளாது போலுமவர்
சரியும்வய துக்கேது தாரீர்சொ லீரெனவும்
விதியாதே;

உலைவறவி ருப்பாக நீள்காவின் வாசமலர்
வகைவகை யெடுத்தேதொ டாமாலி காபரண
முனதடியி னிற்சூட வேநாடு மாதவர்க
ளிருபாதம்-
உளமதி தரித்தேவி ஞவோடு பாடியருள்
வழிபட எனக்கேத யாவோடு தாளுதவ
உரகம தெடுத்தாடு ‡மேகார மீதின்மிசை
வரவேணும்;

---

* உத தரிச மாம்=ஜலத்தோற்றம் போல ஊறுகின்ற தாகிய.

† மேவு உணர் அ உரு பிரணவ மந்த்ரம்=பொருந்திய அறிவுருவ மாகிய அந்தப் பிரணவ மந்திரம்.

‡ மேகாரம்=மயில்.

அலைகட லடைத்தேம காகோர ராவணனை
மணிமுடி துணித்தாவி யேயான ஜாநகியை
அடலுட னழைத்தேகொள் மாயோனை மாமனெனு
மருகோனே-
அறுகினை முடித்தோனை யாதார மானவனை
மழுவுழை பிடித்தோனை மாகாளி நாணமுனம்
அவைதனில் நடித்தோனை மாதாதை யேஎனவும்
வருவோனே;
பலகலை படித்தோது பாவாணர் நாவிலுறை
யிருசரண வித்தார வேலாயு தாவுயர்செய்
பரண்மிசை குறப்பாவை தோள்மேவ மோகமுறு
மணவாளா-
பதுமவய லிற்பூக மீதேவ ரால்கள்துயில்
வருபுனல் பெருக்காறு காவேரி சூழவளர்
பழநிவரு கற்பூர கோலாக லாவமரர்
பெருமாளே. (ருo)

150. கலக வாள்விழி வேலோ சேலோ
மதுர வாய்மொழி தேனோ பாலோ
கரிய வார்குழல் காரோ கானோ துவரோவாய்-
களமு நீள்கமு கோதோள் வேயோ
உதர மானது மாலேர் பாயோ
களபவார்முலை மேரோ கோடோ இடைதானும்;
இழைய தோமலர் வேதா வானோ
னெழுதி னனிலை யோவாய் பேசி
ரிதென மோனமி னரே பாரீ ரெனமாதர்-
இருகண் மாயையி லேமூழ் காதே
யுனது காவிய நூலா ராய்வே
னிடர்ப டாதருள் வாழ்வே நீயே தரவேணும்;
அலைவி லாதுயர் வானோ ரானோர்
நிலைமை யேகுறி வேலா சீலா
அடியர் பாலரு ளீவாய் *நீபார் மணிமார்பா-

* நீபார்=நீபம் ஆர்.

அழகு லாவுவி சாகா வாகா
ரிபமி ளுள்மகிழ் கேள்வா தாழ்வா
ரயலு லாவிய சீலா கோலா கலவீரா;
வலபை கேள்வர்பி னுனைக் காஞர்
குறவர் மாதும ணாளா நாளார்
*வனச மேல்வரு தேவா மூவா மயில்வாழ்வே-
மதுர ஞானவி நோதா நாதா
பழநி மேவுகு மாரா தீரா
மயுர வாகன தேவா வானோர் பெருமாளே. (நக)

151. கொந்துத் தருகுழ லிருளோ புயலோ
விந்தைத் தருநுதல் சிலையோ பிறையோ
கொஞ்சிப் பயில்மொழி அமுதோ கனியோ
விழிவேலோ-
கொங்கைக் குடமிரு கரியோ கிரியோ
வஞ்சிக் கொடியிடை துடியோ பிடியோ
கொங்குற் றுயரல்கு லரவோ ரதமோ எனுமாதர்;
திந்தித் திமிதிமி திமிதா திமிதோ
தந்தித் திரிகிட கிடதா எனவே
சிந்திப் படிபயில் நடமா டியபா விகள்பாலே -
சிந்தைத் தயவுகள் புரிவே னுனையே
வந்தித் தருள்தரு மிருசே வடியே
சிந்தித் திடமிகு மறையா கியசீ ரருள்வாயே;
†வெந்திப் புடன்வரு மவுணே சனையே
துண்டித் திடுமொரு கதிர்வே லுடையாய்
வென்றிக் கொருமலை யெனவாழ் மலையே
தவவாழ்வே-
விஞ்சைக் குடையவர் தொழவே வருவாய்
கஞ்சத் தயனுட னமரே சனுமே
விந்தைப் பணிவிடை புரிபோ தவர்மே
லருள்கூர்வாய்;

* வனசம் =சரவணப்பொய்கையி லுள்ள பதுமப் பாயல்.
† வெந்திப்பு=பெந்திப்பு : கட்டு.

தொந்திக் கணபதி மகிழ்சோ தரனே
செங்கட் கருமுகில் மருகா குகனே
சொந்தக் குறமகள் கணவா திறல்சேர் கதிர்காமா-
சொம்பிற் பலவள முதிர்சோ லைகள்சூழ்
இஞ்சித் திருமதிள் புடைசூ ழருள்சேர்
தங்கப் பழநியில் முருகா இமையோர் பெருமாளே.

152. ஆல காலமெ னக்கொலை முற்றிய
வேல தாமென மிக்கவி ழிக்கடை
யாலு மோகம்வி ளைத்துவி தத்துட னிளைஞோரை-
ஆர வாணைமெ யிட்டும றித்துவி
கார மோகமெ ழுப்பிய தற்குற
வான பேரைய கப்படு வித்ததி விதமாகச்;
சால மாலைய ளித்தவர் கைப்பொருள்
மாள வேசிலு கிட்டு மருட்டியெ
சாதி பேதம றத்தழு வித்திரி மடமாதர்-
தாக போகமொ ழித்துஉ னக்*கடி
யானென் †வேள்விமு கத்தவ முற்றிரு
தாளை நாளும்வ ழுத்திநி னைத்திட அருள்வாயே;
வால மாமதி மத்தமெ ருக்கறு
காறு பூளைத ரித்தச டைத்திரு
வால வாயன ளித்தரு ளற்புத முருகோனே-
மாய மானொடு ரக்கரை வெற்றிகொள்
வாலி மார்புதொ ளைத்திட விற்கொடு
வாளி யேவிய மற்புய னச்சுதன் மருகோனே;
நாலு வேதந விற்றுமு றைப்பயில்
வீணை நாதனு ரைத்தவ னத்திடை
நாடி யோடிகு றத்திதனைக்கொடு வருவோனே-
நாளி கேரம்வ ருக்கைப ழுத்துதிர்
சோலை சூழ்பழ நிப்பதி யிற்றிரு
ஞான பூரண சத்திதரித்தருள் பெருமாளே. ()

* அடியா னென்=அடியா னென. †வேள்வி=ஆராதனை.

153. ஓடி யோடி யழைத்துவ ரச்சில
சேடி மார்கள் பசப்பஅ தற்குமு
ன்னேதி கோதி முடித்தவி லைச்சுரு ளதுகோதி-

நீடு வாச நிறைத்தஅ கிற்புழு
கோட மீது திமிர்த்தத னத்தினில்
நேச மாகி யணைத்தசி றுக்கிக ளுறவாமோ;

நாடி வாயும் வயற்றலை யிற்புன
லோடை மீதி னிலத்ததி வட்கையி
னூத கீத மலர்த்துளி பெற்றளி யிசைபாடுங்-

கோடு லாவிய முத்துநி றைத்தவை
காவுர் நாடத னிற்பழ நிப்பதி
கோதி லாதகு றத்திய ணைத்தருள் பெருமாளே. ()

154. சகடத்திற் குழையிட் டேற்றிக்
குழலுக்குச் சாம்வைத் தேற்றிப்
புளகித்துக் குவளைக் கட்பொற்
கணையொத்திட் டுழலச் சுத்தித்
தரளப்பற் பவளத் தொட்டக்
*களபப் பொட் டுதலிட் டத்திக் குவடான-

தனதுத்திப் படிகப் பொற்பிட்
டசையப்†பெட் பசளைத் துப்புக்
கொடியொத்திட் டிடையிற் பட்டைத்
தகையிற்றொட் ‡டுகளப் பச்சைச்
சரணத்துக் கியலச் சுற்றிச்
சுழலிட்டுக் கடனைப் பற்றிக் கொளுமாதர்;

சுகமுற்றுக் கவலைப் பட்டுப்
பொருள்கெட்டுக் கடைகெட் டுச்சொற்
குளறிட்டுத் தடிதொட் டேற்றிப்

* களப அப்பு ஒட்டுதல் இட்ட அத்திக் குவடான எனப்பிரிக்க.
†பெள் = விரும்பத்தக்க. ‡ உகளம் = இரண்டு.

பிணியுற்றுக் *கசதிப் பட்டுச்
சுகதுக்கத் திடர்கெட் டுற்றுத்
தளர்பட்டுக் கிடைபட் டுப்பிக் கிடைநாளிற்-
சுழலர்ச்சக் கிரியைச் சுற்றிட்
டிறுகக்கட் டுயிரைப் பற்றிக்
கொளுகப்†பற் பலரைக் கட்டிக்
காம்வைத்துத் தலையிற் குத்திச்
சுடுகட்டைச் சுடலைக் கட்டைக்
கிரையிட்டுப் பொடிபட் டுட்கிச் சடமாமோ;
திகுடத்திக் குகுடட் டுட்டுட்
டமடட்டட் டமடட் டிக்குட்
டிமிடிட்டிட் டிமிடிட் டிக்குத்
தொகுதொக்குத் தொகுதத் தொக்குச்
செகணக்கச் செகணச் செக்குத்
தகுடத்தத் தகுடத் தட்டுட் டிடிபேரி-
திமிலைக்கைத் துடிதட் டெக்கைப்
பகடிட்டுப் பறையொத் தக்‡கட்
டிகையெட்டுக் கடல்வற் றித்§தித்
தாவுக்கக் கிரியெட் டுத்தைத்
தியருக்குச் சிரமிற் றுட்கச்
சுரர் ||பொற்புச் சொரியக் கைத்தொட்
டிடும்வேலா;
பகலைப்பற் சொரியத் தக்கற்
பதிபுக்கட் டழலிட் டுத்திட்
புரமட்கிக் கழைவிற் புட்பச்
சரனைச்சுட் டயனைக் கொத்திப்
பவுரிக்கொட் பரமர்க் குச்சற்
குருவொத்துப் பொருளைக் கற்பித் தருள்வோனே-

---

*கசதி=கஸ்தி: வருத்தம். †பற்பலரை=பற்பலர்; ஐ-சாரியை.
‡கண் திகை யெட்டு=இட மகன்ற எட்டுத் திக்கும்.
§ தித் தா=தீத் தா: தீயைத் தா.
||பொற் பு=பொற் பூ: கற்பகப் பூமாரி.

பவளப்பொற் கிரிதுத் திப்பொற்
றனகொச்சைக் கிளிசொற் பற்றிப்
பரிவுற்றுக் கமலப் புட்பத்
திதழ்பற்றிப் புணர்சித் ரப்பொற்
படிகத்துப் பவளப் பச்சைப்
பதமுத்துப் பழநிச் சொக்கப் பெருமாளே. (ருரு)

155. முத்துக்குச் சிட்டுக் குப்பிமு
டித்துச்*சுக் கைப்பிற் சுற்றியு
முற்பக்கத் திற்பொற் புற்றிட நுதல்மீதே-
முக்யப்பச் சைப்பொட் டிட்டணி
ரத்நச்சுட் டிப்பொற் பட்டிவை
முச்சட்டைச் சித்ரக் கட்டழ கெழிலாடத்;
தித்திக்கச் சொற்சொற் றுப்பிதழ்
நச்சுக்கட் †கற்புச் சொக்கியர்
செப்புக்கொக் கக்கச் சுப்பெறு தனமேருத்-
திட்டத்தைப் பற்றிப் பற்பல
லச்சைக்குட் பட்டுத் தொட்டுயிர்
சிக்கிச்சொக் கிக்கெட் டிப்படி யுழல்வேனோ;
‡மெத்தத்துக் கத்தைத் தித்தியி
னிச்சித்தத் திற்பத் தத்தொடு
மெச்சிச்சொர்க் கத்திற் சிற்ப மருள்வாயே-
வித்தைக்குக் கர்த்ருத் தற்பர
முக்கட்சித் தர்க்குப் புத்திர
விச்சித்ரச் செச்சைக் §கத்திகை புனைவோனே;
நித்யக்கற் பத்திற் சித்தர்க
ளெட்டுத்திக் குக்குட் பட்டவர்
நிஷ்டைக்கற் புற்றப் பத்தர்கள் அமரோரும்-
நெட்டுக்குப் புட்பத் தைக்கொடு
முற்றத்துற் றர்ச்சிக் கப்பழ
நிக்குட்பட் டத்துக் குற்றுறை பெருமாளே. (ருசு)

---

*சுக்கை=பூமாலை. †கற்பு=கற்பனை.

‡மெத்த துக்கத்தை தித்தி யினி சித்தத்தில் பத்தத்தொடு என்று பிரித்துக் கொள்க. §கத்திகை=பூமாலை.

156. அகல்வினை யுட்சார் சட்சம
யிகலொடு *வெட்கா தட்கிடு
மறிவிலி வித்தா ரத்தன மலிகாரம்-
அகில்கமழ் கத்தூ ரித்தனி
யணைமிசை கைக்கா சுக்கள
வருள்பவர் நட்பே கொட்புறு மொருபோதன்;
பகலிர விற்போ திற்பணி
பணியற விட்டா ரெட்டிய
பரமம யச்சோ திச்சிவ மயமாகின்-
பழநித னிற்போ யுற்பவ
வினை †விள கட்சேர் வெட்சிகு
ரவுபயில் நற்றாள் பற்றுவ தொருநாளே;
புகலிவ னப்பே றப்புகல்
மதுரைமன் வெப்பா றத்திகழ்
‡பொடிகொடு புற்பாய் சுற்றிகள் கழுவேறப்-
பொருதச மர்த்தா குத்திர
§துரகமு கக்கோ தைக்கிடை
புலவரில் நக்கீ ரர்க்குத வியவேளே;
இகல்படு நெட்டூர் பொட்டெழ
இளநகை யிட்டே சுட்டரு
ளெழுபுவி தய்த்தார் மைத்துனர் மதலாய்வென்-
றிடாற முப்பால் செப்பிய
கவிதையின் ||மிக்கா ரத்தினை
யெழுதி¶வனத்தே யெற்றிய பெருமாளே. (௫௧)

---

*வெட்காதட்கிடும் = அஞ்சாது தடுத்து வாதஞ்செய்யும்.
† விள = விள்ள = நீங்க. ‡ பொடி = திருநீறு.
§ துரக முகக் கோதை = கற்கிமுகி என்கின்ற ஒருபூதம்.
|| மிக்க ஆரத்தினை = மேலாகிய தேவாரத்தை.
¶ வனத்தே யெற்றிய = ஜலத்தில் எதிரேற விட்ட.

157\. அதல விதலமுத லந்தத்த லங்களென
அவனி யெனஅமரர் அண்டத்த கண்டமென
அகில சலதியென எண்டிக்குள் விண்டுவென
அங்கிபாநு-

அமுத கதிர்களென அந்தித்த மந்த்ரமென
அறையு மறையெனஅ ருந்தத்து வங்களென
அணுவி லணுவெனநி றைந்திட்டு நின்றதொரு
சம்ப்ரதாயம்;

உதய மெழஇருள்வி டிந்தக்க ணந்தனிலி
ருதய கமலமுகி ழுங்கட்ட விழ்ந்துணர்வி
லுணருமநுபவம னம்பெற்றிடும்படியை வந்துநீமுன்-

உதவ இயலினியல் செஞ்சொற்ப்ர பந்தமென
மதுர கவிகளில்ம னம்பற்றி ருந்துபுகழ்
உரிய அடிமையுனை யன்றிப்ப்ர பஞ்சமதை
நம்புவேனோ;

தததத தததததத தந்தத்த தந்ததத
திதிதி திதிதிதிதி திந்தித்தி திந்திதிதி
தகுகு தகுதகுகு தந்தத்த தந்தகுகு திந்திதோதி-

சககக சககெணக தந்தத்த குங்கெணக
டிடிடி டிடிடிடிடி டிண்டிட்டி டிண்டிடிடி
தககக தககதகக தந்தத்த தந்தகக என்றுதாளம்;

பதலை திமிலைதுடி தம்பட்ட மும்பெருக
அகில நிசிசரர்ந டுங்கக்கொ டுங்கழுகு
பரியகுடர்பழுவெ லும்பைப்பிடுங்கரண துங்ககாளி-

பவுரி யிடநரிபு லம்பப்ப ருந்திறகு
கவரி யிடஇகலை வென்றுச்சி கண்டிதனில்
பழநி மலையின்மிசை வந்துற்ற இந்திரர்கள்
தம்பிரானே. (நிஅ)

158\. அரிசன வாடைச் சேர்வை குளித்துப்
பலவித கோலச் சேலை யுடுத்திட்
டலர்குழ லோதிக் கோதி முடித்துச் சருளோடே-

அமர்பொரு காதுக் கோலை திருத்தித்
திருநுதல் நீவிப் பாளித பொட்டிட்
டகில்புழு காரச் சேறு தனத்திட் டலர்வேளின்;
சுரத விநோதப் பார்வைமை யிட்டுத்
தருணக லாரத் *தோடைத ரித்துத்
தொழிலிடுதோளுக் கேறவரித்திட் டிலைஞோர்மார்-
துறவினர் சோரச் சோரந கைத்துப்
பொருள்கவர் மாதர்க் காசையளித்தற
றயரற வேபொற் பாதமெ னக்குத் தருவாயே;
கிரியுலை வாரிச் சூரரி ரத்தப்
புணரியின் மூழ்கிக் கூளிக ளிக்கக்
கிரணவை வேல்புத் தேளிர்பி ழைக்கத்
தொடுவோனே-
கெருவித கோலப் பாரத னத்துக்
குறமகள் பாதச் சேகர சொர்க்கக்
கிளிதெய்வ யானைக் கேபுய வெற்பைத்
தருவோனே;
பரிமள நீபத் தாரொடு வெட்சித்
தொடைபுனை சேவற் கேதன துத்திப்
பணியகல் பீடத் தோகைம யிற்பொற் பரியோனே-
பனிமல ரோடைச் சேலுக ளித்துக்
ககனம ளாவிப் போய்வரு வெற்றிப்
பழநியில் வாழ்பொற் கோமளசத்திப் பெருமாளே.

159. அருத்தி வாழ்வொடு †தனகிய மனைவியு முறவோரும்-
அடுத்த பேர்களு மிதமுறு மகவொடு வளநாடும்;
தரித்த வூரு‡மெ யெனமன நினைவது நினையாதுன்-
தனைப்ப ராவியும் வழிபடு தொழிலது தருவாயே;
எருத்தி லேறிய இறையவர் செவிபுக வுபதேசம்-
இசைத்த நாவின இதணுறு குறமக ளிருபாதம்;
பரித்த சேகர மகபதி தரவரு தெய்வயானை-
பதிக்கொ ளாறிரு புயபழ நியிலுறை பெருமாளே. ()

* தோடை=தொடை : மாலை.
† தனகல்=சிணுங்கிப் பேசுதல். ‡ மெ யென=மெய் யென.

160. அறமிலா நிலைகற்று கொடியவேல் விழிவிட்டு
ளறிவுதா னுறவைத்து விலைபேசி-
அமளிமீ தினில்வைத்து பவளவா யமுதத்தை
யதிகமா வுதவிக்கை வளையாலே;
உறவினு லுடலத்தை யிறுகவே தழுவிக்கொ
ளுலையிலே மெழுகொத்த மடவாரோ-
டுருகியே வருபெற்றி மதனநா டகபித்து
ஒழியுமா றொருமுத்தி தரவேணும்;
மறவர்மா தொருரத்ந விமலகோ கநகத்தி
மயிலனாள் புணர்செச்சை மணிமார்பா-
மருள்நிசா சரன்வெற்பி லுருகிவீழ் வுறமிக்க
மயிலிலே றியவுக்ர வடிவேலா;
பறைகள்பே ணியருத்ரி கரியகா ரளகத்தி
பரமர்பா லுறைசத்தி யெமதாயி-
பழையபார் வதிகொற்றி பெரியநா யகிபெற்ற
பழநிமா மலையுற்ற பெருமாளே. (சுக)

161. ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் என்றுபூதி-
ஆகமணி மாதவர்கள் பாதமலர் சூடுமடி
யார்கள்பத மேதுணைய தென்றுநாளும்;
ஏறுமயில் வாகனகு காசரவ ணாஎனது
ஈசஎன மானமுன தென்றுமோதும்-
ஏழைகள் வியாகுலமி தேதெனவி னாவிலுனை
யேவர்புகழ் வார்மறையு மென்சொலாதோ;
நீறுபடு மாழைபொரு மேனியவ வேலஅணி
நீலமயில் வாகவுமை தந்தவேளே-
*நீசர்கட மோடெனது தீவினையெ லாமடிய
நீடுதனி வேல்விடும டங்கல்வேலா;
சீறிவரு மாறவுண னாவியுணு மானைமுக
தேவர்துணை வாசிகரி அண்டகூடஞ்-
சேருமழ கார்பழநி வாழ்குமா ரனேபிரம
தேவர்வர தாமுருக தம்பிரானே. (சுஉ)

---

* நீசர்க டமோடு=நீசர்கள் தம்மோடு.

162. இத்தா ரணிக்குள்மநு வித்தாய் முளைத்தழுது
கேவிக் கிடந்துமடி மீதிற் றவழ்ந்தடிகள்
தத்தா தனத்தன இட்டே தெருத்தலையில்
ஓடித் திரிந்துநவ கோடிப் ப்ரபந்தகலை
யிச்சீர் பயிற்றவய தெட்டோடு மெட்டுவர
வாலக் குணங்கள்பயில் கோலப் பெதும்பையர்க
ளூடனுறவாகி—
இக்கார் சரத்துமத னுக்கே இளைத்துவெகு
வாகக் கலம்பவகை பாடிப் புகழ்ந்துபல
திக்கோடு திக்குவரை மட்டோடி மிக்கபொருள்
தேடிச் சுகந்த அணை மீதிற் றுயின்றுசுக
மிட்டா தரத்துருகி வட்டார் முலைக்குளிடை
மூழ்கிக் கிடந்துமய லாகித் தொளைந்துசில
பிணியதுமூடிச்;
சத்தான புத்தியது கெட்டே கிடக்கநம
னோடித் தொடர்ந்துகயி றூடிக் கொளும்பொழுது
பெற்றார்கள் சுற்றியழ வுற்றார்கள் மெத்த அழ
ஊருக் கடங்கலிலர் காலற் கடங்கவுயிர்
தக்கா திவர்க்குமய னிட்டான் விதிப்படியி
னேலைப் பழம்படியி னுலிற் றிறந்தமெதன
எடுமெனவோடிச்—
சட்டா நவப்பறைகள் கொட்டா வரிச்சுடலை
யேகிச் சடம்பெரிது வேகப் புடஞ்சமைய
இட்டே யனற்குளெரி பட்டா ரெனத்தழுவி
நீரிற் படிந்துவிடு பாசத் தகன்றுனது
சற்போ தகப்பதும முற்றே தமிழ்க்கவிதை
பேசிப் பணிந்துருகு நேசத்தை யின்றுதா
இனிவரவேணும்;
தித்தா திரித்திகுட தத்தா தனத்தகுத
தாதத் தனந்ததன தானத் தனந்ததன
செச்சே செகுச்செகுகு தித்தா திமித்ததிகு
தாதத்த செந்திகுத தீதத்த செந்தரிக

இத்தா கிடக்கணக டக்கா குருக்குகுகு
தோதக் கணங்கணக கூகுக் கிணங்கிணென
ஒருமயிலேறித்-
*திட்டே ரதத்தசுரர் பட்டே விழப்பொருது
வேலைத் தொளேந்துவரை யேழைப் பிளந்துவரு
சித்தா பரத்தமரர் கத்தா குறத்திமுலை
மீதிற் புணர்ந்துசுக லீலைக் கதம்பமணி
சுத்தா வுமைக்குமொரு முத்தாய் முளைத்தகுரு
நாதக் குழந்தையென வோடிக் கடம்பமலர்
அணிதிருமார்பா;
†மத்தா மதக்களிறு பிற்றா னுதித்தகுக
னேதத் திலங்கையினி லாதிக்க முண்டதொரு
முட்டா ளரக்கர்தலை யிற்றே விழக்கணைக
ளேதொட்ட கொண்டலுரு வாகிச் சுமந்ததிக
மட்டார் மலர்க்கமல முற்றா சனத்திருவை
மார்பிற் புணர்ந்தரகு ராமற்கு மன்புடைய
மருமகனாகி-
வற்றா மதுக்கருணை யுற்றே மறைக்கலைக
ளோதித் தெரிந்துதமிழ் சோதித் தலங்கலணி
யத்தா பரத்தையறி வித்தாவி சுற்றுமொளி
யாகிப் ப்ரபந்தமணி வேல்தொட்ட மைந்தபுய
வர்க்கா மருப்புழுகு முட்டா திருப்பழநி
வாழ்வுக் குகந்தடிய ராவிக்குள் நின்றுலவி
வருபெருமாளே. (கூஉ)

163. இலகிய களபசு கந்த வாடையின்
ம்ருகமத மதனைம கிழ்ந்து பூசியெ
இலைசுருள் பிளவைய ருந்தி யேயதை யிதமாகக்-
கலவியி லவரவர் தங்கள் வாய்தனி
விடுபவர் பலபல சிந்தை மாதர்கள்
கசனையை விடுவது மெந்த நாளது பகர்வாயே;

---

* திட்டே ரதம்=திண் தேர் ரதம்.
† மத்தா=மத்த.

சிலைதரு குறவர்ம டந்தை நாயகி
தினைவன மீதனிலு கந்த நாயகி
திரள்தன் மதனில ணைந்த நாயக சிவலோகா-
கொலைபுரி யசுரர்கு லங்கள் மாளவெ
அயிலயி லதனையு கந்த நாயக
குருபர பழநியி லென்று மேவிய பெருமாளே. ()

164. இலகுகனி மிஞ்சு மொழியிரவு துஞ்சு
மிருவிழியெ னஞ்சு முகமீதே-
இசைமுரல்சு ரும்பு மிளமுலைய ரும்பு
மிலகியக ரும்பு மயலாலே;
நிலவிலுடல் வெந்து கரியஅல மந்து
நெகிழுமுயிர் நொந்து மதவேளால்-
நிலையழியு நெஞ்சி*லவர்குடிபு குந்த
நினைவொடுமி றந்து படலாமோ;
புலவினைய ளைந்து படுமணிக லந்து
புதுமலர ணிந்த கதிர்வேலா-
புழுகெழும ணந்த குறமகள்கு ரும்பை
பொரமுகையு டைந்த தொடைமார்பா;
பலநிறமி டைந்த விழுசிறைய லர்ந்த
பருமயில டைந்த குகவீரா-
†பணைபணிசி றந்த தரளமணி சிந்து
பழநிமலை வந்த பெருமாளே. (சுரு)

165. உயிர்க்கூடு விடுமளவும் உமைக்கூடி மருவுதொழில்
ஒருக்காலு நெகிழ்வதிலை யெனவேசூள்-
உரைத்தேமுன் மவிருனரை வெறுத்தேம திரவியம
துடைத்தாய்பின் வருகுமவ ரெதிரேபோய்ப்;
பயிற்பேசி யிரவுபகல் அவர்க்கான‡பதமைபல
படப்பேசி யுறுபொருள்கொள் விலைமாதர்-

* அவர் = கிளைவித் தலைவராகிய நாயகர். † பணை = மூங்கில்.
‡ பதமை = பதங்களை : வார்த்தைகளை.

படப்பார வலைபடுதல் தவிர்த்தாள மணிபொருவு
பதத்தாள மயிலின்மிசை வரவேணும்;
தயிர்ச்சோர னெனும்மவுரை வசைக்*கோவ வனிதையர்கள்
தாத்தாடல் புரியுமரி மருகோனே-
தமிழ்க்காழி மருதவன மறைக்காடு திருமருகல்
தருக்கோடி வருகுமழகர் தருவாழ்வே;
† செயிற்சேல்விணுடுவிளைடுபொரப்போய் ‡விமமர்பொருது
செயித்தோடி வருபழநி யமர்வோனே-
திணைக்காவல் புரியவல குறப்பாவை முலைதழுவு
திருத்தோள அமரர்பணி பெருமாளே. (கசு)

166. ஒருபொழுது மிருசரண நேசத் தேவைத் துணரேனே-
உனதுபழ நிமலையெனு மூரைச் சேவித் தறியேனே;
பெருபுவியி லுயர்வரிய வாழ்வைத் தீரக் குறியேனே-
பிறவியறநினைகுவனெ னாசைப்பாடைத் தவிரேனே;
துரிதமிடு நிருதர்புர சூறைக் காரப் பெருமாளே-
தொழுதுவழி படுமடியர் காவற் காரப் பெருமாளே;
விருதுகவி விதரணவி நோதக் காரப் பெருமாளே-
விறன்மறவர் சிறுமிதிரு வேளைக்காரப் பெருமாளே.

167. ஒருவரை யொருவர் தேறி யறிகிலர் மதவி சாரர்
ஒருகுண வழியுறாத பொறியாளர்-
உடலது §சதமெ னாடி களவுபொய் கொலைக ளாடி
உறநம னரகில் வீழ்வ ரதுபோய்பின்;
வருமொரு வடிவ மேவி யிருவினை கடனு ளாடி
மறைவரி னணைய கோல மதுவாக-
மருவிய பரம ஞான சிவகதி ||பெறுக நீறு
வடிவுற அருளி பாத மருள்வாயே;

---

* கோவ வனிதையர்=கோபிகா ஸ்திரீகள்.
† செய்யில் சேல்=வயல்களிலிருக்கும் கெண்டை மீன்கள்.
‡ விமமர்=விம்மு அமர்.
§ சத மெ னாடி=சதம் என நாடி. ||பெறுக=பெற.

திரிபுர மெரிய *வேழ சிலைமத னெரிய மூரல்
திருவிழி யருள்மெய்ஞ் ஞான குருநாதன்-
திருசரஸ் வதிம யேசு வரியிவர் தலைவ ரோத
திருநட மருளு நாத னருள்பாலா;
சுரர்பதி யயனு மாலு முறையிட அசுரர் கோடி
துகளெழ விடுமெய்ஞ் ஞான அயிலோனே-
சுககுற மகள்ம ணாள னெனமறை பலவு மோதி
தொழமுது பழநி மேவு பெருமாளே. (சுஅ)

168. கடலை பொரியவரை பலகனி கழைநுகர்
கடின குடவுதர விபரீத-
கரட தடமுமத நளின சிறுநயன
கரிணி முகவரது துணைவோனே;
வட வரையின்முகடு அதிர வொருகொடியில்
வலம்வரு மரகத மயில்வீரா-
மகபதி தருசுதை குறமினொ டிருவரு
மருவு சரசவித மணவாளா;
அட லசுரர்கள்குல முழுது மடியவுய
ரமரர் சிறையைவிட எழில்மீறும்-
அருண கிரணவொளி யொளிரு மயிலைவிடு
மரகர சரவண பவலோலா;
படல வுடுபதியை யிதழி யணிசடில
பசுபதி வரநதி அழகான-
பழநிமலையருள்செய் மழலை மொழிமதலை
பழநி மலையில்வரு பெருமாளே. (சுகூ)

169. கதியை விலக்கு மாதர்கள் புதிய இரத்ன பூஷண
கனதன வெற்பு மேல்மிகு மயலான-
கவலை மனத்த னாகிலும் உனது ப்ரசித்த மாகிய
கனதன மொத்த மேனியு முகமாறும்;

* வேழ சிலை மதன் = கரும்பாகிய வில்லை யுடைய மன்மதன்.

அதிபல வஜ்ர வாகுவும் அயில்நுனை வெற்றி வேலதும்
அரவு பிடித்த தோகையு முலகேழும் —
அதிர வாற்று கோழியும் அடியர் வழுத்தி வாழ்வுறும்
அபிநவ பத்ம பாதமு மறவேனே ;
*இரவி குலத்தி ராசத மருவி யெதிர்த்து வீழ்கடு
ரணமுக சுத்த வீரிய குணமான—
இளையவ னுக்கு நீண்முடி அரசது பெற்று வாழ்வுற
இதமொ டளித்த ராகவன் மருகோனே ;
பதினொரு ருத்தி ராதிகள் தபனம் விளக்கு மாளிகை
பரிவொடு நிற்கு மீசுர சுரலோக—
பரிமள கற்ப காடவி அரியளி சுற்று பூவுதிர்
பழநி மலைக்குள் மேவிய பெருமாளே. (எ0)

170. கரிய மேகம தோஇரு ளோகுழல்
அரிய பூரண மாமதி யோமுகம்
கணைகொ லோஅயில் வேலது வோவிழி
யிதழ்பாகோ—
கமுகு தானிக ரோவளை யோகளம்
அரிய மாமல ரோதுளி ரோகரம்
கனக மேரது வோகுட மோமுலை மொழிதேனோ;
கருணை மால்துயி லாலிலை யோவயி
றிடைய தீரொரு நூலது வோவென
கனக மாமயில் போல்மட வாருடன் மிகநாடி—
கசட னுய்வய தாயொரு நூறுசெல்
வதனின் மேலென தாவியை நீயிரு
கமல மீதினி லேவர வேயருள் புரிவாயே ;
திரிபு ராதிகள் நீறெழ வேமிக
மதனை யேவிழி யால்விழ வேசெயும்
சிவசொ ரூபம கேசுர னீடிய தனயோனே—

* இர° என்பது கதி, அதி, பதி என்னும் முன் பின் அடிகளுக்கு மாருக உற்றிருத்தலால் அது எதுகை வழு அன்றோ எனின், அன்று; இந்நூல் ஆரிடத்தை ஒத்தது; ஆதலால் தண்டியலங்கார ஒழிபியலிற் கூறிய வழுவமைதியாம் என்க. ஆரிடம் என்பது இருடிகள் வாக்கு.

சினம தாய்வரு சூரர்கள் வேரற
அமரர் வானவர் வாழ்டு தேவர்கள்
சிறைகள் மீளவு மேவடி வேல்விடு முருகோனே;
பரிவு சேர்கம லாலய சீதன
மருவு வார்திரு மாலரி நாரணர்
பழைய மாயவர் மாதவ னார்திரு மருகோனே—
பனக மாமணி தேவிக்ரு பாகரி
குமர னேபதி னாலுல கோர்புகழ்
பழநி மாமலை மீதினி லேயுறை பெருமாளே. ()

171. கரியிணைக் கோடெனத் தனமசைத் தாடிநற்
கயல்விழிப் பார்வையிற் பொருள்பேசிக்—
கலையிழுத் தேகுலுக் கெனநகைத் தேமயற்
கலதியிட் டேயழைத் தணையூடே;
செருமிவித் தாரசிற் றிடைதுடித் தாடமற்
றிறமளித் தேபொருட் பறிமாதர்—
செயலிழுக் காமலிக் கலியுகத் தேபுகழ்ச்
சிவபதத் தேபதித் தருள்வாயே;
திரிபுரக் கோலவெற் பழல்கொளச் சீர்*நகைச்
சிறிதருட் டேவருட் புதல்வோனே—
திரைகடற் கோவெனக் குவடுகட் டூள்படத்
திருடர்கெட் டோடவிட் டிடும்வேலா;
பரிமளப் †பாகலிற் கனிகளைப் பீறிநற்
படியினிட் டேகுரக் கினமாடும்—
பழநியிற் சீருறப் புகழ்குறப் பாவையைப்
பரிவுறச் சேர்மணப் பெருமாளே. (எஉ)

172. ‡கருகி யகன்று வரிசெறி கண்கள்
கயல்நிக ரென்று துதிபேசிக்—
கலைசுரு ளொன்று மிடைபடு கின்ற
கடிவிட முண்டு பலநாளும்;

* நகை சிறிதருள் தேவு=புன்னகை செய்த சிவபிரான்.
† பாகல்=பலா. ‡ 'சருமுகில் கொண்டை' என்றும் பாடம்.

விரகுறு சண்ட வினையுடல் கொண்டு
விதிவழி நின்று தளராதே-
விரைகமழ் தொங்கல் மருவிய துங்க
விதபத மென்று பெறுவேனோ;
முருக கடம்ப குறமகள் பங்க
முறையென அண்டர் முறைபேச -
மூதிரை யொன்ற வருதிறல் வஞ்ச
முரணசுர் வென்ற வடிவேலா;
பரிமள இன்ப மரகத துங்க
பகடித வென்றி மயில்வீரா-
பறிதலை குண்டர் கழுநிரை கண்டு
பழநி யமர்ந்த பெருமாளே. (எக)

173. கருப்புவிலில் மருப்பகழி
தொடுத்துமதன் விடுத்தனைய
கடைக்கணொடு சிரித்தணுகு
கருத்தினுல் விரகுசெய் மடமாதர்-
கதக்களிறு திடுக்கமுற
மதர்த்துமிக வெதிர்த்துமலை
கனத்தவிரு தனத்தின்மிசை
கலக்குமோ கனமதில் மருளாமே;
ஒருப்படுதல் விருப்புடைமை
மனத்தில்வர நினைத்தருளி
யுனைப்புகழு மெனைப்புவியில்
ஒருத்தனும் வகைதிரு அருளாலே-
உருத்திரனும் விருத்திபெற
அநுக்கிரகி யெனக்குறுகி
யுரைக்கமறை யடுத்துபொருள்
உணர்த்துநா ளடிமையு முடையேனோ;
பருப்பதமு முருப்பெரிய
அரக்கர்களு மிரைக்குமெழு
படிக்கடலு மலைக்கவல
பருத்ததோ கையில்வரு முருகோனே-

பகித்தமா கதத்தினுட
னிரத்னமணி நிரைத்தபல
பணிப்பணிரு புயச்சயில்
பரக்கவே இயல்தெரி வயலூரா;
திருப்புகழை யுரைப்பவர்கள்
படிப்பவர்கள் மிடிப்பகைமை
செயித்தருளு மிசைப்பிரிய
திருத்தமா தவர்புகழ் குருநாதா-
சிலைக்குறவ ரிலைக்குடிலில்
புனைக்களக முகிற்புடைசெல்
திருப்பழநி மலைக்குளுறை
திருக்கைவே லழகிய பெருமாளே. (எச)

☞ குறிப்பு:—இப்பாடலில் ஒவ்வோ ரடியிலும் இறுதியி லுள்ள பாகத்தை எடுத்தமைக்க அடியில் வருமாறு ஒரு பாடலா மாறும், எஞ்சியவை பிறிதொரு பாட லாமாறுங் காண்க.

கருத்தினுல் விரகுசெய் மடமாதர்-
கலக்குமோ கனமதில் மருளாமே;
ஒருத்தனும் வகைதிரு வருளாலே-
உணர்த்துநா ளடிமையு முடையேனே;
பருத்ததோ கையில்வரு முருகோனே-
பரக்கவே யியல்தெரி வயலூரா;
திருத்தமா தவர்புகழ் குருநாதா-
திருக்கைவே லழகிய பெருமாளே.

174. கலைகொடு பவுத்தர் காம கருமிகள் துருக்கர் மாய
கபிலர்பக ரக்க ணாதர் உலகாயர்-
கலகமிடு தர்க்கர் வாம பயிரவர் விருத்த ரோடு
கலகலென மிக்க நூல்க ளதனாலே;
சிலுகி யெதிர் குத்தி வாது செயவுமொரு வர்க்கு நீதி
தெரிவரிய சித்தி யான வுபதேசந்-
தெரிதர விளக்கி ஞான தரிசந மளித்து வீறு
திருவடி யெனக்கு நேர்வ தொருநாளே;

கொலையுற எதிர்த்த கோர இபமுக அரக்க னோடு
குரகத முகத்தர் சிய முகவீரர்-
குறையுட லெடுத்து வீசி யலகையொடு பத்ர காளி
குலவியிட வெற்றி வேலை விடுவோனே;
பலமிகு புனத்து லாவு குறவநிதை சித்ர பார
பரிமள தனத்தில் மேவு மணிமார்பா-
படைபொருது மிக்க யூக மழைமுகிலை யொட்டி யேறு
பழநிமலை யுற்ற தேவர் பெருமாளே. (எரு)

175. கனக கும்பமி ரண்டு நேர்மலை
யெனநெ ருங்குகு ரும்பை மாமணி
கதிர்சி றந்தவ டங்கு லாவிய முந்துகூதம்-
*கடையில் நின்றுப ரந்து நாடொறு
மிளகி விஞ்சியெ ழுந்த சோமள
களப குங்கும கொங்கை யானையை யின்பமாக;
அனைவ ருங்கொளு மென்று மேவிலை
யிடும டந்தையர் தங்கள் தோதக
மதின்ம ருண்டு†துவண்ட வாசையில் னைந்துபாயல்-
அவச மன்கொளு மின்ப சாகர
முழுகும் வஞ்சக நெஞ்சை யேயொழி
தருப தங்கதி யெம்பி ரானருள் தந்திடாயோ;
தனத னந்தன தந்த ஞெவென
டிகுகு டிங்குகு டிங்கு பேரிகை
தகுதி திங்திகு திந்த தோவென வுந்துதாளந்-
தமர சஞ்சலி சஞ்ச லாவென
முழவு டுண்டுடு டுண்டு டுவென
தருண கிண்கிணி கிண்கி ணாமு முந்தவோதும்;
பணிப தங்கய மெண்டி சாமுக
கரிய டங்கலு மண்ட கோளகை
பதறி நின்றிட நின்ற தோதக என்றதோகை-
பவுரி கொண்டிட மண்டி யேவரு
நிசிச ரன்கிளை கொன்ற வேலவ
‡பழநி யங்கிரி யின்கண் மேவிய தம்பிரானே.()

---

* கடை = வாயில்.

† துவண்ட வாசையில் = துவண்டு அவ் ஆசையில்.

‡ "பழநி யங்கிரி யெங்கு மேவிய" என்றும் பாடம்.

176. குருதி மலசல மொழுகு நரகுட
லரிய புழுவது நெளியு முடல்மத
குருபி நிணசதை விளையு முளைசளி யுடனூடே-
குடிக ளெனபல குடிகை வலிகொடு
குமர வலிதலை வயிறு வலியென
கொடுமை யெனபிணி கலக மிடுமிதை
யடல்பேணி;
மருவி மதனனுள் கரிய புளகித
மணிய சலபல கவடி மலர்புனை
மதன கலைகொடு குவடு மலைதனில் மயலாகா-
மனது துயரற வினைகள் சிதறிட
மதன பிணியொடு கலைகள் சிதறிட
மனது பதமுற வெனது தலைபத மருள்வாயே;
நிருதர் பொடிபட அமரர் பதிபெற
நிசித அரவளை முடிகள் சிதறிட
நெறிய கிரிகட லெரிய வுருவிய கதிர்வேலா-
நிறைய மலர்பொழி யமரர் முநிவரும்
நிருப குருபர குமர சரணென
நெடிய முகிலுடல் கிழிய வருபரி மயிலோனே;
பருதி மதிகனல் விழிய சிவனிட
மருவு மொருமலை யரையர் திருமகள்
படிவ முகிலென அரியி னிளையவ ளருள்பாலா-
பரம கணபதி யயலின் மதகரி
வடிவு கொடுவர விரவு குறமக
ளபய மெனவணை பழநி மருவிய பெருமாளே. ()

தனன தனதன தனன தனதன
தனன தனதன தனதான.

177. குழல டவிமுகில் பொழில்*வி ரவில்நுதல்
குமுத வதரமு றுவலாரம்-
குழைமக ரம்†வளை மொழிகு யிலமுது
குயமு ளரிமுகை கிரிசூது;

* விர வில்=வீர வில். †வளை = வள்ளை : ஒருவித தண்டு.

விழிக யல்யில்ப கழி*வருணிகரு
விளைகு வளைவிட மெனநாயேன்-
மிகவ ரிவையரை அவமெ றிகள்சொலி
வெறிது ளம்விதன முறலாமோ;
†கழல்ப ணியவினை ‡கழல்ப ணியையணி
கழல்ப ணியவருள் மயில்வீரா-
கமலை திருமரு க§மலை நிருதரு
கமலை தொளைசெய்த கதிர்வேலா;
‖பழனி¶மலைவரு பழநி மலைதரு
பழநி மலைமுரு கவிசாகா-
○பரவு பரவைகொல் $பரவை வணஅரி
பரவு மிமையவர் பெருமாளே. (எஅ)

178. சிந்துர கூரம ருப்புச் செஞ்சரி
செங்கைகு லாவந டித்துத் தென்புற
செண்பக மாலைமு டித்துப் பண்புள தெருவூடே-
சிந்துகள் பாடிமு ழக்கிச் செங்கய
லம்புகள் போலவி ழித்துச் **சிங்கியில்
செம்பவ ளாடைது லக்கிப் பொன்பறி விலைமாதர்;
வந்தவ ராரென ழைத்துக் கொங்கையை
யன்புற மூடிநெ கிழ்த்திக் கண்பட
††மஞ்சணி ராடிமி னுக்கிப் பஞ்சணை தனிலேறி-
மந்திர மோகமெ ழுப்பிக் கெஞ்சிட
முன்றலை வாயி லடைத்துச் சிங்கிகொள்
மங்கைய ராசைவி லக்கிப் பொன்பத
மருள்வாயே;

---

*வருணி=கடல். †கழல் பணிய வினை=பண்ணிய வினை கழல. ‡கழல் பணியை யணி=வீரக்கழலையும், தண்டை, சிலம்பு முதலிய ஆபரணங்களையு மணிந்த. §மலை நிருத ருக=எதிர்த்த அசுரர் உதிர்ந்துபோக. ‖பழனி=சனியை யொத்தவள். ¶ மலைவரு பழ நிமலை=மலையரசனுக்குப் புத்திரியாக வந்த பழைய நிர்மலி. ○பரவு பரவை கொல்=பாவிய சமுத்திரத்தின்மீது பாணப் பிரயோகஞ் செய்த.
$ பரவை வண அரி=கடல் வர்ணத்தையுடைய விஷ்ணு.
**சிங்கி=சிங்கத்தின் இடைபோன்ற இடை. ††மஞ்சள் நீராடி.

இந்திர நீலவ னத்திற் செம்புவி
யண்டக டாகம ளித்திட் டண்டர்க
ளெண்படு *சூரைய ழித்துக் கொண்டரு
ளொருபேடி-
இன்கன தேனைந டத்திச் செங்குரு
மண்டல நாடும ளித்துப் பஞ்சவ
ரின்புறு †தோழ்மையு டைக்கத் தன்திரு
மருகோனே;
சந்திர சூரியர் திக்கெட் டும்புக
ழுந்தமில் வாழ்வது பெற்றுத் தங்கிய
சங்கர னார்செவி புக்கப் பண்பருள் குருநாதா-
சம்ப்ரம மானகு றத்திக் கின்புறு
கொங்கையின் மேவுச மர்த்தச் சுந்தர
தண்டமிழ் சேர்பழ நிக்குட் டங்கிய பெருமாளே.

179. ஞானங்கொள் பொறிகள் கூடி வானிந்து கதிரி லாத
நாடண்டி நமசி வாய வரையேறி-
நாவின்ப ரசம தான ஆநந்த அருவி பாய
நாதங்க ளொடுகு லாவி விளையாடி;
ஊனங்க ளுயிர்கள் மோக நானென்ப தறிவி லாம
லோமங்கி யுருவ மாகி யிருவோரும்-
ஓரந்த மருவி ஞான மாவிஞ்சை முதுகி னேறி
லோகங்கள் வலம தாட அருள்தாராய்;
தேனங்கொ ளிதழி ‡தாகி தாரிந்து சலில வேணி
§சீரங்க னெனது தாதை ஒருமாது-
சேர்பஞ்ச வடிவி மோகி யோகங்கொள் மவுன ஜோதி
சேர்பங்கி னமல நாத னருள்பாலா;
கானங்கள் வரைகள் தீவு ஓதங்கள் பொடிய நீல
காடந்த மயிலி லேறு முருகோனே-
காமன்கை மலர்கள் நாண வேடம்பெ ணமளி சேர்வை
காணெங்கள் பழநி மேவு பெருமாளே. (அ௦)

---

* சூர்=துன்பம். †தோழ்மை=தோழமை.
‡ தாகி=தாதகி; ஆத்தி; இடைக்குறை.
§ சீரங்கன்=சீரிய அங்கத்தை யுடையவன்.

180. திடமிலிசற் குணமிலிநற் றிறமிலியற் புதமான-
செயலிலிமெய்த் தவமிலிநற் செபமிலிசொர்க் கமுமீதே;
இடமிலிகைக் கொடையிலிசொற் கியல்பிலிநற் றமிழ்பாட-
இருபதமுற் றிருவினையற் றியல்கதியைப் பெறவேணும்;
கெடுமதியுற் றிடுமசுரக் கிளைமடியப் பொரும்வேலா-
கிரணகுறைப் பிறையறுகக் கிதழ்மலர்கொக் கிறகோடே;
படர்சடையிற் புனைநடனப் பரமர்தமக் கொருபாலா-
பலவயலிற் றரளநிறைப் பழநிமலைப் பெருமாளே. (௧)

181. *நிகமமெனி லொன்று மற்று நாடொறு
நெருடுகவி கொண்டு வித்தை பேசிய
நிழலர்சிறு புன்சொல் கற்று வீறுள பெயர்கூறு-
நெளியமுது †தண்டு சத்ர சாமர
‡நிபிடமிட வந்து கைக்கு மோதிர
நெடுகியதி குண்ட லப்ர தாபமு முடையோராய்;
முகமுமொரு சம்பு மிக்க நூல்களு
முதுமொழியும் வந்தி ருக்கு மோவெனில்
முடிவிலவை யொன்று மற்று வேறொரு நிறமாகி-
முறியுமவர் தங்கள் வித்தை தானிது
முடியவுனை நின்று பத்தி யால்மிக
மொழியும்வளர் செஞ்சொல் வர்க்க மேவர
அருள்வாயே;
திருகுதிகென மண்ட விட்ட தீயொரு
செழியனுடல் சென்று பற்றி யாருகர்
திகையினமண் வந்து விட்ட போதினு மமையாது-
சிறியகர பங்க யத்து நீறொரு
தினையளவு சென்று பட்ட போதினில்
தெளியஇனி வென்றி விட்ட மோழைகள்
கழுவேற;
மகிதலம ணைந்த §அத்த யோனியை
வரைவறம ணந்து நித்த நீடருள்
வகைதனைய கன்றி ருக்கு மூடனை மலரூபம்-

---

* நிகமம்=வேதம். † தண்டு=சிவிகை.
‡ நிபிட மிட=நெருங்க. § அத்த=அத்தனே.

வரவாம னந்தி கைத்த பாவியை
வழியடிமை கொண்டு மிக்க மாதவர்
வளர்புழநி வந்த கொற்ற வேலவ பெருமாளே.

182. நெற்றிவெ யர்த்துளி துளிக்க வேயிரு
குத்துமு லைக்குட மசைத்து வீதியி
னிற்பவர் மைப்படர் விழிக்க லாபியர் மொழியாலே-
நித்தம யக்கிகள் மணத்த பூமலர்
மெத்தையில் வைத்ததி விதத்தி லேயுட
னெட்டுவ ரத்தொழில் கொடுத்து மேவியு-
முறவாடி;
உற்றவ கைப்படி பொருட்கள் யாவையு
மெத்தவு நட்பொடு பறித்து நாடொறு
முற்பன வித்தைகள் தொடுக்கு மாதர்களுறவாமோ-
உச்சித மெய்ப்புற அணைத்த யாவுடன்
மெய்ப்படு பத்தியி னிணக்க மேபெற
உட்குளிர் புத்தியை யெனக்கு நீதா வருவாயே;
*கற்றத மிழ்ப்புல வனுக்கு மேமகிழ்
வுற்றொரு†பொற்கொடி களிக்க வேபொரு
கற்பனை நெற்பல அளித்த காரண னருள்பாலா-
கற்பக கர்க்களி றளித்த மாதணை
பொற்புய மைப்புயல் நிறத்த வானவர்
கட்கிறை யுட்கிட அருட்க்ரு பாகர எனநாளும்;
நற்றவ ரர்ச்சனை யிடத்த யாபர
வஸ்துவெ னப்புவி யிடத்தி லேவளர்
நத்தணி செக்கரன் மகிழ்ச்சி கூர்தரு மருகோனே-
நட்டுவர் மத்தள முழக்க மாமென
மைக்குல மெத்தவு முழக்க மேதரு
நற்பழநிப்பதி செழிக்க மேவியபெருமாளே.(அரு)

183. பஞ்ச பாதகன் பாவிமுழு மூடன்வெகு
வஞ்ச லோபியன் சூதுகொலை காரன்மதி
‡பண்கொளாதவன் பாவகட லூடுநுழை பவுஷாங்ச-

* கற்ற தமிழ்ப் புலவன் = சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள்.
† பொற் கொடி = பரவை நாச்சியார். ‡ பண் = பண்பு.

பங்கின் மோதியம் பாழ்நரகில் வீணின்விழ
பெண்டிர் வீடுபொன் தேடிகொடி மீதில்மறை
பஞ்ச மாமலம் பாசமொடு கூடிவெகு சதிகாரர்;

அஞ்சு பூதமுண் டாகடிய காரரிவர்
தங்கள் வாணிபங் காரியம லாமலரு
ளன்பர் பாலுடன் கூடியறி யாதபுக *ழடியேனை-

அண்டர் மாலயன் தேடியறி யாதவொளி
சந்த்ர சேகரன் பாவைவிளை யாடு†படி
கந்த நாடுடன் கூடிவிளை யாடஅருள் புரிவாயே;

வஞ்ச மாசுரன் சேனைகட லோடுகுவ
டுங்க வேயினன் போலவொளிர் வேலைவிடு
வண்கை யாகடம் பேடுதொடை யாடுமுடி
முருகோனே-

மங்கை மோகசிங் காரகு ராமரிட
தங்கை சூலியங் காளியெமை ‡யீணபுகழ்
மங்க ளாயிசந் தானசிவ காமியுமை யருள்பாலா;

கொஞ்சு மா§சுகம் போலமொழி நீலகடை
பெண்கள் நாயகந் தோகைமயில் போலிரச
கொங்கை மால்குறம் பாவை ‖யவல் தீரவரு
அணைவோனே-

கொண்டல் சூழுமஞ் சோலைமலர் வாவிகயல்
கந்து பாயநின் றூடு¶துவர் பாகையுதிர்
$கந்தி யோடகஞ் சேர்பழநி வாழ்குமர
பெருமாளே. (அச)

184. பெரியதோர் கரியிரு கொம்பு போலவெ
வடிவமார் புளகித கும்ப மாமுலை
பெருகியே யொளிசெறி தங்க வாரமு மணியான-

---

* அடியேனை=அடியேன்; ஐ—சாரியை.
† படிக அந்த நாடு=படிகம்போல் தாவள்ளியமான் நாடு.
‡ ஈண=ஈன்ற. § சுகம்=கிளி. ‖ அவல்=ஆவல்.
¶ துவர் பாகு=துவர்த்த பாக்கு. $ கந்தி=கமுகமரம்.

பிறையதோ வெனுநுதல் துங்க மீறுவை
அயிலதோ வெனுமிரு கண்க ளாரவெ
பிறகெலாம் விழுகுழல் கங்கு லாரவெ வருமானூர்;
உரியதோர் பொருள்கொடு வந்த பேர்களை
மனையிலே வினவியெ கொண்டு போகியெ
யுளவிலே மருவிய வஞ்ச மாதர்கள் மயலாலே-
உருகியே யுடலற வெம்பி வாடியெ
வினையிலே மறுகியெ நொந்த பாதக
னுனதுதாள் தொழுதிட இன்ப ஞானம
தருள்வாயே;
அரியதோ ரமரர்க ளண்ட மேறவெ
கொடியதோ ரசுரர்க ளங்க மாளவெ
அடலதோ டமர்புரி கின்ற சூரிய வடிவேலா-
அரகரா வெனமிக அன்பர் சூழவெ
கடியதோர் மயில்மிசை யன்றை யேறியெ
அவனியோர் நொடிவரு கின்ற காரண
முருகோனே;
பரியதோர் கயிறனை கொண்டு வீசவெ
உறியதோய் தயிர்தனை யுண்டு நாடியெ
பசியதோ கெடவருள் கொண்ட மாயவன்
மருகோனே-
பரமமா நதிபுடை கொண்ட ணுவவெ
வனசமா மலரினில் வண்டு லாவவெ
பழநிமா மலைதனி லென்று மேவிய பெருமாளே.

பு. **185.** மந்தாம தெனவேசி றந்த
கும்பமுலை தனிலேபு னைந்த
மஞ்சள்மண மதுவேது லங்க வகைபேசி-
மன்றுகமழ் தெருவீதி வந்து
நின்றவரை விழியால்வ ளைந்து
வந்தவரை யருகேய ணைந்து தொழில்கூறி;
எந்தளவு மினிதாக நம்பு
தந்துபொருள் தனையேபி டுங்கி
யின்பமருள் விலைமாதர் தங்கள் மனைதேடி-

எஞ்சிமன முழலாம லுன்றன்
அன்புடைமை மிகவேவ ழங்கி
என்றனையு மினிதாள இன்று வரவேணும்;

விந்தையெனு முமைமாது தந்த
கந்த குரு பரதேவ *வங்க
மென்றவரை தனில்மேவு மெந்தை புதல்வோனே-

மிஞ்சுமழ கினிலேசி றந்த
மங்கைகுற மடமாது கொங்கை
மென்கிரியி லிதமாய ணைந்த முருகோனே;

சிந்தைமகிழ் புலவோர்கள் வந்து
வந்தனைசெய் சரணார விந்த
செந்தமிழி லுனையேவ ணங்கு குருநாதர்-

தென்றல்வரை முநிநாத ரன்று
கும்பிடந லருளேபொ ழிந்த
தென்பழநி மலைமேலு கந்த பெருமாளே.

186. மலரணி கொண்டைச் சொருக்கி லேயவள்
சொலுமொழி யின்பச் செருக்கி லேகொடு
மையுமடர் நெஞ்சத் திருக்கி லேமுக மதியாலே-

மருவுநி தம்பத் தடத்தி லேநிறை
பரிமள கொங்கைக் குடத்தி லேமிக
வலியவும் வந்தொத் திடத்தி லேவிழி வலையாலே;

நிலவெறி யங்கக் குலுக்கி லேயெழில்
வளைபுனை செங்கைக் கிலுக்கி லேகன
நிதிபறி யந்தப் பிலுக்கி லேசெயு மொயிலாலே-

நிதமிய லுந்தூர்க் குணத்தி லேபர
வசமுட னன்புற் றிணக்கி லேயொரு
நிமிஷமி ணங்கிக் கணத்தி லேவெகு மதிகேடாய்;

அலையநி னைந்†துற் பநத்தி லேயறு
தினமிகு மென்சொப் பனத்தி லேவர
அறிவும ழிந்‡தற் பனத்தி லேநித மலைவேனோ-

* வங்கம்=வெள்ளி. † உற்பநம்=தோற்றம். ‡ அற்பனத்திலே= அற்பன் அதிலே; அதிலே என்பது அத்திலே யென்றாயிற்று.

அசடனை வஞ்சச் சமர்த்த னாகியெ
கசடனை யுன்சிற் றடைக்க லாகியு
மலர்கொடு நின்பொற் பதத்தை யேதொழ
அருள்தாராய்;
பலபல பைம்பொற் பதக்க மாரமு
மடிமைசொ லுஞ்சொற் றமிழ்ப்ப னீரொடு
பரிமள மிஞ்சக் கடப்ப மாலையு மணிவோனே -
பதியினில் *மங்கைக் கதித்த மாமலை
யொடுசில குன்றிற் றரித்து வாழ்வுயர்
பழநியி லன்புற் றிருக்கும் வானவர் பெருமாளே.

187. முகைமுளரி ப்ரபைவீசு மெழில்கனக மலைபோலு
முதிர்விளை தனபார மடவார்தோள்-
முழுகியமி ழநுபோக விழலனென வுலகோர்கள்
மொழியுமது மதியாமல் தலைகீழ்வீழ்ந்;
தகமகிழ விதமான நகையமுத மெனவூற
லசடாக மெழவாகி மிகவேயுண்-
டழியுமொரு தமியேனு மொழியுமுன திருதாளி
னமுதுபரு கிடஞான மருளாயோ;
மகரமெறி திரைமோது பகரகடல் தடவாரி
மறுகுபுனல் கெடவேலை விடுவோனே-
வரிசையவுண் மகசேனை யுகமுடிய மயிலேறி
வருபனிரு காதீர முருகோனே;
பகர்வரிய ரெனலாகு முமைகொழுந ருளமேவு
பரமகுரு வெனநாடு மிளையோனே-
பணிலமணி வெயில்வீசு மணிசிகர மதிசூடு
பழநிமலை தனில்மேவு பெருமாளே. (அஅ)

188. முதிர வுழையை வனத்தில் †முடுகி வடுவை யழித்து
முதிய கயல்கள் கயத்தி னிடையோடி-
முரண வளரும் ‡விழிக்குள் மதன விரகு பயிற்றி
முறைமை கெடவு மயக்கி வருமாதர்;

* மங்கை கதித்த மா மலை=வள்ளி மலை. † முடுகி=முடுக்கி, 8
தாத்தி. ‡ விழிக்குள்=விழியினால்; வேற்றுமை மயக்கம்.

மதுர அமுத மொழிக்கு மகுட களப முலைக்கு
வலிய அடிமை புகுத்தி விடுமாய—
மனதை யுடைய அசட்டு மனிதன் முழுது புரட்டன்
*மகிழ வுனது பதத்தை யருள்வாயே;

சதுரன் வரையை யெடுத்த நிருத னுடலை வதைத்து
சகடு மருத முதைத்த தகவோடே—
தமிழுயு மாமு நிலத்தில் மடிய அமரை விளைத்த
தருவை யுடைய சமர்த்தன் மருகோனே;

அதிர முடுகி யெதிர்த்த அசுர ருடலை வதைத்து
அமரர் சிறையை விடுத்து வருவோனே—
அரிய புகழை யமைத்த பெரிய பழநி மலைக்கு
ளழகு மயிலை நடத்து பெருமாளே. (அகூ)

189. முருகுசெறி குழலவிழ முலைபுளக மெழுநிலவு
முறுவல்தர விரகமெழ அநுராகம்—
முதிரவச மறவிதரி யெழுகைவளை கலகலென
முகநிலவு குறுவெயர்வு துளிவீச;
அருமதுர மொழிபதற இதழமுது பருகிமிக
அகமகிழ இருகயல்கள் குழையேற—
அமளிபடு மமளிமல ரணையின்மிசை துயிலுகினும்
அலர்கமல மலரடியை மறவேனே;

நிருதனெடு வருபரியு மடுகரியும் ரதநிரையும்
நெறுநெறென முறியவிடும் வடிவேலா—
நிக *ழகள சகளகுரு நிருபகுரு பரகுமர
நெடியநெடு ககனமுக டுறைவோனே;
வருமருவி நவமணிகள் மலர்கமுகின் மிசைசிதற
மதுவினிரை பெருகு†வளி மலைமீதே—
வளர்குறவர் சிறுமியிரு வளர்தனமு மிருபுயமு
மருவிமகிழ் பழநிவரு பெருமாளே. (கூ0)

---

* அகள சகள குரு நிருப=அருவ மாகியும் உருவ மாகியும் உள்ள குரு ராஜனே. † வளிமலை=வள்ளிமலை.

190. மூலங்கிள ரோருரு வாய்*நடு
நாலங்குல †மேனடு வேரிடை
மூள்பிங்கலை நாடியொ டாடிய முதல்வேர்கள்-
மூணும்பிர காசம தாயொரு
சூலம்பெற வோடிய வாயுவை
‡மூலந்திகழ் தாண்வழி யேயள விடவோடிப்;
§பாலங்கிள ராறுசி காரமொ
டாருஞ்சுட ராடுப ராபர
பாதம்பெற ஞானச தாசிவ மதின்மேவிப்-
பாடுந்தொனி நாதமு நூபுர
மாடுங்கழ லோசையி லேபரி
வாகும்படி யேயடி யேனையும் அருள்வாயே;
சூலங்கலை மான்மழு வோர்துடி
வேதன்தலை யோடும ராவிரி
தோடுங்குழை சேர்பா ளூர்தரு முருகோனே-
சூரன்கர மார்சிலை வாளணி
தோளுந்தலை தூள்பட வேஅவர்
சூளுங்கெட வேல்விடு சேவக மயில்வீரா;
காவின்கழ லோசையு நூபுர
வார்வெண்டைய வோசையு மேயுக
காலங்களி னோசைய தாநட மிடுவோனே-
கானங்கலை மான்மக ளார்தமை
நாணங்கெட வேயணை வேள்பிர
காசம்பழ னிபுரி மேவிய பெருமாளே. (கக)

191. ‖வசனமிக வேற்றி மறவாதே-
மனதுதுய ராற்றி லுழலாதே;
இசை பயில்ஷ டாக்ஷ ரமதாலே-
இகபரசௌ பாக்ய மருள்வாயே;

---

*நடு=சரீர மத்திய ஸ்தானம். †மேல் நடுவேர்=சுழுமுனை.
‡மூலந் திகழ் தாண் வழி=சுழுமுனை மார்க்கம்.
§பாலங் கிள ராறு=நெருப்பாறு, மயிர்ப்பால மென்பன.
‖வசனமேற்றல்=உருவேறச் செபித்தல்.

*பசுபதி†சி வாக்ய முணர்வோனே-
பழநிமலை வீற்ற ருளும்வேலா;
அசுரர்கிளை வாட்டி மிகவாழ-
அமரர்சிறை மீட்ட பெருமாளே. (கூஉ)

192. வாரதா மணிநீ யெனவோரில்-
வருகா தெதுதா னதில்வாரா;
திரதா திகளால் நவலோக-
மிடவே கரியா மிதிலேது;
சரதா மறையோ தயன்மாலும் -
சகலா கமநூ லறியாத;
பரதே வதையாள் தருசேயே-
பழநா புரிவாழ் பெருமாளே. (கூங)

193. வாதம் பித்தமி டாவயி றீளைகள்
சீதம் பற்சனி சூலைம கோதர
‡மாசங் கட்பெரு மூலவி யாதிகள் குளிர்காசம்-
மாறுங் கக்கலொ டேசில நோய்பிணி
யோடுங் தத்துவ காரர்தொ ணூறறு
வாருஞ் சுற்றினில் வாழ்சதி காரர்கள்
வெகுமோகர்;
சூழ்துன் சித்ர§க பாயமு வாசைகொ
டேதுஞ் சற்றுண ராமலெ மாயைசெய்
சோரம் பொய்க்குடி லேசுக மாமென இதின்மேவித்-
தூசின் பொற்சர மோடுகு லாயுல
கேழும் பிற்பட வோடிடு மூடனை
‖தூவஞ் சுத்தடி யாரடி சேரநி னருள்தாராய்;

---

* பசுபதி வாக்கியம்=வேத சிவாகமங்கள்.

† சி-ஸ்ரீ என்பது சீ என்றாகிக் குறுகியது.

‡ 'மாசங்கண்' என்பதை 'அங்கண்மாசு' எனத் திருப்புக; அங்கண் மாசு என்பது நேத்திர ரோகம். § கபாய்=கவசம்: தேகம்.

‖ தூ வஞ் சுத் தடியார்=தூ அம் சுத்த அடியார்=தூய்மை வாய்ந்த அழகிய சுத்த அடியார்.

தீதந் தித்திமி திதக தோதிமி
டுடுண் டுட்டுடு டுடுடு டுடுடு
சேசெஞ் செக்கெண தேநதக தீகுட வெனபேரி-
சேடன் சொக்கிட வேலைக டாகமெ
லாமஞ் சுற்றிட வேயசு ரார்கிரி
தீவும் பொட்டெழ வேயனல் வேல்விடு
மயில்வீரா;
வேதன் பொற்சிர மீது*க டாவிந
வீசன் சற்குரு வாயவர் காதினில்
மேவும் †பற்றிலர் பேறரு ளோதிய முருகோனே-
‡வேஷங் கட்டிபி னேகிம காவளி
மாலின் பித்துற வாகிவி ணோர்பணி
வீரங் கொட்பழ னிபுரி மேவிய பெருமாளே. (கச)

194. விதமி சைந்தினி தாமலர் மாலைகள்
குழல ணிந்தநு ராகமு மேசொலி
விதர ணஞ்சொலி வீறுக ளேசொலி யழகாக-
விரிகு ரும்பைக ளாமென வீறிய
கனக சம்ப்ரம மேருவ தாமதி
விராக§மொங்கிய மாமுலை யாலெதி ரமர்நாடி;
இதமி சைந்தன மாமென வே||யின
நடைந டந்தனர் வீதியி லேவர
எவர்களுஞ்¶சிதமால்கொளு மாதர்கண் வலையாலே-
எனது சிந்தையும் வாடிவி டாவகை
அருள்பு ரிந்தழ காகிய தாமரை
இரு பதங்களி னுலெனை யாள்வது மொருநாளே;
மதமி சைந்தெதி ரேபொரு சூரனை
யுடலி ரண்டு०கு ரூய்விழ வேசின
வடிவு தங்கிய வேலினை யேவிய அதிதீரா-

---

*கடாவி=பிரயோகித்து: குட்டி. †பற்றிலர் பேறருள்=பற்றற்றவர் பெறத்தக்க அருளாகிய பிரணவப் பொருள். ‡ வேஷங்கட்டி= விருத்தாப்பிய வேஷங்கொண்டு. § ஒங்கிய=ஓங்கிய.
|| இன நடை=விதம் விதமான நடை. ¶ சிதம்=சித்தம்.
० கூரூய் என்பது குரூய் என்றாயிற்று.

மதுர இன்சொலி மாதுமை நாரணி
கவுரி யம்பிகை யாமளை பார்வதி
மவுந சுந்தரி காரணி யோகினி சிறுவோனே;
பதமி சைந்தெழு லோகமு மேவலம்
நொடியில் வந்திடு மாமயில் மீதொரு
பவனி வந்தக்ரு பாகர சேவக விறல்வீரா-
பருதி யின்ப்ரபை கோடிய தாமெனும்
வடிவு கொண்டருள் காசியின் மீறிய
பழநி யங்கிரி மீதினில் மேவிய பெருமாளே.
(கரு)

௪

நான்காவது

திருவேரகம் என்கின்ற
சுவாமிமலை.

[ரெயில்வே ஸ்டேஷன். கும்பகோணத்திற்கு மேற்கு 4-மைல். காவேரியின் வடகரை. முருகக் கடவுள் சிவபெருமானுக்குப் பிரணவோபதேசஞ் செய்த திருப்பதி. இதனால் ஸ்வாமிக்கு ஸ்வாமிநாதன், தகப்பன்சாமி, புத்ரகுருக்கள் என்னுந் திருநாமங்களுண்டு. "பரமருக்கொரு குருக்களென முத்தர் புகழ் தம்பிரானே."—215, "மாற்கரியார்க்குபதேசஞ்செய்த கிரி". — (கந்தரந்தாதி—91), என்பன ஸ்வாமிகள் திருவாக்கு. "பெரிதவர் ஏரகத் துறைதலும் உரியன்" என்பர் நக்கீரனார். அருணகிரியார் பாததரிசநம் பெற்ற ஸ்தலம் (199). இதற்கு ஸ்தல புராணம் இருக்கின்றது.]

195. குமர குரு பரமுருக குகனே குறச்சிறுமி
கணவசர வணநிருதர் கலகா பிறைச்சடையர்
குருவெனந லுரையுதவு மயிலா எனத்தினமு
முருகாதே-
குயில்மொழிநன் மடவியர்கள் விழியா லுருக்குபவர்
தெருவிலந வரதமன மெனவே நடப்பர்கலை
கொளுமவர்க ளுடைமைமன முடனே பறிப்பவர்க
ளனைவோரும்;

தமதுவச முறவசிய முகமே மினுக்கியூர்கள்
முலையிலுறு துகில்சரிய நடுவீதி நிற்பவர்கள்
தனமிலியர் மனமுறிய நழுவா வுழப்பியர்கண்
வலையாலே-
சதிசெய்தவ ரவர்மகிழ அனைமீ துருக்கியர்கள்
வசமொழுகி யவரடிமை யெனமாத ரிட்டதொழில்
தனிலுழலு மசடனையு னடியே வழுத்தஅருள்
தருவாயே;
சமரமொடு மசுரர்படை களமீ தெதிர்த்தபொழு
தொருநொடியிலவர்கள்படை கெடவேலெடுத்தவனி
தனில்நிருதர் சிரமுருள ரணதூள் படுத்திவிடு
செருமீதே-
*தவனமொடு மலகைநட மிடவீர பத்திரர்க
ளதிரகிண மொடுகுருதி குடிகாளி கொக்கரிசெய்
தசையுணவு தனின்மகிழ விடுபேய் நிரைத்திரள்கள்
பலகோடி;
திமிதமிட நரிகொடிகள் கழுகா டரத்தவெறி
வயிரவர்கள் சுழலவொரு தனியா யுதத்தைவிடு
திமிரதிந கரஅமரர் பதிவாழ்வு பெற்றுலவு
முருகோனே-
திருமருவு புயனயனொ டயிரா வதக்குரிசி
லடிபரவு பழநிமலை கதிர்காம முற்றுவளர்
சிவசமய அறுமுகவ திருவேர கத்திலுறை
பெருமாளே. (க)

196. குமர குருபர முருக சரவண
குகசண் முககரி பிறகான-
குழக சிவசுத சிவய நமவென
குரவ னருள்குரு மணியேயென்;
றமுத இமையவர் திமிர்த மிடுகட
லதென அநுதின முனையோதும்-
அமலை அடியவர் கொடிய வினைகொடு
மபய மிடுகுர லறியாயோ;

* தவனம் = தாகம்.

திமிர எழுகட லுலக முறிபட
திசைகள் பொடிபட வருசூர்-
சிகர முடியுடல் புவியில் விழவுயிர்
திறைகொ டமர்பொரு மயில்வீரா;
நமனை யுயிர்கொளு மழலி னிணைகழல்
நதிகொள் சடையினர் குருநாதா-
நளின குருமலை மருவி யமர்தரு
நவிலு மறைபுகழ் பெருமாளே. (உ)

197. கோமள வெற்பினை யொத்தத னத்தியர்
காமனை யொப்பவர் சித்தமு ருக்கிகள்
கோவையிதழ்க்கனி நித்தமும்விற்பவர் மயில்காடை-
கோகில நற்புற வத்தொடு குக்குட
ஆரணி யப்புள்வ கைக்குரல் கற்றிகல்
கோலவி ழிக்கடை யிட்டும ருட்டிகள் விரகாலே;
தூம மலர்ப்பளி மெத்தைப டுப்பவர்
யாரையு மெத்திம னைக்குள ழைப்பவர்
சோலைவனக்கிளி யொத்தமொழிச்சியர் நெறிகூடா-
தூசுநெ கிழ்த்தரை சுற்றியு டுப்பவர்
காசுப றிக்கம றித்துழ யக்கிகள்
தோதகவித்தைப டித்துந டிப்பவ ருறவாமோ;
* மாமர மொத்துவ ரிக்கு னெருக்கிய
சூரனை வெட்டிநி ணக்குட லைக்கொடி
வாரண மெச்சஅ ளித்தஅ யிற்குக கதிர்காம-
மாமலை யிற்பழ நிப்பதி யிற்றணி
மாகிரி யிற்றணி கைக்கிரி யிற்பர
மாகிரி யிற்றிரை சுற்றிவ ளைத்திடும் அலைவாயில்;
ஏமவெ யிற்பல வெற்பினி னற்பதி
ஞூல கத்தினி லுற்றுறு பத்தர்கள்
ஏதுமி னைத்தது மெத்த அளித்தரு ளிளையோனே-
ஏரக வெற்பெனு மற்புத மிக்கசு
வாமிம லைப்பதி மெச்சிய சித்தஇ
ராஜத லக்ஷண லக்ஷுமி பெற்றருள் பெருமாளே.

---

*மாமரம் ஒத்து உவரிக்குள் நெருக்கிய எனப்பிரிக்க; உவரி=சமுத்திரம்.

198. **வா**ர்குழ லைச்சொரு கிக்*கரு†விற்குழை
காதொடி ணைத்தசை யக்கதிர் பற்கொடு
வாயிதழ்‡பொற்கம லர்க்குமி ழொத்துள
திண்டகரீவ-
வார்கமு கிற்புய நற்கழை பொற்குவ
டாடிள நிர்ச்சுரர் பொற்குட மொத்திணை
மார்பழ கிற்பொறி முத்தொளிர் சித்திர
ரம்பைமாதர்;
காருறும்§வித்திடை யிற்கத லித்தொடை
சேர்ல்குல் நற்பிர சத்தட முட்கொடு
கால்மறை யத்துவ ளச்செறி பொற்கலை
யொண்குலாவக்-
கார்குயி லைக்குரா லைக்கொடு நற்றெரு
மீதில்நெ ளித்துந கைத்துந டிப்பவர்
காமனு கப்பம ளிச்சுழல் குத்திரர்
சந்தமாமோ;
சூரார்‖ப தைக்கர வுட்கிநெ ளித்துய
ராழியி ரைப்பநி ணக்குட லைக்கழு
சூழ்ந ரிக்கெரு டக்¶கொடி பற்பல சங்கமாகச்-
சூழ்கிரி யைக்கைத டித்தும லைத்திகை
யானையு ழற்றிந டுக்கிம தப்பொறி
சோரந கைத்தயி லைக்கொடு விட்டருள்
செங்கைவேலா;
ஏரணி நற்குழ லைக்கக னச்சசி
மோகினி யைப்புணர் ₀சித்தொரு அற்புத
வேடமு தச்சொரு பத்தகு றத்திம
ணங்கொள்வோனே-
ஏரக வெற்பெனு மற்புத மிக்கசு
வாமிம லைப்பதி நிற்குமி லக்ஷண
ராஜத லக்ஷண லக்ஷ்மி பெற்றருள் தம்பிரானே.

---

* கரு=பெரிய. † வில்=பிரகாசம் பொருந்திய.
‡ பொற்க=அழகு செய்ய. § வித்து=மின்னல்.
‖பதைக்கரவுட்கி=பதைக்க அரவு உட்கி. ¶கொடி=காகம்.
₀ சித்த ஒரு எனப்பிரிக்க.

199. செகமாயை யுற்றெ னகவாழ்வில் வைத்த
திருமாது கெர்ப்ப முடலூறித்-
தெசமாத முற்றி வடிவாய்நி லத்தில்
திரமாய ளித்த பொருளாகி;
*மகவாவி னுச்சி விழியாந னத்தில்
மலைநேர்பு யத்தி லுறவாடி-
மடிமீத டுத்து விளையாடி நித்த
மணிவாயின் †முத்தி தரவேணும்;
முகமாய மிட்ட குறமாதி னுக்கு
முலைமேல ணைக்க வருநேதா-
முதுமாம றைக்கு ளொருமாபொ ருட்குள்
மொழியேயு ரைத்த குருநாதா;
தகையாதெ னக்கு னடிகாண வைத்த
தனியேர கத்தின் முருகோனே-
தருகாவி ரிக்கு வடபாரி சத்தில்
சமர்வேலெ டுத்த பெருமாளே. (ரு)

200. மருவே செறித்த குழலார் மயக்கி
மதனு கமத்தின் விரகாலே-
மயலே யெழுப்பி யிதமே யருத்த
மலைபோல் முலைக்கு ளுறவாகிப்;
பெருகாத லுற்ற தமியேனை நித்தல்
பிரியாது பட்ச மறவாதே-
பிழையே பொறுத்து னிருதாளி லுற்ற
பெருவாழ்வு பற்ற அருள்வாயே;
குருவா யரற்கு முபதேசம் வைத்த
குகனே குறத்தி மணவாளா-
குளிர்கா மிகுத்த வளர்பூக மெத்து
குடகா விரிக்கு வடபாலார்;
திருவே ரகத்தி லுறைவா யுமைக்கொர்
சிறுவா கரிக்கு மிளையோனே-
திருமால் தனக்கு மருகா வரக்கர்
சிரமே துணித்த பெருமாளே. (சு)

* மகவாவின் = மக அவாவின். † முத்தி = முத்தம்.

201\. இராவினிருள் போலும் பராவுகுழ லாலும்
இராமசர மாகும் விழியாலும் —
இராகமொழி யாலும் பொருதமுலை யாலும்
இராதஇடை யாலும் இளைஞோர்நெஞ் ;
சராவியிரு போதும் பராவிவிழ வேவந்
தடாதவிலை கூறும் மடவாரன்—
படாமலடி யேனுஞ் சுவாமியடி தேடும்
அநாதிமொழி ஞானந் தருவாயே ;
குராவினிழல் மேவுங் குமாரனென நாளுங்
குலாவியினி தோதன் பினர்வாழ்வே-
*குணாலமிடு சூரன் பணாமுடிக டோறுங்
குடாவியிட வேலங் கெறிவோனே ;
†துராலுமிகு தீமுன் பிராதவகை போலுந்
தொடாமல்வினை யோடும் படிநூறுஞ்-
‡சுபானமுறு ஞானந் தபோதனர்கள் சேருஞ்
சுவாமிமலை வாழும் பெருமாளே. (எ)

202\. கடாவினிடை வீரங் கெடாமலினி தேறுங்
கடாவினிக ராகுஞ் சமனாருங் -
கடாவிவிடு தூதன் கெடாதவழி போலுங்
கனாவில்வினை யாடுங் கதைபோலும் ;
இடாதுபல தேடுங் கிராதர்பொருள் போலிங்
கிராமலுயிர் கோலிங் கிதமாகும்-
இதாமெனிரு போதுஞ் சதாவின்மொழி யாலின்
றியானுமுனை யோதும் படிபாராய் ;
விடாதுநட நாளும் பிடாரியுட னாடும்
வியாகரண ஈசன் பெருவாழ்வே-
விகாரமுறு சூரன் §பகாரமுயிர் வாழ்வும்
விநாசமுற வேலங் கெறிவோனே ;

---

* குணாலம்=குணாலை: வீராவேசத்தாற் கொக்கரித்தல்.
† துரால்=துரும்பு. ‡ சுபானம்=நன்மையாக உட்கொளல்.
§ பகாரம்=பகரம்: அலங்காரம்.

தொட்டதுநெடு தூரந் தடாதுமிக வோடுஞ்
சுவாச மதுகானம் புலனோடுஞ்-
சுபானமுறு ஞானந் தபோதனர்கள் சேருஞ்
சுவாமிமலை வாழும் பெருமாளே. (௮)

203. கடிமா மலர்க்கு ளின்ப முளவேரி கக்கு நண்பு
தருமா கடப்ப மைந்த தொடைமாலை-
கனமேரு வொத்தி டும்ப னிருமாபு யத்த ணிந்த
கருணாக ரப்ர சண்ட கதிர்வேலா;
வடிவார் குறத்தி தன்பொ னடிமீது நித்த முந்தண்
முடியான துற்று கந்து பணிவோனே-
வளவாய்மை சொற்ப்ர பந்த முளகீர னுக்கு கந்து
மலர்வாயி லக்க ணங்க ளியல்போதி;
அடிமோனை சொற்கி ணங்க*வுலகாமு வப்ப என்று
னருளா†ல ளிக்கு கந்த பெரியோனே-
அடியேனு ரைத்த புன்சொ லதுமீது நித்த முந்த
ணருளேத ழைத்து கந்து வரவேணும்;
செடிநேரு டற்கு டம்பை தனின்மேவி யுற்றி டிந்த
படிதான லக்க ணிங்க னுறலாமோ-
திறமாத வர்க்க னிந்து னிருபாத பத்ம முய்ந்த
திருவேர கத்த மர்ந்த பெருமாளே. (௯)

204. விழியால் மருட்டி நின்று முலைதூச கற்றி மண்டு
‡விரகான லத்த ழுந்த நகையாடி-
விலையாக மிக்க செம்பொன் வரவேப ரப்பி வஞ்ச
விளையாட லுக்கி சைந்து சிலநாள்மேல்;
மொழியாத சொற்கள் வந்து சிலுகாகி விட்ட தொந்த
முழுமாயை யிற்பி ணங்கள் வசமாகி-

---

* உலகம் என்பது உலகாம் என்றாயிற்று. "உலகம் உவப்ப என்று உன் அருளால் அளிக்க" என்றது, நக்கீரதேவர் முருகக் கடவுளின் அருள் பெற நிமித்தம், 'உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு' என்றெடுத்து அருளிச்செய்த திருமுருகாற்றுப்படையைக் குறித்தது. † அளிக்க உகந்த எனப் பிரித்துக் கொள்க.

‡ விரக அனலம்=விரகாக்கினி.

முடியாது பொற்ச தங்கை தருகீத வெட்சி துன்று
முதிராத நற்ப தங்கள் தருவாயே;
பொழிகார்மு கிற்கி ணைந்த யமராஜ னுட்க அன்று
பொருதாளெ டுத்த தந்தை மகிழ்வோனே-
புருகூத னுட்கு ளிர்ந்த கனகாபு ரிப்ர சண்ட
புனிதா*ம்ரு கக்க ரும்பு புணர்மார்பா;
செழுவாரி சத்தி லொன்று முதுவேதன் வெட்க அன்று
திருவாய்மை செப்பி நின்ற முருகோனே-
திரளாம ணிக்கு லங்கள் அருணோத யத்தை வென்ற
திருவேர கத்த மர்ந்த பெருமாளே. (கo)

205. † இருவினை புனைந்து ஞான விழி‡முனை திறந்து நோயி
§னிருவினை யிடைந்து போக மலமூட-
இருளற விளங்கி யாறு முகமொடு கலந்து பேத
மிலையென இரண்டு பேரு மழகான;
‖பரிமள சுகந்த வீத மயமென மகிழ்ந்து தேவர்
பணியவிண் மடந்தை பாத மலர்தூவப்-
பரிவுகொ டனந்த கோடி முனிவர்கள் புகழ்ந்து பாட
பருமயி லுடன்கு லாவி வரவேணும்;
அரியய னறிந்தி டாத அடியிணை சிவந்த பாதம்
அடியென விளங்கி யாடு நடராஜன்-
அழலுறு மிரும்பின் மேனி மகிழ்மா கதம்பெ ணாகம்
அயலணி சிவன்பு ராரி யருள்சேயே;
மருவலர்கள் திண்ப ணார முடியுடல்ந டுங்க ஆவி
மறலியுண வென்ற வேலை யுடையோனே-
வளைகுல மலங்கு காவி ரியின்வட புறஞ்சு வாமி
மலைமிசை விளங்கு தேவர் பெருமாளே.

---

* ம்ருகக் கரும்பு=மான்மக ளாகிய வள்ளியம்மை.

† இரு வினை=பெருஞ் செயல் : சிவயோகம்.

‡ முனை=லலாட நந்திச்சுழி.

§ இருவினை=புண்ணிய பாவ கன்மங்கள்.

‖ பரிமள சுகந்த வீத மயமென=மலரும் அதன் மணமும் கலந்திருக்குந் தன்மையென்று சொல்லும்படி.

206. கதிரவனெ ழுந்து லாவு திசையளவு கண்டு மோது
கடலளவு கண்டு மாய மருளாலே-
கணபணபு யங்க ராஜன் முடியளவு கண்டு தாள்கள்
கனநடந் தேயும் வகையேபோய்;
இதமிதமி தென்று நாளு மருகருகி ருந்து கூடு
மிடமிடமி தென்று சோர்வு படையாதே-
இசையொடுபு கழ்ந்த போது நழுவியப்ர சண்டர் வாச
லிரவுபகல் சென்று வாடி யுழல்வேனோ;
மதுகரமி டைந்து வேரி தருநறவ முண்டு பூக
மலர்வளநி றைந்த பாளை மலரூடே-
வகைவகையெ ழுந்து சாம வதிமறை*வி யந்து பாட
மதி†நிழலி டுஞ்சு வாமி மலைவாழ்வே;
அதிரவரு சண்ட வாயு வெனவருக ருங்க லாப
அணிமயில்வி ரும்பி யேறு மிளையோனே-
அடைவொடுல கங்கள் யாவு முதவிநிலை கண்ட பாவை
அருள்புதல்வ அண்ட ராஜர் பெருமாளே. (கஉ)

தனதன தனதன தனதன தனதன தனதனன தானந் தனதான.

207. அவாமரு வினவசு தைகாணும டவாரெனு
மவார்கனலில் வாழ்வென் றுணராதே-
அராநுக ரவாதையு றுதீதுகைக திநாடும
றிவாகியுள மால்கொண் டதனாலே;
சிவாயமெ னுநாமமொ ருகாலுநி னையாததி
மிராகரனை வாவென் றருள்வாயே-
திரோதம லமாறும டியார்கள ருமாதவர்
தியானமுறு பாதந் தருவாயே;
உவாவினி யகானுவி னிலாவும யில்வாகன
முலாசமுட னேறுங் கழலோனே-
உலாவுத யபாநுச தகோடியு ருவானவொ
ளிவாகுமயில் வேலங் கையிலோனே;

---

* வியந்து=வியக்க. † நிழ லிடும்=குளிர்ச்சியைத் தரும்.

துவாதச புயாசல ஷடாநந வராசிவ
சுதாஎயினர் மானன் புடையோனே-
சுராதிப திமர்லய னுமாலோடு சலாமிடு
சுவாமிமலை வாழும் பெருமாளே. (கங)

208. ஆனனமு கந்து தோளொடு
தோளிணைக லந்து பாலன
ஆரமுது கண்டு தேனென இதழூறல்-
ஆதரவி னுண்டு வேல்விழி
பூசலிட நன்று காணென
ஆணையுர மெங்கு மோதிட அபிராம;
மானனைய மங்கை மார்மடு
நாபியில்வி ழுந்து கீடமில்
மாயுமனு வின்ப வாசைய தறவேயுன்-
வாரிஜப தங்கள் நாயடி
யேன்முடிபு னைந்து போதக
வாசகம்வ ழங்கி யாள்வது மொருநாளே;
ஈனவதி பஞ்ச பாதக
தானவர்ப்ர சண்ட சேனைக
ளீடழிய வென்று வானவர் குலசேனை-
ஏவல்கொளு மிந்த்ர லோகவ
சீகரவ லங்க்ரு தாகர
ராசதம றிந்த கோமள வடிவோனே;
சோணைசொரி குன்ற வேடுவர்
பேதைபயில் கின்ற ஆறிரு
தோளுடைய கந்த னேவய லியில்வாழ்வே-
சூளிகையு யர்ந்த கோபுர
மாளிகைபொ னிஞ்சி சூழ்தரு
ஸ்வாமிமலை நின்று லாவிய பெருமாளே. (கச)

209. ஆறுத பிருதிவிப் பாச நிகளமும்
மூமாய விருளுமற் றேகி பவமென
வாகாச பரமசிற் சோதி பரையைய டைந்துளாமே-

ஆறாறி லதிகமக் க்ராய மறுதினம்
யோகிச ரெவருமெட் டாத பராபரி
யாதீத மெனமெய்ப் பேர்து முதயம நந்தமோகம்;

வானாதி சகலவிஸ்த் தார விபவர்ம்
லோகாதி முடிவுமெய்ப் போத மலரயன்
மாலீச ரெனுமவற் கேது விபுலம சங்கையால்நீள்-
மாளாத தனிசமுற் றூய தரியநி
ராதார மூலவில்சற் சோதி நிருபமு
மாறூத சுகவெளத் தானு வுடனினி
தென்றுசேர்வேன்;

நானாவி தகருவிச் சேனை வகைவகை
சூழ்போது பிரபலச் சூரர் கொடுநெடு
நாவாய்செல் கடலடைத் தேறி நிலைமையி
லங்கைசாய-
நாலாறு மணிமுடிப் பாவி தனையடு
சீராமன் மருகமைக் காவில் பரிமள
நாவீசு வயலியக் கீசர் குமாரக டம்பவேலா;

கானாறு மெயினர்தற் சாதி வளர்குற
மானோடு மகிழ்கருத் தாகி மருடரு
காதாடு மனதுகட் பாண மெனதுடை
நெஞ்சுபாய்தல்-
காணாது மமதைவிட் டாவி யுயவருள்
பாராயெ னுரைவெகுப் ப்ரீதி யிளையவ
காவேரி வடகரைச் சாமி மலையுறை
தம்பிரானே. (கரு)

210. எந்தத் திகையினு மலையினு முவரியி
னெந்தப் படியினு முகடினு முளபல
எந்தச் சடலமு முயிரியை பிறவியி னுழலாதே-
இந்தச் சடமுட னுயிர்நிலை பெறநளி
னம்பொற் கழலிணை களில்மரு மலர்கொடு
என்சித் தமுமன முருகிநல் சுருதியின்
முறையோடே;

சந்தித் தாஹா சிவசிவ சரணென
கும்பிட் டிணையடி யவையென தலைமிசை
தங்கப் புளகித மெழஇரு விழிபுனல் குதிபாயச்-
சம்பைக் கொடியிடை விபுதையி னழகுமு
னந்தத் திருநட மிடுசர ணழகுற
சந்தச் சபைதனி லெனதுள முருகவும்
வருவாயே;
தொந்தத் திகுகுட தகுகுட டிமிடிமி
தந்தத் தனதன டுடுடுடு டமடம
துங்கத் திசைமலை யுவரியு மறுகச வுரிபேரி-
துன்றச் சிலைமணி கலகல கலினென
சிந்தச் சுரர்மல ரயன்மறை புகழ்தா
துன்புற் றவுணர்கள் நமனுல குறவிடு
மயில்வேலா;
கந்தச் சடைமுடி கனல்வடி வடலணி
யெந்தைக் குபிரெனு மலைமகள் மரகத
கந்தப் பரிமள தனகிரி யுமையரு ளிளையோனே-
கஞ்சப் பதமிவர் திருமகள் குலமகள்
அம்பொற் கொடியிடை புணரரி மருகநல்
கந்தப் பொழில்திகழ் குருமலை மருவிய
பெருமாளே. (கசு)

211. ஒருவரையு மொருவரறி யாம லுந்திரிந்
திருவினையி னிடர்கலியொ டாடி நொந்துநொந்
துலையிலிடு மெழுகதென வாடி முன்செய்வஞ்
சனையாலே-
ஒளிபெறவெ யெழுபுமர பாவை துன்றிடுங்
கயிறுவித மெனமருவி யாடி விண்பறிந்
தொளிருமின லுருவதென வோடி யங்கம்வெந்
திடுவேனைக்;
கருதியொரு பரமபொரு ளீது என்றுஎன்
செவியிணையி னருளியுரு வாகி வந்தஎன்
கருவினையொ டருமலமு நீறு கண்டுதண்
டருமாமென்-

கருணைபொழி கமலமுக மாறு *மிந்துளந்
தொடைமகுட முடியுமொளிர் நூபு ரஞ்சரண்
கலகலெனு மயிலின்மிசை யேறி வந்துகந்
தெனையாள்வாய்;

திரிபுரமு மதனுடலு நீறு கண்டவன்
தருணமழ விடையனட ராஜ னெங்களுந்
திகழருண கிரிசொருப னாதி யந்தமங் கறியாத-
சிவயநம நமசிவய கார ணாஞ்சுரந்
தமுதமதை யருளியெமை யாளு மெந்தைதன்
திருவுருவின் மகிமைதனை தாயிப யந்திடும்
புதல்வோனே;

குருகுகொடி யுடன்மயிலி லேறி மந்தரம்
புவனகிரி சுழலமறை யாயி ரங்களுங்
குமரகுரு வெனவலிய சேட னஞ்சவந் திடுவோனே-
குறமகளி னிடைதுவள பாத செஞ்சிலம்
பொலிய†வொரு சசிமகளொ டேக லந்துதிண்
குருமலையின் மருவுகுரு நாத வும்பர்தம்
பெருமாளே. (௧௭)

212. கறைபடுமு டம்பி ராதெனக்
கருதுதலொ ழிந்து வாயுவைக்
‡கருமவச னங்க ளால்மறித் §தன லூதிக்-
கவலைபடு கின்ற யோககற்
பனைமருவு சிந்தை போய்விடக்
கலகமிடு மஞ்சும் வேறறச் செயல்மாளக்;

குறைவறநி றைந்த மோனநிர்க்
குணமதுபொ ருந்தி வீடுறக்
குருமலைவி ளங்கு ஞானசற் குருநாதா-

---

* இந்துளம்=கடம்பு. † இங்கே 'அவளோடு கலந்ததன்றியும்' என்பதை இசையெச்சமாகக் கொள்ளவேண்டும்.

‡ கரும வசனம்=ஆகருஷண ஸ்தம்பநாதி மந்திரங்கள்.

§ அன லூதல்=வாயுவால் மூலாக்கினியை யெழுப்பல்.

குமாசர ணென்று கூதளப்
புதுமலர்சொ ரிந்து கோமளப்
பதயுகள புண்ட ரீகமுற் றுணர்வேனோ;
சிறைதளைவி ளங்கு பேர் *முடிப்
புயலுடன டங்க வேபிழைத்
திமையவர்கள் தங்க ளூர்புகச் சமராடித்-
திமிரமிகு சிந்து வாய்விடச்
சிகரிகளும் வெந்து நீறெழத்
திகிரிகொள நந்த சூடிகைத் திருமாலும்;
பிறைமவுலி மைந்த கோவெனப்
பிரமனைமு னிந்து காவலிட்
டொருநொடியில் மண்டு சூரனைப் பொருதேறிப்-
பெருகுமத கும்ப †லாளிதக்
கரியெனப்ர சண்ட வாரணப்
பிடிதனைம ணந்த சேவகப் பெருமாளே.()

213. காமியத் தழுந்தி யிளையாதே-
காலர்கைப் படிந்து மடியாதே;
ஓமெழுத்தி லன்பு மிகவூறி-
ஓவியத்தி லந்த மருள்வாயே;
தூமமெய்க் கணிந்த சுகலீலா-
சூரனைக் கடிந்த கதிர்வேலா;
ஏமவெற் புயர்ந்த மயில்வீரா-
ஏரகத் தமர்ந்த பெருமாளே. (கக)

214. சரணகம லால யத்தை அரைநிமிஷ நேர மட்டில்
தவமுறைதி யானம் வைக்க அறியாத-
சடகசட மூட மட்டி பவவினையி லேச னித்த
தமியன்மிடி யால்ம யக்க முறுவேனோ;
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளை செப்பு
கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே-
கடகபுய மீதி ரத்ந மணியணிபொன் மாலை செச்சை
கமழுமண மார்க டப்ப மணிவோனே;

---

* முடிப் புயல்=இந்திரன். † லாளிதம்=லளிதம் : அழகு.

*தருணமிதை யாமி குத்த கனமதுறு நீள்ச வுக்ய
சகலசெல்வ யோக மிக்க பெருவாழ்வு-
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீ கொடுத்து
தவிபுரிய வேணு நெய்த்த வடிவேலா;
அருணதள பாத பத்ம மதுநிதமு மேது திக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா-
அதிசயம நேக முற்ற பழநிமலை மீது தித்த
அழகதிரு வேரகத்தின் முருகோனே. (உ0)

215. †சுத்தியந ரப்புடனெ லுப்புறுத சைக்குடலொ
டப்புடனி ணச்சளிவ லிப்புடனி ரத்தகுகை
சுக்கிலம்வி ளைப்புழுவொ டக்கையும ழுக்குமயிர்
சங்குமூளை-
துக்கம்விளை வித்தபிணை யற்கறைமு ளைப்பெருகு
குட்டமொடு விப்புருதி புற்றெழுதல் முட்டுவலி
துச்சிபிள வைப்பொருமல் பித்தமொடு றக்கமிக
வங்கமூடே;
எத்தனைநி னைப்பையும்வி ளைப்பையும யக்கமுற
லெத்தனைச லிப்பொடுக லிப்பையுமி டற்பெருமை
எத்தனைக சத்தையும லத்தையும டைத்தகுடில்
பஞ்சபூதம்-
எத்தனைகு லுக்கையுமி லுக்கையும னக்கவலை
யெத்தனைக வட்டையுந டக்கையுமு யிர்க்குழுமல்
எத்தனைபி றப்பையுமி றப்பையுமெ டுத்துலகில்
மங்குவேனோ;
தத்தனத னத்தனத னத்தனவெ னத்திமிலை
யொத்தமுர சத்துடியி டக்கைமுழ வுப்பறைகள்
சத்தமறை யத்தொகுதி யொத்தசெனி ரத்தவெள
மண்டியோடச்-
சக்கிரிநெ ளிப்பஅவு ணப்பிணமி தப்பமரர்
கைத்தலம்வி ரித்தாஹ ரச்சிவபி ழைத்தோமென
சக்கிரகி ரிச்சுவர்கள் அக்கணமெ பக்குவிட
வென்றவேலா;

---

* தருண மிதையா = தருணம் இது ஐயா.

† சுத்திய - இது சுற்றிய என்பதன் மரூஉ.

சித்தமதி லெத்தனைசெ கத்தலம்வி தித்துடன
முத்துகம லத்தனைம ணிக்குடுமி பற்றிமலர்
சித்திரக ரத்தலம்வ லிப்பபல குட்டிநட
னங்கொள்வேளே-
செட்டிவடி வைக்கொடுதி னைப்புனம திற்சிறுகு
றப்பெணமளிக்குள்மகிழ் செட்டிதருவெற்பிலுறை
சிற்பரம ருக்கொருகு ருக்களென முத்தர்புகழ்
தம்பிரானே. (உக)

216. சேலுமயி லுந்த ரித்த வாளையட ருங்க டைக்கண்
மாதரைவ சம்ப டைத்த வசமாகிச்-
சீலமறை யும்ப ணத்தி லாசையிலை யென்*ற வத்தை
காலமுமு டன்கி டக்கு மவர்போலே;
காலுமயி ரும்பி டித்து மேவுசிலு கும்பி ணக்கு
நாளுமிக நின்ற லைத்த விதமாய-
காமகல கம்பி ணித்த தோதகமெ னுந்து வக்கி
லேயடிமை யுங்க லக்க முறலாமோ;
ஏலமில வங்க வர்க்க நாகம்வகு ளம்ப டப்பை
பூகமரு தந்த ழைத்த கரவீரம்-
யாவுமலை கொண்டு கைத்த காவிரிபு றம்பு சுற்றும்
ஏரகம மர்ந்த பச்சை மயில்வீரா;
சோலைமடல் கொண்டு சக்ர மால்வரைய ரிந்த வஜ்ர
பாணியர்தொ ழுந்தி ருக்கை வடிவேலா-
†சூர்முதிர்க்ர வுஞ்ச வெற்பும் வேலைநில மும்ப கைத்த
சூரனுட லுந்து ணித்த பெருமாளே. (உஉ)

217. திருவரிவ ராகு மென்று பொருணசையி னுடி வண்டு
தனைவிடுசொல் தூது‡தண்ட முதலான-
சரசகவி மாலை சிந்து கலிதுறைக ளேச லின்ப
தருமுதல தான செஞ்சொல் வகைபாடி;
மருவுகையு மோதி நொந்து அடிகள் முடியேதெ ரிந்து
வரினுமிவர் வீத மெங்க ளிடமாக-

* அவத்தை காலமும்=நித்திரைப்போதும். † சூர்=அச்சம்.
‡ தண்டம்=தண்டகம்.

வருமதுலொபோதுமென்று வொருபணமுதாசினஞ்சொல்
மடையரிட மேநடந்து மனம்வேறாய்;
உருகிமிக வாக வெந்து கவிதை சொலி யேதிரிந்து
உழல்வதுவு மேத விர்ந்து விடவேநல்-
உபயபத *மால்வி ளங்கி யிகபரமு மேவ இன்ப
முதவியெனை யாள அன்பு தருவாயே;
குருகினொடு நாரை யன்றில் இரைகளது நாடி டங்கள்
குதிகொளிள வாளை கண்டு பயமாகக்-
குரைகடல்க ளேய திர்ந்து வருவதென வேவி ளங்கு
குருமலையின் மேல மர்ந்த பெருமாளே. ()

218. தெருவினில் நடவா மடவார்
திரண்டொ றுக்கும் வசையாலே-
தினகர னெனவே லையிலே
சிவந்து திக்கும் மதியாலே;
பொருசிலை வளையா இளையா
மதன்தொ டுக்குங் கணையாலே-
புளகித முலையா ளலையா
மனஞ்சலித்தும் விடலாமோ;
ஒருமலை யிருகூ றெழவே
யுரம்பு குத்தும் வடிவேலா-
ஒளிவளர் திருவே ரகமே
யுகந்து நிற்கும் முருகோனே;
அருமறை தமிழ்நூ லடைவே
தெரிந்து ரைக்கும் புலவோனே-
†அரியரி பிரமா தியர்கால்
விலங்க விழ்க்கும் பெருமாளே. (உச)

219. நாசர்தங் கடையதனில் விரவிநான் மெத்த நொந்து
தடுமாறி-
ஞானமுங் கெட அடைய வழுவியா ழத்த ழுந்தி
மெலியாதே;

*மால் = ஆசை. †அரி = தேவேந்திரன்.

மாசகந் தொழுமுனது புகழினோர் சொற்ப கர்ந்து
சுகமேவி-
மாமணங் கமழுமிரு கமலபா தத்தை நின்று
பணிவேனோ ;
வாசகம் புகலவொரு பரமர்தா மெச்சு கின்ற
குருநாதா-
வாசவன் தரு*திருவை யொருதெய்வா னைக்கிரங்கு
மணவாளா ;
†கீசகஞ் சூழ்தருவு மகிழுமா வத்தி சந்து
புடைசூழுங்-
கேசவன் பரவுகுரு மலையில்யோ கத்தமர்ந்த
பெருமாளே. (உரு)

220. நாவேறு பாம ணத்த ‡பாதார மேநி னைத்து
§நாலாறு நாலு பற்று வகையான-
||நாலாரு மாக மத்தி னூலாய ஞான முத்தி
நாடோறு நானு ரைத்த நெறியாக ;
நீவேறெ னாதி ருக்க நான்வேறெ னாதி ருக்க
நேராக வாழ்வ தற்கு னருள்கூர-
நீடார்¶ஷ டாத ரத்தின் மீதேப ராப ரத்தை
நீகாணெ னா$வ னைச்சொ லருள்வாயே ;
சேவேறு மீசர் சுற்ற மாஞான போத புத்தி
சீராக வேயு ரைத்த குருநாதா-
தேரார்கள் நாடு சுட்ட சூரார்கள் மாள வெட்டு
தீராகு காகு றத்தி மணவாளா ;
காவேரி நேர்வ டக்கி லேவாவி பூம ணத்த
காவார்சு வாமி வெற்பின் முருகோனே-
கார்போலு மேனி பெற்ற மாகாளி வாலை சத்தி
காமாரி வாமி பெற்ற பெருமாளே. (உசு)

---

* திருவை=திரு ; ஐ சாரியை. † கீசகம்=மூங்கில்.

‡ பாதாரம்=பாதாரவிந்தம் ; இது கடைக்குறை.

§ நாலாறு நாலு பற்று வகையான...ஆகமம்=உஅ-சிவாகமங்கள்.

|| நாலாரும்=சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நாலு பாதங்கள் பொருந்திய.

¶ ஷடாதரம்=மூலாதாரம் முதலிய ஆறாதாரம்.

$ அனைச்சொல்=ஐக்கிய பதம்.

221. நிலவினிலேயி ருந்து வகைமல ரேதெ ரிந்து
நிறைகுழல் மீத ணிந்து குழைதாவும்-
நிகரறு வேலி னங்கள் வரிதர வாச கங்கள்
நினைவற வேமொ ழிந்து மதனூலின்;
கலபம னேக ரங்க ளளவற வேபு ரிந்து
கனியித ழேய ருந்தி யநுராகக்-
கலவியி லேமு யங்கி வனிதையர் பால்ம யங்கு
கபடனை யாள வுன்ற னருள்கூராய்;
உலகமொ ரேழு மண்ட ருலகமு மீசர் தங்கு
முயர்கயி லாய மும்பொன் வரைதானும்-
உயிரொடு பூத மைந்து மொருமுத லாகி நின்ற
உமையரு ளால்வ ளர்ந்த குமரேசா;
*குலைபடு சூர னங்க மழிபட வேலெ றிந்த
குமரக டோர வெங்கண் மயில்வாழ்வே-
†கொடுமுடி யாய்வ ளர்ந்து புயனிலை போலு யர்ந்த
குருமலை மீத மர்ந்த பெருமாளே. (உஎ)

222. நிறைமதி முகமெனு மொளியாலே-
நெறிவிழி கணையெனு ‡நிகராலே;
உறவுகொள் மடவர்க ளுறவாமோ-
உனதிரு வடியினி யருள்வாயே;
மறைபயி லரிதிரு மருகோனே-
மருவல ரசுரர்கள் குலகாலா;
குறமகள் தனைமண மருள்வோனே-
குருமலை மருவிய பெருமாளே. (உஅ)

223. பரவரி தாகிய வரையென நீடிய
பணைமுலை மீதினி லுருவான-
பணிகளு லாவிட இழையிடை சாய்தரு
பயிலிகள் வாள்விழி அயிலாலே;

---

* குலைபடு=குலைபட்டு. † கைலைமலையின் கொடுமுடிகளி லொன்று திருவேரகம் என்று திருவேரக மான்மிய சங்கிரகத்திற் சொல்லப்பட்டுள்ளது. ‡ நிகர்=போர்.

நிரவரி யோடியல் குழல்களி னுண்மலர்
நிரைதரு மூரலி ன்கைமீது-
நிலவியல் சேர்முக மதினுயர் மாமயல்
நிலையெழ வேயலை வதுவாமோ ;
*அரவணை யார்குழை பரசிவ ஆரண
அரனிட பாகம துறைசோதி-
அமையுமை டாகினி திரிபுரை நாரணி
அழகிய மாதருள் புதல்வோனே ;
குரவணி பூஷண சரவண தேசிக
குக கரு ணாநிதி அமரேசா-
குறமக ளாணைமின் மருவிய பூரண
குருகிரி மேவிய பெருமாளே. (உகூ)

பு. **224.** **ப**லகாதல் பெற்றிடவு மொருநாழி கைக்குளொரு
பலனேபெ றப்பரவு கயவாலே-
பலபேரை மெச்சிவரு தொழிலேசெ லுத்தியுடல்
பதறாமல் வெட்கமறு வகைகூறி ;
விலகாத லச்சைதணி மலையாமு லைச்சியர்கள்
வினையேமி குத்தவர்கள் தொழிலாலே-
விடமேகொ டுத்துவெகு பொருளேப றித்தருளும்
விலைமாதர் பொய்க்கலவி யினிதாமோ ;
மலையேயெ டுத்தருளு மொருவாள ரக்கனுடல்
வடமேரெ னத்தரையில் விழவேதான்-
வகையாவி டுத்தகணை யுடையான்ம கிழ்ச்சிபெறு
மருகாக டப்பமல ரணிமார்பா ;
சிலகாவி யத்துறைக ளுணர்வோர்ப டித்ததமிழ்
செவியார வைத்தருளு முருகோனே-
சிவனார்த மக்குரிய வுபதேச வித்தையருள்
திருவேர கத்தில்வரு பெருமாளே. (கூ0)

---

* அரவணையார் குழை=விஷ்ணுவானவர் மனங்குழைந்து அன்பு செய்யப்பட்ட.

225. பாதி மதிநதி போது மணிசடை
நாத ரருளிய குமரேசா-
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா;
காது மொருவிழி காகமுற அருள்
மாய னரிதிரு மருகோனே-
கால னெனையணு காம லுனதிரு
காலில் வழிபட அருள்வாயே;
ஆதி யயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறைமீளா-
ஆடு மயிலினி லேறி யமரர்கள்
சூழ வரவரு மிளையோனே;
சூத மிகவளர் சோலை மருவுசு
வாமி மலைதனி லுறைவோனே-
சூர னுடலற வாரி சுவறிட
வேலை விடவல பெருமாளே. (௩க)

226. மகர கேத னத்த னுருவி லானெ டுத்து
மதுர நாணி யிட்டு நெறிசேர்வார்-
மலைய வேவ ளைத்த சிலையி னூடொ ளித்த
வலிய சாய கக்கண் மடமாதர்;
இகழ வாச முற்ற தலையெ லாம்வெ ளுத்து
இளமை போயொ ளித்து விடுமாறு-
இடைவி டாதெ டுத்த பிறவி வேர றுத்து
னினிய தாள ளிப்ப தொருநாளே;
அகில மேழு மெட்டு வரையின் மீது முட்ட
அதிர வேக டத்து மயில்வீரா-
அசுரர் சேனை கெட்டு முறிய வான வர்க்கு
அடைய வாழ்வ ளிக்கு மிளையோனே;
மிகநி லாவெ றித்த* அமுத வேணி நிற்க
விழைசு வாமி வெற்பி லுறைவோனே-
விரைய ஞான வித்தை யருள்செய் தாதை கற்க
வினவ வோது வித்த பெருமாளே. (௩உ)

* அமுத வேணி = சிவபெருமான்.

227. முறுகு காள விடம யின்ற இருகண் வேலி னுளம யங்கி
முளரி வேரி முகைய டர்ந்த முலைமீதே-
முழுகு காதல் தனைம றந்து பரம ஞான வொளிசி றந்து
முகமொ ராறு மிகவி ரும்பி அயராதே;
அறுகு தாளி நறைய விழ்ந்த குவளை வாச மலர்க ரந்தை
அடைய வாரி மிசைபொ ழிந்து னடிபேணி-
அவச மாகி யுருகுதொண்ட ருடன தாகி விளையு மன்பி
னடிமையாகு முறைமையொன்றை அருள்வாயே;
தறுகண் வீரர் தலைய ரிந்து பொருத சூர னுடல்பி ளந்து
தமர வேலை சுவற வென்ற வடிவேலா-
தரள மூர லுமைமடந்தை முலையி லார அமுத முண்டு
தரணி யேழும் வலம்வ ருந்திண் மயில்வீரா;
மறுவி லாத தினைவி ளைந்த புனம்வி டாம லிதணி ருந்து
வலிய காவல் புனைய ணங்கின் மணவாளா-
மருவு ஞாழ லணிசெ ருந்தி யடவி சூத வனநெ ருங்கி
வளர்சு வாமி மலைய மர்ந்த பெருமாளே. (௩௩)

228. வாதமொடு சூலை கண்ட மாலைகுலை நோவு சந்து
மாவலிவி யாதி குன்ம மொடுகாசம்-
வாயுவுட னேப ரந்த தாமரைகள் பீன சம்பின்
மாதர் தரு பூஷ ணங்க ளெனவாகும்;
பாதகவி யாதி புண்க ளானதுட னேதொ டர்ந்து
பாயலைவி டாது மங்க இவையால்நின்-
பாதமல ரான திங்க ணேயமற வேம றந்து
பாவமது பான முண்டு வெறிமூடி;
ஏதமுறு பாச பந்த மானவலை யோடு ழன்று
ஈனமிகு சாதி யின்க ணதிலேயான்-
ஈடழித லான தின்பின் மூடனென வோது முன்புன்
ஈர அருள் கூர வந்து எனையாள்வாய்;
சூதமகிழ் பாலை கொன்றை தாதுவளர் சோலை துன்றி
சூழுமதில் தாவி மஞ்சி னளவாகத்-
தோரணநன் மாட மெங்கு நீடுகொடி யேத ழைந்த
ஸ்வாமிமலை வாழ வந்த பெருமாளே. (௩௪)

229. வார முற்ற பண்பின் மாத முற்ற நண்பி
னீடு மெய்த்து யர்ந்து வயதாகி-
வர்லை யிற்றி ரிந்து கோல மைக்கண் மங்கை
மார்க ளுக்கி சைந்து பொருள்தேடி ;
ஆர மிக்க பொன்க ளால மைத்த மர்ந்த
மாப ணிக்கள் விந்தை யதுவான-
ஆ கொப்ப மைந்த வோலை முத்த முங்கொ
டாவி மெத்த நொந்து திரிவேனோ ;
சூர னைத்து ரந்து வேர றப்பி ளந்து
சூழ்சு ரர்க்க னன்பு செயும்வீரா-
சூக ரத்தொ *டம்பு தானெ டுத்து வந்த
சூத னுக்கி சைந்த மருகோனே ;
ஏரொ திர்த்து வந்து நீர்கள் கட்டி யன்று
தானி றைக்க வந்த தொருசாலி-
யேமி குத்து யர்ந்த மாவ யற்கள் மிஞ்சு
மேர கத்த மர்ந்த பெருமாளே. (௩௫)

230. வார்குழல் விரித்துத் தூக்கி வேல்விழி சுழற்றிப் பார்த்து
வாவென நகைத்துத் தோட்டு குழையாட-
வாசக முரைத்துச் சூத்ர பாவையெ னுறுப்பைக் காட்டி
வாசனை முலைக்கச் சாட்டி யழகாகச் ;
சீர்கலை நெகிழ்த்துப் போர்த்து நூலிடைநெளித்துக்காட்டி
தீதெய நடித்துப் பாட்டு குயில்போலச்-
சேருற அழைத்துப் பார்த்து சார்வுற மருத்திட் டாட்டி
சீர்பொருள் பறிப்பொய்க் கூத்த ருறவாமோ ;
சூரர்கள் பதைக்கத் தேர்க்க ளானைக ளழித்துத் தாக்கி
சூர்கிரி கொளுத்திக் †கூற்று ரிடும்வேலா-
தூமொழிநகைத்துக்கூற்றை மாளிடவுதைத்துக்கோத்த
தோலுடை ‡யெனப்பர்க் கேற்றி திரிவோனே ;

---

* அம் பு=(பிரளயத்தில் முழுகிய) அழகிய பூமியை ; பூ என்பது பு எனக் குறுகிற்று.

† கூற் றூர்=கூற் றூர் : இயம லோகம்.

‡ என் அப்பர்க்கு எனப் பிரிக்க.

ஏரணி சடைச்சிப் பாற்சொ லாரணி சிறக்கப் போற்று
மேரெழி னிறத்துக் கூர்த்த மகவோனே-
ஏடணி குழைச்சித் தார்த்த வாடகிகுறத்திக் கேற்ற
ஏரக பொருப்பிற் பூத்த பெருமாளே. (நகூ)

231. விடமும்வடி வேலு மதனச ரங்களும்
வடுவுநிக ரான மகரநெ டுங்குழை
விரவியுடன் மீளும் விழிகளு மென்புழு
கதுதோயும்-
ம்ருகமத படீர பரிமள குங்கும
மணியுமிள நீரும் வடகுல குன்றமும்
வெருவுவன பார புளகத னங்களும் வெகுகாம;
நடனபத நூபு ரமுமுகில் கெஞ்சிட
மலர்சொருகு கேச பாரமுமி லங்கிய
நளினமலர் சோதி மதிமுக விம்பமும் அனநேராம்-
நடையுநளிர் *மாதர் †நிலவுதொ ழுந்தனு
முழுதுமபி ராம அரிவய கிண்கிணெ
னகையுமுளமாதர் கலவியி னைந்துரு கிடலாமோ;
வடிவுடைய மானு மிகல்கர னுந்திக
ழெழுவகைம ராம ரமுநிக ரொன்றுமில்
வலியதிறல் வாலி யுரமுநெ டுங்கட லவையேழும்-
மறநிருதர் சேனை முழுதுமி லங்கைமன்
வகையிரவி போலு மணியும லங்க்ருத
மணிமவுலி யான வொருபதும் விஞ்சிரு
பதுதோளும்;
அடைவலமு மாள விடுசர அம்புடை
தசரதகு மார ரகுகுல புங்கவன்
அருள்புனைமு ராரி மருகவி ளங்கிய மயிலேறி-
அடையலர்கள் மாள வொருநிமி டந்தனி
லுலகைவல மாக நொடியினில் வந்துயர்
அழகியசு வாமி மலையில மர்ந்தருள் பெருமாளே.

---

* மாதர் = அழகிய. † நிலவு தொழல்-நல்ல நாயகன் கிடைக்க வேண்டுமென்று சந்திரனைத் தொழுதல்.

232. விரித்தூ ளைப்ங்குழ லொளிர்மல ரளிதன
தனத்த னந்தன தனதன வெனவொலி
விரிப்ப வண்கயல் விழியுறை குழையொடு
மலைபாய-

மிகுத்த வண்சிலை நுதல்மிசை திலதமொ
டசைத்த பொன்குழை யழகெழ முகவொளி
வெயிற்ப ரந்திட *நகையிதழ் முருகலர்
வரிபோதத்;

தரித்த தந்திரி மறிபுய மிசைபல
பணிக்கி லங்கிய பரிமள குவடிணை
தனக்கொ ழுந்துகள் ததைபட கொடியிடை
படுசேலை-

தரித்து சுந்தர மெனஅடர் பரிபுர
பதச்சி லம்பொடு நடமிடு கணிகையர்
சமுக்கர் விஞ்சையர் மயல்களின் முழுகுவ
தொழியாதோ;

உரித்த வெங்கய மறியொடு புலிகலை
தரித்த சங்கரர் மதிநதி சடையினர்
ஒருத்தி பங்கின ரவர்பணி குருபர முருகோனே-
உவட்டி வந்திடு மவுணரொ டெழுகடல்
குவட்டை யும்பொடி பட†சத முடிவுற
வுழைத்த இந்திரர் பிரமனு மகிழ்வுற
விடும்வேலா;

வரித்த ரந்துள வணிதிரு மருவிய
‡வுரத்த பங்கயர் மரகத மழகிய
வணத்த ரம்பர முறவிடு கணையினர் மருகோனே-
வனத்தில் வந்தொரு பழையவ னெனவொரு
குறத்தி மென்புன மருவிய கிளிதனை
மயக்கி மந்திர குருமலை தனிலமர்
பெருமாளே. (ந-அ)

---

*நகை இதழ் முருகு அலர் வரி போத = தந்தங்களையுடைய இதழோடு கூடிய வாசனையுள்ள செங்குமுத மலரை யொத்த வாயினின்றும் இசைப்பாட்டுக்கள் எழ; வரி = இசைப்பாட்டு.

† சதம் முடிவுற = நூறு அசுவமேத யாகம் முடிய.

‡ உரத்த பங்கயர் = மார்பின்கண் தாமரையை யுடையவர்.

உ

ஐந்தாவது

குன்றுதோருடல்.

['குன்றுதோருடல்' என்பது பலமலைகளுக்கும் பொதுவாக வழங்குஞ்சொல். முருகக்கடவுள் மலைக்கடவு ளாதலின், 'மலை கிழவோன்', 'கிரி ராஜன்', 'குறிஞ்சி வேந்தன்' எனப் பெயர் பெறுவர்.]

233. அதிருங் கழல்ப ணிந்து னடியேனுன்-
அபயம் புகுவ தென்று நிலைகாண;
இதயந் தனிலி ருந்து க்ருபையாகி-
இடர்சங் கைகள்க லங்க அருள்வாயே;
எதிரங் கொருவ ரின்றி நடமாடும்-
இறைவன் தனது பங்கி லுமைபாலா;
பதியெங் கிலுமி ருந்து விளையாடிப்-
பலகுன் றிலுமமர்ந்த பெருமாளே. (க)

234. எழுதிகழ் புவன நொடியள வதனி
லியல்பெற மயிலில் வருவோனே-
இமையவர் பரவி யடிதொழ அவுணர்
மடிவுற விடுவ தொருவேலா;
*வழுதியர் தமிழி †னொருபொரு ளதனை
வழிபட மொழியு முருகேசா-
மலரடி பணியு மடமகள் பசலை
மயல்கொடு தளர்வ தழகோதான்;

* வழுதியர் தமிழ் = பாண்டியர்களால் விருத்திசெய்யப்பட்ட தமிழ்.
† 'ஒருபொரு ளதனை வழிபட மொழியும் முருகேசன்' என்றது இறையனார் அகப்பொருளுக்குச் சங்கப்புலவர் பலரும் செய்துவந்த உரைகளையெல்லாந் தனித்தனியே கேட்டு, ஒவ்வோ ரிடங்களிற் சிரக்கம்பஞ் செய்து, நக்கீரர் செய்த உரையை முழுதும் வியந்து சிரக்கம்பஞ் செய்து ஸ்தாபித்தருளிய உருத்திரசன்மரை.

முழுகிய புனலி லினமணி தரள
முறுகிடு பவள மிகவாரி-
முறையொடு குறவர் மடமகள் சொரியு
முதுமலை யழக குருநாதா;
பழகிய வினைகள் பொடிபட அருளில்
படிபவ ரிதய முறுகோவே-
பருவரை துணிய வொருகணை *தெரிவ
பலமலை யுடைய பெருமாளே. (உ)

235. தறையின் மானுட ராசையி னால்மட
லெழுது மாலருள் மாதர்கள் தோதக
சரசர் மாமல ரோதியி னாலிரு கொங்கையாலுந்-
தளர்மி னேரிடை யாலுடை யால்நடை
யழகி னால்மொழி யால்விழி யால்மருள்
சவலை நாயடி யேன்மிக வாடிம யங்கலாமோ;
பறவை யானமெய்ஞ் ஞானிகள் மோனிக
ளணுகொ ணாவகை நீடு†மி ராசிய
பவன பூரக வேகிக மாகிய விந்துநாதம்-
பகரொ ணாதது சேரவொ ணாதது
நினையொ ணாதது வான்த யாபர
பதிய தானச மாதிம னோலயம் வந்துதாராய்;
சிறைவி டாதநி சாசரர் சேனைகள்
மடிய நீலக லாபம தேறிய
திறல்வி நோத‡ச மேளத யாபர அம்புராசித்-
திரைகள் போலலை மோதிய சீதள
குடக காவிரி நீளலை சூடிய
திரிசி ராமலை மேலுறை வீரகு திஞ்சிவாழும்;
மறவர் நாயக ஆதிவி நாயக
ரிளைய நாயக காவிரி நாயக
வடிவி னாயக ஆனந்த னாயக எங்கள்மானின்-
மகிழு நாயக தேவர்கள் நாயக
கவுரி நாயக னார்குரு நாயக
வடிவ தாமலை யாவையு மேவிய தம்பிரானே. ()

* 'தெரிகை பலபல வுடைய பெருமாளே' என்றும் பாடம்.
† இராசியம் = இரகசியம். ‡ சமேளம் = சமேளனம்: கலப்பு.

236\. வஞ்சக லோப மூடர் தம்பொரு ளூர்கள் தேடி
மஞ்சரி கோவை தூது பலபாவின்-
வண்புகழ் *பாரி காரி யென்றிசை வாது கூறி
†வந்தியர் போல வீணி லழியாதே;
செஞ்சர ணாத கீத கிண்கிணி நீப மாலை
திண்டிறல் வேல்ம யூர முகமாறும்-
செந்தமிழ் நாளு மோதி உய்ந்திட ஞான மூறு
செங்கனி வாயி லோர்சொ லருள்வாயே;
‡பஞ்சவ னீடு கூனு மொன்றிடு தாப மோடு
பஞ்சற வாது கூறு சமண்மூகர்-
பண்பறு பீலி யோடு வெங்கழு வேற வோது
பண்டித ஞான நீறு தருவோனே;
குஞ்சரம் யாளி மேவு பைம்புன மீது லாவு
குன்றவர் சாதி கூடி வெறியாடிக்-
கும்பிட நாடி வாழ்வு தந்தவ ரோடு வீறு
குன்றுதோ ருடல் மேவு பெருமாளே. (ச)

பு. 237. வஞ்சமே கோடி கோடிகள் நெஞ்சமே சேர மேவிய
வன்கணா ரார வாரமு மருள்வோராய்-
வம்பிலே வாது கூறிகள் கொஞ்சியே காம லீலைகள்
§வந்தியா ஆசை யேதரு விலைமாதர்;
பஞ்சமா பாவ மேதரு கொங்கைமேல் நேச மாய்வெகு
பஞ்சியே பேசி நாடொறு மெலியாதே-
பந்தியாய் வானு ளோர்தொழ நின்றசீ ரேகு லாவிய
பண்புசேர் பாத தாமரை யருள்வாயே;
அஞ்சவே சூர னனவ னுய்ஞ்சுபோ காம லேயயில்
அன்றுதா னேவி வானவர் சிறைமீள-
அன்பினோ டேம னோத மிஞ்சமே லான வாழ்வருள்
அண்டர்கோ வேப ராபர முதல்வோனே;

---

* பாரி, காரி—கடையெழு வள்ளல்களி லிருவர்.
† வந்தியர்=புகழ்ந்து கூறுவோர். ‡ பஞ்சவன் = பாண்டியன்.
§ வந்தியா=வந்தித்து : புகழ்ந்து.

கொஞ்சவே காலின் மேவுச தங்கைதா ளுட ஆடிய
கொன்றையா ளுரு மேமகிழ் புதல்வோனே-
கொந்துசேர் சோலை மேவிய குன்றுசூழ் வாக வேவரு
குன்றுதோ ருடல் மேவிய பெருமாளே. (ரு)

கயிலை மலை.

[இதனைத் தேவாரத்தில் நொடித்தான்மலை என்பர்.
வெள்ளியங்கிரி என்பதும் இதுவே.]

238. திருநிலை மருவிக் காலி *னிருவழி யடைபட் டோடி
சிவவழி யுடனுற் றேக பரமீதே-
சிவசுட ரதனைப் †பாவை மணமென மருவிக் கோல
‡திரிபுர மெரியத் தீயி னகைமேவி;
இருவினை பொரியக் கோல திருவரு ளுருவத் தேகி
யிருள்கதி ரிலிபொற் பூமி தவரூடே-
இருவரு முருகிக் காய நிலையென மருவித் தேவ
ரிளையவ னெனவித் தார மருள்வாயே;
பரிபுர கழ§லெட் டாசை செவிடுகள் படமுத் தேவர்
பழமறை பணியச் சூல மழுமானும்-
பரிவொடு சுழலச் சேடன் முடிநெறு நெறெனக்||கோவு
பரியினை மலர்விட் டாடி அடியோர்கள்;
¶அரஹர வுருகிச் சேசெ யெனதிரு நடனக் கோல
மருள்செயு முமைபிற் பாக ரருள்பாலா-
அலரணி குழல்பொற் பாவை○திருமக ளமளிப் போரொ
டடியவர் கயிலைக் கான பெருமாளே. (க)

* இரு வழி = இடைகலை பிங்கலை மார்க்கம். † பாவை மணம் என மருவல் = பிரதிமை விவாகம் போலப் பாவித்தல்.

‡ திரி புரம் = மும் மலம். § எட் டாசை = அஷ்ட திக்கு. || கோவு பரியினை மலர் விட்டு = இடபமாகிய பரியைப் பூமியில் விட்டு. ¶ அரஹர உருகி = அரஹர என உருகி.

○ திரு மகள் = இலக்குமியின் புத்திரி.

[கயிலைமலை.]

239. தேனுந்து முக்கனிகள் பால்செங் கருப்பிளநிர்
சீரும்ப ழித்தசிவ மருளூறத்-
தீதும்பி டித்தவினை யேதும்பொ டித்தவிழ
சிவன்சி வச்சொருப மெனதேறி ;
நானென்ப தற்றுயிரொ டேனென்ப தற்றுவெளி
நாதம்ப ரப்பிரம வொளிமீதே-
ஞானஞ்சு ரப்பமகி ழானந்த சித்தியொடெ
நாளுங்க ளிக்கபத மருள்வாயே ;
வானந்த மைக்கஅடி யேனுஞ்செ ழிக்கஅயன்
மாலும்பி ழைக்கஅலை விடமாள-
வாருங்க ரத்தனெமை யாளுந்த கப்பன்மழு
மானின்க ரத்தனருள் முருகோனே ;
தானந்த னத்ததன னவண்டு சுற்றிமது
தானுண்க டப்பமல ரணிமார்பா
தானங்கு றித்துஎமை யாளுந்தி ருக்கயிலை
சாலுங்கு றத்திமகிழ் பெருமாளே. (உ)

240. நகைத்து வுருக்கி விழித்து மிரட்டி
நடித்து விதத்தி லதிமோகம் -
நடத்து சமத்தி முகத்தை மினுக்கி
நலத்தி லணைத்து மொழியாலுந் ;
திகைத்த வரத்தி லடுத்த பொருட்கை
திரட்டி யெடுத்து வரவேசெய்-
திருட்டு முலைப்பெண் மருட்டு வலைக்குள்
தெவிட்டு கலைக்குள் விழுவேனோ ;
பகைத்த அரக்கர் சிரத்தை யறுத்து
படர்ச்சி கறுத்த மயிலேறிப் -
பணைத்த கரத்த குணத்த மணத்த
பதத்த கனத்த தனமாதை ;
மிகைத்த புனத்தி விருத்தி யணைத்து
*வெளுத்த பொருப்பி லுறைநாதா-
விரித்த சடைக்கு ளொருத்தி யிருக்க
†ம்ருகத்தை யெடுத்தொர் பெருமாளே. (ஙு)

---

* வெளுத்த பொருப்பு = வெள்ளி மலை : கயிலை.

† ம்ருகத்தை யெடுத்தோர் = மானேந்தி யாகிய சிவபெருமான்.

241. பனியின் விந்துளி போலவே கருவினூறு
மளவி லங்கொரு சூசமாய் மிளகு*துவர்
பனைதெ னங்கனிபோலவே†பலகனியின் வயிறூகிப்-
பருவ முந்தலை கீழதாய் நழுவிநில
மருவி யொன்பது வாசல்சே ருருவமுள
பதுமை யின்செயல் போலவே வளிகயிறி
னுடனூடி ;

மனவி தந்தெரி யாமலே மலசலமொ
டுடல்ந கந்தழு தாறியே அனைமுலையின்
மயம யின்றொரு பாலனு யிகமுடைய செயல்மேவி-
வடிவ முன்செய்த தீமையா ‡லெயுமுனையும்
அறம றந்§தக மீதுபோய் தினதினமு
மனம ழிந்துடல் நாறினே னினியுனது
கழல்தாராய் ;

தனன தந்தன தானனு தனதனன
தினன திந்தன தீததோ திகுததிகு
தகுத குந்ததி தாகுதோ வெனமுழவு வளைபேரி-
தவில்க ணம்பறை காளமோ டிமிலைதொனி
யினமு ழங்கெழு வேலைபோ லதிரபொரு
சமர்மு கங்களின் மேவியே விருதுசொலு
மவுணோர்கள் ;

சினம ழிந்திட தேர்கள்‖தோ லரிபரிகள்
குருதி யெண்டிசை மூடவே அலகைநரி
சிறையி னங்களி கூரவே நகையருளி விடும்வேலா-
சிவன்ம கிழ்ந்தரு ளானைமா முகன்மருவி
மனம கிழ்ந்தருள் கூரவோர் கயிலைமகிழ்
திகழ்கு றிஞ்சியின் மாதுமால் மருகபுகழ்
பெருமாளே. (௪)

---

* துவர்=பாக்கு. † பல கனி=பலாக் கனி.
‡ எயு முனையும்=ஏயும் உனையும். § அகம்=பாவம்.
‖ தோல்=யானை.

[கயிலைமலை.]

242. *புமியதனிற் ப்ரபுவான-
புகலியில்வித் தகர்போல;
அமிர்தகவித் தொடைபாட-
அடிமைதனக் கருள்வாயே;
சமரி†லெதிர்த் தசுர்மாளத்-
தனியயில்விட் டருள்வோனே;
நமசிவயப் பொருளானே-
‡ரசதகிரிப் பெருமாளே. (ரு)

243. முகத்தைப் பிலுக்கி மெத்த
மினுக்கித் தொடைத்து ரத்ந
முலைக்கச் சவிழ்த்த சைத்து முசியாதே-
முழுக்கக் கழுப்பி யெத்தி
மழுப்பிப் பொருட்ப றித்து
மொழிக்குட் படுத்த ழைத்த மளிமீதே;
நகைத்திட் டழுத்தி முத்த
மளித்துக் களித்து மெத்த
நயத்திற் கழுத்தி றுக்கி யணைவார்பால்-
நடுக்குற் றவர்க்கு மெத்த
மனத்தைப் பெருக்க வைத்து
நயத்துத் தியக்கி நித்த மழிவேனோ;
செகக்கச் செகக்க செக்க
தரிக்கத் தரிக்க தக்க
திமித்தித் திமித்தி தித்தி யெனஆடும்-
செகத்துக் கொருத்தர் புத்ர
நினைத்துத் துதித்த பத்த
ஜெனத்துக் கினித்த சித்தி யருள்வோனே;
மிசைத்துத் திடத்தொ டுற்று
அசைத்துப் பொறுத்த ரக்கன்
மிகுத்துப் பெயர்த்தெ டுத்த கயிலாய-

* பூமி என்பது புமி என்றாயிற்று. † எதிர்த்த சுர் = எதிர்த்த சூர்; சூர் = சூரன். ‡ ரசத கிரி = வெள்ளியங் கிரி.

மிசைக்கூற் றடுத்து மற்ற
பொருப்பைப் பொடித்தி டித்து
மிதித்துத் துகைத்து விட்ட பெருமாளே. (௬)

ஸ்ரீ சைலம்.

[இதனைத் திருமலை எனவும திருப்பருப்பதம் எனவும் மல்லி கார்ச்சுனபுரம் எனவுங் கூறுவர். மூவர் தேவாரமும் பெற்ற ஸ்தலம். கர்நூல் ஜில்லா நந்தியாலி லிருந்து 60-மைல். இங்குச் சிவராத்திரி தரிசனம் விசேஷம்.]

244. ஒருபது மிருபது மறுபது முடனறு
முணர்வுற இருபத முளநாடி -
உருகிட முழுமதி தழலென வொளிதிகழ்
வெளியொடு வொளிபெற விரவாதே;
தெருவினில் மரமென எவரொடு முரைசெய்து
திரிதொழி லவமது புரியாதே -
திருமகள் மருவிய திரள்புய அறுமுக
தெரிசனை பெறஅருள் புரிவாயே;
பரிவுட னழகிய பழமொடு கடலைகள்
பயறொடு சிலவகை பணியாரம் -
பருகிடு பெருவயி றுடையவர் பழமொழி
எழுதிய கணபதி யிளையோனே;
பெருமலை யுருவிட அடியவ ருருகிட
பிணிகெட அருள்தரு குமரேசா -
பிடியொடு களிறுகள் நடையிட கலைதிரள்
பிணையமர் *திருமலை பெருமாளே. (௧)

* திருமலை என்றே ஒரு பிரபல சுப்ரமண்ய ஸ்தலம் தென்காசி-குற்றாலத்துக்குச் சமீபத்திற் செங்கோட்டை ரெயில்வே ஸ்டேஷனுக்கு வடமேற்கு 5-மைல் தூரத்தி லுள்ளது.

குன்றுதோருடல்.

திருவேங்கடம்.

[திருவேங்கடம், வடமலை என்பன திருப்பதி. சித்தூர் ஜில்லாவில் உள்ளது. ரெயில்வே ஸ்டேஷன். பிரபல விஷ்ணு ஸ்தலம். ஸ்வாமிகள் காலத்தில் விஷ்ணு ஆலயம் முருகர் ஆலயம் இரண்டும் இத்தலத்தில் இருந்திருத்தல் வேண்டும் என்பது இத்தலத்துக்குத் திருப்புகழ் இருப்பதாலும், ஸ்வாமிகளே "உலகீன்ற பச்சை யுமை யணன் வடவேங் கடத்தி லுறைபவன்" எனத் திருவாஞ்சியத்துத் திருப்புகழிற் (816) கூறுதலாலும் பெறப்படுகின்றது.]

---

245. கறுத்ததலை வெளிறு மிகுந்து
மதர்த்தஇணை விழிகள் குழிந்து
கதுப்பிலுறு தசைகள் வறண்டு செவிதோலாய்க்
கழுத்தடியு மடைய வளைந்து
கனத்தநெடு முதுகு குனிந்து
கதுப்புறுப லடைய விழுந்*து தடுநீர்சோ;
ருறக்கம்வரு மளவி லெலும்பு
குலுக்கிவிடு மிருமல் தொடங்கி
உரத்தகன குரலு நெரிந்து தடிகாலாய் -
உரத்நடை தளரு முடம்பு
பழுத்திடுமுன் மிகவும் விரும்பி
உனக்கடிமை படுமவர் தொண்டு புரிவேனோ;
சிறுத்த†செலு வதனு ளிருந்து
பெருத்ததிரை யுததி கரந்து
செறித்தமறை கொணர நிவந்த ஜெயமா‡லே -
செறித்தவளை கடலில் வரம்பு
புதுக்கியிளை யவனொ டறிந்து
செயிர்த்தஅநு மனையு முகந்து படையோடி;

---

* உ தடு நீர் சோர் உறக்கம் வருமளவில் எனப் பிரிக்க.

† செலு = மீன்சிறை. ‡ எ செறித்து அ வளை கடலில் = பாணம் பிரயோகஞ் செய்து அந்த வளைந்த கடலில்.

மறப்புரிசை வளையு மிலங்கை
யரக்கனொரு பதுமுடி சிந்த
வளைத்தசிலை விஜய முகுந்தன் மருகோனே -
மலர்க்கமல வடிவுள செங்கை
அயிற்குமர *குகைவழி வந்த
மலைச்சிகர வடமலை நின்ற பெருமாளே. (௧)

246. தேரங்கிள நீரிளக வீங்குப யோதரமும்
வாங்கிய வேல்விழியும் இருள்கூருங் -
கூந்தலு நீள்வளைகொள் காந்தளு நூலிடையும்
மாந்தளிர் போல்வடிவும் மிகநாடிப்;
பூங்கொடி யார்கலவி நீங்கரி தாகிமிகு
தீங்குட னேயுழலும் உயிர்வாழ்வு -
பூண்டடி யேனெறியில் மாண்டிங னேநரகில்
வீழ்ந்தலை யாமலருள் புரிவாயே;
பாங்கியும் வேடுவரும் ஏங்கிட மாமுநியும்
வேங்கையு மாய்மறமின் னுடன்வாழ்வாய் -
பாண்டவர் தேர்கடவும் நீண்டபி ரான்மருக
பாண்டிய னீறணிய மொழிவோனே;
வேங்கையும் வாரணமும் வேங்கையு மானும்வளர்
வேங்கட மாமலையி லுறைவோனே -
வேண்டிய போதடியர் வேண்டிய போகமது
வேண்டவெ றுதவு பெருமாளே. (௨)

247. சாந்தமில் மோகவெரி காந்திய வாவனில
மூண்டவி யாதசம யவிரோத -
சாங்கலை வாரிதியை நீந்தவொ ணாதுலகர்
தாந்துணை யாவரென மடவார்மேல்;

---

* "அண்ட மன்னுயி ரீன்றவ ளுடன்முனி வாகித்
தொண்ட கங்கெழு சுவாமிதன் மால்வரை துறந்து
மண்டு பாதலத் தேகியே யோர்குகை வழியே
பண்டு தான்வரு வேங்கட கிரியையும் பார்த்தான்."—
என்று கச்சியப்ப சிவாசாரிய ஸ்வாமிகள் கந்தபுராணத்தில் வழி நடைப் படலத்திற் கூறியிருத்தலையுங் காண்க.

[திருவேங்கடம்.]

ஏந்திள வார்முலைமீ சாந்தணி மார்பினொடு
தோய்ந்துரு காவறிவு தடுமாறி-
ஏங்கிட ஆருயிரை வாங்கிய காலன்வசம்
யான்தனி போய்விடுவ தியல்போதான்;
காந்தளி னனகர மான்தரு கானமயில்
காந்தவி சாகசர வணவேளே-
காண்டகு தேவர்பதி யாண்டவ னேசுருதி
யாண்டகை யேயிபமின் மணவாளா;
வேந்தகு மாரகுக சேந்தம யூரவட
வேங்கட மாமலையி லுறைவோனே-
வேண்டிய போதடியர் வேண்டிய போகமது
வேண்டவெ றாதுதவு பெருமாளே. (௩)

248. **வ**ரிசேர்ந்திடு சேல்கய லோவெனு
முறைவார்ந்திடு வேலையு நீலமும்
வடுவாங்கிடு வாள்விழி மாதர்கள் வலையாலே-
வளர்கோங்கிள மாமுகை யாகிய
தனவாஞ்சையி லேமுக மாயையில்
வளமாந்தளிர் போல்நிற மாகிய வடிவாலே;
இருள்போன்றிடு வார்குழல் நீழலில்
மயல்சேர்ந்திடு பாயலின் மீதுற
இனிதாங்கனி வாயமு தூறல்கள் பருகாமே-
எனதாந்*தன தானவை போயற
மலமாங்கடு மோகவி காரமு
மிவைநீங்கிட வேயிரு தாளிணை யருள்வாயே;
கரிவாம்பரி தேர்திரள் சேனையு
முடனாந்துரி யோதன னாதிகள்
களமாண்டிட வேயொரு பாரத மதிலேகிக்-
கனபாண்டவர் தேர்தனி லேயெழு
பரிதூண்டிய சாரதி யாகிய
கதிரோங்கிய நேமிய னாமரி ரகுராமன்;

* தனது = சிநேகம்.

திரைநீண்டிரை வாரியும் வாலியும்
நெடிதோங்கும ராமர மேழொடு
தெசமாஞ்சிர ராவண னார்முடி பொடியாகச்-
சிலைவாங்கிய நாரண னார்மரு
மகனுங்குக னேபொழில் சூழ்தரு
திருவேங்கட மாமலை மேவிய பெருமாளே. (௪)

திருத்தணிகை.

[இது சித்தூர் ஜில்லாவிலுள்ளது.—ரெயில்வே ஸ்டேஷன்.

முருகக்கடவுள் வள்ளியம்மை பொருட்டு வேடரோடு செய்த கலகங் காரணமான கோபமும், முன்னஞ் சூரனொடுசெய்த போர்க் காரணமான கோபமுந் தணிந்து, ஸ்ரீ வள்ளி தெய்வயானை சமேதராய் வீற்றிருக்குந் திருப்பதி யாதலின் இது தணிகை, செருத்தணி எனப் பெயர்பெறும். மலையின்கண் நீலோற்பலச் சுனை யிருப்பதால் இதனை உற்பலகிரி, கல்லாரகிரி யெனவுங் கூறுவர். புறம்பயத்துத் தேவாரத்தில் அப்பர் சுவாமிகள் "கன்மலிந்த கழுநீர்க் குன்றம்" என்றது கவனிக்கற்பாலது. ஆசிரியர் ஈண்டு நிர்த்த தரிசனத்தை விசேடித்துக் கூறுகின்றனர் — (285, 308). தீர்த்தம்—சரவணப் பொய்கை; மிக விசேஷமானது; "திருக்குள நாளும் பலத்திசை மூசுஞ் சிறப்பு" (258) இன்றும் பிரத்தியக்ஷமாய்க் காணலாகும். "புவிக்குயி ராகுந் திருத்தணி (258)" என்பதால் இத்தலத்துப் பெருமை விளங்கும்.

மிகவும் உயரிய நடையிற் கச்சியப்பமுனிவர் பாடியருளிய ஸ்தலபுராண மொன் றுளது. ஸ்ரீ கந்தப்பதேசிகர் பாடிய "தணிகைச் சந்நிதிமுறை" யொன் றுளது.]

249. அமைவுற் றடையப் பசியுற் றவருக்
கமுதைப் பகிர்தற் கிசையாதே-
அடையப் பொருள்கைக் கிளமைக் கெனவைத்
தருள்தப் பிமதத் தயராதே;
தமர்சுற் றியழப் பறைகொட் டியிடச்
சமனெட் டுயிரைக் கொடுபோகுஞ்-

[திருத்தணிகை.]

சரிரத் தினைநிற் குமெனக் கருதித்
தளர்வுற் றுழியக் கடவேனோ;
இமயத் துமயிற் கொருபக் கமளித்
தவருக் கிசையப் புகல்வோனே-
*இரணத் தினிலெற் றுவரைக் கழுகுக்
கிரையிட் டடுவிக் ரமவேலா;
†சமயச் சிலுகிட் டவரைத் தவறித்
தவமுற் றவருட் புகநாடும் -
சடுபத் மமுகக் குகபுக் ககனத்
தணியிற் குமரப் பெருமாளே. (க)

250. குவளைக் கணைதொட் டவனுக் குமுடிக்
குடையிட் டகுறைப் பிறையாலே-
குறுகுற் றஅலர்த் தெரிவைக் குமொழிக்
குயிலுக் குமினித் தளராதே;
இவளைத் துவளக் கலவிக் குநயத்
திறுகத் தழுவிப் புயமீதே-
இணையற் றழகிற் புனையக் கருணைக்
கினிமைத் தொடையைத் தரவேணும்;
கவளக் கரடக் கரியெட் டலறக்
கனகக் கிரியைப் பொரும்வேலா-
கருதிச் ‡செயலைப் புயனுக் குருகிக்
கலவிக் கணயத் தெழுமார்பா;
பவளத் தரளத் திரளக் குவைவெற்
பவையொப் புவயற் புறமீதே-
பணிலத் திரள்மொய்த் ததிருத் தணிகைப்
பதியிற் குமரப் பெருமாளே. (உ)

* இரணம்=யுத்தம். † சமயச் சிலுகு=மதப் போராட்டம்.
‡ செயலைப் புயன்=அசோகமலர்க் கணையைக் கையி லுடைய மன்மதன்; செயலை=அசோகு.

251. பெரியப் பொரியப் பொலிமுத் துவடத்
துகளிற் புதையத் தனமீதே -
புரளப் புரளக் கறுவித் தறுகட்
பொருவிற் சுறவக் கொடிவேள்*தோள் ;
தெரிவைக் †கரிவைப் பரவைக் குருகிச்
செயலற் றனள்கற் பழியாதே -
செறிவுற் றணையிற் றுயிலுற் றருமைத்
தெரிவைக் குணர்வைத் தரவேணும் ;
சொரிகற் பகநற் பதியைத் தொழுகைச்
சுரருக் குரிமைப் புரிவோனே -
சுடர்பொற் கயிலைக் கடவுட் கிசையச்
சுருதிப் பொருளைப் பகர்வோனே ;
தரிகெட் டசுரப் படைகெட் டொழியத்
தனிநெட் டயிலைத் தொடும்வீரா -
தவளப் பணிலத் தரளப் பழனத்
தணிகைக் குமரப் பெருமாளே. (ந)

252. அருக்கிமெத் தெனச்சிரித் துருக்கியிட் டுளக்கருத்
தழித்தறக் கறுத்தகட் பயிலாலே -
அழைத்தகப் படுத்தியொட் டறப்பொருட் பறிப்பவர்க்
கடுத்தபத் தமுற்றுவித் தகர்போலத் ;
தரிக்கும்வித் தரிக்குமிக் கதத்துவப் ப்ரசித்தியெத்
தலத்துமற் றிலைப்பிறர்க் கெனஞானம் -
சமைத்துரைத் திமைப்பினிற் சடக்கெனப் படுத்தெழச்
சறுக்குமிப் பிறப்புபெற் றிடலாமோ ;
பொருக்கெழக் கடற்பரப் பரக்கர்கொத் திறப்புறப்
பொருப்பினிற் பெருக்கவுற் றிடுமாயம் -
புடைத்திடித் தடற்காத் துறப்பிடித் தகற்பகப்
புரிக்கிரக் கம்வைத்தபொற் கதிர்வேலா ;

* தோள்-தெரி-வை=கை தெரிந் தெய்யுங் கூர்மையான பாணம். † அரிவை=அலர் தூற்று மகளிர்.

[திருத்தணிகை.]

திருத்தமுத் தமிழ்க்கவிக் கொருத்தமைக் குறத்தியைத்
தினைப்புனக் கிரித்தலத் திடைதோயுஞ்-
சிவத்தருக் குடக்கொடிச் செருக்கவுற் பலச்சுனைச்
சிறப்புடைத் திருத்தணிப் பெருமாளே. (ச)

253. கடற்செகத் தடக்கிமற் றடுத்தவர்க் கிடுக்கணைக்
கடைக்கணிற் கொடுத்தழைத் தியல்காமக்-
கலைக்கதற் றுரைத்துபுட் குரற்கள்விட் டௌத்தினைக்
கரைத்துடுத் தபட்டவிழ்த் தணைமீதே;
சடக்கெனப் புகத்தனத் தணைத்திதழ்க் கொடுத்துமுத்
தமிட்டிருட் குழற்பிணித் துகிரேகை-
சளப்படப் புதைத்தடித் *திலைக்குணக் கடித்தடத்
தலத்தில்வைப் பவர்க்கிதப் படுவேனோ;
இடக்கடக் குமெய்ப்பொருட் டிருப்புகழ்க் குயிர்ப்பளித்
தெழிற்றினைக் கிரிப்புறத் துறைவேலா-
இகற்செருக் காக்கரைத் தகர்த்தொலித் துரத்தபச்
சிறைச்சியைப் பசித்திரைக் கிசைகூவும்;
பெடைத்திரட் களித்தருக் குடக்கொடிக் கரத்தபொய்ப்
பிதற்றறப் படுத்துசற் குருவாய்முன்-
பிறப்பிலிக் குணர்த்துசித் தவுற்றநெற் பெருக்குவைப்
பெருக்கு†மெய்த் திருத்தணிப் பெருமாளே. (ரு)

254: கனத்தறப் பணைத்தபொற் கழைப்புயத் தனக்கிரிக்
‡கனத்தையொத் துமொய்த்தமைக் குழலார்தங்-
கறுத்தமைக் கயற்கணிற் கருத்துவைத் தொருத்தநிற்
கழற்பதத் தடுத்திடற் கறியாதே;
இனப்பிணிக் கணத்தினுக் கிருப்பெனத் திருத்தியொத்
திசைத்தசைத் தசுக்கிலத் தசைதோலால்-
எடுத்தபொய்க் கடத்தினைப் பொறுக்குமிப் பிறப்பறுத்
தெனக்குநித் தமுத்தியைத் தரவேணும்;

* இலைக் குணம்=அரசிலையின் தன்மையை யொத்த.

† 'செய்ப் பதிப்பிளைப் பெருமாளே' என்றும் பாடம்.

‡ கனம்=மேகம்.

*பனைக்கரச் சினத்திபத் தனைத்துரத் தரக்கனைப்
†பயத்தினிற் பயப்படப் பொரும்வேலா -
பருப்பதச் செருக்கறத் துகைக்குமுட் பதத்தினைப்
படைத்தகுக் குடக்கொடிக் குமரேசா;
தினைப்புனப் பருப்பதத் தினிற்குடிக் குறத்தியைச்
செருக்குறத் திருப்புயத் தணைவோனே -
திருப்புரப் புறத்தியற் றிருத்தகுத் ‡துகித்திலத்
திருத்திசைத் திருத்தணிப் பெருமாளே. (௬)

255. பருத்தபற் சிரத்தினைக் குருத்திறற் கரத்தினைப்
பரித்தவப் பதத்தினைப் பரிவோடே -
படைத்தபொய்க் குடத்தினைப் பழிப்பவத் திடத்தினைப்
பசிக்குடற் கடத்தினைப் பயமேவும்;
பெருத்தபித் துருத்தனைக் கருத்திமத் துருத்தியைப்
பிணித்த§முக் குறத்தொடைப் புலனாலும் -
பிணித்தவிப் பிணிப்பையைப் பொறுத்தமிழ்ப் பிறப்பறக்
குறிக்கருத் தெனக்களித் தருள்வாயே;
கருத்திலுற் றுரைத்தபத் தரைத்தொறுத் திருக்கரைக்
கழித்தமெய்ப் பதத்தில்வைத் திடுவீரா -
கதித்தநற் றினைப்புனக் கதித்தநற் குறத்தியைக்
கதித்தநற் றிருப்புயத் தணைவோனே;
செருத்தெறுத் தெதிர்த்தமுப் புரத்துரத் தரக்கரைச்
சிரித்தெரித் தநித்தர்பொற் குமரேசா -
சிறப்புறப் பிரித்தறத் திறத்தமிழ்க் குயர்த்திசைச்
சிறப்புடைத் திருத்தணிப் பெருமாளே. (௭)

256. எனக்கென யாவும் படைத்திட நாளும்
இளைப்பொடு காலந் தனிலோயா -
எடுத்திடு காயந் தனைக்கொடு மாயும்
இலச்சையி லாதென் பவமாற;

---

* பனைக்கரச் சினத் திபத்தன் = தேவேந்திரன்.
† பயம் = (சமுத்திரமாகிய) ஜலம். ‡ து = தூ : பரிசுத்தமாகிய.
§ முக்குறத் தொடைப்புல னாலும் = முக்குற்றத்தொடு ஐம்புல னாலும்.

[திருத்தணிகை.]

உனைப்பல நாளுந் திருப்புகழாலும்
உரைத்திடு வார்தங் குளிமேவி-
உணர்த்திய போதந் தனைப்பிரியாதொண்
பொலச்சரணுங் தொழுவேனோ;
வினைத்திறமோடன் றெதிர்த்திடும் வீரன்
விழக்கொடு வேல்கொன் றவனீயே-
விளப்பென மேலென் றிடக்கயனரும்
விருப்புற வேதம் புகல்வோனே;
சினத்தொடு சூரன் தனைக்கொடு வேலின்
சிரத்தினை மாறும் முருகோனே-
தினைப்புன மேவுங் குறக்கொடி யோடுந்
திருத்தணி மேவும் பெருமாளே. (அ)

257. பெருக்கவு பாயங் கருத்துடையோர்தம்
ப்ரபுத்தன பாரங் களிலேசம் -
ப்ரமத்துடனாளும் ப்ரமித்திருள் கூறும்
ப்ரியக்கடலாடுந் தணியாத;
கருக்கடலாடுங் கதற்றுமநேகங்
கலைக்கடலாடுஞ் சுழலாதே -
கடப்பலர் சேர்கிண் கிணிப்ரபை வீசுங்
கழற்புணை நீதந் தருள்வாயே;
தருக்கிய வேதன் சிறைப்படநாளுஞ்
சதுர்த்தச லோகங் களும்வாழச் -
சமுத்திர மேழுங் குலக்கிரி யேழுஞ்
சளப்படமாவுந் தனிவீழத்;
திருக்கையில் வேலொன் றெடுத்தமராடுஞ்
செருக்கு மயூரந் தனில்வாழ்வே -
சிறப்பொடு ஞானந் தமிழ்த்ரய நீடுந்
திருத்தணி மேவும் பெருமாளே. (௯)

258. மருக்குல மேவுங் குழற்கனி வாய்வெண்
மதிப்பிள வாகும் நுதலார்தம் -
மயக்கினி லேகண் புறப்படு வேனுன்
மலர்க்கழல் பாடுந் திறநாடாத் ;
தருக்கனு தாரந் துணுக்கிலி லோபன்
சமத்தறி யாவன் பிலிமூகன் -
தலத்தினி லேவந் துறப்பணி யாதன்
தனக்கினி யார்தஞ் சபைதாராய் ;
குருக்குல ராஜன் தனக்கொரு தூதன்
குறட்பெல மாயன் நவநீதங் -
குறித்தயில் நேயன் திருப்பயில் மார்பன்
குணத்ரய நாதன் மருகோனே ;
திருக்குள நாளும் பலத்திசை மூசும்
சிறப்பது ளஎண் டிசையோடும் -
திரைக்கடல் சூழும் புவிக்குயி ராகுந்
திருத்தணி மேவும் பெருமாளே. (கo)

259. வினைக்கின மாகுந் தனத்தினர் வேளம்
பிணுக்கெதி ராகும் விழிமாதர் -
மிகப்பல மானந் தனிற்புகு தா*வெஞ்
சமத்திடை போய்வெந் துயர்மூழ்கிக் ;
கனத்தவி சாரம் பிறப்படி தோயுங்
கருக்குழி தோறுங் கவிழாதே -
கலைப்புல வோர்பண் படைத்திட வோதுங்
கழற்புக ழோதுங் கலைதாராய் ;
புனத்திடை போய்வெஞ் சிலைக்குற வோர்வஞ்
சியைப்புணர் வாகம் புயவேளே -
பொருப்பிரு கூறும் படக்கடல் தானும்
பொருக்கெழ வானும் புகைமூளச் ;
சினத்தொடு சூரன் கனத்திணி மார்பந்
திறக்கம ராடுந் திறல்வேலா -
திருப்புக ழோதுங் கருத்தினர் சேருந்
திருத்தணி மேவும் பெருமாளே. (கக)

* வெஞ் சமம்=வெம்மையாகிய போர்.

[திருத்தணிகை.]

260. இருமலு ரோக முயலகன் வாத
மெரிகுண நாசி விடமேநீ-
ரிழிவுவி டாத தலைவலி சோகை
யெழுகள மாலை யிவையோடே;
பெருவயி றீளை யெரிகுலை சூலை
பெருவலி வேறு முளநோய்கள்-
பிறவிக டோறு மெனைநலி யாத
படியுன தாள்க ளருள்வாயே;
வருமொரு கோடி யசுரர்ப தாதி
மடியஅ நேக இசைபாடி-
வருமொரு கால வயிரவ ராட
வடிசுடர் வேலை விடுவோனே;
தருநிழல் மீதி லுறைமுகி லூர்தி
தருதிரு மாதின் மணவாளா-
சலமிடை பூவி னடுவினில் வீறு
தணிமலை மேவு பெருமாளே. (கஉ)

261. கலைமட வார்தஞ் *சிலையத னாலுங்
கனவளை யாலுங் கரைமேலே -
கருகிய காளம் பெருகிய தோயங்
கருதலை யாலுஞ் †சிலையாலுங் ;
கொலைதரு காமன் பலகணை யாலுங்
கொடியிடை யாள்நின் றழியாதே -
குரவணி நீடும் புயமணி நீபங்
குளிர்தொடை நீதந் தருள்வாயே ;
சிலைமகள் நாயன் கலைமகள் நாயன்
திருமகள் நாயன் தொழும்வேலா-

---

* சிலை=(வசை) ஒலி. † சிலை ஆலும்=வில்லினிடத்து அசைகின்ற.

தினைவன மானும் *கநவன மானுஞ்
செறிவுடன் மேவுந் திருமார்பா;
தலமகள் மீ†தெண் புலவரு லாவுந்
தணிகையில் வாழ்செங் கதிர்வேலா-
தனியவர் கூருந் தனிகெட நாளுந்
தனிமயி லேறும் பெருமாளே. (கங)

262. கரிக்குழல் விரித்தும் புறக்கயல் விழித்துங்
கரிக்குவ டிணைக்குந் தனபாரக்-
காத்திடு வளைச்சங் கிலிச்சர மொலித்துங்
கலைத்துகில் மினுக்யும் பணிவாரைத்;
தரித்துள மழிக்குங் கவட்டர்க ளிணக்கந்
தவிர்த்துனது சித்தங் களிகூரத்-
தவக்கடல் குளித்திங் குனக்கடி மையுற்றுன்
தலத்தினி லிருக்கும் படிபாராய்;
புரத்தையு மெரித்தங் கயத்தையு முரித்தோண்
‡பொடிப்பணி யெனப்பன் குருநாதா-
புயப்பணி கடப்பந் தொடைச்சி காமுற்றின்
புகழ்ச்சிய முதத்தின் புலவோனே;
திரட்பரி கரிக்கும் பொடிப்பட வுணர்க்குந்
தெறிப்புற விடுக்குங் கதிர்வேலா-
சிறப்பொடு குறப்பெண் களிக்கும்வி ஜயத்தென்
திருத்தணி யிருக்கும் பெருமாளே. (கச)

263. சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்குஞ்
செகுத்தவ ருயிர்க்குஞ் சினமாகச்-
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்குந்
திருப்புகழ் நெருப்பென் றறிவோம்யாம்;

---

* கந வன மான் = தெய்வயானை. கநவனம் = கம்+ந+வனம் = விண்ணுலகத்துள்ள மேன்மை பொருந்திய கற்பகவனம்; கனம் வனம் எனப்பிரித்துப் பொன்மயமாகிய கற்பகவனம் என்றும் பொருள் கொள்ளலாம். † எண் புலவர் = மதிக்கப்படுந் தேவர்.

‡ பொடி பணி என் அப்பன் எனப்பிரித்து, திருநீற்றினையும் பாம்பினையும் அணிந்த என் அப்பன் எனப் பொருள்கொள்க.

[திருத்தணிகை.]

நினைத்தது மளிக்கும் மனத்தையு முருக்கும்
நிசிக்கரு வறுக்கும் பிறவாமல் -
நெருப்பையு மெரிக்கும் பொருப்பையு மிடிக்கும்
நிறைப்புக ழுரைக்குஞ் செயல்தாராய்;
தனத்தன தனத்தந் திமித்திமி திமித்திந்
தகுத்தகு தகுத்தந் தனபேரி—
தடுட்டுடு டுடுட்டுண் டெனத்துடி முழக்குந்
தளத்துட னடக்குங் கொடுசூரர்;
சினத்தையு முடற்*சங் கரித்தம லைமுற்றுஞ்
சிரித்தெரி கொளுத்துங் கதிர்வேலா-
தினைக்கிரி குறப்பெண் தனத்தினில் சுகித்தெண்
திருத்தணி யிருக்கும் பெருமாளே. (கரு)

264. தொக்கறாக் குடில சுத்தமேற் றசுக
துக்கமாற் கடமு மலமாயை —
துற்றகாற் பதலை சொற்படாக் குதலை
துப்பிலாப் பலச மயநூலைக்;
கைக்கொளாக் கதறு கைக்கொளாக் கையவ
லப்புலாற் றசைகு ருதியாலே —
கட்டுகூட் டருவ ருப்புவேட் டுழல
சட்டவாக் கழிவ தொருநாளே;
அக்கராப் பொடியின் மெய்க்கிடாக் குரவர்
அர்ச்சியாத் தொழுமு நிவனைய —
அப்பபோர்ப் பனிரு வெற்பமூத் தணியல்
வெற்பபார்ப் பதிந திருமாரா;
இக்கணேக் குறில்நி ருத்தநோக் குறுத
வத்தினோர்க் குதவு மிளையோனே—
†எத்திடார்க் கரிய முத்தபாத் தமிழ்கொ
‡டெத்தினர்க் கெளிய பெருமாளே. (௬௬)

---

* சங்கரித்து அம் மலை முற்றம் எனப் பிரிக்க.

† எத்திடார்க்கு=ஏத்திடார்க்கு. ‡ எத்தினர்க்கு=ஏத்தினர்க்கு.

265. வட்டவாட் டனம லைச்சிபாற் குதலை
மக்கள்தாய்க் கிழவி பதிநாடு—
வைத்ததோட் டமனை யத்தமீட் டுபொருள்
மற்றகூட் டமறி வயலாக;
முட்டவோட் டிமிக வெட்டுமோட் டெருமை
முட்டர்பூட் டியெனை யழையாமுன்—
முத்திவீட் டணுக முத்தராக் கசுரு
திக்குராக் கொளிரு கழல்தாராய்;
பட்டநாற் பெரும ருப்பினுற் கரஇ
பத்தின்வாட் பிடியின் மணவாளா—
பச்சைவேய்ப் *பணவை கொச்சைவேட் டுவர்ப
திச்சிதோட் புணர்த ணியில்வேளே;
எட்டுநாற் கர†வொ ருத்தல்மாத் திகிரி
யெட்டுமாக் குலைய எறிவேலா—
எத்திடார்க் கரிய முத்தபாத் தமிழ்கொ
டெத்தினூர்க் கெளிய பெருமாளே. (கஎ)

266. ‡சினத்தி லத்தினை சிறுமண லளவுடல்
செறித்த தெத்தனை சிலைகட லினிலுயிர்
செனித்த தெத்தனை திரள்கய லெனபல
வதுபோதா—
§செமித்த தெத்தனை மலைசுனை யுலகிடை
செழித்த தெத்தனை சிறுதன மயல்கொடு
செடத்தி லெத்தனை நமனுயிர் பறிகொள்வ
தளவேதோ;
மனத்தி லெத்தனை நினைகவ டுகள்குடி
கெடுத்த தெத்தனை மிருகம தெனவுயிர்
வதைத்த தெத்தனை யளவில விதிகா
மொழியாமல்—

---

* பணவை = பரண். † ஒருத்தல் = யானை.
‡ சின திலம் தினை = சின்ன எள்ளு, தினை.
§ செமித்தது = சென்மித்தது.

[திருத்தணிகை.]

வகுத்த தெத்தனை மசகனை முருடனை
மடைக்கு லத்தனை மதியழி விரகனை
மலர்ப்ப தத்தினி லுருகவு மினியருள் புரிவாயே;

தனத்த னத்தன தனதன தனதன
திமித்தி மித்திமி திமிதிமி திமிதிமி
தகுத்த குத்தகு தகுதகு தகுதகு தகுதீதோ-

தரித்த ரித்தரி தரிரிரி ரிரிரிரி
தடுட்டு டுட்டுடு டுடுடு டுடுடு
தமித்த மத்தள தமருக விருதொலி கடல்போலச்;

சினத்த மர்க்கள செருதிகழ் குருதிய
திமிழ்த்தி டக்கரி யசுரர்கள் பரிசிலை
தெறித்திடக்கழு நரிதின நிணமிசை பொரும்வேலா-

செழிக்கு முத்தம சிவசர ணர்கள்தவ
முனிக்க ணத்தவர் மதுமலர் கொடுபணி
திருத்த ணிப்பதி மருவிய குறமகள் பெருமாளே.

267. தொடத்து ளக்கிகள் அபகட நினைவிகள்
குருட்டு மட்டைகள் குமரிகள் கமரிகள்
சுதைச்சி றுக்கிகள் *குசலிக †ளிசலிகள்
முழுமோசந்-

துறுத்த மட்டைகள் அசடிகள் கசடிகள்
முழுப்பு ரட்டிகள் நழுவிகள் ‡மழுவிகள்
§துமித்த மித்திரர் விலைமுலை யினவலை
புகுதாமல்;

---

* குசலிகள் = தந்திரவாதிகள். † இசலிகள் = பிணங்கிகள்.

‡ மழுவிகள் = (தங்கள் சூது வெளியாகாமல்) மழுப்புவோர்.

§ துமித்த = (பொருள்) அறுக்கின்ற.

அடைத்*த வர்க்கியல் சரசிகள் விரசிகள்
தரித்த வித்ரும நிறமென வரவுட
னழைத்து சக்கிர கிரிவளை படிகொடு
விளையாடி-

†அவத்தை தத்துவ மழிபட ‡இருளறை
விலக்கு வித்தொரு சுடரொளி பாவந
லருட்பு கட்டியு னடியிணை யருளுவ
தொருநாளே;

படைத்த னைத்தையும் வினையுற ஃடனெடு
துடைத்த பத்தினி மரகத சொருபியொர்
பாத்தி னுச்சியி னடாவி லுமையரு ளிளையோனே-

பகைத்த ரக்கர்கள் யமனுல குறஅமர்
தொடுத்த சக்கிர வளைகர மழகியர்
படிக்க டத்தையும் வயிறடை நெடியவர்
மருகோனே;

திடுக்கி டக்கட லசுரர்கள் முறிபட
கொளுத்தி சைக்கிரி பொடிபட சுடரயில்
திருத்தி விட்டொரு நொடியினில் வலம்வரு
மயில்வீரா-

தினைப்பு னத்திரு தனகிரி குமரிநல்
குறத்தி முத்தொடு சசிமக ளொடுபுகழ்
திருத்த ணிப்பதி மலைமிசை நிலைபெறு
பெருமாளே. (கக)

---

* அவர்க்கியல்.........விளையாடி = அப் பொது மாதர்கட்குச் சமானமாக இயல்கின்ற சரசிகளும் விரசிகளும் ஆகிய அணிமாதி அஷ்ட சித்திகளும் பவளம்போலுஞ் சிவந்த நிறத்துடன் வரும்படியாக உடனே அழைப்பித்து (அவர்களோடு) சக்கிரவாளகிரியாற் சூழப்பட்ட இப்பூமியில் விளையாடச் செய்து.

† அவத்தை தத்துவம் அழிபட = (பின்) ஜாக்கிராதி மலாவஸ்தைகளும், தத்துவ சேஷ்டைகளும் ஒடுங்க.

‡ இரு ளறை = ஆணவ மலம்.

[திருத்தணிகை.]

268. எலும்பு நாடிக ளப்பொ டிரத்தமொ
டழுக்கு மூளைகள் மச்சொடு தொப்புழு
ளிருக்கும் வீடதி லெத்தனை தத்துவ சதிகாரர்-

இறப்பர் சூதக வர்ச்சுத ராப்பதி
யுழப்பர் பூமித ரிப்பர்பி றப்புட
னிருப்பர் வீடுகள் கட்டிய லட்டுறு சமுசாரம்;

கெலிப்பர் மால்வலை பட்டுறு துட்டர்க
ளழிப்பர் மாதவ முற்று நினைக்கிலர்
கெடுப்பர் யாரையு மித்திர குத்திரர் கொலைகாரர்-

*கிருத்தர் கோளகர் பெற்றுதி ரிக்கள
வரிப்பர் சூடக ரெத்தனை வெப்பிணி
கெலிக்கும் வீடதை நத்தியெ டுத்திவ னுழல்வேனோ;

ஒலிப்பல் பேரிகை யுக்ரவ மர்க்கள
மெதிர்த்த சூரரை வெட்டியி ருட்கிரி
யுடைத்து வானவர் சித்தர்து தித்திட விடும்வேலா-

உலுத்த ராவண னைச்சிர மிற்றிட
வதைத்து மாபலி யைச்சிறை வைத்தவ
னுலக்கை ராவிந டுக்கடல் விட்டவன் மருகோனே;

வலிக்க வேதனை குட்டிந டித்தொரு
செகத்தை யீனவள் பச்சைநி றத்தியை
மணத்த தாதைப ரப்ரம ருக்கருள் குருநாதா-

வனத்தில் வாழும யிற்குல மொத்திடு
குறத்தி யாரைம யக்கிய ணைத்துள
மகிழ்ச்சி யோடுதி ருத்தணி பற்றிய பெருமாளே. (உ௦)

---

* கிருத்தர் = செருக்குள்ளவர்.

பு. **269.** திருட்டு நாரிகள் பப்பர மட்டைகள்
வறட்டு மோடியி னித்தந டிப்பவர்
சிறக்க மேனியு லுக்கிம டக்குகண் வலையாலே-
திகைத்து வாவிக வைத்தும னத்தினி
விதத்தை யோடவி டுத்தும யக்கிடு
சிமிட்டு காமவி தத்திலு முட்பட அலைவேனோ;
தரித்து நீறுபி தற்றிடு பித்தனு
மிதத்து மாகுடி லைப்பொருள் சொற்றிடு
சமர்த்த பாலஎ னப்புகழ் பெற்றிடு முருகோனே-
*சமப்ர வீணம தித்திடு புத்திபி
ரக்க மாய்வரு தற்பர சிற்பர
சதத்ர யோகவி தக்ஷண தெக்ஷிண குருநாதா;
வெருட்டு சூரனை வெட்டிர ணப்பலி
களத்தி லேகழு துக்கிரை யிட்டிடர்
விடுத்த கூளிகள் தித்திகு தித்தென விளையாட-
விதித்த வீரச மர்க்கள ரத்தமு
†மிரற்றி யோடவெ குப்ரள யத்தினில்
விலக்கி வேல்செரு கிட்டுயிர் மொக்கிய
மறவோனே;
பெருக்க மோடுசெ ரித்திடு மச்சமு
முளத்தின் மாமகிழ் பெற்றிட வுற்றிடு
பிளப்பு வாயிடை முப்பொழு தத்துமோர் கழுநீரின்-
பிணித்த போதுவெ டித்துர சத்துளி
கொடுக்கு மோடைமி குத்ததி ருத்தணி
பிறக்க மேவுற அத்தல முற்றுறை பெருமானே.

270. அரகர சிவனரி அயனிவர் பரவிமு
னறுமுக சரவண பவனேயென்-
றநுதின மொழிதர அசுரர்கள் கெடஅயி
லனலென எழவிடு மதிவீரா;

---

* சமப்ரவீண=நிபுண. † இரற்றல்=ஒலித்தல்.

[திருத்தணிகை.]

பரிபுர கமலம தடியிணை யடியுவ
ருளமதி லுறவருள் முருகேசா-
பகவதி வரைமக ளுமைதர வருதிக
பரமன திருசெவி களிகூர;
உரைசெயு மொருமொழி பிரணவ முடிவதை
உரைதரு குருபர வுயர்வாய-
உலகம னலகில வுயிர்களு மிமையவ
ரவர்களு முறுவர முநிவோரும்;
பரவிமு னநுதின மனமகிழ் வுறவணி
பணிதிகழ் தணிகையி லுறைவோனே-
பகர்தரு குறமகள் தருவமை வநிதையு
மிருபுடை யுறவரு பெருமாளே. (உஉ)

271. இருப்பவல் திருப்புகழ் விருப்பொடு படிப்பவ
ரிடுக்கினை யறுத்திடு மெனவோதும்-
இசைத்தமிழ் நடத்தமி ழெனத்துறை விருப்புட
னிலக்கண இலக்கிய கவிநாலுந்;
தரிப்பவ ருரைப்பவர் நினைப்பவர் மிகச்சக
தலத்தினில் நவிற்றுத லறியாதே-
தனத்தினில் முகத்தினில் மனத்தினி லுருக்கிடு
சமர்த்திகள் மயக்கினில் விழலாமோ;
கருப்புவில் வளைத்தணி மலர்க்கணை தொடுத்தியல்
களிப்புட னெளித்தெய்த மதவேளைக்-
கருத்தினில் நினைத்தவ னெருப்பெழ நுதற்படு
கனற்கணி லெரித்தவர் கயிலாயப்;
பொருப்பினி லிருப்பவர் பருப்பத வுமைக்கொரு
புறத்தினை யளித்தவர் தருசேயே-
*புயற்பொழில் வயற்பதி நயப்படு திருத்தணி
பொருப்பினில் விருப்புறு பெருமாளே. (உ௩)

* "புயற் பொழில் வயற்பதி நலப்படு ப்ரியத்தொடு
புலப்பட எனக்கருள் பெருமாளே.''—என்றும் பாடம்;
வயற்பதி=வயலூர்.

272. உடலி னூடு போய்மீளு முயிரி னூடு மாயாத
உணர்வி னூடு வானூடு முதுதீயூ-
டுலவை யூடு நீரூடு புவியி னூடு வாதாடு
மொருவ ரோடு மேவாத தனிஞானச்;
சுடரி னூடு நால்வேத முடியி னூடு மூடாடு
துரிய வாகு லாதீத சிவரூபம்-
தொலைவி லாத பேராசை துரிச றாத வோர்பேதை
தொடுமு பாய மேதோசொ லருள்வாயே;
மடல றாத வாரீச அடவி சாடி மாறான
வரிவ ரால்*கு வால்சாய அமராடி-
மதகு தாவி மீதோடி யுழவ ரால டாதோடி
மடையை மோதி யாறூடு தடமாகக்;
கடல்பு காம காமீனை முடுகி வாளை தான்மேவு
கமல வாவி மேல்வீழு மலர்வாவிக்-
கடவுள் நீல மாறாத தணிகை காவ லாவீர
கருணை மேரு வேதேவர் பெருமாளே. (௨௪)

273. உடையவர்க ளேவ ரெவர்களென நாடி
யுளமகிழ ஆசு கவிபாடி-
உமதுபுகழ் மேரு கிரியளவு மான
தெனவுரமு மான மொழிபேசி;
நடைபழகி மீள வறியவர்கள் நாளை
நடவுமென வாடி முகம்வேறாய்-
நலியுமுன மேயு னருணவொளி வீசு
நளினஇரு பாத மருள்வாயே;
விடைகொளுவு பாகர் விமலர்திரி சூலர்
விகிர்தர்பர யோகர் நிலவோடே-
விளவுசிறு பூளை நகுதலையொ டாறு
விடவரவு சூடு மதிபாரச்;
சடையிறைவர் காண உமைமகிழ ஞான
தளர்நடையி டாமுன் வருவோனே-
†தவமலரு நீல மலர்சுனைய நாதி
தணிமலையு லாவு பெருமாளே. (௨௫)

---

* குவால்=கூட்டம். † தவ=மிகுதி.

[திருத்தணிகை.]

274. உய்யஞா னத்துநெறி கைவிடா தெப்பொழுது
முள்ளவே தத்துறைகொ டுணர்வோதி -
உள்ளமோ கத்திருளை விள்ளமோ க்ப்பொருளை
யுள்ளமோ கத்தருளி யுறவாகி ;
வையமே ழுக்குநிலை செய்யுநீ திப்பழைய
வல்லமீ *துற்பலச யிலமேவும் -
வள்ளியா நிற்புதிய வெள்ளில்தோய் முத்தமுறி
கிள்ளிவீ சுற்றுமலர் பணிவேனே ;
பையரா வைப்புனையு மையர்பா கத்தலைவி
துய்யவே ணிப்பகிர திகுமாரா -
பையமால் பற்றிவளர் சையமேல் வைக்குமுது
†நெய்யனே சுற்றியகு றவர்கோவே ;
செய்யுமால் வெற்புருவ வெய்யவேல் சுற்றிவிடு
கையமால் வைத்ததிரு மருகோனே -
தெய்வயா னைக்கிளைய வெள்ளையா னைத்தலைவ
தெய்வயா னைக்கினிய பெருமாளே. (உசு)

பு. **275.** எத்தனைக லாதி சித்தங் கெத்தனைவி யாதி பித்தங்
கெத்தனைச ராச ரத்தின் செடமான -
எத்தனைவிடா வெருட்டங் கெத்தனைவ லாண்மைபற்றங்
கெத்தனைகொ லூனை நித்தம் பசியாறல் ;
பித்தனைய னைகட்டுண் டிப்படிகெ டாமல் முத்தம்
பெற்றிடநி னைச னத்தின் செயலான -
பெற்றியுமொ ராது நிற்குந் தத்தகுரு தார நிற்கும்
பெத்தமுமொ ராது நிற்குங் கழல்தாராய் ;
தத்தனத னைத னத்தந் தத்தனத னைத னத்தந்
தத்தனத னைத னத்தந் தகுதீதோ -
தக்குகுகு டுடு டுட்டுண் டிக்குகுகு டீகு தத்தந்
தத்தனத னைனூர்த்துஞ் சதபேரி ;
சித்தர்கள்நி டாதர் வெற்பின் கொற்றவர்சு வாமி பத்தர்
திக்குகளொர் நாவி ரட்டின் கிரிசூழச் -
செக்கணரி மாக னைக்குஞ் சித்தணிகை வாழ்சி வப்பின்
செக்கர்நிற மாயி ருக்கும் பெருமாளே. (உஎ)

---

* உற்பல சயிலம் = திருத்தணிகை. † நெய்யனே = நேயனே.

276. ஏனையடைந்த குட்டம் வினைமி குந்த பித்த
மெரிவ ழங்கு வெப்பு வலிபேசா -
இதலி நின்ற லைக்கு முயல கன்*கு லைப்பொ
டிரும லென்று ரைக்கு மிவையோடே ;

மனைகள் பெண்டிர் மக்கள் தமைநி னைந்து சுத்த
மதிம யங்கி விட்டு மடியாதே -
மருவி யின்றெ னக்கு மரக தஞ்சி றக்கு
மயிலில் வந்து முத்தி தரவேணும் ;

நினைவ ணங்கு பத்த ரனைவ ருந்த ழைக்க
நெறியில் நின்ற வெற்றி முனைவேலா -
நிலைபெ றுந்தி ருத்த ணியில்வி ளங்கு சித்ர
நெடிய குன்றில் நிற்கு முருகோனே ;

தினைவி ளங்க லுற்ற புனஇ ளங்கு றத்தி
செயல றிந்த ணைக்கு மணிமார்பா -
திசைமு கன்தி கைக்க அசுர ரன்ற டைத்த
சிறைதி றந்து விட்ட பெருமாளே. (உअ)

277. ஏது புத்திஐ யாஎ னக்கினி
யாரை நத்திடு வேன வத்தினி
லேயி றத்தல்கொ லோஎ னக்குநி தந்தைதாயென் -
றேயி ருக்கவு நானு மிப்படி
யேத வித்திட வோச கத்தவ
ரேச விற்பட வோந கைத்தவர் கண்கள்காணப் ;

பாதம் வைத்திடை யாதெ ரித்தெனை
தாளில் வைக்கநி யேம றுத்திடில்
பார்ந கைக்குமை யாத கப்பன்முன் மைந்தனோடிப் -
பால்மொ ழிக்குரு லோல மிட்டிடில்
யாரெ டுப்பதெ னவெ றுத்தழ
பார்வி டுப்பர்க ளோஎ னக்கிது சிந்தியாதோ ;

ஓத முற்றெழு பால்கொ தித்தது
போல எட்டிகை நீச முட்டரை
யோட வெட்டிய பாநு சத்திகை யெங்கள்கோவே.

---

* குலைப்பு=நடுக்கம்.

[திருத்தணிகை.]

ஓத மொய்ச்சடை யாட வுற்றமர்
மான்ம ழுக்கர மாட பொற்கழ
லோசை பெற்றிட வேந டித்தவர் தந்தவாழ்வே;
மாதி னைப்புன மீதி ருக்குமை
வாள்வி ழிக்குற மாதி னைத்திரு
மார்ப ணைத்தம யூர அற்புத கந்தவேளே-
மாரன் வெற்றிகொள் பூமு டிக்குழ
லார்வி யப்புற நீடு மெய்த்தவர்
வாழ்தி ருத்தணி மாம லைப்பதி தம்பிரானே. ()

278. ஓலை யிட்டகு ழைச்சிகள் சித்திர
ரூப மொத்தநி றத்திகள் விற்கணை
யோடி ணைத்தவி ழிச்சிகள் சர்க்கரை யமுதோடே-
ஊறி யொத்தமொ ழிச்சிகள் புட்குர
லோடு வைத்துமி ழற்று மிடற்றிகள்
ஓசைபெற்றதுடிக்கொளிடைச்சிகள் மணம்வீசும்;
மாலை யிட்டக ழுத்திகள் முத்தணி
வார முத்தத னத்திகள் குத்திர
மால்வி ளைத்தும னத்தை யழித்திடு மடமாதர்-
மார்ப சைத்தும ருட்டியி ருட்டறை
வாவெ னப்பொருள் பற்றிமு யக்கிடு
*மாத ருக்குவ ருத்தமி ருப்பது தணியாதோ;
வேலை வற்றிட நற்கணை தொட்டலை
மீத டைத்தத னிப்படை விட்டுற
வீற ரக்கன்மு டித்தலை பத்தையு மலைபோலே-
மீத றுத்துநி லத்திலடித்துமெய்
வேத லக்ஷ்மி யைச்சிறை விட்டருள்
வீர அச்சுத னுக்குந லற்புத மருகோனே;
நீலி நிஷ்களி நிர்க்குணி நித்தில
வாரி முத்துந கைக்கொடி சித்திர
நீல ரத்தின மிட்டஅ றக்கிளி புதல்வோனே-

* 'மாதருக்கு வசப்படு பத்திசள் தவிரேனோ' என்றும் பாடம்.

பகழி போல்விடு விழிகவர் திருடிகள்
தமையெ ணுவகை யுறுகதி பெறும்வகை
பகா மாமயில் மிசைவர நினைவது மொருநாளே ;
அரிய ராதிபர் மலரய னிமையவர்
நிலைபெ றுதிடர் படவுடன் முடுகியெ
அசுரர் தூள்பட அயில்தொடுமெறுமுக இளையோனே-
அரிய கானக முறைகுற மகளிட
கணவ ணுகிய அறிவுள விதரண
அமரர் நாயக சரவண பவதிற லுடையோனே ;
தரும நீதியர் மறையுளர் பொறையுளர்
சரிவு றுநிலை பெறுதவ முடையவர்
தளர்வி லாமன முடையவ ரறிவினர் பாராஜர்-
சகல லோகமு முடையவர் நினைபவர்
பரவு தாமரை மலரடி யினிதுற
தணிகை மாமலை மணிமுடி யழகியல்
பெருமாளே. (௩௪)

283. கிறிமொழிக் கிருதரைப் பொறிவழிச் செறிஞரைக்
கெடுபிறப் பறவிழிக் கிறபார்வைக் -
கெடுமடக் குருடரைத் திருடரைச் சமயதர்க்
கிகள்தமைச் செறிதலுற் றறிவேதும் ;
அறிதலற் றயர்தலுற் றவிழ்தலற் றருகலுற்
றறவுநெக் கழிகருக் கடலூடே -
அமிழ்தலற் றெழுதலுற் றுணர்நலத் துயர்தலுற்
றடியிணைக் கணுகிடப் பெறுவேனோ ;
பொறியுடைச் செழியன்வெப் பொழிதரப் பறிதலைப்
பொறியிலச் சமணரத் தனைபேரும் -
பொடிபடச் சிவமணப் பொடிபரப் பியதிருப்
புகலியிற் கவுணியப் புலவோனே ;
தறிவளைத் துறநகைப் பொறியெழுப் புரமெரித்
தவர்திருப் புதல்வநற் சுனைமேவுங் -
தனிமணக் குவளைநித் தமுமலர்த் தருசெருத்
தணியினிற் சரவணப் பெருமாளே. (௩௫)

[திருத்தணிகை.]

284. குயிலொன் று*மொழிக் குயினின் †றலையக்
கொலையின் பமலர்க் கணையாலே -
குளிருந் தவளக் குலசந் ரவொளிக்
கொடிகொங் கையின்முத் தனலாலே ;
புயல்வந் தெரியக் கடனின் றலறப்
பொருமங் கைய‡ருக் கலராலே -
புயமொன் றமிகத் தளர்கின் றதனிப்
புயம்வந் தணையக் கிடையாதோ ;
சயிலங் குலையத் தடமுந் தகரச்
சமனின் றலையப் பொரும்வீரா -
தருமங் கைவனக் குறமங் கையர்மெய்த்
தனமொன் றுமணித் திருமார்பா ;
பயிலுங் ககனப் பிறைதண் பொழிலிற்
பணியுந் தணிகைப் பதிவாழ்வே -
பரமன் பணியப் பொருளன் றருளிற்
பகர்செங் §கழநிப் பெருமாளே (௩௬)

285. குருவி யெனப்பல கழுகு நரித்திர
ளரிய வனத்திடை மிருக மெனப்புழு
குறவை யெனக்கரி மரமு மெனத்திரி யுறவாகா -
குமரி கலித்துறை முழுகி மனத்துயர்
கொடுமை யெனப்பிணி கலக மிடத்திரி
குலைய னெனப்புலை கலிய னெனப்பலர்
நகையாமல் ;
மருவு புயத்திடை பணிக ளணப்பல
கரிபரி சுற்றிட கலைகள் தரித்தொரு
மதன சரக்கென கனக பலக்குட னதுதேடேன் -

* மொழி=மொழியையுடையாள். † அலைய=அலைக்க.
‡ உக்க அலராலே=தூற்றிய அலர்மொழியினாலே.
§ கழநி-இது கழுநீர் என்பதன் மரூஉ.

வரிய பதத்தினி னருவி யிருப்பிட
மமையு மெனக்கிட முனது பதச்சரண்
மருவு திருப்புக ழருள எனக்கினி யருள்வாயே;

விருது தனத்தன தனன தனத்தன
விதமி திமித்திமி திமித திமித்திமி
விகிர்த டடுட்டுடு ரிரிரி யெனக்குகு வெகுதாளம்-
வெருவ முகிழ்த்திசை யுரகன் முடித்தலை
நெறுநெ றெனத்திசை யதிர அடைத்திட
மிகுதி கெடப்பொரு அசுரர் தெறித்திட
விடும்வேலா;

அரிய திரிப்புர மெரிய விழித்தவ
னயனை முடித்தலை யரியு மழுக்கைய
னகில மனைத்தையு முயிரு மளித்தவ னருள்சேயே-
அமண ருடற்கெட *வசியி லழுத்திவி
ணமரர் கொடுத்திடு மரிவை குறத்தியொ
டழகு திருத்தணி மலையில் நடித்தருள்
பெருமாளே. (௩எ)

இதன் கருத்து.

குருவி முதலியன போலத் திரிபவர் உறவு ஆகாது. ஆதலால் அதனைக் கொள்ளேன். கனகச் சிவிகை முதலியவற்றைத் தேடேன்; அக்ஷரங்களோடு கூடிய பதங்கள் ஊற்றுக்கண் போலச் சுரந்து பெருகும் வாக்குசித்தி கிடைத்தல் எனக்கு அமையும். அதனைப் பிரயோகிக்கு மிடம் உனது பதச்சரண். ஆதலால் அவ்வாக்கு சித்தியை யளித்துத் திருப்புகழ் ஓத எனக்கு அருள்செய்யவேண்டும்,

---

286. சூலத்துமயிர்க் கலைத்துவளைக்
கழுத்துமணித் தனப்புரளக்
குவித்தவிழிக் கயற்சுழலப் பிறைபோலக்-
குனித்தநுதற் புரட்டிநகைத்
துருக்கிமயற் கொளுத்தியிணைக்
குழைச்செவியிற் றழைப்பபொறித் தன்பாரப்;

* வசி=கழு.

[திருத்தணிகை.]

*பொலித்துமதத் தரித்தகரிக்
குவட்டுமுலைப் பளப்பளெனப்
புனைத்ததுகிற் பிடித்தஇடைப் பொதுமாதர் -

புயத்தில்வளைப் பிலுக்கில்நடைக்
குலுக்கிலறப் பசப்பிமயற்
புகட்டிதவத் தழிப்பவருக் குறவாமோ ;

தலத்தநுவைக் குனித்தொருமுப்
புரத்தைவிழக் கொளுத்திமழுத்
தரித்துபுலிக் கரித்துகிலைப் பரமாகத் -

தரித்துதவச் சுரர்க்கண்முதற்
பிழைக்கமிடற் றடக்குவிடச்
சடைக்கடவுட் சிறக்கபொருட்
பகர்வோனே ;

சிலுத்தசுரர்க் கெலித்துமிகக்
கொளுத்திமறைத் துதிக்கஅதிற்
செழிக்கஅருட் கொடுத்தமணிக் கதிர்வேலா -

தினைப்புனமிற் குறத்திமகட்
டனத்தின்மயற் குளித்துமகிழ்த்
திருத்தணியிற் றரித்தபுகழ்ப் பெருமானே. (௩அ)

287. கூந்தல விழ்த்துமு டித்துமி னுக்கிகள்
பாய்ந்தவி ழிக்குமை யிட்டுமி ரட்டிகள்
†கோம்புப டைத்தமொ ழிச்சொல்ப ரத்தையர்
புயமீதே -

கோங்குப டைத்தத னத்தைய ழுத்திகள்
வாஞ்சையு றத்தழு விச்‡சிலு கிட்டவர்
கூன்பிறை யொத்தந கக்குறி வைப்பவர்
பலநாளும் ;

* பொலித்து மதத் தரித்த=பொலிந்து மதந் தரித்த.
† கோம்பு=சினக்குறிப்பு. ‡ சிலுகு=துன்பம்.

ஈந்தபொ ருட்பெற இச்சையு ரைப்பவ
ராந்துணை யற்றழு கைக்குர லிட்டவ
*ஈங்கிசை †யுற்றவ லக்குண மட்டைகள்
பொருள்தீரில் -

ஏங்கியி டக்கடை யிற்றளி வைப்பவர்
பாங்கக லக்கரு ணைக்கழல் பெற்றிட
ஈந்திலை யெப்படி நற்கதி புக்கிட லருள்வாயே;

காந்தள்ம லர்த்தொடை யிட்டெதிர் விட்டொரு
‡வேந்துகு ரக்கா ணத்தொடு மட்டிடு
காண்டிப அச்சுத னுத்தம சற்குணன் மருகோனே-
§காங்கிசை மிக்கம றக்கொடி வெற்றியில்
வாங்கிய முக்கனி சர்க்கரை மொக்கிய
கான்கனி முற்கியல் கற்பக மைக்கரி
யிளையோனே!;

தேந்தினை வித்தின ருற்றிட வெற்றிலை
வேங்கைம ரத்தெழி லைக்கொடு நிற்பவ
தேன்மொழி யைப்புண ரப்புன முற்‖றுறை
குவைவானந் -
தீண்டுக மைத்திர ளுற்றது துற்றிடு
வேங்கைத னிற்குவ ளைச்சுனை சுற்றலர்
சேர்ந்ததி ருத்தணி கைப்பதி வெற்புறை
பெருமாளே. (௩௬)

288. கூர்வேல் பழித்தவிழி யாலே மருட்டிமுலை
கோடா லழைத்துமல ரணைமீதே -
¶கோபா விதழ்ப்பருக மார்போ டணைத்துகணை
கோல்போல சுழற்றியிடை யுடைநாணக்;
கார்போல் குழற்சரிய வேவா யதட்டியிரு
காதோலை யிற்றுவிழ விளையாடும் -

* ஈங்கிசை = இம்சை. † உற்றவலக் குணம் = உற்ற அவலம் குணம்.
‡ வேந்து குரக்கு = குரக் கரசாகிய வாலி. § காங்கிசை = விருப்பம்.
‖ உறைகுவை = உறைபவனே!
¶ கோபம் = இந்திரகோபம்: தம்பலப்பூச்சி.

[திருத்தணிகை.]

காமா மயக்கியர்க ளூடே களித்துநம,
காளு ருறைக்கலக மொழியாதோ ;
*வீராணம் வெற்றிமுர சோடே தவிற்றிமிலை
வேதா கமத்தொலிகள் கடல்போல -
வீறாய் முழக்கவரு சூரா ரிறக்கவிடும்
வேலா திருத்தணியி லுறைவோனே ;
மாரோ னிறக்கநகை தாதா திருச்செவியில்
மாபோ தகத்தையருள் குருநாதா -
மாலோ னளித்தவளி யார்மால் களிப்பவெகு
மாலோ டணைத்துமகிழ் பெருமாளே. (சய)

289. கொந்து வார்†குர வடியினு மடியவர்
சிந்தை வாரிஜ நடுவினு நெறிபல
கொண்ட வேதநன் முடியினு மருவிய குருநாதா-
கொங்கி லேர்தரு பழநியி லறுமுக
செந்தில் காவல தணிகையி லிணையிலி
கொந்த காவென மொழிதர வருசம யவிரோத ;
தந்த்ர வாதிகள் பெறவரி யதுபிறர்
சந்தி யாதது தனதென வருமொரு
சம்ப்ர தாயமு மிதுவென வுரைசெய்து விரைநீபச்-
சஞ்ச ரீகரி கரமுரல் தமனிய
கிண்கி ணீமுக விதபத யுகமலர்
தந்த பேருள் கனவிலு நனவிலு மறவேனே ;
சிந்து வாரமு மிதழியு மிளநவ
சந்த்ர ரேகையு மரவமு மணிதரு
செஞ்ச டாதரர் திருமக வெனவரு முருகோனே-
செண்ப காடவி யினுமித ணினுமுயர்
சந்த னாடவி யினுமுறை குறமகள்
செம்பொனூபுர கமலமும் வளையணி புதுவேயும்;

*வீராணம் என்பது ஒருவித வாத்தியம்.

† குர வடி=திருவிடைக்கழியிற் குராமரத்தி னடி.

இந்து வீரண்முக வனசமு ம்ருகமத
குங்கு மாசல யுகளமு மதுரித
இந்த ளாம்ருத வசனமு முறுவலு மபிராம -
இந்த்ர கோபமு மரகத வடிவமு
மிந்த்ர சாபமு மிருகுழை யொடுபொரு
மிந்த்ரநீலமு மடலிடை யெழுதிய பெருமாளே.()

290. **சொ**ரியு முகிலைப் பதும நிதியைச்
சுரபி தருவைச் சமமாகச் -
சொலியு மனமெட் டுணையு நெகிழ்விற்
*சுமட ருருகுற் றியல்வாணர் ;
தெரியு மருமைப் பழைய மொழியைத்
திருடி நெருடிக் கவிபாடித் -
திரியு மருள்விட் †டுனது ‡குவளைச்
சிகரி பகரப் பெறுவேனோ ;
கரிய புருவச் சிலையும் வளையக்
கடையில் விடமெத் தியநீலக் -
கடிய கணைபட் டுருவ வெருவிக்
கலைகள் பலபட் டனகானிற் ;
குரிய குமரிக் கபய மெனநெக்
குபய சரணத் தினில்வீழா -
உழையின் மகளைத் தழுவ மயலுற்
றுருகு முருகப் பெருமாளே. (சஉ)

291. **தா**க்கம ருக்கொரு சாரையை வேறொரு
சாக்ஷிய றப்பசி யாறியை நீறிடு
சாஸ்த்ர வழிக்கதி தூரனை வேர்விழு தவமூழ்குந் -
தாற்பர்ய மற்றுழல் பாவியை நாவலர்
போற்பரி வுற்றுனை யேகரு தாதிகல்
சாற்றுத மிழ்க்குரை ஞாளியை நாள்வரை
தடுமாறிப் ;

---

* சுமடர்=கீழ்மக்கள். † 'உனது புகழைத் தினமு முணரப் பெறுவேனோ' எனவும் பாடம். ‡ குவளைச் சிகரி=திருத்தணி.

[திருத்தணிகை.]

போக்கிட மற்றவ்வரு தாவனே ஞானிகள்
போற்றுத லற்றது ரோகியை மாமருள்
பூத்தம லத்ரய பூரியை நேயிய புலையேனைப் -
போக்கிவி டக்கட னேஅடி யாரொடு
போய்ப்பெறு கைக்கிலை யோகதி யானது
போர்ச்சுடர் வஜ்ரவை வேல்மயி லாவருள்
புரிவாயே ;

மூக்கறை மட்டைம காபல காரணி
சூர்ப்பந கைப்படு மூளியு தாசனி
மூர்க்க குலத்திவி பீஷணர் சோதரி முழுமோடி -
மூத்தவ ரக்கனி ராவண னேடியல்
பேற்றிவி டக்கம லாலய சீதையை
மோட்டன் வளைத்தொரு தேர்மிசை யேகொடு
முகிலேபோய் ;

மாக்கண சித்திர கோபுர நீள்படை
வீட்டிலி ருத்திய நாளவன் வேரற
மார்க்கமு டித்தவி லாளிகள் நாயகன் மருகோனே -
வாச்சிய மத்தள பேரிகை போல்மறை
வாழ்த்தம லர்க்கழு நீர்தரு நீள்சுனை
வாய்த்ததிருத்தணி மாமலை மேவிய பெருமாளே.

292. துப்பா ரப்பா டற்றீ மொய்க்கால்
சொற்பா வெளிமுக் குணமோகம் -
துற்று யப்பீ றற்றே விட்டே
சுற்று மதனப் பிணிதோயும் ;

இப்பா வக்கா யத்தா சைப்பா
*டெற்றே யுலகிற் பிறவாதே -
†எத்தார் வித்தா ரத்தே கிட்டா
எட்டா அருளைத் தாவேணும் ;

* எற்றே = வற்றே. † எத்தார் = வத்தார்.

தப்பா மற்பா டிச்சே விப்பார்
தத்தாம் வினையைக் களைவோனே -
தற்கா ழிச்சூர் செற்றுய் மெய்ப்போ
தத்தாய் தணிகைத் தனிவேலா ;
அப்பா கைப்பா லைப்போல் சொற்கா
வற்பா வைதனத் தணைவோனே -
அத்தா நித்தா முத்தா சித்தா
அப்பா குமரப் பெருமாளே. (சச)

293. நிலையாத சமுத்திர மான
சமுசார துறைக்கணின் மூழ்கி
நிசமான தெனப்பல பேசி யதனூடே -
நெடுநாளு முழைப்புள தாகி
பெரியோர்க ளிடைக்கர வாகி
நினைவால்நி னடித்தொழில் பேணி துதியாமல் ;
தலையான வுடற்பிணி யூறி
பவநோயி னலைப்பல வேகி
சலமான பயித்திய மாகி தடுமாறித் -
தவியாமல் பிறப்பையு நாடி
யதுவேரை யறுத்துனை யோதி
தலமீதில் பிழைத்திட வேநி னருள்தாராய் ;
கலியாண சுபுத்திர னாக
குறமாது தனக்குவி நோத
கவினாரு புயத்திலு லாவி விளையாடிக் -
களிகூரு முனைத்துணை தேடு
மடியேனை சுகப்பட வேவை
கடனாகு மிதுக்கன மாகு முருகோனே ;
பலகாலு முனைத்தொழு வோர்கள்
மறவாமல் திருப்புகழ் கூறி
படிமீது துதித்துடன் வாழ அருள்வேளே -
பதியான திருத்தணி மேவு
சிவலோக மெனப்பரி வேறு
பவரோக வயித்திய நாத பெருமாளே. ()

[திருத்தணிகை.]

294. நினைத்த தெத்தனையிற் றவறாமல் -
நிலைத்த புத்திதனைப் பிரியாமற் ;
கனத்த தத்துவமுற் றழியாமற் -
கதித்த நித்தியசித் தருள்வாயே ;
மனித்தர் பத்தர்தமக் கெளியோனே -
மதித்த முத்தமிழிற் பெரியோனே ;
செனித்த புத்திரரிற் சிறியோனே -
திருத்த ணிப்பதியிற் பெருமாளே. (சகூ)

295. பகலி ராவினுங் கருவி யாலனம்
பருகி யாவிகொண் டுடல்பேணிப் -
பழைய வேதமும் புதிய நூல்களும்
பலபு ராணமுஞ் சிலவோதி ;
அகல நீளமென் றளவு கூறரும்
பொருளி லேயமைந் தடைவோரை -
அசடர் மூகரென் றவல மேமொழிந்
தறிவி லேனழிந் திடலாமோ ;
சகல லோகமும் புகல நாடொறுஞ்
சருகி லாதசெங் கழுநீருந் -
தளவு நீபமும் புனையு மார்பதென்
தணிகை மேவுசெங் கதிர்வேலா ;
சிகர பூதரந் தகர நான்முகன்
சிறுகு வாசவன் சிறைமீளத் -
திமிர சாகரங் கதற மாமரஞ்
சிதற வேல்விடும் பெருமாளே. (சஎ)

296. பழமை செப்பிய ழைந்தித மித்துடன்
முறைம சக்கிய ணைத்துந கக்குறி
படஅ ழுத்திமு கத்தைமு கத்துற வுறவாடிப் -
பதறி யெச்சிலை யிட்டும ருத்திடு
விரவு குத்திர வித்தைவி ளைப்பவர்
பலவி தத்திலு மற்பரெ னச்சொலு மடமாதர்

அழிதொ ழிற்குவி ருப்பொடு நத்திய
　　அசட னைப்பழி யுற்றஅ வத்தனை
　　அடைவு கெட்டபு ரட்டனை மூட்டனை அடியேனை -
　அகில சத்தியு மெட்டுறு சித்தியு
　　　மெளிதெ னப்பெரு வெட்டவெ ளிப்படு
　　　மருண பொற்பத முற்றிட வைப்பது
　　　　　　　　　　　　　　　　மொருநாளே ;

குழிவி ழிப்பெரு நெட்டல கைத்திரள்
　　கார ணமிட்டுந டித்தமி தப்படு
　　*குலிலி யிட்டக ளத்திலெ திர்த்திடு மொருசூரன் -
　குருதி கக்கிய திர்த்துவி ழப்பொரு
　　　நிசிச ரப்படை பொட்டெழ விக்ரம
　　　குலிச சத்தியை விட்டருள் கொர்ச்சித மயில்வீரா;

தழையு டுத்தகு றத்திப தத்துணை
　　வருடி வட்டமு கத்தில தக்குறி
　　தடவி வெற்றிக திக்தமு லைக்குவ டதன்மீதே -
　†தரள பொற்பணி கச்சுவி சித்திரு
　　　குழைதி ருத்திய ருத்திமி குத்திடு
　　　தணிம லைச்சிக ரத்திடை யுற்றருள் பெருமாளே.

297. புருவ நெறித்துக் குறுவெயர் வுற்றுப்
　　புளகித வட்டத்　　　　　　　தனமானார் -
　பொருவிழி யிற்பட் டவரொடு கட்டிப்
　　　புரளு மசட்டுப்　　　　　　புலையேனைக் ;

கருவழி யுற்றுக் குருமொழி யற்றுக்
　　கதிதனை விட்டிட்　　　　　　டிடுதீயக் -
　கயவனை வெற்றிப் புகழ்திகழ் பத்மக்
　　　கழல்கள் துதிக்கக்　　　　　கருதாதோ ;

---

* குலிலி=வீராவேச ஒலி.

† 'சதிர்பெ றத்தமு விப்புணர் வித்தக
　முனிவர் சித்தர் கணத்தர் துதித்திடு
　தலைமை பெற்றரு ணைப்பதி யிற்றிகழ் பெருமானே.
என்றும் பாடம்.

[திருத்தணிகை.]

செருவசு ரப்பொய்க் குலமது கெட்டுத்
திரைகட லுட்கப் பொரும்வேலா -
தினைவன முற்றுக் குறவர் மடப்*பைக்
கொடிதன வெற்பைப் புணர்மார்பா ;
பெருகிய நித்தச் சிறப்பறை †கொட்டிப்
‡பெரிகை முழக்கப் புவிமீதே -
ப்ரபலமுள் சுத்தத் தணிமலை யுற்றுப்
ப்ரியமிகு சொக்கப் பெருமாளே. (சகூ)

298. பூசலிட் டுச்ச ரத்தை நேர் கழித் துப்பெ ருத்த
போர்விடத் தைக்கெ டுத்து வடிகூர்வாள் -
போலமுட் டிக்கு ழைக்கு ளோடிவெட் டித்தொளைத்து
போகமிக் கப்ப ரிக்கும் விழியார்மேல் ;
ஆசைவைத் துக்க லக்க மோகமுற் றுத்து யர்க்கு
ளாகிமெத் தக்க ளைத்து ளழியாமே -
ஆரணத் துக்க ணத்து ளண்மலர்ப் பொற்ப தத்தை
யான்வழுத் திச்சு கிக்க அருள்வாயே ;
வாசமுற் றுத்த ழைத்த தாளிணைப் பத்த §ரத்த
மாதர்கட் கட்சி றைக்கு ளழியாமே -
வாழ்வுறப் புக்கி ரத்ன ரேகையொக் கச்சி றக்கு
மாமயிற் பொற்க ழுத்தில் வரும்வீரா ;
வீசுமுத் துத்தெ றிக்க வோலைபுக் குற்றி ருக்கும்
வீறுடைப் பொற்கு றத்தி கணவோனே -
வேலெடுத் துக்க ரத்தி‖னீலவெற் பிற்ற ழைத்த
வேளெனச் சொற்க ருத்தர் பெருமாளே.

---

* பைக்கொடி=பைங்கொடி. † 'கொட்டப், பெருகிய சத்தப் புவியோனே—பிணமலை வைத்துக் கணமலை சுற்றப் பிசினருயுத்தப் பெருமாளே' என்றும் பாடம். ‡ பெரிகை=பேரிகை.

§ அத்த மாதர்கள்=பொருட் பெண்டி ராகிய வேசிகள்.

‖ நீல வெற்பு=திருத்தணி.

299. பொருவிக் கந்தொடடர்ச் *செருவிக் கன்றெடுமிப்
புதுமைப் பூண்டரிகக் கணையாலே -
புளகக் கொங்கையிடத் திளகக் †கொங்கையனற்
பொழியத் தென்றல்தூக் குதலாலே ;
தெருவிற் பெண்கள்மிகக் கறுவிச் சண்டையிடத்
திரியத் திங்கள்நதிப் பதனாலே -
செயலற் றிங்கணையிற் றுயிலற் றஞ்சியயர்த்
தெரிவைக் குன்குரவைத் தரவேணும் ;
அருவிக் குன்றடையப் பாவிச் செந்தினைவித்
தருமைக் குன்றவருக் கெளியோனே -
அசுரர்க் கங்கயல்பட் டமரர்க் கண்டமளித்
தயில்கைக் கொண்டதிறற் குமரேசா ;
தருவைக் கும்பதியிற் றிருவைச் சென்றணுகித்
தழுவிக் கொண்டபுயத் திருமார்பா -
தாளச் சங்குவயற் றிரளிற் றங்குதிருத்
தணிகைச் செங்கழநிப் பெருமாளே. (ருக)

பு. **300.** பொற்குட மொத்தகு யத்தைய சைப்பவர்
கைப்பொருள் புக்கிட வேதான் -
புட்குரல் விச்சைபி தற்றுமொ ழிச்சியர்
பொட்டணி நெற்றிய ரானோர் ;
அற்பவி டைக்கலை சுற்றிநெ கிழ்ப்பவர்
‡அற்பர மட்டைகள் பால்சென் -
றக்கண்வ லைக்குள கப்படு புத்தியை
அற்றிட வைத்தருள் வாயே ;
கொக்கரை சச்சரி மத்தளி யொத்துவி
டக்கைமு ழக்கொலி யாலக் -
கொக்கிற கக்கர மத்தம ணிக்கருள்
§குத்த ‖தணிக்கும ரேசா ;

* செரு இக்கன் தொடும் எனப் பிரிக்க ; இக்கன்=கரும்பு வில்லையுடைய மன்மதன். † கொங்கு=பூந்தாது.
‡ அற்பர் அ மட்டைகள்=அற்பர்களாகிய அந்த மட்டைகள்.
§ குத்தம்=குப்தம் : இரகசியம். ‖ தணி=திருத்தணி.

[திருத்தணிகை.]

சர்க்கரை முப்பழ மொத்தமொ ழிச்சிறு
 றத்திக னக்கிரி மேலே -
ணைக்கும னத்தச மர்த்தஅ ரக்கர்த்
 லைக்குலை கொத்திய வேளே. (ருஉ)

301. பொற்ப தத்தி னைத்து தித்து நற்ப தத்தி லுற்ற பத்தர்
 பொற்பு ரைத்து *நெக்கு ருக்க அறியாதே -
புத்த கப்பி தற்றை விட்டு வித்த கத்து னைத்து திக்க
 புத்தி யிற்க லக்க மற்று நினையாதே ;
முற்ப டைத்த லத்து தித்து பிற்ப டைத்த கிர்த்ய முற்றி
 முற்க டைத்த வித்து நித்த முழல்வேனை -
முட்ட விக்க டைப்பி றப்பி னுட்கி டப்ப தைத்த விர்த்து
 முத்தி சற்றெ னக்க ளிப்ப தொருநாளே ;
வெற்ப ளித்த தற்ப ரைக்கி டப்பு றத்தை யுற்ற ளித்த
 வித்த கத்தர் பெற்ற கொற்ற மயில்வீரா -
வித்தை தத்வ முத்த மிழ்ச்சொ லத்த சத்தம் வித்த ரிக்கு
 மெய்த்தி ருத்த ணிப்பொ ருப்பி லுறைவோனே ;
கற்ப கப்பு னக்கு றத்தி கச்ச டர்த்த சித்ர முற்ற
 கற்பு ரத்தி ருத்த னத்தி லணைவோனே -
கைத்த ரக்கர் கொத்து கச்சி னத்து வஜ்ர னுக்க மைத்த
 கைத்தொ ழுத்த றித்து விட்ட பெருமாளே.

302. மலைமு லைச்சியர் கயல்வி ழிச்சியர்
 மதிமு கத்திய ரழகான -
மயில்ந டைச்சியர் குயில்மொ ழிச்சியர்
 மனது ருக்கிக ளணைமீதே ;
கலைநெ கிழ்த்திய உறவ ணைத்திடு
 கலவி யிற்றுவள் பிணிதீராக் -
கசட னைக்குண அசட னைப்புகல்
 கதியில் வைப்பது மொருநாளே ;

* நெக் குருக்க = நெகிழ்ந் துருக.

குலகி ரிக்குல முருவ விட்டமர்
குலவு சித்திர முனைவேலா -
குறவர் பெற்றிடு சிறுமி யைப்புணர்
குமர சற்குண மயில்வீரா ;
தலம திற்புக லமரா *ருற்றிடர்
தனைய கற்றிய அருளாளா -
தருநி ரைத்தெழு பொழில்மி குத்திடு
தணிம லைக்குயர் பெருமாளே. (ருச)

303. **மு**கத்தைமி னுக்கிக ளசடிகள் கபடிகள்
விழித்தும ருட்டிகள் கெருவிகள் திருடிகள்
மொழிக்குள்ம யக்கிகள் வகைதனில் நகைதனில்
விதமாக -
முழித்தும யற்கொளு மறிவிலி நெறியிலி
புழுக்குட லைப்பொரு ளெனமிக எணியவர்
முயக்கம டுத்துழி தருமடி யவனிடர் ஒழிவாக ;
மிகுத்தழ கைப்பெறு மறுமுக சரவண
புயத்திள கிக்கமழ் நறைமலர் தொடைமிக
விசைக்கொடுமைப்பெறுமரகதகலபியும் வடிவேலும் -
வெளிப்படெ னக்கினி யிரவொடு பகலற
திருப்பதி யப்புக ழுமுதியல் கவிசொலி
விதித்தனெ முத்†தினை தரவரு மொருபொரு
ளருளாயோ ;
புகைத்தழ லைக்கொடு திரிபுர மெரிபட
நகைத்தவ ருக்கிட முறைபவள் வலைமகள்
பொருப்பிலி மக்கிரி பதிபெறு மிவையவ ளபிராமி -
‡பொதுற்றுதி மித்திமி நடமிடு பகிரதி
எழுத்தறி ருத்திரி பகவதி கவுரிகை
பொருட்பய னுக்குரை யடுகிய சமைபவள்
அமுதாகச் ;

---

* உற்ற இடர். † இனைதர=மெலிய.
‡ பொது உற்று ; பொது=அம்பலம்.

[திருத்தணிகை.]

செகத்தைய கத்திடு நெடியவிர் கடையவள்
அறத்தைவ ளர்த்திடு பரசிவை குலவதி
திறத்தமி ழைத்தரு பழையவ ளருளிய சிறியோனே-
செருக்கும ரக்கர்கள் பொடிபட வடிவுள
கரத்தில யிற்கொடு பொருதிமை யவர்பணி
திருத்தணி பொற்பதி தனில்மயில் நடவிய
பெருமாளே. (௫௫)

304. முகிலு மிரவியு முழுகதிர் தாரமு
முடுகு சிலைகொடு கணைவிடு மதனனு
முடியவொருபொரு ளுதவிய புதல்வனு மெனநாடி-
முதிய *கனனென தெய்வதரு நிகரென
முதலை மடுவினி †லதவிய புயலென
முகமு மறுமுக முடையவ னிவனென
வறியோரைச்;

சகல பதவியு முடையவ ரிவரென
தனிய தநுவல விஜயவ னிவனென
தபனன் வலம்வரு கிரிதனை நிகரென இசைபாடிச்-
‡சயில பகலவ ரிடைதொறு நடைசெயு
மிரவு தவிரவெ யிருபத மடையவெ
சவித வடியவர் தவமதில் வரவருள் புரிவாயே;

அகில புவனமு மடைவினி லுதவிய
இமய கிரிமயில் குலவரை தநுவென
அதிகை வருபுர நொடியினி லெரிசெய்த அபிராமி-
அமரு மிடனன லெனுமொரு வடிவுடை
யவ§னி லுரையவன் முதுதமி முடையவ
ணரியொ டயனுல கரியவ னடநவில்
சிவன்வாழ்வே;

---

* கனன்=கர்ணன். † அதவிய=சம்ஹாரஞ் செய்த.

‡ சயில பகலவர்=கற் பிளவை யொத்தவர்.

§ இல் உரையவன்=உரையிறந்தவன் : வாக்குக் கெட்டாதவன்.

திகிரி நிசிசரர் தடமுடி பொடிபட
திரைக ளெறிகடல் சுவறிட களமிசை
திரடு குறடுகள் புரள்வெகு குருதிகள் பெருகாறுச் -
சிகர கிரிநெரி படபடை பொருதருள்
திமிர தினகர குருபர இளமயில்
சிவணி வருமொரு தணிகையில் நிலைதிகழ்
பெருமாளே. (ருசு)

305. முடித்த குழலினர் வடித்த மொழியினர்
முகத்தி லிலகிய விழியாலும் -
முலைக்கி ரிகள்மிசை யசைத்த துகிலினும்
இளைத்த இடையினு மயலாகிப் ;
படுத்த அணைதனி லணைத்த அவரொடு
படிக்கு ளநுதின முழலாதே -
பருத்த மயில்மிசை நினைத்த பொழுதுன
பதத்து மலரிணை யருள்வாயே ;
துடித்து தசமுகன் முடித்த லைகள்விழ
தொடுத்த சரம்விடு ரகுராமன் -
துகைத்தி வுலகையொ ரடிக்கு ளளவிடு
துலக்க அரிதிரு மருகோனே ;
தடத்து ளுறைகயல் வயற்கு ளெதிர்படு
தழைத்த கதலிக ளவைசாயத் -
தருக்கு மெழிலுறு திருத்த ணிகையினில்
தழைத்த சரவண பெருமாளே. (ருஎ)

306. முத்துத்தெ றிக்கவள ரிக்குச்சி லைக்கைமதன்
முட்டத்தொ டுத்த மலராலே -
முத்தத்தி ருச்சலதி முற்றத்*து தித்தியென
முற்பட்டெ றிக்கு நிலவாலே ;
எத்தத்தை யர்க்குமித மிக்குப்பெ ருக்கமணி
இப்பொற்கொ டிச்சி தளராதே -
எத்திக்கு முற்றபுகழ் வெற்றித்தி ருத்தணியி
லிற்றைத்தி னத்தில் வரவேணும் ;

---

* உதித்தி=உதி+தீ ; உதி=உலைத் துருத்தி.

[திருத்தணிகை.]

மெத்தச்சி னத்துவட திக்குக்கு லச்சிகர
வெற்பைத்தொ ளைத்த கதிர்வேலா-
மெச்சிக்கு றத்திதன மிச்சித்த ணைத்துருகி
மிக்குப்ப ணைத்த மணிமார்பா;
மத்தப்ர மத்தரணி*மத்தச்ச டைப்பரமர்
சித்தத்தில் வைத்த கழலோனே-
வட்டத்தி ரைக்கடலில் மட்டித்தெ திர்த்தவரை
வெட்டித்து ணித்த பெருமாளே. (ருஅ)

307. முலைபுளக மெழஅங்கை மருவுசரி வளைகொஞ்ச
முகிலளக மகில்பொங்க அமுதான-
மொழிபதற வருமந்த விழிகுவிய மதிகொண்ட
முகம்வெயர்வு பெறமன்ற லணையூடே;
கலைநெகிழ வளர்வஞ்சி யிடைதுவள வுடலொன்று
படவுருகி யிதயங்கள் ப்ரியமேகூர்-
கலவிகரை யழியின்ப அலையிலலை படுகின்ற
கவலைகெட நினதன்பு பெறுவேனோ;
அலையெறியு மெழில்சண்ட உததிவயி றழன்மண்ட
அதிரவெடி படஅண்ட மிமையோர்கள்-
அபயமென நடுநின்ற அசுரர்பட அடியுண்டு
அவர்கள்முனை கெடநின்று பொரும்வேலா;
தலைமதிய நதிதும்பை யிளவறுகு கமழ்கொன்றை
சடைமுடியி லணிகின்ற பெருமானார்-
தருகுமர விடவைந்து தலையரவு தொழுகின்ற
தணிமலையி லுறைகின்ற பெருமாளே. ()

308. மோகுமொமொகென நறைகொண்மலர் வற்கத்திலற்புடைய
முளரிமயி லனையவர்கள் நெய்த்துக்க றுத்துமழை
முகிலனையகுழல்சரிய வொக்கக்கனத்துவள ரதிபார-
முளைபுளக மெழவளைகள் சத்திக்க முத்தமணி
முறுவலிள நிலவுதர மெத்தத்த வித்தசில
மொழிபதற விடைதுவள வட்டச்சி லைப்புருவ
இணைகோட;

* மத்தம் = ஊமத்தம்.

அகில்மிருக மதசலிலம் விட்டுப் பணித்தமல
ரமளிபட வொளிவிரவு ரத்நப்ர பைக்குழையொ
டமர்பொருத நெடியவிழி செக்கச்சி வக்கமா மதநீதி-
அடல்வடிவு நலமிதனில் மட்கச்செ ருக்கியுள
முருகனரை பெருகவுட லொக்கப்ப ழுத்துவிழு.
மளவிலொரு பரமவொளி யிற்புக்கி ருக்கவெனை
நினையாதோ;
செகுதகெண கெணசெகுத செக்குச்செ குச்செகுத
கிருதசெய செயகிருத தொக்குத்தொ குத்தொகுத
டிமிடடிமி டிமிடிமிட டிட்டிட்டி டிட்டிமிட
டிடிதீதோ-
திரிகடக கடகதிரி தித்திக்ர தித்ரிகட
திமிர்ததிமி திமிர்ததிமி தித்தித்தி தித்திதிதி
செணுசெணுத தணசெணுத தத்தித்தி குத்ரிகுட
ததிதீதோ;
தகுடதிகு திகுடதிமி தத்தத்த தித்திகுட
குகுகுகுகு குகுகுகுகு குக்குக்கு குக்குகுத
தரரரர ரிரிரிரிரி றிற்றித்த றிற்றிரிரி யெனவேநீள்-
சதிமுழவு பலவுமிரு பக்கத்தி சைப்பமுது
சமையபயி ரவியிதய முட்கிப்ர மிக்கவுயர்
தணிகைமலை தனில்மயிலி னிர்த்தத்தி னிற்கவல
பெருமாளே. (௬0)

309. வங்கம் பெறுகட லெங்கும் பொருதிரை
வந்துந் தியதிரு மதனாலே -
வஞ்சம் பெறுதிட நெஞ்சன் தழலுற
வஞ்சம் பதும்விடு மதனாலே;
பங்கம் படுமென தங்கந் தனிலுதி
பண்பொன் றியவொரு கொடியான -
பஞ்சொன் றியமயில் நெஞ்சொன் றியெயழல்
பொன்றுந் தனிமையை நினையாயோ;
தெங்கந் திரளுட னெங்குங் கதலிகள்
சென்றென் றியபொழி லதனூடே -
தெந்தெந் தெனதென என்றண் டுறவளி
நின்றுந் திகழ்வொடு மயிலாடப்;

[திருத்தணிகை.]

பொங்குஞ் சுனைகளி லெங்குங் குவளைக
ளென்றும் புகழ்பெற மலரீனும்-
பொன்றென் றணிகையில் நின்றங் கெழுபுவி
யென்றுஞ் செயவல பெருமாளே. (கூக)

310. **வ**ரிக்கலையி னிகரான விழிக்கடையி னிளைஞோரை
மயக்கியிடு மடவார்கள் மயலாலே-
மதித்துளறி யுளகாசு மவர்க்குதவி மிடியாகி
வயிற்றிலெரி மிகமூள அதனாலே;
ஒருத்தருட னுறவாகி ஒருத்தரொடு பகையாகி
ஒருத்தர்தமை மிகநாடி யவரோடே-
*உணக்கையிடு படுபாவி எனக்குனது கழல்பாட
உயர்ச்சிபெறு குணசீல மருள்வாயே;
விரித்தருண கிரிநாத னுரைத்ததமி ழெனுமாலை
மிகுத்தபல முடனோதை மகிழ்வோனே-
வெடித்தமணர் கழுவேற †ஒருத்திகண வனுமீள
விளைத்தொரு தமிழ்பாடு புலவோனே;
செருக்கியிடு பொருசூரர் குலத்தையடி யறமோது
திருக்கையினில் வடிவேலை யுடையோனே-
திருக்குலவு மொருநீல மலர்ச்சுனையி லழகான
திருத்தணிகை மலைமேவு பெருமாளே.‡ ()

311. **வா**ருற்றெழு பூண்முலை வஞ்சியர்
காருற்றெழு நீள்குழல் மஞ்சியர்
வாலக்குயில் போல்மொழி கொஞ்சியர் தெருமீதே-

---

* உணக் கை யிடு=உண்ண கை இடு.

† ஒருத்தி கணவன் = மங்கையர்க்கரசியா ருடைய கணவனாகிய கூன்பாண்டியன்.

‡ இச்செய்யுள் அருணகிரிநாதருடைய திருவாக்கென்பதைப் பற்றிச் சிறிது ஐய மிருப்பினும், பழைய பிரதிகள் பலவற்றினுங் காணப்பட்டபடியால் விடாது சேர்க்கப்பட்டது.

மாணுற்றெதிர் மோகன விஞ்சையர்
சேலுற்றெழு நேர்விழி விஞ்சியர்
வாகக்குழை யாமப ரஞ்சியர் மயலாலே;
சீருற்றிழு ஞானமு டன்கல்வி
நேரற்றவர் மால்கொடு மங்கியெ
சேருற்றறி வானித ழிந்துயி ரிழவாமுன் -
சேவற்கொடி யோடுசி கண்டியின்
மீதுற்றறி ஞோர்புகழ் பொங்கிய
தேசுக்கதிர் கோடியெ னும்பத மருள்வாயே;
போருற்றிடு சூரர்சி ரங்களை
வீரத்தொடு பாரில ரிந்தெழு
*பூதக்கொடி சோரிய ருந்திட விடும்வேலா -
பூகக்குலை யேவிழ மென்கயல்
தாவக்குலை வாழைக ளுஞ்செறி
போகச்செநெ லேயுதி ருஞ்†செய்க
ளவைகோடி;
சாரற்கிரி தோறுமெ ழும்பொழில்
தூரத்தொழு வார்வினை சிந்திடு
‡தாதுற்றெழு கோபுரமண்டப மவைசூழுந்
தார்மெத்திய தோரண மென்தெரு
தேர்சுற்றிய வார்பதி அண்டர்கள்
தாமெச்சிய நீள்தணி யம்பதி பெருமாளே. (௲)

312. வெற்றிசெய வுற்றகழை விற்குதைவ ளைத்துமதன்
விட்டகணை பட்ட விசையாலே-
வெட்டவெளி யிற்றெருவில் வட்ட§பணை யிற்கனல்வி
ரித்தொளிப ரப்பு மதியாலே;
பற்றிவசை கற்றபல தத்தையர்த மக்கு ||மிசை
பட்டதிகி ரிக்கு மழியாதே -

---

* பூத கோடி = பூத கோடிகள்; பூதங்களும் காக்கைகளும் என்றும் பொருள் கொள்ளலாம்; கொடி = காக்கை.

† செய்கள் = வயல்கள். ‡ தாது = பொன். § பணை = பறை.

|| இசைபட்ட திகிரி = புல்லாங்குழல்; திகிரி = மூங்கில்.

[வள்ளிமலை.]

பத்தியையெ னக்கருளி முத்தியைய ளித்துவளர்
பச்சைமயி லுற்று வரவேணும்;
நெற்றிவிழி பட்டெரிய நட்டமிடு முத்தமர்கி
னைக்குமன மொத்த கழல்வீரா -
நெய்க்கமல மொக்குமுலை மெய்க்குறவி யிச்சையுற
நித்தமிரு கத்த பூவுமார்பா;
எற்றியதி ருச்சலதி சுற்றியதி ருத்தணியி
லெப்பொழுது நிற்கு முருகோனே -
எட்டசல மெட்டநில முட்டமுடி கெட்டசுர
ரிட்டசிறை விட்ட பெருமாளே. (௬௪)

வள்ளிமலை.

[இது சித்தூர் ஜில்லாவிலுள்ளது. வட ஆற்காடு ஜில்லா திருவல்லம் ரெயில்வே ஸ்டேஷனுக்கு வடக்கு 9-மைல். மகா புநிதமான தேவீபீடம். ஸ்வாமி வள்ளியம்மையுடன் களவிற் பல திருவிளையாடல்கள் செய்து அவ் வம்மையை மணந்த பழம்பதி; இத்தலத்துத் திருப்புகழ்ப் பாடல்களையுங் கன்னபுரத்துத் [815] திருப்புகழையுங் காண்க. மலை வலம் வரலாம்.]

313. அல்விழி யாலு முல்லைநகை யாலு
மல்லல்பட ஆசைக் கடலீயும் -
அள்ளவினி தாகி நள்ளிரவு போலு
முள்ளவினை யாரத் தனமாரும்;
இல்லுமிளை யோரு மெல்லஅய லாக
வல்லெருமை மீயச் சமனாரும் -
எள்ளியென தாவி கொள்ளைகொளு நாளி
லுய்யவொரு நீபொற் கழல்தாராய்;
தொல்லைமறை தேடி யில்லையெனு நாதர்
சொல்லுமுப தேசக் குருநாதா -

துள்ளிவிளை யாடு புள்ளியுழை நாண
வெள்ளிவன மீதுற் றுறைவோனே ;
வல்லசுரர் மாள நல்லசுரர் வாழ
வல்லவடி வேலைத் தொடுவோனே -
வள்ளிபடர் சாரல் வள்ளிமலை மேவு
வள்ளிமண வாளப் பெருமாளே. (க)

314. ஐயுருறு நோயு மையலும வாவி
னைவருமு பாயப் பலநூலின் -
அல்லல்கட வாது துள்ளியதில் மாயு
முள்ளமுமில் வாழ்வைக் கருதாசைப் ;
பொய்யுமக லாத மெய்யைவள ராவி
உய்யும்வகை யோகத் தணுகாதே -
புல்லறிவு பேசி யல்லல்படு வேனை
நல்லஇரு தாளிற் புணர்வாயே ;
மெய்யபொழில் நீடு தையலை*மு நாலு
செய்யபுய மீதுற் றணைவோனே -
வெள்ளையிப மேறு வள்ளல்கிளை வாழ
†வெள்ளமுது மாவைப் பொருதோனே ;
வையமுழு தாளு மையமயில் வீர
வல்லமுரு காமுத் தமிழ்வேளே -
வள்ளிபடர் சாரல் வள்ளிமலை மேவு
வள்ளிமண வாளப் பெருமாளே. (உ)

315. கையொத்து வாழு மிந்த மெய்யொத்த வாழ்வி கந்து
பொய்யொத்த வாழ்வு கண்டு மயலாகிக் -
கல்லுக்கு நேரும் வஞ்ச வுள்ளத்தர் மேல்வி ழுந்து
கள்ளப்ப யோத ரங்க ளுடன்மேவி ;
உய்யப்ப டாமல் நின்று கையர்க்கு பாய மொன்று
பொய்யர்க்கு மேய யர்ந்து ளுடைநாயேன் -
உள்ளப்‡பெ ருக நின்று தொய்யப்ப டாம லென்று
§முள்ளத்தின் மாய்வ தொன்றை மொழியாயோ ;

---

* மு நாலு=பன்னிரண்டு. † வெள்ளம்=சமுத்திரத்தினிடத்தில்.
‡ பெருக=பேருக. § உள்ளத்தின் மாய்வு=மனோ லயம்.

[வள்ளிமலை.]

ஐயப்படாத *ஐந்து பொய்யற்ற சோலை தங்கு
தெய்வத்தெய் வானை கொங்கை புணர்வோனே -
அல்லைப்பொ ருமுழுங்கு சொல்லுக்ர சேவ லொன்று
வெல்லப்ப தாகை கொண்ட திறல்வேலா ;
வையத்தை யோடி யைந்து கையற்கு வீசு தந்தை
மெய்யொத்த நீதி கண்ட பெரியோனே -
வள்ளிக்கு ழாம டர்ந்த வள்ளிக்கல் மீது சென்று
வள்ளிக்கு வேடை கொண்ட பெருமாளே. (௩)

316. முல்லைக்கு மார னங்கை வில்லுக்கு மாதா் தங்கள்
பல்லுக்கும் வாடி யின்ப முயலாநீள் -
முள்ளூற்ற கால் மடிந்து கொள்ளிக்குள் மூழ்கி வெந்து
பள்ளத்தில் வீழ்வ தன்றி யொருஞான ;
எல்லைக்கு மார ணங்கள் சொல்லித்தொ ழாவ ணங்கு
மெல்லைக்கும் வ ரவி நின்ற னருள்நாமம் -
எள்ளற்கு மால யர்ந்து வுள்ளத்தி லாவ என்று
முள்ளப்பெ ரு†ரி ணங்கை யொழிவேனோ ;
‡அல்லைக்க வானை தந்த வல்லிக்கு மார்பி லங்க
அல்லிக்கொள் மார்ப லங்கல் புனைவோனே -
அள்ளற்ப டாத கங்கை வெள்ளத்து வாவி தங்கி
மெள்ளச்ச ரோரு கங்கள் பயில்நாதா ;
வல்லைக்கு மார கந்த தில்லைப்பு ராரி மைந்த
மல்லுப்பொ ராறி ரண்டு புயவீரா -
வள்ளிக்கு ழாம டர்ந்த வள்ளிக்கல் மீது சென்று
வள்ளிக்கு வேடை கொண்ட பெருமாளே. (௪)

* ஐந்து...சோலை = சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிஜாதம், கற்பகம் என்னும் ஐவகைத் தருக்கள் நிறைந்த சோலை.
† இணங்கை=இணக்கத்தை. ‡ அல்லைக்கு=இரவில்.

317\. கள்ளக்*கு வாற்பை தொள்ளைப்பு லாற்பை
†துள்ளிக்க ணூர்க்க யவுகோப -
கள்வைத்த தோற்பை ‡பொள்ளூற்ற காற்பை
கொள்ளைத்து ராற்பை பசுபாச ;
அள்ளற்பை மாற்பை §ஞெள்ளற்பை சீப்பை
வெள்ளிட்ட சாப்||பி சிதமீரல் -
அள்ளச்¶சு வாக்கள் சள்ளிட்டி ழாப்பல்
கொள்ளப்ப டாக்கை தவிர்வேனோ ;
தெள்ளத்தி சேர்ப்ப ○வெள்ளத்தி மாற்குங்
$ வெள்ளுந்தி மாற்கு மருகோனே -
சிள்ளிட்ட காட்டி லுள்ளக்கி ராற்கொல்
புள்ளத்த மார்க்கம் வருவோனே ;
வள்ளிச்சன் மார்க்கம் **விள்ளைக்கு நோக்க
வல்லைக்கு ளேற்று மிளையோனே -
வள்ளிக்கு ழாத்து வள்ளிக்கல் காத்த
வள்ளிக்கு வாய்த்த பெருமாளே. (ரு)

318\. வெல்லிக்கு வீக்கு முல்லைக்கை வீக்கு
வில்லிக்க தாக்க ருதும்வேளால் -
வில்லற் றவாக்கொள் சொல்லற்று காப்பொய்
யில்லத் தருக்க வலைமேவு ;
பல்லத்தி வாய்க்க அல்லற் படாக்கை
நல்விற் பொருச்ச மயமாறின் -
பல்லத்த மார்க்க வல்லர்க்கர் மூர்க்கர்
கல்விக் கலாத்த லையலாமோ ;

---

* குவால்=கூட்டம். † துள் இக்கன் எனப் பிரிக்க.

‡ பொள் ளூற்ற=பொள்ளென வுற்ற : விரைந்து செல்லும்.

§ ஞெள்ளல்=தவறு. || பிசிதம்=இறைச்சி.

¶ சுவாக்கள்=நாய்கள்.

○ வெள் ளத்தி மால்=வெள்ளை யானையை யுடைய இந்திரன்.

$ வெள் ளுந்தி யால்=வெள் ளுந்தி மால் : திருப்பாற்கடலை யுடைய விஷ்ணு ; உந்தி=கடல்.

** விள் ஐக்கு=வினவிய தாதைக்கு.

[வள்ளிமலை.]

அல்லைக்கொல் வார்த்தை சொல்லிக்கி தோத்து
சொல்குக்கு டார்த்த இளையோனே -
அல்லுக்கு மாற்றி னெல்லுக்கு மேற்புல்
கெல்லைப்ப டாக்க ருணைவேளே ;
வல்லைக்கு மேற்றா தில்லைக்கு மேற்றா
வல்லிக்கு மேற்ற ருள்வோனே -
வள்ளிக் குழாத்து வள்ளிக்கல் காத்த
வள்ளிக்கு வாய்த்த பெருமாளே. (௬)

இதன் பொருள்.

வெல்லி குவிக்கும்=உலகத்தை வென்று குவிக்கத் தக்க,— முல்லை கை=முல்லை மலர்ப்பாணந் தரித்த கையினை யுடைய,— வீக்கு வில் இக்கதா கருதும் வேளால்=நாண் கட்டியவில் கரும்பாக விரும்பிய மன்மதனால்,—வில் அற்று=ஒளி மழுங்கி, அவா கொள் சொல் அற்று=ஆசைகொண் டுரைக்குஞ் சொல்லும் போய்,—உசா=(மனம்) நெகிழ்ந்து,—போய் இல்லத்து உறு= (அதனோடு) பொய் வாழ்வுடைய இல்லத்திற் சென்று—கவலை மேவு பல் அத்தி வாய்க்க=(அங்கே) பல கவலைக்கடல் நேர,— அல்லல் படு ஆக்கை=(அவற்றின் மூழ்கித்) துன்பப் படும் இவ் வுடல் உடையேன்,—நல்வில் பொரு=நன்மார்க்கத்தில் தரியாத, —சமயம் ஆறின் பல் அத்த மார்க்க=அறுவகைச் சமயத்துப் பல பொருள் மார்க்கத்தையுடைய,—வல் அர்க்கர் மூர்க்கர்=வல்லரக்க ராகிய் மூர்க்கர்களுடைய,—கல்லிக் கலாத்து அலையல் ஆமோ= (குதர்க்க வாதக்) கல்விப் போரிலேயும் புகுந்து வருந்தலாகுமோ? —அல்லை கொல் வார்த்தை சொல்லிக்கு=இராக்காலம் ஒழியாதா என்னுஞ் சொல்லையுடைய ஒருதலைக் காமமுற்ற தலைவிக்கு,— இதம் ஒத்து சொல்=இதமாக அவளோ டொத்து இரவை யொழிக்குங் குரலாகக் கொக்கரிக்கின்ற,—குக்குடம் ஆர்த்த இளையோனே=சேவலைக் கொடியின்கண் ஆர்த்த முருகனே!— அல்லுக்கும் ஆற்றின் எல்லுக்கும் மேல்=இரவையும் சிறிது வழி தெரிவிக்கும் பகலையுங் கடந்த மேலிடத்தில், அதாவது கேவல சகலங் கடந்த சுத்தநிலையில், புல்கு எல்லைபடா கருணை வேளே= எழுந்தருளியிருக்கின்ற அளவுபடாத தயாசமுத்திர மாகிய அழகனே!—வல் ஐக்கும் ஏற்றா=வலிய அழகாகிய இடப

வாகனத்தை யுடையவரும்,—தில்லைக்கும் ஏற்றர் வல்லிக்கும் ஏற்றர்=தில்லைப் பதிக்கும் சிவகாமவல்லிக்கும் ஏற்றவருமாகிய சிவபெருமான்,—அருள்வோனே=ஈன்றருளிய குமாரனே!—வள்ளிக் குழாத்து வள்ளிக் கல் காத்த=கூட்டமாகிய வள்ளிக் கொடிகளடர்ந்த வள்ளி மலையைக் காத்த,—வள்ளிக்கு வாய்த்த பெருமாளே=வள்ளி நாயகியார்க்கு வாய்த்த பெருமாளே.—எ-று.

---

319. ககனமு *மநிலமு மனல்புனல் நிலமமை
கள்ளப் புலாற்கி ருமிவீடு-
கனலெழ மொழிதரு சினமென மதமிகு
கள்வைத்த தோற்பை சுமவாதே;
யுகஇறு திகளிலு மிறுதியி லொருபொருள்
உள்ளக்க ணோக்கு மறிவூறி-
ஒளிதிக ழுருவுரு வெனுமறை யிறுதியி
லுள்ளத்தை நோக்க அருள்வாயே;
ம்ருகமத பரிமள விகசித †நளினநள்
வெள்ளைப் பிராட்டி இறைகாணு-
விடதர குடிலச டிலமிசை வெகுமுக
வெள்ளத்தை யேற்ற பதிவாழ்வே;
வகுளமு முகுளித ‡வழைகளு மலிபுன
வள்ளிக் §குலாத்தி கிரிவாழும்-
வனசரர் மரபினில் வருமொரு மரகத
வள்ளிக்கு வாய்த்த பெருமாளே. (எ)

☞ குறிப்பு:—இப்பாடலில் ஒவ்வோரடியினும் இறுதியி லுள்ள பாகத்தை எடுத்தமைக்கப் பின்வருமாறு பிறிதொரு பாட லாமாறு காண்க:—

---

* அநிலம்=காற்று † நளின நள் வெள்ளைப் பிராட்டி இறை=சரஸ்வதி தேவியின் நாயகனான பிரமன்.

‡ வழை=சுரபுன்னை. § குலத் திகிரி என்பது குலாத் திகிரி என்றாயிற்று; வள்ளிக் குலத் திகிரி=சிரேஷ்டமாகிய வள்ளி மலை.

[வள்ளிமலை.]

கள்ளப் புலாற்கி ருமிவீடு-
கள்வைத்த தோற்பை சுமவாதே;
உள்ளக் கணுக்கு மறிவூறி-
உள்ளத்தை நோக்க அருள்வாயே;
வெள்ளைப் பிராட்டி யிறைகாணு-
வெள்ளத்தை யேற்ற பதிவாழ்வே;
வள்ளிக் குலாத்தி கிரிவாழும்-
வள்ளிக்கு வாய்த்த பெருமாளே.

320. *அல்லசல டைந்த வில்லடல நங்கன்
அல்விமல ரம்பு தனையேவ-
அள்ளியெரி சிந்த பிள்ளைமதி தென்ற
லையமுது கிண்ட அணையூடே;
சொல்லுமரா விந்த வல்விதனி நின்று
தொல்லைவினை யென்று முனியாதே-
துய்யவரி வண்டு செய்யமது வுண்டு
துள்ளியக டம்பு தரவேணும்;
†கல்லசல மங்கை யெல்லையில் விரிந்த
கல்விகரை கண்ட புலவோனே-
கள்ளொழுகு கொன்றை வள்ளல்தொழ அன்று
கல்லலற வொன்றை யருள்வோனே;
வல்லசுர ரஞ்ச நல்லசுரர் விஞ்ச
வல்லமைதெ ரிந்த மயில்வீரா-
வள்ளிபடர் கின்ற வள்ளிமலை சென்று
வள்ளியை மணந்த பெருமாளே. (அ)

---

* 'அல்லிடை யடைந்த' என்றும் பாடம்.

† 'சூப்பிரமணிய பராக்ரமம்' என்னும் புத்தகத்திற் சகலகலா வல்லப மூர்த்தி சரித்திரத்தைப் பார்க்க.

321. குடிவாழ்க்கை யன்னை மனையாட்டி பிள்ளை
குயில்போற்ப்ர சன்ன மொழியார்கள்-
குலம்வாய்த்த நல்ல தனம்வாய்த்த தென்ன
குருவார்த்தை தன்னை யுணராதே;
இடநாட்கள் வெய்ய நமனீட்டி தொய்ய
இடர்கூட்டிஇன்னல் கொடுபோகி-
இடுகாட்டி லென்னை எரியூட்டு முன்னு
னிருதாட்கள் தம்மை யுணர்வேனோ;
வடநாட்டில் வெள்ளி மலைகாத்து புள்ளி
மயில்மேற்றி கழ்ந்த குமரேசா-
வடிவாட்டி வள்ளி அடிபோற்றி வள்ளி
மலைகாத்த நல்ல மணவாளா;
அடிநாட்கள் செய்த பிழைநீக்கி யென்னை
யருள்போற்றும் வண்மை தரும்வாழ்வே-
அடிபோற்றி யல்லி முடிசூட்ட வல்ல
அடியார்க்கு நல்ல பெருமாளே. (௯)

322. சிரமங்க மங்கைகண் செவிவஞ்ச நெஞ்சு*செஞ்
சலமென்பு திண்பொருந் திடுமாயம்-
சிலதுன்ப மின்ப†மொன் றிறவந்து பின்புசெந்
தழலின்கண் வெந்துசிந் திடஆவி;
விரைவின்க ணந்தகன் பொரவந்த தென்றுவெந்
துயர்கொண்ட லைந்துலைந் தழியாமுன்-
வினையொன்று மின்றிநன் றியலொன்றி நின்பதம்
வினவென்று அன்புதந் தருள்வாயே;
அரவின்கண் முன்துயின் றருள்கொண்ட லண்டர்கண்
டமரஞ்ச மண்டிவந் திடுசூரன்-
அகலம் பிளந்தணைந் தகிலம் பரந்திரங்
கிடஅன் றுடன்றுகொன் றிடும்வேலா;
மரைவெங் கயம்பொருந் திடவண் டினங்குவிந்
திசையொன்ற மந்திசந் துடனுடும்-
வரையின்கண் வந்துவண் குறமங்கை பங்கயம்
வரநின்று கும்பிடும் பெருமாளே. (௧0)

---

* செஞ் சலம்=இரத்தம். † ஒன்றிற=ஒன்றி+இற.

[வள்ளிமலை.]

323. வரைவில்பொய் மங்கையர் தங்க ளஞ்சன
விழியையு கந்துமு கந்து கொண்டடி
வருடிநி தம்பம லைந்து தெந்தென அளிகாடை-
மயில்குயி லன்றிலெ னும்பு ளின்பல
குரல்செய்தி ருந்துபி னுந்தி யென்கிற
மடுவில்வி ழுந்துகி டந்து செந்தழல் மெழுகாகி;
உருகியு கந்திதழ் தின்று மென்றுகை
யடியின கங்கள்வ ரைந்து குங்கும
உபய தனங்கள்த தும்ப அன்புட னணையாமஞ்-
சுலவிய கொண்டைகு லைந்த லைந்தெழ
அமளியில் மின்சொல்ம ருங்கி லங்கிட
உணர்வழி யின்பம றந்து நின்றனை நினைவேனோ;
விரவி நெருங்குகு ரங்கி னங்கொடு
மொகுமொகெ னுங்கட லுங்க டந்துறு
விசைகொடி லங்கைபு குந்த ருந்தவர் களிகூர-
வெயில்நில வும்பரு மிம்ப ருப்படி
ஜெயஜெய வென்றுவி டுங்கொ டுங்கணை
விறல்நிரு தன்தலை சிந்தி னன்திரு மருகோனே;
அருகர் கணங்கள்பி ணங்கி டும்படி
மதுரையில் வெண்பொடி யும்ப ரந்திட
அரகர சங்கர வென்று வென்றருள் புகழ்வேலா-
அறம்வளர் சுந்தரி மைந்த தண்டலை
வயல்கள் பொருந்திய சந்த வண்கரை
*யரிவை விலங்கலில் வந்து கந்தருள்
பெருமாளே. (கக)

---

* அரிவை விலங்கல் = வள்ளி மலை.

திருக்கழுக்குன்றம்.

[செங்கற்பட்டு ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தென்கிழக்கு 9-மைல். நால்வர் பாடலும் பெற்ற ஸ்தலம். இது 'கதலிவனம்' 'வேதகிரி' 'பக்ஷிதீர்த்தம்' எனவும் வழங்கும். வேதங்களுங் கழுகுகளும் பூசித்த பழம்பதி. ஸ்வாமிகள் 'கழுகு தொழு வேதகிரி' என்பர். இன்றும் இத்தலத்திற் பக்ஷி தரிசனஞ் செய்தலும் மலை வலம் வருதலும் விசேடமாகக் கொண்டாடப்படுகின்றன. அந்தகக்கவி - வீரராகவ முதலியார் பாடியருளிய ஸ்தலபுராணம் ஒன்றுண்டு].

324. அகத்தி னைக்கொண் டிப்புவி மேல்சில
தினத்து மற்றொன் றுற்றறி யாதுபின்
அவத்துள் வைக்குஞ் சித்தச னோடு கணையாலே-

அசுத்த மைக்கண் கொட்புறு பாவையர்
நகைத்து ரைக்கும் பொய்க்கடல் மூழ்கியெ
அலக்க ணிற்சென் றுத்தடு மாறியெ
சிலநாள்போய்;

இகத்தை மெய்க்கொண் டிப்புவி பாலர்பொன்
மயக்கி லுற்றம் பற்றைவி டாதுட
லிளைப்பி ரைப்பும் பித்தமு மாய்நரை முதிர்வாயே-

எமக்க யிற்றின் சிக்கினி லாமுனுன்
மலர்ப்ப தத்தின் பத்திவி டாமன
திருக்கு நற்றொண் டர்க்கிணை யாகவு
னருள்தாராய்;

புகழ்ச்சி லைக்கந் தர்ப்பனு மேபொடி
படச்சி ரித்தன் முப்புர நீறுசெய்
புகைக்க னற்கண் பெற்றவர் காதலி யருள்பாலா-

புவிக்குள் யுத்தம் புத்திரர் சேயர
சனைத்து முற்றுஞ் செற்றிட வேபகை
புகட்டி வைக்குஞ் சக்கிர பாணிதன் மருகோனே;

[திருக்கழுக்குன்றம்.]

திகழ்க்க டப்பம் புட்பம தாம்புய
மறைத்தி ருக்கொண் டற்புத மாகிய
தினைப்பு னத்தின் புற்றுறை பாவையை யணைசீலா-
செகத்தி லுச்சம் பெற்றம ராவதி
யதற்கு மொப்பென் றுற்றழ கேசெறி
திருக்க ழுக்குன் றத்தினில் மேவிய பெருமாளே.

325. *எழுகுநிறை நாபி அரிபிரமர் சோதி
யிலகுமரன் மூவர் முதலானோர்-
இறைவியெனு மாதி பரைமுலையி னூறி
யெழுமமிர்த நாறு கனிவாயா;
புழுகொழுகு காழி கவுணியரில் ஞான
புநிதனென வேடு தமிழாலே-
புனலிலெதி ரேற சமணர்கழு வேற
பொருதகவி வீர குருநாதா;
மழுவுழைக பால டமரகத்ரி சூல
மணிகரவி நோத ரருள்பாலா-
மலரயனை நீடு சிறைசெய்தவன் வேலை
வளமைபெற வேசெய் முருகோனே;
கழுகுதொழு வேத கிரிசிகரி வீறு
கதிருலவு வாசல் நிறைவானோர்-
கடலொலிய தான மறைதமிழ்க ளோது
கதலிவன மேவு பெருமாளே. (உ)

326. ஓல மிட்ட சுரும்பு தனு தனுவென
வேசி ரத்தில் விழுங்†கை பளீர் பளீரென
வோசை பெற்ற சிலம்பு கலீர் கலீரென விரகலீலை-
ஓர்மி டற்றி லெழும்புள் குகூ குகூவென
வேர்வை மெத்த வெழுந்து சலா சலாவென
ரோம குச்சு நிறைந்து சிலீர் சிலீரென
அமுதமாரன்;

* எழுகு=எ ழுலகம். † கை=ஒழுங்கு.

ஆலயத்து ளிருந்து குபீர் குபீரென
வேகு திக்க வுடம்பு விரீர் விரீரென
ஆரமுத்த மணிந்து அளா வளாவென மருவுமாதர்-
ஆசை யிற்கை கலந்து சுமா சுமாபவ
சாக ரத்தி லழுந்தி எழா எழாதுளம்
ஆறெழுத்தை நினைந்து குகா குகாவென
வகைவராதோ;

மாலை யிட்ட சிரங்கள் செவேல் செவேலென
வேலை மூச்சி தரும்பல் வெளேல் வெளேலென
வாகை பெற்ற புயங்கள் கறேல் கறேலென
எதிர்கொள்சூரன்-
மார்பு மொக்க நெரிந்து கரீல் கரீலென
பேய்கு திக்க நிணங்கள் குழூ குழூவென
வாய்பு தைத்து விழுந்து ஐயோ ஐயோவென
உதிரமாருய்;

வேலை வற்றி வறண்டு சுறீல் சுறீலென
மாலை வெற்பு மிடிந்து திடீல் திடீலென
மேன்மை பெற்ற ஜனங்கள் ஐயா ஐயாவென
விசைகள்கூற-
வேலெ டுத்து நடந்த திவா கராசல
வேடு வப்பெண் மணந்த புயா சலாதமிழ்
வேத வெற்பி லமர்ந்த க்ருபா கராசிவ
குமரவேளே. (௩)

327. **வேத** வெற்பி லேபு னத்தில் மேவி நிற்கு மபிராம-
வேடு வச்சி பாத பத்ம மீது செச்சை முடிதோய;
ஆத ரித்து வேளை புக்க ஆறி ரட்டி புயநேய-
ஆத ரத்தொ டாத ரிக்க ஆன புத்தி புகல்வாயே;
காது முக்ர வீர பத்ர காளி வெட்க *மகுடாமா-
காச முட்ட வீசி விட்ட காலர் பத்தி யிமையோரை;
ஓது வித்த நாதர் கற்க †வோது வித்த முநிநாண-
ஓரெ ழுத்தி லாறெ ழுத்தை யோது வித்த பெருமாளே.

---

*மகுடா மாகாச முட்ட=மகுடம் ஆகாசம் முட்ட.

†ஓதுவித்த முநி=தமக்கு ஆதியில் ஹரி ஓம் என ஓதுவிக்கத் தொடங்கின பிரமன்.

மயிலம்

[தென் ஆறுகாடு ஜில்லா மயிலம் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து 3-மைல்.]

328. கொலைகொண்ட போர்விழி கோலோ வாளோ
விடமிஞ்சு பாதக வேலோ சேலோ
குழைகொண்டு லாவிய மீனோ மானோ எனுமானார்—
குயில்தங்கு மாமொழி யாலே நேரே
யிழைதங்கு நூலிடை யாலே மீதூர்
குளிர்கொங்கை மேருவி னாலே நாணு வீதமாகி ;
உலைகொண்ட மாமெழு காயே மோகா
யலையம்பு ராசியி னூடே மூழ்கா
வுடல்பஞ்ச பாதக மாயா நோயா லழிவேனோ—
உறுதண்ட பாசமொ டாரா வாரா
எனையண்டி யேநம னார்தூ தானோர்
உயிர்கொண்டு போய்விடு நாள்நீ மீதா
ளருள்வாயே ;
அலைகொண்ட வாரிதி கோகோ கோகோ
எனநின்று வாய்விட வேநீள் மாசூ
ரணியஞ்*ச ராசனம் வேறாய் நீறா யிடவேதான்—
அவிர்கின்ற சோதிய வாரார் நீள்சீ
ரனலங்கை வேல்விடும் வீரா தீரா
அருமந்த ரூபக ஏகா வேறோர் வடிவாகி ;
மலைகொண்ட வேடுவர் கானூ டேபோய்
குறமங்கை யாளுட னேமா லாயே
மயல்கொண்டு லாயவள் தாள்மீ தேவீழ் குமரேசா—
†மதிமிஞ்சு போதக வேலா ஆளா
மகிழ்சம்பு வேதொழு பாதா நாதா
மயிலந்தண் மாமலை வாழ்வே வானோர்
பெருமாளே.

---

* சராசனம்=வில்.

† 'மதிமிஞ்சு போதக ஞான ஈசா, செவியின் சொல் வாசக வேதா தீதா, மகிழ் சம்பு தானருள் வேலா வானோர் பெருமாளே.'—என்றும் பாடபேத முண்டு.

திரிசிராப்பள்ளி.

[சம்பந்த ஸ்வாமிகள் அப்பர் ஸ்வாமிகள் இவர்களது பாடல் பெற்ற ஸ்தலம். திரிசிரன் என்னும் அரக்கன் பூசித்த திருப்பதி. இத்தலத்துத் தாயுமானவர்கோயில் மிகவும் விசேடமானது. சைவ எல்லப்ப நாவலர் பாடிய செவ்வந்திப்புராணமும், மகாவித்துவான்—மீநாக்ஷிசுந்தரம் பிள்ளை யவர்கள் பாடிய உறையூர்ப் புராணமும் இத்தலத்துப் பெருமையை விளக்குவன.]

329. அங்கை நீட்டிய ழைத்துப் பாரிய
கொங்கை காட்டிம றைத்துச் சீரிய
அன்பு போற்பொய்ந டித்துக் காசள வுறவாடி—

அம்பு தோற்றக ணிட்டுத் தோதக
இன்ப சாஸ்த்ரமு ரைத்துக் கோகிலம்
அன்றில் போற்குர லிட்டுக் கூரிய நகரேகை;

பங்க மாக்கிய லைத்துத் தாடனை
கொண்டு வேட்கையெ ழுப்பிக் காமுகர்
பண்பில் வாய்க்கம யக்கிக் கூடுத லியல்பாகப்—

பண்டி ராப்பகல் சுற்றுச் சூளைகள்
தங்கள் மேற்ப்ரமை விட்டுப் பார்வதி
பங்கர் போற்றிய பத்மத் தாள்தொழ
அருள்வாயே;

எங்கு மாய்க்குறை வற்றுச் சேதன
அங்க மாய்ப்பரி சுத்தத் தோர்பெறும்
இன்ப மாய்ப்புகழ் முப்பத் தாறினின் முடிவேறாய்—

இந்த்ர கோட்டிம யக்கத் தான்மிக
மந்த்ர மூர்த்தமெ டுத்துத் தாமத
மின்றி வாழ்த்திய சொர்க்கக் காவல வயலூரா;

செங்கை வேற்கொடு துட்டச் சூரனை
வென்று தோற்பறை கொட்டக் கூளிகள்
தின்று கூத்தாட டிக்கத் தோகையில் வரும்வீரா—

[திரிசிராப்பள்ளி.]

செம்பொ னுற்றிகழ் சித்ரக் கோபுர
மஞ்சி ராப்பகல் மெத்தச் சூழ்தரு
தென்சி ராப்பளி வெற்பிற் றேவர்கள்
பெருமாளே. (க)

330. அந்தோமன மேநம தாக்கையை
நம்பாதெயி தாகித சூத்திர
மம்போருக ளுடிய பூட்டிது இனிமேல்நாம் -
அஞ்சாதமை யாகிரி யாக்கையை
பஞ்சாடிய வேலவ னுர்க்கிய
லங்காகுவம் வாஇனி தாக்கையை ஒழியாமல் ;
வந்தோமிது வேகதி யாட்சியு
மிந்தாமயில் வாகனர் சீட்டிது
வந்தாளுவம் நாமென வீக்கிய சிவநீறும் -
வந்தேவெகு வானமை யாட்கொளு
வந்தார்மத மேதினி மேற்கொள
மைந்தாகும ராவெனு மார்ப்புய மறவாதே ;
திந்தோதிமி தீதத மாத்துடி
தந்தாதன னுதன தாத்தன
செம்பூரிகை பேரிகை யார்த்தெழ மறையோதச் -
செங்காடென வேவரு மூர்க்கரை
சங்காரசி காமணி வேற்கொடு
செண்டாடிம காமயில் மேற்கொளு முருகோனே ;
இந்தோடிதழ் நாக*ம காக்கடல்
கங்காளமி னுர்சடை சூட்டிய
என்தாதைச தாசிவ கோத்திர னருள்பாலா -
எண்கூடரு ளால்நெளவி நோக்கியை
நன்பூமண மேவிசி ராப்பளி
யென்பார்மன மேதினி நோக்கிய பெருமாளே. ()

* மகாக் கடல் = பெருங்கடல்போலப் பெருகிவந்த கங்கை.

331. அரிவையர் நெஞ்சுரு காப்புணர்
தருவிர கங்களி னுற்பெரி
தவசம்வி ளைந்துவி டாய்த்தடர் முலைமேல்வீழ்ந்-
தகிலொடு சந்தன சேற்றினில்
முழுகியெ ழுந்தெதிர் கூப்புகை
யடியின கம்பிறை போற்பட விளையாடிப் ;
பரிமளம் விஞ்சிய பூக்குழல்
சரியம ருங்குடை போய்ச்சில
பறவைக ளின்குர லாய்க்கயல் விழிசோரப் -
பனிமுக முங்குறு வேர்ப்பெழ
இதழமு துண்டிர வாய்ப்பகல்
பகடியி டும்படி தூர்த்தனை விடலாமோ ;
சரியையு டன்க்ரியை போற்றிய
பரமப தம்பெறு வார்க்கருள்
தருகணன் ரங்கபு ரோச்சிதன் மருகோனே -
சயிலமெ றிந்தகை வேற்கொடு
மயிலினில் வந்தெனை யாட்கொளல்
சகமறி யும்படி காட்டிய குருநாதா ;
திரிபுவ னந்தொழு பார்த்திபன்
மருவிய மண்டப கோட்டிகள்
தெருவில்வி ளங்குசி ராப்பளி மலைமீதே -
தெரியஇ ருந்தப ராக்ரம
உருவளர் குன்றுடை யார்க்கொரு
திலதமெ னும்படி தோற்றிய பெருமாளே. (ந)

332. அழுதழு தாசார நேசமு
முடையவர் போலேபொய் சூழ்வுறும்
அசடிகள் மாலான காமுகர் பொன்கொடாநாள் -
அவருடன் வாய்பேசி டாமையு
முனிதலு மாறுத தோஷிகள்
அறுதியில் காசாசை வேசைகள் நஞ்சுதோயும் ;

[திரிசிராப்பள்ளி.]

விழிகளி னூல்மாட வீதியில்
முலைகளை யோராம லாரொடும்
விலையிடு மாமாய ரூபிகள் பண்பிலாத -
விரகிகள் வேதாள மோவென
முறைபிடு கோமாள மூளிகள்
வினைசெய லாலேயெ னுவியு யங்கலாமோ ;
வழியினில் வாழ்ஞான போதக்
பரமசு வாமீவ ரோதய
வ்யலியில் வேலாயு தாவரை யெங்குமானய் -
மதுரையின் மீதால வாயினில்
எதிரம ணாரோரெ ணாயிரர்
மறிகழு மீதேற நீறுப ரந்துலாவச் ;
செழியனு மாளாக வாதுசெய்
கவிமத சீகாழி மா*முனி
சிவசிவ மாதேவ காவென வந்துபாடுந் -
திருவுடை யாய்தீதி லாதவர்
உமையொரு பாலான மேனியர்
சிரகிரி வாழ்வான தேவர்கள் தம்பிரானே. (ச)

333. இளையவர் நெஞ்சத் †தளையமெ னுஞ்சிற்
றிடைகொடு வஞ்சிக் கொடிபோல்வார் -
இணையடி கும்பிட் டணியல்குல் பம்பித்
திதழமு துந்துய்த் தணியாரக் ;
களபசு கந்தப் புளகித இன்பக்
கனதன கும்பத் திடைமூழ்குங் -
கலவியை நிந்தித் திலகிய நின்பொற்
கழல்தொழு மன்பைத் தருவாயே ;
தளர்வறு மன்பர்க் குள்மெனு மன்றிற்
சதுமறை சந்தத் தொடுபாடத் -
தரிகிட தந்தத் திரிகிட திந்தித்
தகுர்திமெ னுங்கொட் டடனடித் ;

---

* முனி = யானைக்கன்று. † தளையம் = விலங்கு.

தெளிவுற வந்துற் றொளிர்சிவ னன்பிற்
சிறுவஅ லங்கற் றிருமார்பா -
செழுமறை யஞ்சொற் பரிபுர சண்டத்
திரிசிர குன்றப் பெருமாளே. (ரு)

334. பகலவ னெக்குந் தனவிய ரத்நம்
பவளவெண் முத்தந் திரமாகப் -
பயிலமு லைக்குன் றுடையவர் சுற்றம்
பரிவென வைக்கும் பணவாசை ;

அகமகிழ் துட்டன் பகிடிம ருட்கொண்
டழியும வத்தன் குணவீனன் -
அறிவிலி சற்றும் பொறையிலி பெற்றுண்
டலைதலொ ழித்தென் றருள்வாயே ;

சகலரு மெச்சும் பரிமள பத்மந்
தருணப தத்திண் சுரலோகத் -
தலைவர்ம கட்குங் குறவர்ம கட்குந்
தழுவஅ ணைக்குந் திருமார்பா ;

செகதல மெச்சும் புகழ்வய லிக்குந்
திருதிகெ னப்பொங் கியவோசை -
திமிலைத விற்றுந் துமிகள்மு ழக்குஞ்
சிரகிரி யிற்கும் பெருமாளே. (சு)

335. ஒருவரொடு கண்கள் ஒருவரொடு கொங்கை
ஒருவரொடு செங்கை யுறவாடி -
ஒருவரொடு சிந்தை ஒருவரொடு நிந்தை
ஒருவரொடி ரண்டு முரையாரை ;

மருவமிக அன்பு பெருகவுள தென்று
மனநினையு மிந்த மருள்தீர -
வனசமென வண்டு தனதனன வென்று
மருவுசர ணங்க ளருளாயோ ;

[திரிசிராப்பள்ளி.]

அரவமெதிர் கண்டு நடுநடுந டுங்க
அடலிடுப்ர சண்ட மயில்வீரா-
அமரர்முத லன்பர் முநிவர்கள்வ ணங்கி
அடிதொழவி ளங்கு வயலூரா;
திருவையொரு பங்கர் கமலமலர் வந்த
திசைமுகன்ம கிழ்ந்த பெருமானர்-
திகுதகுதி யென்று நடமிட முழங்கு
த்ரிசிரகிரி வந்த பெருமாளே. (எ)

336. குழந்த வாய்க்கனி யமுத வாக்கினர்
கோலே வேலே சேலே போலே அழகான-
குழைகள் தாக்கிய விழிக ளாற்களி
கூரா வீரு தீரா மாலா யவரோடே;
உமது தோட்களி லெமது வேட்கையை
ஓரீர் பாரீர் வாரீர் சேரீர் எனவேநின்-
றுடைதொ டாப்பண மிடைபொ ருத்தன
மூடே வீழ்வே னீடே றுதே யுழல்வேனே;
தமர வாக்கிய அமரர் வாழ்த்திய
தாதா வேமா ஞாதா வேதோ கையிலேறீ-
சயில நாட்டிறை வயலி நாட்டிறை
சாவா மூவா மேவா நீவா இளையோனே;
திமிர ராக்கதர் சமர வேற்கர
தீரா வீரா நேரா தோரா உமைபாலா-
திரிசி ராப்பளி மலையின் மேற்றிகழ்
தேவே கோவே வேளே வானோர் பெருமாளே.

337. குவளை பூசல்வி ளைத்திடு மங்கயல்
கடுவ தாமெனு மைக்கண் மடந்தையர்
குமுத வாயமு தத்தை நுகர்ந்திசை பொருகாடை-
குயில்பு றாமயில் *குக்கில் சுரும்பினம்
வன†ப தாயுத மொக்கு மெனும்படி
குரல்வி டாஇரு பொற்குட மும்புள கிதமாகப்;

---

* குக்கில்=செம்போத்து. † பதாயுதம்=கோழி.

பவள மேகைப டைத்தத ரங்குறி
யுறவி யாளப டத்தை யுணைந்துகை
பரிச தாடன மெய்க்கர ணங்களின் மதனூலின்-
படிவி லைசெய்து ருக்கிமு யங்கியெ
அவச மாய்வட பத்ர நெடுஞ்சுழி
படியு மோகச முத்ர மழுந்துத லொழிவேனோ;
தவள ரூப*ச ரச்சுதி யிந்திரை
ரதிபு லோமசை க்ருத்திகை ரம்பையர்
சமுக சேவித துர்க்கை பயங்கரி புவநேசை-
சகல காரணி சத்தி பரம்பரி
யிமய பார்வதி ருத்ரி நிரஞ்சனி
சமய நாயகி நிஷ்களி குண்டலி யெமதாயி;
சிவைம நோமணி சிற்சுக சுந்தரி
கவுரி வேதவி தக்ஷணி யம்பிகை
த்ரிபுரை யாமளை யற்பொடு தந்தருள் முருகோனே-
சிகர கோபுர சித்திர மண்டப
மகர தோரண ரத்ந அலங்க்ருத
திரிசி ராமலை அப்பர் வணங்கிய பெருமாளே. (க)

338. சத்தி பாணீ நமோநம முத்தி ஞானீ நமோநம
தத்வ வாதீ நமோநம விந்துநாத-
சத்து ரூபா நமோநம ரத்ந தீபா நமோநம
தற்ப்ர தாபா நமோநம என்றுபாடும்;
பத்தி பூணு மலையுல கத்தின் மாணூர் சவாதகில்
பச்சை பாடீர பூஷித கொங்கைமேல்வீழ்-
பட்டி மாடான நாலுனை விட்டிராமே†யுலோகித
பத்ம சீர்பாத நீயினி வந்துதாராய்;
அத்ர தேவா யுதாசுர ருக்ர சேனு பதீசுசி
யர்க்ய ‡சோமாசி யாகுரு சம்ப்ரதாயா-
அர்ச்ச னுவாக னுவய லிக்குள் வாழ்நாய காபுய
§அக்ஷ மாலா தராகுற மங்கைகோவே;

---

* சரச்சுதி = சரஸ்வதி. † உலோகிதம் = செம்மைநிறம்.
‡ சோமாசி = யாக கர்த்தா. § அக்ஷ மாலா = ருத்திராக்ஷ மாலிகை.

[திரிசிராப்பள்ளி-]

சித்ர கோலா கலாவிர லக்ஷ்மி சாதார தாபல
திக்கு பாலா சிவாகம தந்த்ரபோதா-
சிட்ட நாதா சிராமலை யப்பர் ஸ்வாமீ கைகாவ்ருத
தெர்ப்பை யாசார வேதியர் தம்பிரானே. (௧௦)

339. பகலிரவினிற் றடுமாறு-
பதிகுருவெனத் தெளிபோத;
ரகசியமுரைத் தநுபூதி-
ரதநிலைதனைத் தருவாயே;
இகபரமதற் கிறையோனே-
இயலிசையின்முத் தமிழோனே;
சகசிரகிரிப் பதிவேளே-
சரவணபவப் பெருமாளே. (௧௧)

340. புவனத் தொருபொற் றொடிசிற் றுதாக்
கருவிற் பவமுற் றுவிதிப் படியிற்
புணர்துக் கசுகப் பயில்வுற் றுமரித் திடிலாவி-
புரியட் டகமிட் டதுகட் டியிறுக்
கடிகுத் தெனஅச் சம்விளைத் தலறப்
புரள்வித் துவருத் திமணற் சொரிவித்
தனலூடே;
தவனப் படவிட் டுயிர்செக் கிலரைத்
தணிபற் களுதிர்த் தெரிசெப் புருவைத்
தழுவப் பணிமுட் களில்கட் டியிசித் திடவாய்கண்-
சலனப் படஎற் றியிறைச் சியறுத்
தயில்வித் துமுரித் துநெரித் துளையத்
தளையிட் டுவருத் துமயமப் ரகாத் துயர்தீராய்;
பவனத் தையொடுக் குமனக் கவலைப்
ப்ரமையற் றைவகைப் புலனிற் கடிதிற்
படரிச் சையொழித் ததவச் சரியைக்
க்ரியையோகர்-

பரிபக் குவர்கிட் டைகிவிர்த் தியினிற்
பரிசுத் தர்விரத் தர்கருத் ததனிற்
பரவப் பணிசெய்ப் பதியிற் பரமக் குருநாதா;
சிவனுத் தமனித் தவுருத் திரன்முக்
கணனக் கன்மழுக் கரனுக் கரணத்
த்ரிபுரத் தையெரித் தருள்சிற் குணனிற் குணனுதி-
செகவித் தனிசப் பொருள்சிற் பரனற்
புதனெனப் பிலியுற் பவபத் மதடத்
த்ரிசிரப் புரவெற் புறைசற் குமரப் பெருமாளே.

341. பொருளின் மேற்ப்ரிய காமா காரிகள்
பரிவு போற்புணர் க்ரீடா பீடிகள்
புருஷர் கோட்டியில் நாணு மோடிகள்
கொங்கைமேலே-
புடைவை போட்டிடு மாயா ரூபிகள்
மிடிய ராக்குபொ லாமூ தேவிகள்
புலையர் மாட்டும ரூதே கூடிகள் நெஞ்சமாயம்;
கருதொ ணாப்பல கோடா கோடிகள்
விரகி னூற்பலர் மேல்வீழ் வீணிகள்
கலவி சாத்திர நூலே யோதிகள் தங்களாசைக்-
கவிகள் கூப்பிடு மோயா மாரிகள்
அவச மாக்கிடு பேய்சீ ரூணிகள்
கருணை நோக்கமி லாமா பாவிக ளின்பமாமோ;
குருக டாக்ஷக லாவே தாகம
பரம வாக்கிய ஞானா சாரிய
குறைவு தீர்த்தருள் ஸ்வாமீ கார்முக வன்பரான-
கொடிய வேட்டுவர் கோகோ கோவென
மடிய நீட்டிய கூர்வே லாயுத
குருகு க்ஷேத்ரபு ரேசா வாசுகி அஞ்சமாறும்;
செருப ராக்ரம *கேகே வாகன
சரவ ணோற்பவ மாலா லாளித
திரள்பு யாத்திரி யீரா றாகிய கந்தவேளே-

* கேகயம் = மயில்.

[திரிசிராப்பள்ளி.]

சிகர தீர்க்கம காசி கோபுர
முகசு டாக்கர சேணு டாக்ருத
திரிசி ராப்பளி வாழ்வே தேவர்கள்
தம்பிரானே. (கரு)

342. **பொ**ருள்கவர் சிந்தை அரிவையர் தங்கள்
புழுககில் சந்து பனிநீர்தோய் -
புளகித கொங்கை யிளகவ டங்கள்
புரளம ருங்கி லுடைசோர;
இருள்வளர் கொண்டை சரியஇ சைந்து
இணைதரு பங்க அநுராகத் -
திரிதலொ ழிந்து மனதுக சிந்து
னிணையடி யென்று புகழ்வேனே;
மருள்கொடு சென்று பரிவுட னன்று
மலையில்வி ளைந்த தினைகாவல் -
மயிலை மணந்த அயிலவ எங்கள்
வயலியில் வந்த முருகோனே;
தெருளுறு மன்பர் பரவ விளங்கு
திரிசிர குன்றில் முதனுளில் -
தெரிய இருந்த பெரியவர் தந்த
சிறியவ அண்டர் பெருமாளே. (கச)

343. "**வா**சித்துக் காணொ ணாதது
பூசித்துக் கூடொ ணாதது
வாய்விட்டுப் பேசொ ணாதது நெஞ்சினாலே -
மாசர்க்குத் தோணொ ணாதது
நேசர்க்குப் பேரொ ணாதது
மாயைக்குச் சூழொ ணாதது விந்துநாத;
ஓசைக்குத் தூர மானது
மாகத்துக் கீற தானது
லோகத்துக் காதி யானது கண்டுநாயேன் -

யோகத்தைச் சேரு மாறுமெய்ஞ்
ஞானத்தைப் போதியாயினி
யூனத்தைப் போடி டாதும யங்கலாமோ ;
ஆசைப்பட் டேனல் காவல்செய்
வேடிச்சிக் காக மாமய
லாகிப்பொற் பாத மேபணி கந்தவேளே -
*ஆலித்துச் சேல்கள் பாய்வய
லூரத்திற் காள மோடட
ராரத்தைப் பூண்ம யூரது ரங்கவீரா ;
நாசிக்குட் ப்ராண வாயுவை
ரேசித்தெட் டாத யோகிகள்
நாடிற்றுக் காணொ ணாதென நின்றநாதா -
நாகத்துச் சாகை போயுயர்
மேகத்தைச் சேர்சி ராமலை
நாதர்க்குச் சாமி யேசுரர் தம்பிரானே. (கரு)

344. வெருட்டி யாட்கொளும் விடமிகள் புடைவையை
நெகிழ்த்த ணைப்பிகள் படிறிகள் சடுதியில்
விருப்ப மாக்கிகள் விரவிய திரவிய மிலானால் -
வெறுத்து நோக்கிகள் கபடிகள் நடமிடு
பதத்தர் தூர்த்திகள் ம்ருகமத பரிமள
விசித்ர மேற்படு முலையினு நிலையினு
மெவரோடும் ;
மருட்டி வேட்கைசொல் மொழியினும் விழியினு
மவிழ்த்த பூக்கமழ் குழலினு நிழலினு
மதிக்கொ ணாத்தள ரிடையினு நடையினு
மவமேயான் -
மயக்க மாய்ப்பொருள் வரும்வகை க்ருஷிபணு
தடத்து மோக்ஷம தருளிய பலமலர்
மணத்த வார்க்கழல் கனவினு நனவினு
மறவேனே ;

---

* ஆலித்து = களித்து.

[திருக்கற்குடி.]

இருட்டி லாச்சுர ருலகினி லிலகிய
சகஸ்ர நேத்திர முடையவன் மிடியற
இரக்ஷை வாய்த்தருள் முருகப னிருகர　குகவீரா -
இலக்ஷ்மீச்சுர பசுபதி குருபர
சமஸ்த ராச்சிய நிருபபுகழ் வயமியல்
இலக்க ரேய்ப்படை முகடெழு ககபதி களிகூரத்;
திருட்டு ராக்ஷதர் பொடிபட வெடிபட
எடுத்த வேற்கொடு கடுகிய முடுகிய
செருக்குவேட்டுவர்திறையிடமுறையிட மயிலேறும் -
செருப்ப ராக்ரம நிதிசர வணபவ
சிவத்த பாற்கர னிமகரன் வலம்வரு
திரிச்சி ராப்பளி மலைமிசை நிலைபெறு
பெருமாளே. (கக)

திருக்கற்குடி.

[இது திரிசிரபுரத்துக்குத் தென்மேற்கு 2½-மைல். உய்யக்கொண்டான் என வழங்குகின்றது. மூவர் தேவாரமும் பெற்றது.]

345. கூடத்தைத் தகர்த்துக் களிற்றைத் துரத்திக்
குவட்டைச் செறுத்துக்　ககசாலக் -
குலத்தைக் குமைத்துப் பகட்டிச் செருக்கிக்
குருத்தத்து வத்துத்　தவர்சோரப்;
புடைத்துப் பணைத்துப் பெருக்கக் கதித்துப்
புறப்பட்ட கச்சுத்　தனமாதர் -
புணர்ச்சிச் சமுத்ரத் திளைப்பற் றிருக்கப்
புரித்துப் பதத்தைத்　தருவாயே;
கடத்துப் புனத்துக் குறத்திக்கு மெத்தக்
கருத்திச்சை யுற்றுப்　பரிவாகக் -

சனக்கூரி யப்பட் டகப்பட்டு மைக்கட்
கடைப்பட்டு நிற்கைக் குரியோனே ;
தடத்துற் பவித்துச் சுவர்க்கத் தலத்தைத்
தழைப்பித்த கொற்றத் தனிவேலா -
தமிழ்க்குக் கவிக்குப் புகழ்ச்செய்ப் பதிக்குத்
தருக்கற் குடிக்குப் பெருமாளே. (க)

346. நெறித்துப் பொருப்புக் கொத்த
முலைக்குத் தனத்தைக் கொட்டி
நிறைத்துச் சுகித்துச் சிக்கி வெகுநாளாய் -
நினைத்துக் கொடத்துக் கத்தை
யவத்தைக் கடுக்கைப் பெற்று
நிசத்திற் சுழுத்திப் பட்ட அடியேனை ;
இறுக்கிப் பிடித்துக் கட்டி
யுதைத்துத் துடிக்கப் பற்றி
யிழுத்துத் துவைத்துச் சுற்றி யமதூதர் -
எனக்குக் கணக்குக் கட்டு
விரித்துத் தொகைக்குட் பட்ட
இலக்கப் படிக்குத் தக்க படியேதான் ;
முறுக்கித் திருப்பிச் சுட்டு
மலத்திற் புகட்டித் திட்டி
முழுக்கக் கலக்கப் பட்டு அலையாமல் -
மொழிக்குத் தாத்துக் குற்ற
தமிழ்க்குச் சரித்துச் சித்தி
முகத்திற் களிப்புப் பெற்று மயிலேறி ;
உறுக்கிச் சினத்துச் சத்தி
யயிற்குத் தாத்தைக் கைக்கு
ளுதிக்கப் பணித்துப் பக்கல் வருவாயே -
உனைச்சொற் றுதிக்கத் தக்க
கருத்தைக் கொடுப்பைச் சித்தி
யுடைக்கற் குடிக்குட் பத்தர் பெருமாளே. (உ)

ரத்நகிரி—(வாட்போக்கி.)

[திரிசிராப்பள்ளிஜில்லா குழித்தலை ரெயில்வேஸ்டேஷனுக்குத் தெற்கு ஐந்து மைல். அப்பர் ஸ்வாமிகளுடைய தேவாரம்பெற்றது.]

347. அயிலைச் சருவிப் பிணையொத் தலர்பொற்
கமலத் தியல்மைக் கணினாலே -
கடிமொய்ப் புயலைக் கருதிக் கறுவிக்
கதிர்விட் டெழுமைக் குழலாலே;
நயபொற் கலசத் திணைவெற் பிணைமிக்
குளநற் பெருசெப் பிணையாலே -
நலமற் றறிவற் றுணர்வற் றனனற்
கதியெப் படிபெற் றிடுவேனோ;
புயலுற் றியல்மைக் கடலிற் புகுகொக்
கறமுற் சாமுய்த் தமிழ்வோடும் -
பொருதிட் டமரர்க் குறுதுக் கமும்விட்
டொழியப் புகழ்பெற் றிடுவோனே;
செயசித் திரமுத் தமிழுற் பவநற்
செபமுற் பொருளுற் றருள்வாழ்வே -
சிவதைப் பதிரத் தினவெற் பதனிற்
றிகழ்மெய்க் குமாரப் பெருமாளே. (க)

பு. **348.** சூற்றகப டோடுபல சூதுவினை யானபல
கற்றகள வோடுபழி காரர்கொலை காரர்சலி
சுற்றவிழ லானபவி ஷோடுகடல் மூழ்கிவரு
துயர்மேவித் -
துக்கசமு சாரவலை மீனதென கூழில்விழு
செத்தையெனமூளுமொரு தீயில்மெழுகானவுடல்
சுத்தமறி யாதபறி காயமதில் மேவிவரு
பொறியாலே;

சற்றுமழி யாதகலி காலன்வரு நேரமதில்
தத்துஅறி யாமலோடி யாடிவரு சூதரைவர்
சத்தபரி சானமண ரூபரச மானபொய்மை
விளையாடித் -
தக்கமட வார்மனைவை நாடியவ ரோடுபல
சித்துவிளை யாடுவினை சீசியிது நாறவுடல்
தத்திமுடி வாகிவிடு வேனெமுடி யாதபத
மருள்வாயே ;
தித்திமித தீதிமித தீதிமித தீமித்த
தத்ததன தானதன தானனன தானனன
திக்குடுடு டேமட டாடமட டேடுடு எனதாளம் -
திக்குமுகி லாடஆரி யாடஅய னாடசிவ
னத்துவிளை யாடபரை யாடவரா ராடபல
திக்கசுரர் வாடசுரர் பாடமறை பாடஎதிர்
களமீதே ;
எத்திசையு நாடியம னார்நிணமொ டாடபெல
மிக்கநரி யாடகழு தாட கொடி யாடசமர்
எற்றிவரு பூதகண மாடவொளி யாடவிடு
வடிவேலா -
எத்தியொரு மானைதினை காவல்வல பூவைதனை
சித்தமலை காமுககு காநமசி வாயனெடு
ரத்நகிரி வாழ்முருக னேயிளைய வாவமரர்
பெருமாளே. (உ)

349. **ப**த்தியால் யானுனைப் பலகாலும் -
பற்றியே மாதிருப் புகழ்பாடி ;
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின் -
முத்தியே சேர்வதற் கருள்வாயே ;
உத்தமா தானசற் குணர்நேயா -
ஒப்பிலா *மாமணிக் கிரிவாசா ;
வித்தகா ஞானசத் திநிபாதா -
வெற்றிவே லாயுதப் பெருமாளே. (௩)

* மாமணிக் கிரி = ரத்ந கிரி.

விராலிமலை.

[இது புதுக்கோட்டை சமஸ்தானத்தைச் சேர்ந்தது. புதுக்கோட்டைக்கு வடமேற்கு 25-மைல். திரிசிராப்பள்ளியிலிருந்து 18 - மைல். 'சமுத்திரம்' ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபம். இத்தலத்து முருகபிரான் வயலூரி லிருந்த அருணகிரிநாதர் முன்பு தோன்றி அவரை இத்தலத்துக்கு வரவழைத்துக் காட்சி தந்தனர். 354, 358, 915-ஆம் பாடல்களைக் காண்க.]

---

350. சீ ரான *கோல கால நவமணி
மா †லாபி ஷேக பார வெகுவித
தே வாதி தேவர் சேவை செயுமுக மலராறும் ;

சீ ராடு வீர மாது மருவிய
ஈ ராறு தோளு நீளும் வரியளி
சீ ராக மோது நீப பரிமள இருதாளும் ;

ஆ ராத காதல் வேடர் மடமகள்
‡ஜீ மூத மூர்வ லாரி மடமகள்
ஆ தார பூத மாக வலமிட முறைவாழ்வும் -

ஆ ராயு நீதி வேலு மயிலுமெய்ஞ்
ஞா னாபி ராம §தாப வடிவமும்
ஆ பாத னேனு நாளு நினைவது பெறவேணும் ;

ஏ ராரு மாட கூட மதுரையில்
மீ தேறி மாறி யாடு மிறையவர்
‖ஏ ழேழு பேர்கள் கூற வருபொரு ளதிகாரம் -

---

* கோலாகலம் என்பது 'கோலகாலம்' என நிலைமாறியது; கோலாகலம்=சம்பிரமம். † அபிஷேகம்=முடி.

‡ ஜீமூதம்=மேகம். § தாபம்=பிரதாபம்.

‖ ஏழேழு பேர்கள்=சங்கப்புலவர்கள் நாற்பத்தொன்பதின்மர்.

ஈடாயூ *ஆமர் போல வணிகரி
லூடாடி யால வாயில் விதிசெய்த
லீலாவி சார தீர வரதர குருநாதா;

† கூரிழி யால்முன் வீய நினைபவ
னீடேறு மாறு பாறு மறைவுசெய்
கோபால ராய னேய முளதிரு மருகோனே -

கோடாம லார வார அலையெறி
காவேரி யாறு பாயும் வயலியில்
கோனாடு சூழ்வி ராலி மலையுறை பெருமாளே.

351. பாதாள மாதி லோக நிகிலமு
மாதார மான மேரு வெனவளர்
பாடீர பார மான முலையினை விலைகூறிப் -

பாலோடு பாகு தேனெ னினியசொ
லாலேய நேக மோக மிடுபவர்
பாதாதி கேச மாக வகைவகை கவிபாடும்;

வேதாள ஞான கீனன் விதரண
நாதானி லாதபாவி யகிஜவன்
வீணாள்ப டாத போத தவமிலி பசுபாச -

வ்யாபார மூடன் யானு முனதிரு
சீர்பாத தூளி யாகி நரகிடை
வீழாம லேசு வாமி திருவருள் புரிவாயே;

தூதாள ரோடு காலன் வெருவிட
வேதாமு ராரி யோட அடுபடை
சோராவ லாரி சேனை பொடிபட மறைவேள்விச் -

சோமாசி மார்சி வாய நமவென
மாமாய வீர கோர முடனிகல்
சூர்மாள வேலை யேவும் வயலியி லிளையோனே;

---

* ஊமர் போல வணிகர் இல்=செட்டிவீட்டில் ஊமைப் பிள்ளைபோலத் தோன்றி.

† கூராழியால் பாநு மறைவுசெய் எனக்கூட்டுக.

[விராலிமலை.]

கூ தாள நீப நாத மலர்மிசை
சா தாரி தேசி நாம க்ரியைமுதல்
கோ லால நாத கீத மதுகர மடர்சோலை-
கூ ராரல் தேரு நாரை மருவிய
கா ணூறு பாயு மேரி வயல்பயில்
கோ ளூடு சூழ்வி ராலி யலையுறை பெருமாளே.

352. இலாபமில் பொலாவுரை சொலாமன தபோதன
ரியாவரு மிராவுபக லடியேனை-
இராகமும் விநோதமு முலோபமு டன்மோகமு
மிலானிவ னுமாபுருஷ னெனவய;
சலாபவ மலாகர சசீதர விதாரண
சதாசிவ மயேசுரச கலலோக-
சராசர வியாபக பராபர மநோலய
சமாதிய நுபூதிபெற நினைவாயே;
*நிலாவிரி நிலாமதி †நிலாதவ நிலாசன
‡நியாயப ரிபாலஅர நதிசூடி-
நிசாசர குலாதிப திராவண § புயாரிட
நிராமய சரோருகர னருள்பாலா;
‖ விலாசுகம் வலாரெனு முலாசவி த¶வாகவ
o வியாதர்கள் விநோதமகள் மணவாளா-
விராவுவ யலார்புரி சிராமலை பிரான்மலை
விராலிம லைமீதிலுறை பெருமாளே. (ங)

* நிலா விரி நிலா மதி = சந்திரிகை விரிந்து பிரகாசிக்கின்ற மதியையும்.

† நில்லாத அநில அசன = நில்லாது அலைகின்ற காற்றைப் புசிக்கின்ற.

‡ நியாய பரிபால அர = நியாய பரிபாலனஞ் செய்வதில் வல்ல ஆதிசேஷனாகிய சர்ப்பத்தையும்.

§ புயாரிட = புய அரிட : புயங்களுக்கு அரிட்டத்தை யுண்டாக்கிய; அரிட்டம் = கேடு.

‖ வில் ஆசுகம்; ஆசுகம் = அம்பு. ¶ ஆகவம் = போர்.

o வியாதர்கள் = வேடர்கள்.

353\. நிராமய புராதன பராபர வராம்ருத
நிர்குல சிராதிகப் ப்ரபையாகி-
நிராசசி வராஜித வராஜர்கள் பராவிய
நிராயுத புராரியச் சுதன்வேதா;
* சுராலய தராதல சராசர பிராணிகள்
சொரூப †மி வராதியைக் குறியாமே-
சூரால்புகழ் பராதின கராவுள பராமுக
துரோகரை தராசையுற் றடைவேனோ;
இராகவ இராமன் ‡முன் இராவண §இராவண
இராவண இராஜனுட் குடன் ||மாய்வென்-
றிராகன்ம லராணிஜ புராணர்கு மராகலை
யிராஜசொ லவாரணர்க் கிளையோனே;
¶ விராகவ சுராதிப பொராதுத விராதடு
0 விராயண பராயணச் $ செருவூரா-
விராவிய குராவகில் பராரைமு திராவளர்
விராலிம லைராஜதப் பெருமாளே. (௪)

354\. ** இதமுறு விரைபுனல் முழுகி யகில்மண
முதவிய புகையினி லளவி வகைவகை
கொத்தலர்க ளின்தொடையல்
வைத்துவளர் கொண்டலென

---

* சுராலயம்=தேவலோகம். † இவர்தல்=கலத்தல்.

‡ முன் இராவண=(கைலாசகிரியை அசைத்தெடுத்துச் சிவ பெருமானால் அடர்க்கப்பட்ட) அந்நாளில் அழுகுரலோசை யுற்ற,

§ இரா வண=இராவின் வண்ணமாகிய கருநிறத்தை யுடைய,

|| மாய வென்ற இராகன் மலர் ஆள் நிஜ புராணர்=மாயும்படி வென்ற அன்பையுடையவ ராகிய விஷ்ணுவின் கண்ணையே மல ராகக் கொண்டருளிய நிஜ புராணர்.

¶ வி ராகவன்=ஆசை யில்லாதவன்.

0 வீர அயண பராயணம்= வீர வழியில் விருப்பம்.

$ செரு வூர்=திருப்போரூர்.

** இச் செய்யுளிற் கேசாதிபாத வருணனைச் சிறப்பு கவனிக்கற்பாலது.

[விராலிமலை.]

அறலென இசையளி யெனநளிருளென
நிறமது கருகிநெ டுகிநெ றிவுபட
நெய்த்துமுசு வின்திரிகை
யொத்தசுருள் குந்தளமும்
இலகிய பிறையென எயினர் சிலையென
*விலகிய திலதநு தலுமதிமுகமும்
உற்பலமும் வண்டுவடு
விற்கணைய மன்படரு முனைவாளும்—
இடர்படு கவுநடு வனும்வ லடல்பொரு
கடுவது மெனநெடி தடுவ கொடியன
இக்குசிலை கொண்டமதன்
மெய்த்தவநி றைந்தவிழி
தளவன முறுவலு மமுத குமுதமும்
விளைநற வினியமொ ழியுமி னையதென
ஒப்பறுந கங்கள்விரல்
துப்பெனவு றைந்துகமு
கிடியொடி படவினை செயும்வின் மதகலை
நெடிய†க வுடியிசை முரலு சுரிமுக
நத்தனைய கண்டமும்வெண்
முத்துவிளை‡விண்டனைய எழில்தோளும்;
விதரண மனவித னமதை யருள்வன
சததள மரைமுகி ழதனை நிகர்வன
புத்தமிர்து கந்தகுடம்
வெற்பெனநி ரம்புவன
இமசல ம்ருகமத களப பரிமள
தமனிய ப்ரபைமிகு தருண புளகித
சித்ரவர மங்கலவி
சித்ரவிரு துங்ககன

* விலகிய = விசாலமான. † கவுடி என்பது ஒருவித பண்.
‡ விண்டு = மூங்கில்.

விகலித மிருதுள ம்ருதுள நவமணி
முகபட விகடின தனமுமுயர்*வட
பத்திரமி ருந்தகடி
லொத்தசுழி யுந்தியுள மதியாத-

விபரித முடையிடை யிளைஞர் களைபட
அபகட மதுபுரி பரவ சுடிகைய
ரத்நபண மென்பவழ
குற்றவரை யும்புதிய
நுணியத ளிரெனவு லவிய பரிபுர
அணிநட னபதமு முடைய வடிவினர்
பொற்கலவி யின்பமதி
துக்கமென லன்றியவர்
விரகினி லெனதுறு மனம துருகிய
பிரமையு மறவுன தருள்கை வரவுயர்
பத்திவழி யும்பரம
முத்திநெறி யுந்தெரிவ தொருநாளே;

தததத தததத ததத தததத
திதிதிதி திதிதிதி திதிதி திதிதிதி
தத்ததத தந்ததத
தித்திதிதி திந்திதிதி
டகுடகு டிகுடிகு டகுகு டிகுடிகு
டிகுடிகு டகுடகு டிகுகு டகுடகு
தத்ததிமி டங்குகுகு
தித்திதிமி டிங்குகுகு
தமிதமி தமிதக தமித திமிதக
திமிதிமி செககண திமித திகதிக
தத்திமித தந்திமித
தித்திமிதி திந்திமிதி யெனவேதான்-

தபலைகு டமுழவு திமிலை படகம
தபுதச லிகைதவில் முரசு கரடிகை
மத்தளித வண்டையுற
வைத்தகுணி துந்துமிகள்

---

* வட பத்திரம் இருந்த அகடில் = ஆலிலை போன்ற அடிவயிற்றில்.

[விராலிமலை.]

மொகுமொகு மொகுவென அலற விருதுகள்
திகுதிகு திகுவென அலகை குறளிகள்
விக்கிடகி ணம்பருக
*பக்கியுவ ணங்கழுகு
சதிர்பெற அதிர்தர உததி சுவறிட
எதிர்பொரு நிருதர்கள் †குருதி பெருகிட
வப்புவின்மி தந்தெழுப
தற்புதக வந்தமெழ வெகுகோடி ;

மதகஜ துரகர தமுமு டையபுவி
யதலமு தல்முடிய இடிய நெடியதொர்
மிக்கொலிமு ழங்கஇரு
ளக்கணம்வி டிந்துவிட
இரவியு மதியமு நிலைமை பெறஅடி
பரவிய அமரர்கள் தலைமை பெறஇய
லத்திறல ணங்குசெய
சத்திவிடு கந்ததிரு
வயலியி லடிமைய குடிமை யினலற
மபமொடு மலமற அரிய பெரியதி
ருப்புகழ்வி ளம்புமென்மு
னற்புதமெ ழுந்தருள்கு கவிராலி -

மலையுறை குரவந விறைவ வருகலை
பலதெரி விதரண முருக சரவண
உற்பவக்ர வுஞ்சகிரி
நிக்ரகஅ கண்டமய
நிருபவி மலசுக சொருப பரசிவ
குருபர வெளிமுக டுருவ வுயர்தரு
சக்ரகிரி யுங்குலைய
விக்ரமந டம்புரியு

* பக்கி=பக்ஷி. † 'குருதி பெருகிட அவ் அப்புவில் மிதந்து எழுபது அற்புத கவந்தம் எழ' எனப் பிரிக்க.

மாகத் கலபமெ ரிவிடு மயில்மிசை
மருவியெ யருமைய இளமை யுருவொடு
சொர்க்கதல மும்புலவர்
வீர்க்கமும்வி ளங்கவரு பெருமாளே. (௫)

355. உருவேற வேஜெ யித்து வொருகோடி யோம சித்தி
யுடனாகி ஆக மத்து கந்துபேணி -
உணர்வாசை யாரி டத்து மருவாது வோரொ ழுத்தை
யொழியாது வூதை விட்டி ருந்துநாளும்;
தரியாத போத கத்தர் குருவாவ ரோரொ ருத்தர்
தருவார்கள் ஞான வித்தை தஞ்சமாமோ -
*தழலாடி வீதி†வட்ட மொளிபோத ஞான சித்தி
தருமாகி லாகு மத்தை கண்டிலேனே;
குருநாடி ராச ரிக்கர் துரியோத னாதி வர்க்க
குடிமாள மாய மிட்டு குந்திபாலர் -
குலையாமல் நீதி கட்டி யெழுபாரை யாள விட்ட
குறளாக னூறில் நெட்டை கொண்டஆதி;
மருகா புராரி சித்தன் மகனே விராலி சித்ர
மலைமே லுலாவு சித்த அங்கைவேலா -
மதுரா புரேசர் மெய்க்க அரசாளு மாறன் வெப்பு
வளைகூனை யேகி மிர்த்த தம்பிரானே. (௬)

356. எதிரெதிர்கண் டோடி யாட்கள்
களவதறிந் தாசை பூட்டி
இடறிவிழும் பாழி காட்டு மடமாதர் -
இறைவைகொளுங் கூவல் மூத்த
கறையொழுகுந் தாரை பார்க்கி
லிளமைகொடுங் காத லாற்றில் நிலையாத;
அதிவிகடம் பீழ லாற்ற
அழுகிவிழும் பீற லூத்தை
அடையுமிடஞ் சீலை தீற்று கருவாயில் -

* தழலாடிவீதி=நெற்றி. † வட்டம்=புருவ மத்திய ஸ்தானம்.

[விராலிமலை.]

அருவிசலம் பாயு மோட்டை
அடைவுகெடுந் தூறை பாழ்த்த
அளறிலழுந் தாமலாட்கொ டருள்வாயே;
விதுரனெடுந் த்ரோண மேற்று
எதிர்பொருமம் பாதி யேற்றி
விரகினெழுந் தோய நூற்று வருமாள -
விரவுஜெயன் *காளி காட்டில்
வருதருமன் தூத †னீற்ற
விஜயனெடும் பாக தீர்த்தன் மருகோனே;
மதியணையுஞ் சோலை யார்த்து
மதிவள ‡சந் தான கோட்டின்
வழியருளின் பேறு காட்டி ய§விராலி -
மலைமருவும் பாதி யேற்றி
||கடிகமழ்சந் தான கோட்டில்
¶வழியருளின் பேறு காட்டு பெருமாளே. (எ)

357. ஐந்து பூதமு மாறு சமயமு
மந்த்ர வேதபு ராண கலைகளும்
ஐம்ப தோர்வித மான லிபிகளும் வெகுருப -

---

* காளிகாடு=இடும்பாவனம்.

† நீற்ற விஜயன்=பாசுபதாஸ்திரம் பெறும்பொருட்டுத் தேக முழுதும் நீறுபூசிக்கொண்டு தவஞ்செய்த அருச்சுனன்.

‡ சந்தானகோட்டின் வழியருளின் பேறு காட்டிய=சந்தானம் என்னும் தெய்வவிருக்ஷம் தன்னை அடைந்தோர்க்கு அவர்கள் வேண்டிய பொருள்களை வேண்டியவாறு கொடுக்கும் என்பதை உலகத்தோர்க்குத் தெரிவித்த.

§ விராலிமலை மருவும் பாதி ஏற்றி=விராலிமலைக்குப் பாதி யளவு வரையில் அவர்களை ஏறச்செய்து.

|| கடி கமழ் சந்தான கோட்டில்=அவ்விடத்துற்ற தெய்வமணம் கமழ்கின்ற சந்தானகோடு என்னுமிடத்தில் எழுந்தருளியிருந்து கொண்டு.

¶ வழியருளின் பேறு காட்டு=தம்மை யடைந்த அன்பர்கட்கு இஷ்டகாமியங்களை ஈந்தருளிக்காட்டுகின்ற.

அண்ட ராதிச ராச ரமுமயர்
புண்ட ரீகனு மேக நிறவனும்
அந்தி போலுரு வானு நிலவொடு வெயில்சாலும்;
சந்த்ர சூரியர் தாமு *மசபையும்
விந்து நாதமு மேக வடிவம
தன்சொ ரூபம தாக வுறைவது சிவயோகம் -
தங்க ளாணவ மாயை கருமம
லங்கள் போயுப தேச குருபர
சம்ப்ர தாயமொ டேயு நெறியது பெறுவேனோ;
வந்த தானவர் சேனை கெடிபுக
இந்த்ர லோகம்வி பூதர் குடிபுக
மண்டு பூதப சாசு பசிகெட மயிடாரி -
வன்கண் வீரிபி டாரி ஹரஹர
சங்க ராஎன மேரு கிரிதலை
மண்டு தூளெழ வேலை யுருவிய வயலூரா;
வெந்த நீறணி வேணி யிருடிகள்
பந்த பாசவி கார பரவச
வென்றி யானச மாதிமுறுகுகல் முழைகூடும் -
விண்டு மேல்மயி லாட இனியக
ளுண்டு காரளி பாட †இதழிபொன்
விஞ்ச வீசுவி ராலி மலையுறை பெருமாளே. (அ)

358. காதல முங்குறி கொண்ட கண்டமும்
விரவியெ ழுந்துசு ருண்டு வண்டடர்
கனவிய கொண்டைகு லைந்த லைந்திட அதிபாரக் -
களபசு கந்தமி குந்த கொங்கைக
ளிளகமு யங்கிம யங்கி யன்புசெய்
கனியித ழுண்டுது வண்டு பஞ்சணை மிசைவீழா;
இரதம ருந்தியு றுங்க ருங்கயல்
பொருதுசி வந்துகு விந்தி டும்படி
யிதவிய வுந்தியெ னுந்த டந்தனி லுறமூழ்கி -

* அசபை என்பது ஹம்ஸமந்திரம். † இதழி=கொன்றை.

[விராலிமலை.]

இனியதொ ரின்பம்வி ளைந்த ளைந்துபோய்
வனிதையர் தங்கள்ம ருங்கி ணங்கிய
இளமை கிழம்படு முன்ப தம்பெற வுணர்வேனோ;
பாத சிலம்புபு லம்பு மம்பத
வரிமுக *எண்கினு டன்கு ரங்கணி
பணிவிடை சென்றுமு யன்ற குன்றணி
யிடையேபோய்ப் -
பகடியி லங்கைக லங்க அம்பொனின்
மகுடசி ரந்தச முந்து ணிந்தெழு
படியுநடுங்கவி ழும்பனம்பழ மெனா†வாகும்;
மருதமு தைந்தமு குந்த னன்புறு
மருகசு விந்தும லர்ந்த பங்கய
வயலியில் வம்பவிழ் சண்ப கம்பெரி யவிராலி -
மலையில் விளங்கிய கந்த என்றனை
மகிழ்வொடு ‡வந்திசெய் மைந்த னென்றனை
வழிவழி யன்புசெய் தொண்டு கொண்டருள்
பெருமாளே. (௧)

359. கரிபு ராரி காமாரி திரிபு ராரி தீயாடி
கயிலை யாளி காபாலி §கழையோனி -
கரவு தாச ஞசாரி பரசு பாணி பாணி
கணமொ டாடி காயோகி சிவயோகி;
பரம யோகி மாயோகி பரிய ராஜ டாசூடி
பகரொ ணாத மாஞானி பசுவேறி -
பரத மாடி காணுடி பரவ யோதி காதீத
பரம ஞான வூர் ‖ பூத அருளாயோ;
¶சுருதி யாடி தாதா ௦வி வெருவி யோட மூதேவி
$துரக கோப மீதோடி வடமேரு -

*எண்கு=கரடி. †ஆகும்=ஆக்கும். ‡வந்திசெய்=வந்தனைசெய்.
§ கழை யோனி=மூங்கிலிற் பிறந்தவர். ‖ பூத=புகுத.
¶ சுருதி யாடி தாதா=வேதாத்யயநஞ் செய்யும் பிரமன்.
௦ வி=மிகவும். $ துரக=அகல.

சுழல வேலை நீமூள அமுத ளாவி வாய்பாறி
*சுரதி னோடு சூர்மாள வுலகேழும் ;
†திகிரி மாதி ராவார திகிரி சர்ய வேதாள
திரளி னோடு பாரோடு கழுகாடச் -
செருவி னூடு ‡வானீப கருணை மேரு வேபார
திருவி ராலி யூர்மேவு பெருமாளே. (௧௦)

360. §காமாத்திர மாகி யிளைஞர்கள்
வாழ்நாட்கொடு போகி யழகிய
காதாட்டிய பார இருகுழை யளவோடிக் -
காற்போற்றவ ழோதி நிழல்தனி
லார்வாட்கடை யீடு கனகொடு
காலேற்றுவை வேலின் முனைகடை யமதூதர் ;
ஏமாப்பற மோக வியல்செய்து
நீலோற்பல ஆசில் மலருட
னேராட்டவி னோத மிடும்விழி மடவார்பால் -
ஏகாப்பழி பூணு மருளற
நீதோற்றிமு னூறு மடிமையை
யீடேற்றுத லாலுன் வலிமையை மறவேனே ;
சீமாட்டியு மாய திரிபுரை
காலாக்கினி கோப பயிரவி
சீலோத்தமி நீலி சுரதிரி புவனேசை -
சீகார்த்திகை யாய அறுவகை
மாதாக்கள்கு மார னெனவெகு
சீராட்டொடு பேண வடதிசை கயிலாசக் ;
கோமாற்குப தேச முபகிட
வேதார்த்தமெய்ஞ் ஞான நெறியருள்
கோதாட்டிய ஸ்வாமி யெனவரு மிளையோனே-

---

* சுரதினோடு = சுரத்தினோடு : சப்தத்தோடு.

† திகிரி மாதிர ஆவார திகிரி = வட்டமாகிய திக்குக்களை மறைக்கின்ற சக்ரவாளகிரி. ‡ வானீப = வான் நீப.

§ காமாத்திரம் = காம அஸ்திரம் : மன்மத பாணம்.

[விராலிமலை.]

கோடாச்சிவ பூஜை பவுருஷ
மாருக்கொடை நாளு மருவிய
கோனாட்டுவி ராலி மலையுறை பெருமாளே. (கக)

பு. 361. கொடாதவனை யேபு கழ்ந்து
குபேரனென வேமொ ழிந்து
குலாவியவ மேதி ரிந்து புவிமீதே -
எடாதசுமை யேசு மந்து
எனாதகலி யால்மெ லிந்து
எலாவறுமை தீர அன்று னருள்பேணேன் ;
சுடாததன மான கொங்கை
களாலிதய மேம யங்கி
சுகாதரம தாயொ ழுங்கி லொழுகாமல் -
கெடாததவ மேம றைந்து
கிலேசமது வேமி குந்து
*கிலாதவுட லாவி நொந்து மடியாமுன் ;
தொடாய்மறலி யேநி யென்ற
சொலாகியது ளைவ ருங்கொல்
சொலேழுலக மீனு மம்பை யருள்பாலா -
நடாதசுழி மூல விந்து
நளாவிவிளை ஞான நம்ப
†நபோமணி சமான துங்க வடிவேலா ;
படாத குளிர் சோலை யண்ட
மளாவியுயர் வாய்வ ளர்ந்து
பசேலெனவு மேத ழைந்து தினமேதான் -
விடாதுமழை மாரி சிந்த
அநேகமலர் வாவி பொங்கு
விராலிமலை மீது கந்த பெருமாளே. (கஉ)

---

* கிலாத = ஆற்றல் இல்லாத.
† நபோமணி = சூரியன்.

362. மாயா சொரூப முழுச்ச மத்திகள்
ஓயா வுபாய மனப்ப சப்பிகள்
வாளுனை யீரும் விழிக்க டைச்சிகள் முகிவோரும் -
மாலாகி வாட நகைத்து ருக்கிகள்
*ஏகாச மீது தனத்தி றப்பிகள்
வாரீ ரிரீரென் முழுப்பு ரட்டிகள் வெகுமோகம் ;
ஆயாத வாசை யெழுப்பு மெத்திகள்
ஈயாத போதி லறப்பி ணக்கிகள்
ஆவேச நீருண் மதப்பொ றிச்சிகள் பழிபாவம்-
ஆமா றெணாத திருட்டு மட்டைகள்
கோமாள மான குறிக்க ழுத்திகள்
ஆசார வீன விலைத்த னத்திய ருறவாமோ ;
காயாத பால்நெய் தயிர்க்கு டத்தினை
ஏயா வெணாம லெடுத்தி டைச்சிகள்
காணாத வாறு குடிக்கு மப்பொழு தூரலோடே -
கார்போலு மேனி தனைப்பி ணித்தொரு
போர்போ லசோதை பிடித்த டித்திட
காதோடு காது கையிற்பி டித்தழு தினிதாதும் ;
வேயா லநேக விதப்ப சுத்திரள்
சாயாமல் மீள அழைக்கு மச்சுதன்
வீறான மாம னெனப்ப டைத்தருள் வயலூரா-
வீணாள் கொடாத படைச்செ ருக்கினில்
சூர்மாள †வேலை விடுக்கும் அற்புத
வேலா விராலி மலைத்த லத்துறை பெருமாளே.

363. மாலாசை கோப மோயாதெ நாளு
மாயா விகார வழியேசெல் -
மாபாவி ‡காளி தானேனு நாத
மாதா பிதாவு மினிநீயே ;
நாலான வேத நூலாக மாதி
நானோதி னேனு மிலைவீணே -

---

* ஏகாசம் = மேற்போர்வை. † வேலை = கடலில்.
‡ காளி = விஷகுணமுள்ளவன்.

[விராலிமலை.]

நாள்போய் விடாமலாரூறு மீதில்
ஞானோபதேச மருள்வாயே;
பாலா *கலார ஆமோத லேப
பாடீர வாக அணிமீதே-
பாதாள பூமி யாதார மீன
†பானீய மேலை வயலூரா;
வேலா விராலி வாழ்வே சமூக
வேதாள பூத பதிசேயே-
வீரா கடோர சூராரி யேசெ
வேளே சுரேசர் பெருமாளே. (கச)

364. மேக மெனுங்குழல் சாய்த்திரு
கோக னகங்கொடு கோத்தணை
மேல்விழு கின்ற பராக்கினி லுடைசோர-
மேகலை யிந்தனி போய்த்தனி
யேகா ணங்களு மாய்க்கயல்
வேல்விழி யுங்குவி யாக்குரல் மயில்காடை;
கோகில மென்றெழ போய்க்கனி
வாயமு துண்டுரு காக்களி
கூரவு டன்பிரி யாக்கல வியின்மூழ்கிக்-
கூடி முயங்கி விடாய்த்திரு
பார தனங்களின் மேற்றுயில்
கூரினு மம்புய தாட்டுணை மறவேனே;
மோகர துந்துமி யார்ப்ப‡வி
ராலி விலங்கலின் வீட்டதில்
மூவுல குந்தொழு தேத்திட வுறைவோனே-
மூதிசை முன்பொரு காற்றட
மேருவை யம்பினில் வீழ்த்திய
மோகன §சங்கரி வாழ்த்திட மதியாமல்;

---

* கல்லாரம்=செங்குவளை. † பானீயம்=ஜலம்.
‡ விராலி விலங்கல்=விராலி மலை
§ சங் கரி=சங்கையுடைய அரி.

ஆக மடிந்திட வேற்கொடு
சூரனை வென்றடல் போய்த்தணி
யாமையின் வென்றவ னுற்பிற கிடுதேவர்-
ஆதி யிளந்தலை காத்தர
சாள அவன்சிறை மீட்டவ
னூருலகங்குடி யேற்றிய பெருமாளே. (கரு)

365. மோதி யிறுகிவட மேரு வெனவளரு
மோக முலையசைய வந்துகாயம்-
மோச மிடுமவர்கள் மாயை தனில்முழுகி
மூட மெனஅறிவு கொண்டதாலே;
காதி வருமியம தூதர் கயிறுகொடு
காலி லிறுகஎனை வந்திழாதே-
காவ லெனவிரைய வோடி யுனதடிமை
காண வருவதினி யெந்தநாளோ;
ஆதி மறையவனு மாலு முயர்சுடலை
யாடு மரனுமிவ ரொன்றதான-
ஆயி யமலைதிரி சூலி குமரிமக
மாயி கவுரியுமை தந்தவாழ்வே;
சோதி நிலவுகதிர் வீசு மதியின் மிசை
தோய வளர்கிரியி னுந்திரீடு-
*சோலை செறிவுளவி ராலி நகரில்வளர்
தோகை மயிலுலவு தம்பிரானே. (கசு)

* 'சோலை செறியுமியல் வாத நகரில்வளர்' என்றும்,
'சோலை செறியுமியல் வானை நகரில்வளர்' என்றும் பாடம்.

வி நா ய க ம லை.

[இது பிள்ளையார் பட்டி. இராமநாதபுரம் ஜில்லா திருப்புத்தூருக்குக் கிழக்காய்க் குன்றக்குடிக்குப் போகும் வழியில் 5-மைல்.]

366. சரவண ஜாதா நமோநம கருணைய தீதா நமோநம
சததள பாதா நமோநம அபிராம -
தருணக தீரா நமோநம நிருபமர் வீரா நமோநம
சமதள வூரா நமோநம ஜகதீச ;
பரம சொரூபா நமோநம சுரர்பதி பூபா நமோநம
பரிமள நீபா நமோநம உமைகாளி -
பகவதி பாலா நமோநம இகபர மூலா நமோநம
பவுருஷ சீலா நமோநம அருள்தாராய் ;
இரவியு மாகாச பூமியும் விரவிய தூளேற வானவ
ரெவர்களு மீடேற எழ்கடல் முறையோவென் -
றிடர்பட மாமேரு பூதர மிடிபட வேதா னிசாச
ரிகல்கெட மாவேக நீடயில் விடுவோனே ;
மரகத ஆகார ஆயனு மிரணிய ஆகார வேதனும்
*வசுவெனு மாகார ஈசனு மடிபேண -
மயிலுறை வாழ்வே விநாயக் மலையுறை வேலா மகீதர
வனசர ராதார மாகிய பெருமாளே.

தி ரு ச் செ ங் கோ டு.

[இது தேவாரத்திற் கொடிமாடச் செங்குன்றூர் என வழங்கும். திருஞான சம்பந்த ஸ்வாமிக ளுடைய பாடல் பெற்றது. சேலம் ஜில்லா சங்கரிதுர்க்கம் ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தென்கிழக்கு 6-மைல். கோயில் மலைமேல் இருக்கின்றது. இங்கே சுப்பிரமணிய ஸ்வாமி சந்நிதி தனியாகவும் பெரிதாகவு மிருக்கின்றது. “செங்கோடனைச் சென்று கண்டுதொழ நாலாயிரங்கண் படைத்திலனே யந்த நான்முகனே” [கந்தரலங்காரம்—கூ௦] என ஸ்வாமிகள்

* வசு=அக்கினி.

வியந்து துதித்துள்ளனர். மலை சிவந்த நிறமாயிருப்பதால் இதற்குத் "திருச்செங்கோடு" எனப் பெயர்போந்தது. மேலை வீதியிலிருந்து பார்த்தால், மலை நாகம்போற் காணப்படுகின்றது. மலைக்கு நாககிரி என்றும் பெயர். 1181-ஆம் பாடலிற் "கோங்கின் புஜக கோத்திரி" என்பதையுங் காண்க. அர்த்தநாரீசுரருடைய சந்நிதி விசேஷமானது. மலையடிவாரத்தில் ஆறுமுகஸ்வாமி தேவிமாருடன் திருக்கோயில் கொண்டிருக்கின்றார். இதற்கு ஸ்தலபுராண முண்டு.]

---

367. அன்பாக வந்து உன்றாள் பணிந்து
ஐம்பூத மொன்ற நினையாமல் -
அன்பால் மிகுந்து நஞ்சாரு கண்க
ளம்போரு கங்கள் முலைதானும் ;
கொந்தே மிகுந்து வண்டாடி நின்று
கொண்டாடு கின்ற குழலாரைக் -
கொண்டே நினைந்து மன்பேது மண்டி
குன்று *மலைந்து அலைவேனோ ;
மன்றாடி தந்த மைந்தா மிகுந்த
வம்பார் கடம்பை யணிவோனே -
வந்தே பணிந்து நின்றார் பவங்கள்
வம்பே †தொலைந்த வடிவேலா ;
சென்றே யிடங்கள் கந்தா ‡எனும்பொ
செஞ்சேவல் கொண்டு வரவேணும் -
செஞ்சாலி கஞ்ச மொன்றாய் வளர்ந்த
செங்கோ டமர்ந்த பெருமாளே. (க)

368. பந்தாடி யங்கை நொந்தார் பரிந்து
பைந்தார் புனைந்த குழல்மீதே -
பண்பார் சுரும்பு பண்பாடு கின்ற
பங்கே ருகங்கொள் முகமீதே ;

---

* மலைதல்=ஒருவழிப்படாது நிற்றல்.
† தொலைந்த=தொலைத்த. ‡ எனும்பொ = எனும்பொழுது.

[திருச்செங்கோடு.]

மந்தார மன்றல் சந்தார மொன்றி
வன்பார கஞ்செய் தனமீதே -
மண்டாசை கொண்டு விண்டாவி நைந்து
மங்காம லுன்ற னருள்தாராய்;
கந்தா அரன்றன் மைந்தா விளங்கு
கன்று முகுந்தன் மருகோனே -
*கன்று †விலங்க லொன்றாறு கண்ட
கண்டா வரம்பை மணவாளா;
செந்தா தடர்ந்த கொந்தார் கடம்பு
திண்டோள் நிரம்ப அணிவோனே -
திண் ‡கோ டரங்க §னெண்கோடுறங்கு
செங்கோட மர்ந்த பெருமாளே. (உ)

369. வண்டார் மதங்க ளுண்டே மயங்கி
வந்தூரு ||கொண்ட லதனோடும் -
வண்காம னம்பு தன்கால் மடங்க
வன்போர் மலைந்த விழிவேலும்;
கொண்டே வளைந்து கண்டார் தியங்க
நின்றார் குரும்பை முலைமேவிக் -
கொந்தா ரரும்பு நின்தாள் மறந்து
குன்றாம லுன்ற னருள்தாராய்;
பண்டாழி சங்கு கொண்டாழி தங்கு
பண்போ னுகந்த மருகோனே -
பண்சார நைந்து நண்போது மன்பர்
பங்காகி நின்ற குமரேசா;
செண்டாடி யண்டர் கொண்டாட மன்றில்
நின்றாடி சிந்தை மகிழ்வாழ்வே -
செஞ்சாலி மிஞ்சி மிஞ்சாடு கின்ற
செங்கோ டமர்ந்த பெருமாளே. (௩)

---

* கன்று = கோபித்து. † விலங்கல் ஒன்று ஆறு கண்ட = ஒரு மலையை வழி கண்ட. ‡ கோடரங்கள் = குரங்குகள். § எண்கு = கரடி. || கொண்டல் = மேகம்போன்ற குழல்.

370. குரையற வுருகுதல் தருகயல் விழியினர்
கண்டான செஞ்சொல் மடமாதர் -
கலவியில் முழுகிய நெறியினி லறிவுக
லங்காம யங்கும் வினையேனும் ;
உரையையு மறிவையு முயிரையு முணர்வையும்
உன்பாத கஞ்ச மலர்மீதே -
உரவொடு புனைதர நினைதரு மடியரொ
டொன்றாக என்று பெறுவேனோ ;
வரையிரு துணிபட வளைபடு சூர்குடி
வந்தேற இந்த்ர புரிவாழ -
மதவித கஜரத துரகத பததியின்
வன்சேனை மங்க முதுமீன ;
திரைமலி சலநிதி முறையிட நிசிசரர்
திண்டாட வென்ற கதிர்வேலா -
ஜெகதல மிடிகெட விளைவன வயலணி
*செங்கோ டமர்ந்த பெருமாளே. (ச)

371. இடம்பார்த் திடம்பார்த் திதங்கேட் டிரந்தேற்
றிணங்காப் பசிப்பொங் கனல்மூழ்கி -
இறுங்காற் கிறுங்கார்க் கிரும்பார்க் குநெஞ்சார்க்
கிரங்கார்க் கியற்றண் டமிழ்நூலின் ;
உடம்பாட் டுடன்பாட் டியம்பாத் தயங்காத்
துளங்காத் திடப்புன் கவிபாடி -
ஓதுங்காப் பொதுங்காப் பதுங்காப் புகன்றேத்
துறும்பாற் குணக்கன் புறலாமோ ;
†கடந்தோற் கடந்தோற் றறிந்தாட் கருந்தாட்
கணைந்தாட் கணித்திண் புயமீவாய் -

* 'செம்பே டமர்ந்த பெருமாளே.' என்றும் சில பிரதிகளி லிருக்கின்றது.

† கடம் தோல் கடம் தோற்ற=மத யானை காட்டில் எதிர்ப்பட.

[திருச்செங்கோடு.]

*சரும்போற் கரும்போர்க் குளங்காட் டிகண்டேத்
துசெங்கோட் டில்நிற்குங் கதிர்வேலா ;
அடைந்தோர்க் குணந்தோர்க் களிந்தோர்க் கமைந்தோர்க்
கவிழ்ந்தோர்க் குணற்கொன் றிலதாகி -
அலைந்தோர்க் குலைந்தோர்க் கினைந்தோர்க் கலந்தோர்க்
கறிந்தோர்க் களிக்கும் பெருமாளே. (ரு)

372\. கலக்குங் கோதற வடிக்குஞ் சீரிய
கருப்பஞ் சாறெனு மொழியாலே -
கருத்தும் பார்வையு முருக்கும் பாவிகள்
கடைக்கண் பார்வையி லழியாதே ;
விலக்கும் போதக மெனக்கென் றேபெற
விருப்பஞ் சாலவு முடையேனுன் -
வினைக்கொண் டேமன நினைக்குந் தீமையை
விடற்கஞ் சேலென அருள்வாயே ;
அலைக்குந் தானவர் குலத்தின் சேனையை
அறுக்குங் கூரிய வடிவேலா -
அழைத்துன் சீரிய கழற்செந் தாமரை
யடுக்கும் போதக முடையோராம் ;
சிலர்க்கன் றேகதி †பலிக்குந் தேசிக
திருச்செங் கோபுர வயலூரா -
திதிக்கும் பார்வையின் மதிப்புண் டாகிய
திருச்செங் கோடுறை பெருமாளே. (சு)

373\. துஞ்சு கோட்டிச் சுழற்கண் காட்டிக்
கொங்கை நோக்கப் பலர்க்குங் காட்டிக்
கொண்ட ணுப்பித் துலக்கஞ் சீர்த்துத் திரிமாணர் -

---

* கரும்போற்கு அரும்போர் குளம் காட்டி=மன்மதனுக்கு அரிய போராக நெற்றிக்கண் காட்டிய பரமசிவன்.

† பலிக்கும்=பாலிக்கும்.

தொண்டை வாய்ப்பொற் கருப்பஞ் சாற்றைத்
தந்து சேர்த்துக் கலக்குந் தூர்த்தத்
துன்ப வாழ்க்கைத் தொழிற்பண் டாட்டத்
துழலாதே ;

கஞ்சம் வாய்த்திட் டவர்க்குங் கூட்டிக்
கன்று மேய்த்திட் டவர்க்குங் கூற்றை
ஈன்ற மாய்த்திட் டவர்க்குந் தோற்றக் கிடையாநீ -
கண்டு வேட்டுப் பொருட் கொண் டாட்டத்
தின்ப வாக்யத் தெனக்குங் கேட்கத்
தந்து காத்துத் திருக்கண் சாத்தப் பெறுவேனோ ;

வஞ்ச மாய்ப்புக் கொளிக்குஞ் *சூற்கைத்
துன்று சூர்ப்பொட் டெழச்சென் றோட்டிப்
பண்டு வாட்குட் களிக்குந் தோட்கொத்
துடையோனே -

வண்டு பாட்டுற் றிசைக்குந் தோட்டத்
தண்கு ராப்பொற் புரக்†கும் பேற்றித்
தொண்டர் கூட்டத் திருக்குந் தோற்றத்
திளையோனே ;

கொஞ்சு வார்த்தைக் கிளித்தண் சேற்கட்
குன்ற வேட்டிச் சியைக்கண் காட்டிக்
கொண்டு வேட்டுப் புனப்பைங் காட்டிற்
புணர்வோனே -

கொங்கு லாத்தித் தழைக்குங் காப்பொற்
கொண்ட லார்த்துச் சிறக்குங் காட்சிக்
கொங்கு நாட்டுத் திருச்செங் கோட்டுப்
பெருமாளே. (எ)

374. நீலமஞ் சானகுழல் மாலைவண் டோடுகதி
நீடுபங் காடுவிழி யார்பளிங் கானநகை
நீலபொன் சாபநுத லாசையின் தோடசைய
நீள்முகத் தாமரையி னார்மொழிந் தாரமொழி

---

* சூல் = சூலம். † கும்பு எற்றி = கும்பு கூட்டி.

[திருச்செங்கோடு.]

நேர்சுகம் போலகமு கானகந் தாரர்புய
*நேர் †சுணங் ‡காவி §கிளை யேர்சிறந் தார்மலையி
ரண்டுபோல -

நீளிபங் கோடிளகிர் தேனிருந் தாரமுலை
நீடலங் காரசர மோடடைந் தார்மருவி
நீள்மணஞ் ||சாறுபொழி யாவளம் போதிவையி
¶னீலவண் டேவியநல் காம ०னீங் காரநிறை
நேசசந் தான அல்குல் காமபண் டாரமுதை
நேருசம் போகரிடை நூலொளிர்ச் $தாசையுயிர்
சம்பையா**ரஞ்;

சாலு††பொன் தோகையமை பாளிதஞ் சூழ்சரண
தாள்சிலம் போலமிட வேநடந் தானநடை
சாதிசந் தானெகின மார்பரந் தோகையென
தானெழுங் கோலவிலை மாதரின் பார்கலவி
தாவுகொண் டேகலிய நோய்கள்கொண் டேபிறவி
தானடைந் தாழுமடி யேனிடஞ் சாலும்வினை
யஞ்சியோடத் -

தார்கடம் பாடுகழல் பாதசெந் தாமரைகள்
தாழ்பெரும் பாதைவழி யேபடிந் தேவருகு
தாபம்விண் டேயமுத வாரியுண் டேபசிகள்
தாபமுந் தீரதுகிர் போனிறங் காழ்கொளுரு
சாரவுஞ் சோதிமுரு காவெனுங் காதல்கொடு
தானிருந் தோத‡‡இரு §§வோரகம் பேறுறுக
விஞ்சைதாராய்;

---

* நேர்=நேர்ந்த. † சுணங்கு=தேமல். ‡ ஆவி=வாசனை.

§ கிளை=மூங்கில். || சாறு பொழி அ வள்ளம் எனப்பிரிக்க; வள்ளம்=கிண்ணம். ¶ நீல வண்டு=நீலோற்பலக் கணை.

० அங்காரம்=ஆங்காரம்: இறுமாப்பு. $ ஆசை உயிர் சம்பையார்=திக்குக்களில் வாய்விட்டு மின்னும் மின்னல்போன்ற இடையை யுடையவர்கள். ** அம் சாலு=அழகு நிறைந்த.

†† பொன் தோகை அமை பாளிதம்=பொன் சரிகையிட்ட முன்தானை யமைந்த பட்டுப் புடைவை.

‡‡ இரு=பெருமை பொருந்திய. §§ ஓர்=ஒப்பற்ற.

சூலியெந் தாய்கவுரி மோகசங் காரிகுழை
தோடுகொண் டாடுசிவ கர்மசங் தாரிநல
*தூளணிந் தாளிநிரு வாணியங் காளி†கலை
தோகைசேர் தாமரையின் மாதுநின் றேதுதிசெய்
தூயஅம் பாகமுழைகொள் தோளிபங் காளக்ருபை
தோய்பரன் சேயெனவு மேபெரும் பார்புகழும்
விந்தையோனே -

சூரசங் காரசுரர் லோகபங் காவறுவர்
தோகைமைந் தாகுமர வேள்கடம் பாரதொடை
தோளகண் டா ‡பரம தேசிகந் தாவமரர்
தோகைபங் காளனவெ தாகமஞ் சூழ்சுருதி
தோதகம் பாடமலை யெழுதுண் டாயெழுவர்
சோரிகொண் டாறுவர வேலெறிந் தேநடன
முங்கொள்வேலா ;

மாவியன் பாறவொரு ஆடகன் சாகமிகு
வாலியும் §பாழிமர மோடுகும் பாகனனு
மாழியுங் கோரவலி ராவணன் பாறவிடு
மாசுகன் கோலமுகி லோனுகந் தோதிடையர்
மாதுடன் கூடிவிளை யாடுசம் போகதிரு
மார்பகன் ||காணமுடி யோனணங் கானமதி
யொன்றுமானே -

மார்புடன் கோடுதன பாரமுஞ் சோஇடை
வார்துவண் டாடமுக மோடுகந் தீரரச
வாயிதங் கோதிமணி நூபுரம் பாடமணா
வாசைகொண் டாடுமயி லாளிதுங் காகுறவி
மாதுபங் காமறைகு லாவுசெங் கோடைநகர்
வாழுவந் தாய்கரிய மாலயன் தேவர்புகழ்
தம்பிரானே. (அ)

---

* தூள் = விபூதி. † கலை தோகை = சரஸ்வதி.
‡ பரமதேசிக அந்தா எனப்பிரிக்க. § பாழி = பருத்த: வலிய.
|| காண முடியோன் = பொன் முடியோனாகிய விஷ்ணு.

[திருச்செங்கோடு]

375\. பொன்ற லைப்பொய்க் கும்பி றப்பைத்
தும்ப றுத்திட் டின்று நிற்கப்
புந்தி யிற்சற் றுங்கு றிக்கைக் கறியாமே -
பொங்கி முக்கிச் சங்கை பற்றிச்
சிங்கி யொத்தச் சங்க டத்துப்
புண்ப டைத்துக் கஞ்ச மைக்கட்
கொடியார்மேல் ;

துன்று மிச்சைப் பண்ட னுக்குப்
பண்ப ளித்துச் சம்ப்ர மித்துத்
தும்பி பட்சிக் கும்ப்ர சச்செய்ப் பதிமீதே -
தொண்டு பட்டுத் தெண்ட னிட்டுக்
கண்டு பற்றத் தண்டை வர்க்கத்
துங்க ரத்தப் பங்க யத்தைத் தருவாயே ;

குன்றெ டுத்துப் பந்த டித்துக்
கண்சி வத்துச் சங்க ரித்துக்
கொண்ட லொத்திட் டிந்த்ர னுக்கிச் சுரலோகா -
கொம்பு குத்திச் *சம்ப ழுத்தித்
†திண்ட லத்திற் றண்டு வெற்பைக்
கொண்ட முக்கிச் சண்டை யிட்டுப்
பொரும்வேழம் ;

சென்று ரித்துச் சுந்த ரிக்கச்
சந்த விர்த்துக் கண்சு கித்துச்
சிந்தை யுட்பற் றின்றி நித்தக் களிகூருஞ் -
செண்ப கத்துச் சம்பு வுக்குத்
தொம்ப தத்துப் ‡பண்பு ரைத்துச்
செங்கு வட்டிற் றங்கு சொக்கப் பெருமாளே. ()

---

* சம்பு = சம்பங்கோரை. † திண் தலத்தில் எனப்பிரிக்க.

‡ 'பண்பு ணர்த்தித் தென்ற லைக்குட் டங்கு சொக்கப் பெருமாளே.'—என்றும் பாடம்.

376. மந்தக் கடைக்கண் காட்டுவர்
கந்தக் குழற்பின் காட்டுவர்
மஞ்சட் பிணிப்பொன் காட்டுவ ரநுராக -
வஞ்சத் திரக்கங் காட்டுவர்
நெஞ்சிற் பொருத்தங் காட்டுவர்
வண்பற் றிருப்புங் காட்டுவர் தனபாரச் ;
சந்தப் பொருப்புங் காட்டுவர்
உந்திச் சுழிப்புங் காட்டுவர்
சங்கக் கழுத்துங் காட்டுவர் விரகாலே
சண்டைப் பிணக்குங் காட்டுவர்
பண்டிட் டொடுக்கங் காட்டுவர்
தங்கட் கிரக்கங் காட்டுவ தொழிவேனோ ;
பந்தித் தெருக்கந் தோட்டினை
யிந்துச் சடைக்கண் சூட்டுமை
பங்கிற் றகப்பன் தாட்டொழு குருநாதா -
பைம்பொற் பதக்கம் பூட்டிய
அன்பற் கெதிர்க்குங் கூட்டலர்
பங்கப் படச்சென் றோட்டிய வயலூரா ;
கொந்திற் புனத்தின் பாட்டிய
லந்தக் குறப்பெண் டாட்டொடு
கும்பிட் டிடக்கொண் டாட்டமொ டணைவோனே -
குன்றிற் கடப்பந் தோட்டலர்
மன்றற் ப்ரசித்தங் கோட்டிய
கொங்கிற் றிருச்செங் கோட்டுறை பெருமாளே.

377. மெய்ச்சார் வற்றே பொய்ச்சார் வுற்றே
நிச்சார் *துற்பப் பவவேலை -
விட்டே றிப்போ கொட்டா மற்றே
மட்டே யத்தத் தையர்மேலே ;
பிச்சா யுச்சா கிப்போ ரெய்த்தார்
பத்தார் விற்பொற் கழல்பேணிப் -

---

* துற்ப = துன்ப.

[திருச்செங்கோடு.]

பிறப்பால் பட்டே நற்பால் பெற்றூர்
முற்பாலைக்கற் பகமேதான்;
*செச்சா லிச்சா லத்தே றிச்சே
லூற்று ணித்துப் பொழிலேறுஞ்-
†செக்கோ டைக்கோ டுக்கே நிற்பாய்
நித்தா செக்கர்க் கதிரோனல்;
முச்சா லிச்சா லித்தாள் வெற்பாள்
முத்தார் வெட்சிப் புயவேளே-
முத்தா முத்தீ யத்தா சுத்தா
முத்தா முத்திப் பெருமாளே. (கக)

378. வருத்தங் காண நாடிய குணத்தன் பான மாதரு
மயக்கம் பூண மோதிய தூரமீதே-
மலக்கங் கூடி யேயின வுயிர்க்குஞ் சேத மாகிய
மரிக்கும் பேர்க ளோடுற வணியாதே;
பெருத்தும் பாவ நீடிய மலத்தின் தீமை கூடிய
பிறப்புந் தீர வேயுன திருதாளே-
பெறத்தந் தாள வேயுயர் சுவர்க்கஞ் சேர வேயருள்
பெலத்தின் கூர்மை யானது மொழிவாயே;
இரத்தம் பாய மேனிக ளூரத்துஞ் சாடி வேல்கொடு
எதிர்த்துஞ் சூரர் மாளவெ பொரும்வேலா-
இசைக்குந் தாள மேளமெ தனத்தந் தான தானன
எனத்தின் கூளி கோடிகள் புடைசூழத்;
திருத்தன் பாக வேயொரு மயிற்கொண் டாடி யேபுகழ்
செழித்தன் பாக வீறிய பெருவாழ்வே-
திரட்சங் கோடை வாவிகள் மிகுத்துங் காவி சூழ்தரு
திருச்செங் கோடு மேவிய பெருமாளே. (கஉ)

---

* செச்சாலிச் சாலம்=செந்நெற் கூட்டம்.

†செக்கோடைக் கோடுக்கே=திருச்செங்கோட்டு மலையி னுச்சியில்

379. ஆலகால படப்பைம டப்பியர்
ஈர வாளற வெற்றும்வி ழிச்சியர்
யாவ ராயினு நத்திய ழைப்பவர் தெருவூடே -
ஆடி யாடிந டப்பதொர் பிச்சியர்
பேசி யாசைகொ டுத்தும ருட்டிகள்
ஆசை வீசிய ணைக்குழ லைச்சியர் பலரூடே;
மாலை யோதிவி ரித்துமு டிப்பவர்
சேலை தாழநெ கிழ்த்தரை சுற்றிகள்
வாசம் வீசும ணத்தில்மி னுக்கிகள் உறவாலே -
மாயை யூடுவி ழுத்திய ழுத்திகள்
காம போகவி னைக்குள ழைப்பணி
வாழ்வி லாமல்ம லச்சன னத்தினி
லுழல்வேனோ;
மேலை வாயொரு வைத்*தச ரற்கொரு
பால னாகியு தித்தொர்மு னிக்கொரு
வேள்வி காவல்ந டத்தி†ய கற்குரு அடியாலே -
மேவி யேமிதி லைச்‡சிலை செற்றுமின்
மாது தோள்தழு விப்பதி புக்கிட
வேறு தாயட விக்குள் விடுத்த§பி னவனோடே;
ஞால மாதொடு புக்கவ னத்தினில்
வாழும் வாலிப டக்கணை தொட்டவ
னொடி ராவண னைச்செகு வித்தவன் மருகோனே -
ஞான தேசிக சற்குரு உத்தம
வேல வாநெரு வைப்பதி வித்தக
நாக மாமலைசொற்பெற நிற்பதொர் பெருமாளே.

---

* தசரதற்கொரு என்பது தசரற்கொரு எனத் திரிந்தது.

† அ - கற்கு - உரு - அடியாலே - மேவி = (அகலிகையாகிய) அந்தக் கல்லைத் திருவடியினால் (மிதித்துப் பழைய) உருவெய்தும் படிச் செய்து. ‡ சிலை செற்று = வில்லை முறித்து.

§ பின்னவன் = தம்பியாகிய லக்ஷ்மணன்.

[திருச்செங்கோடு.]

380. **கா**லனிடத் தணுகாதே-காசினியிற் பிறவாதே;
சீலஅகத் தியஞான - தேனமுதைத் தருவாயே;
மாலயனுக் கரியானே - மாதவரைப் பிரியானே;
நாலுமறைப் பொருளானே-நாககிரிப் பெருமாளே. (கச)

381. *தாமா †தாமா லாபா லோகா
தாரா தாரத் தாணீசா -
தாஞ சாரோ பாவா பாவோ
நாசா பாசத் தபர்த;
‡யாமா யாமா தேசாருடா
யாரா யாபத் தெனதாவி -
யாமா காவாய் தீயே னீர்வா
யாதே யீமத் துகலாமோ;
§காமா ‖காமா தீஞ ¶நீஞ
காவாய் காளக் கிரியாய்கந் -
காளா லீலா பாலா நீபா
௦காமா மோதக் கனமானின்;
$தேமார் தேமா காமீ பாகீ
தேசா தேசத் தவரோதுஞ் -
சேயே வேளே பூவே கோவே
தேவே தேவப் பெருமாளே. (கரு)

---

* தாமா = மாலையை யுடையவனே.

† தாம ஆலாபா = சுக சம்பாஷணை யுள்ளோனே.

‡ யாம யாமா தேசார் = தெற்கிலுள்ள யமபுரியோர்.

§ காமா = அன்பனே.

‖ காம ஆதீஞ = அன்பர்கள் இச்சிப்பதை அளிக்கும் சுதந்தரமுள்ளவனே.

¶ நீள் நாக வாய் காளக் கிரியாய் = சேஷாசலத்தில் வீற்றிருப்பவனே.

௦ காம ஆமோத = மிகுந்த விருப்பமுள்ள.

$ தேம் ஆர் தே மா காமீ = தேன் கலந்த இனிய திணைமாவின் விருப்பனே.

பு. 382. அத்து கிரினலத ரத்து அலனவள
கத்து வளர்செய்புள கிதபூத -
ரத்தி ருகமலக ரத்தி தயமுருகி
யத்தி யிடனுறையு நெடுமாம;
ரத்து மலர்கனிய லைத்து வருமிடைத
லத்து ரகசிகிரி பகராதே -
யத்தி மலவுடன டத்தி யெரிகொணிரை
யத்தி னிடையடிமை விழலாமோ;
தத்து கவனவரி ணத்து வுபநிடவி
தத்து முநியுதவு மொழி*யாறுத் -
தத்தை நறவையமு தத்தை நிகர்குறவர்
தத்தை தழுவியப னிருதோளா;
தத்து ததிதுரக தத்து மிகுதிதிசர்
தத்து மலையவுணர் குலநாகந் -
தத்த மிசைமரக தத்த மணியமயில்
தத்த விடுமமரர் பெருமாளே. (கசு)

இதன் பொருள்:

அத் துகிரின் நல் அதரத்து=பவளம் போற் சிவந்த இதழி (உதட்டி)லும், அல் அன்ன அளகத்து=இருள்போன்ற கூந்தலிலும், வளர்செய் புளகித பூதரத்து=வளரும் புளகித மலையன்ன ஸ்தனங்களிலும், இரு கமல கரத்து=தாமரைபோன்ற இரு கரங்களிலும், இதயம் உருகி=மன முருகி, அத்தி யிட னுறையும் நெடு மாமரத்து மலர் கனி யலைத்து=சமுத்திரத்தி லிருந்த சூரனாகிய நெடிய மாமரத்தின் மலரையுங் கனியையும் அலைத்து, வரும் இடை தலத்து உரக சிகரி=வந்து அமர்ந்தருளிய ஸ்தலமாகிய நாக கிரியை (திருச்செங்கோட்டை), பகராதே=ஸ்தோத்திரஞ் செய்யாமல், அத்தி மல உடல் நடத்தி=எலும்பும் மலமுங் கூடிய உடலைச் சுமந்து, எரிகொள் நிரையத்தின் இடை அடிமை விழலாமோ=எரிகின்ற நரகத்தில் அடிமை விழலாமோ? தத்து கவன அரிணத்து=வேக நடையை உடைய மானினிடத்து, உபநிட விதத்து முநி உதவு=வேத ஒழுக்கம் பூண்ட சிவமுநிவர்

* 'பாய' என்றும் பாடம்.

[திருச்செங்கோடு.]

தந்த, மொழியால் தத்தத்தை நறவை அமுதத்தை நிகர் குறவர் தத்தை=பாலையும் தேனையும் அமுதத்தையும் ஒத்த மொழியை யுடைய கிளிபோன்ற குறமகள் (வள்ளி நாயகி) தழுவிய பன்னிரு தோளா! தத்து உததி துரகதத்து மிகு திதிசர் தத்து மலை அவுணர் குல நாகம் = (அலை) வீசும் சமுத்திரம் போல மிக்க குதிரைப் படையை உடைய அசுரர்களும் மலை யன்ன அவுணர்களும் ஆகிய சர்ப்பக் கூட்டம், தத்த=நடுங்கி ஒடுங்க, மிசை=(அவர்கள்) மீது, மாகதத் தமனிய மயில் தத்த விடும் அமரர் பெருமாளே= பசும் பொன் மயில் மீது ஆரோகணித்து வந்த பெருமாளே!

---

383. அத்த வேட்கைப் பற்றி நோக்கத்
தத்தை மார்க்குத் தமர்ர்யன்-
பற்ற கூட்டத் திற்ப ராக்குற்
றச்சு தோட்பற் றியவோடும்;
சித்த மீட்டுப் பொய்த்த வாழ்க்கைச்
சிக்கை நீக்கித் திணிதாய -
சித்ர வாக்குப் பெற்று வாழ்த்திச்
செச்சை சாத்தப் பெறுவேனோ;
கொத்து நூற்றுப் பத்து நாட்டக்
கொற்ற வேத்துக் கரசாய -
குக்கு டாத்தச் *சர்ப்ப கோத்ரப்
பொற்ப வேற்கைக் குமரேசா;
தத்வ நாற்பத் தெட்டு நாற்பத்
தெட்டு மேற்றுத் திடமேவும் -
தர்க்க சாத்ரத் தக்க மார்க்கச்
சத்ய வாக்யப் பெருமாளே. (கஎ)

384. பத்தர்க ணப்ரிய நிர்த்தந டித்திடு
பக்ஷிந டத்திய குகபூர்வ-
பச்சிம தக்ஷிண வுத்தர திக்குள
பத்தர்க ளற்புத மெனவோதுஞ்;

---

* சர்ப்ப கோத்திரம்=நாக மலை; கோத்திரம்=மலை.

சித்ரக வித்துவ சத்தமி குத்தகி
ருப்புக ழைச்சிறி தடியேனுஞ்-
செப்பென வைத்துல கிற்பர வத்தெரி
சித்தவ நுக்ரக மறவேனே;
கத்திய தத்தைக ளைத்துவி ழத்திரி
கற்கவ ணிட்டெறி தினைகாவல் -
கற்றகு றத்திநி றத்தக ழுத்தடி
கட்டிய ணைத்தப னிருதோளா;
சத்தியை யொக்கஇ டத்தினில் வைத்தத
கப்பனு மெச்சிட மறைநூலின் -
தத்துவ தற்பர முற்றுமு ணர்த்திய
சர்ப்ப கிரீச்சுரர் பெருமாளே. (கஅ)

385. *புற்புதமெ னுமஅற்பநிலை யாத
பொய்க்குடில்கு லாவு மனையாளும் -
புத்திரரும் வீடு மித்திரரு மான
புத்திசலி யாத பெருவாழ்வு;
நிற்பதொரு கோடி கற்பமென மாய
நிட்டையுடன் வாழு மடியேன்யான்-
நித்தநின தாளில் வைத்ததொரு காதல்
நிற்கும்வகை யோத நினைவாயே;
சற்பகிரி நாத முத்தமிழ்வி நோத
சக்ரகதை பாணி மருகோனே-
தர்க்கசமண் மூகர் மிக்ககழு வேற
வைத்தவொரு காழி மறையோனே;
கற்புவழு வாது வெற்படியின் மேவு
கற்றைமற வாணர் கொடிகோவே-
கைத்தஅசு ரேசர் மொய்த்தகுல கால
கற்பதரு நாடர் பெருமாளே. (கசு)

---

* புற்புதம்=நீர்க் குமிழி.

[திருச்செங்கோடு.]

386\. பொற்சித்ரப் பச்சைப் பட்டுக்
கச்சிட்டுக் கட்டிப் பத்மப்
புட்பத்துக் கொப்பக் கற்பித் திளைஞோர்கள் -
புட்பட்டுச் செப்பத் திப்பற்
கொத்தப்பொற் றித்தத் திட்பப்
பொற்பிற் *பெற் றுக்ரச் சக்ரத் தனமானர் ;
கற்சித்தச் சுத்தப் பொய்ப்பித்
தத்திற்புக் கிட்டப் பட்டுக்
கைக்குத்திட் டிட்டுச் சுற்றித் திரியாமல் -
கற்றுற்றுச் சித்திக் கைக்குச்
சித்திப்பப் பக்ஷத் திற்சொற்
கற்பித்தொப் பித்துக் கொற்றக் கழல்தாராய் ;
குற்சித்துக் கொட்டுக் கொட்டுத்
துக்கச்சத் துக்குக் குக்குக்
குக்குக்குக் குக்குக் குக்குக் கெனமாறு -
குட்சிக்குப் பக்ஷிக் கைக்குக்
கக்ஷத்திற் பட்சத் தத்தக்
கொட்டிச்சுட் டிக்†கொக் ரிக்குக் குடதாரி ;
சிற்சித்துத் தொற்புத் திப்பட்
சத்தர்க்கொப் பித்தட் சத்துச்
சத்தத்தைச் சத்திக் கொச்சைப் பதிவாழ்வே -
தக்ஷப்பற் றுக்கொர்ப் பத்திற்
செற்பற்றைச் ‡ செற்றிட் டுச்சச்
§சற்பப்பொற் றைக்குட் சொக்கப் பெருமாளே.

387\. கொடிய மறலியு மவனது கடகமு
மடிய வொருதின மிருபதம் வழிபடு
குதலை யடியவ னினதருள் கொடுபொரு மமர்காண -

* பெற்றுக்ர=பெற்ற உக்கிர. † கொக்ரி=கொக்கரி : கூவிய.
‡ செற்றிட்ட உச்ச வினைப்பிரிக்க. § சற்பப் பொற்றை=நாக மலை.

குறவர் மகள்புணர் புயகிரி சமுகமு
மறுமு கமும்வெகு நயனமும் *ரவியுமிழ்
கொடியு மகிலமும் வெளிபட இருதிசை
விருநாலும்;

படியு நெடியன எழுபுண ரியுமுது
† திகிரி திகிரியும் வருகென வருதகு
பவுரி வருமொரு மரகத துரகத மிசையேறிப்-

பழய அடியவ ருடனிமை யவர்கண
மிருபு டையுமிகு தமிழ்கொடு மறைகொடு
பரவ ‡ வருமதி லருணையி லொருவிசை
வரவேணும்;

சடில தரவிட தரபணி தாதர
பரசு தரசசி தரசுசி தரவித
தமரு கமிருக தரவனி தரசிர தரபாரத்-

தரணி தாதநு தரவெகு முககுல
தடினி தரசிவ சுதகுண தர § பணி
சயில விதரண தருபுர சசிதரு மயில்வாழ்வே;

நெடிய வுடலுரு இருளெழ நிலவெழ
எயிறு சுழல்விழி தழலெழ எழுகிரி
நெரிய அதிர்குரல் புகையெழ இடியெழ
நெடுவானும்-

நிலனும் வெருவர வருநிசி சரர்தள
நிகில சகலமு மடியவொர் படைதொடு
நிருப குருபர சுரபதி பரவிய பெருமாளே. (உ௧)

---

* ரவி யுமிழ் கொடி=கோழிக் கொடி; இருள்...மட்கப்...புகல்... கொடி (478), ரவி யுமிழ் துவசம் (1008) என்பர் பின்னும்.

† திகிரி திகிரி=சக்ரவாள கிரி. ‡ வரும் அதில்=வந்தது போல.

§ பணி சயில=நாகமலையி லிருப்போனே!

கொல்லிமலை.

[இது சேலம் ஜில்லா நாமக்கல்லுக்குச் சமீபத்திலுள்ளது.]

388. கட்ட மன்னு மள்ளல் கொட்டி பண்ணு மைவர்
கட்கு மன்னு மில்லை மிதுபேணி -
கற்ற *விஞ்ஞை சொல்லி யுற்ற வெண்மை யுள்ளு
கக்க எண்ணி முல்லை நகைமாதர் ;
இட்ட மெங்க னல்ல கொட்டி யங்க னல்கி
யிட்டு பொன்னை யில்லை யெனஏகி -
எத்து பொய்ம்மை யுள்ள னுற்று மின்மை யுள்ளி
யெற்று மிங்ஙனவ தியல்போதான் ;
முட்ட வுண்மை சொல்லு செட்டி திண்மை கொள்ள
முட்ட நன்மை விள்ள வருவோனே -
முத்து வண்ண வல்லி சித்ர வண்ண வல்லி
முத்தி விண்ண வல்லி மணவாளா ;
பட்ட மன்ன வல்லி மட்ட மன்ன வல்லி
பட்ட துன்னு கோல்லி மலைநாடா -
பச்சை வன்னி யல்லி செச்சை சென்னி யுள்ள
பச்சை மஞ்ஞை வல்ல பெருமாளே. (க)

389. தொல்லைமுதல் தானென்ற †மெல்லியிரு பேதங்கள்
சொல்லு ‡குண மூவந்த மெனவாகி -
துய்யசதுர் வேதங்கள் வெய்யபுல னைந்து
தொய்யுபொரு ளாறங்க மெனமேவும் ;
பல்லபல நாதங்கள் அல்கபசு பாசங்கள்
பல்குதமிழ் தானென்றி யிசையாகிப் -

---

* விஞ்ஞை=விஞ்சை : வித்தை.

† மெல்லி இரு பேதங்கள் =சிவம் சத்தி இரண்டு.

‡ குணம் மூவந்தம்=இராசத, தாமத, சாத்துவீகம் என்னும் முக்குணமும், அவற்றையுடைய திரிமூர்த்திகளும்.

பல்லுயிரு மாயந்த மில்லசொரு பாநந்த
பௌவமுற வேநின்ற தருள்வாயே ;
கல்லுருக வேயின்கண் அல்லல்படு *கோவம்பு
கல்வருக வேநின்று †குழலூதும் -
கையன்மிசை யேறும்பன் நொய்யசடை யோனெந்தை
கைதொழமெய்ஞ் ஞானஞ்சொல் கதிர்வேலா ;
கொல்லைமிசை வாழ்கின்ற வள்ளிபுன மேசென்று
கொள்ளைகொளு மாரன்கை யலராலே -
கொய்துதழை யேகொண்டு செல்லு‡மழ வாகந்த
கோல்லிமலை மேனின்ற பெருமாளே. (உ)

ராஜகெம்பீர வளநாட்டு மலை.

[இடம் விளங்க வில்லை ; ஆயினும் 100-ஆம் பாடலில் ராஜ கெம்பீர நாடென்றதைக் காண்க.]

390. **மா**கசஞ் சாமுகில் தோற்ற குழல்கொடு
போகஇந் த்ராதிசிலை தோற்ற நுதல்கொடு
மானவண் டேறுகணை தோற்ற விழிகொடு
கண்டுபோல -
மாலர்கொண் டாடுகனி தோற்ற இதழ்கொடு
சோலைசென் றாதுகுயில் தோற்ற இசைகொடு
வார்பொரும் பாரமலை தோற்ற முலைகொடு
மன்றுளாடி ;
சீகரம் பேணுதுடி தோற்ற இடைகொடு
போகபண் டாரபணி தோற்ற அரைகொடு
தேனுகுஞ் சீர்கதலி தோற்ற தொடைகொடு
வந்துகாசு -

* கோ அம் புகல் வருக = பசுக்கள் அழகிய புகுமிடம் வந்து சேர.

† குழலூதும் கையன் மிசை ஏறு உம்பன் = விஷ்ணுவாகிய ருஷபவாகனத்தை யுடைய பரமசிவன்.

‡ மழவன் = கட்டழகுடையோன்.

[ஞானமலை.]

தேடுகின் ருேரொடுமெய் தூர்த்த னெனவுற்
வாடுகின் றேனைமல நீக்கி யொளிதரு
சிவனென் ருனபர மார்த்த தெரிசனை
வந்துதாராய்;
வேகமுண் டாகியுமை சாற்று மளவினில்
மாமகங் கூருமது தீர்க்க வடிவுடை
வீரனென் பானொருப ராக்ர னெனவர
அன்றுசோமன்-
மேனியுந் தேயகதிர் தோற்ற எயிறுக
*ஆனுகுந் தீகையற † சேட்ட விதிதலை
வீழநன் பாரதியு மூக்கு நழுவிட வந்தமாயன்;
ஏகநின் ருகியமர் தோற்று வதறிட
வேகவுங் காரமொடு ஆர்க்க அலகைக
ளேறிவென் ருடுகள நீக்கி முநிவரர்
வந்துசேயென்-
நீசநண் பானபுரு ஷார்த்த தெரிசனை
தாவெனுங் கேள்விநெறி கீர்த்தி மருவிய
ராஜகெம் பீர வள நாட்டுமலைவளர் தம்பிரானே.

ஞானமலை.

[இடம் விளங்கவில்லை. நாமக்கல்லுக்கருகில் நைனுமலையென்று மலையொன் றுண்டு.]

391. சூதுகொலை கார ராசைபண மாதர்
‡தூவையர்கள் சோகை முகநீலர்-
சூலைவலி வாத மோடளேவர் பாவர்
தூமையர்கள் கோளர் தெருவூடே;
சாதனைகள் பேசி வாருமென நாழி
தாழிவிலை கூறி தெனவோதி-

* ஆன் உகும் தீ=யாகப்பசுவை (தகித்து) பொடியாக்கும் அக்கினி.
† சேட்ட விதி=முதன்மையான தக்ஷப்பிரஜாபதி.
‡ தூவையர்கள்=மாமிச பக்ஷணிகள்.

சாயவெது மாய தூளியுற * வாக
தாடியிடு வோர்க ளுறவாமோ;
வேதமுநி வோர்கள் பாலகர்கள் மாதர்
வேதியர்கள் பூச லெனா†வகி-
வீரசுரர் பாறி வீழஅலை யேழு
வேலையள றாக விடும்வேலா;
நாதரிட மேவு மாதுசிவ காமி
நாரியபி ராமி யருள்பாலா-
நாரண் சுவாமி யீனுமக ளோடு
ஞானமலை மேவு பெருமாளே. (க)

392. மனையவள் நகைக்க வூரி னனைவரு நகைக்க லோக
மகளிரு நகைக்க தாதை தமரோடும்-
மனமது சலிப்ப நாய னுளமது சலிப்ப யாரும்
வசைமொழி பிதற்றி நாளு மடியேன்;
அனைவரு மிழிப்ப நாடு மனவிருண் மிகுத்து நாடி
னகமதை யெடுத்த சேம மிதுவோவென்-
றடியனு நினைத்து நாளு முடலுயிர் விடுத்த போது
மணுகிமு னளித்த பாத மருள்வாயே;
தனதன தனத்த தான எனமுர சொலிப்ப வீணை
தமருக மறைக்கு ழாமு மலைமோதத்-
‡தடிநிக ரயிற்க டாவி யசுரர்க ளிறக்கு மாறு
சமரிடை விடுத்த சோதி முருகோனே;
எனைமன முருக்கி யோக அநுபுதி யளித்த பாத
எழுதரிய பச்சை மேனி யுமைபாலா-
இமையவர் துதிப்ப ஞான மலையுறை குறத்தி பாக
இலகிய சசிப்பெண் மேவு பெருமாளே. (உ)

* ஆக தாடியிடுவோர்=சரீரத்தைத் தட்டிக் கொடுப்போர்.
† வகி=வகுவித்து. ‡ தடி=மின்னல்.

ஊதிமலை.

[இது கோயமுத்தூர் ஜில்லாவில் தாராபுரத்திலிருந்து காங்கேயத்துக்குப் போகும் வழியில் இடைநடுவில் பத்துக்கல் தூரத்திலுள்ளது.]

393. ஆதிமக மாயி யம்பை தேவிசிவ னார்ம கிழ்ந்த,
ஆவுடைய மாது தந்த குமரேசா -
ஆதரவ தாய்வ ருந்தி யாதியரு ணேச ரென்று
ஆளுமுனை யேவ ணங்க அருள்வாயே ;
பூதமது வான வைந்து பேதமிட வேய லைந்து
பூரணசி வாக மங்க ளறியாதே -
பூணுமுலை மாதர் தங்கள் ஆசைவகை யேநி னைந்து
போகமுற வேவி ரும்பு மடியேனை ;
நீதயவ தாயி ரங்கி நேசவரு ளேபு ரிந்து
நீதிநெறி யேவி ளங்க வுபதேச -
நேர்மைசிவ னார்தி கழ்ந்த காதிலுரை வேத மந்த்ர
நீலமயி லேறி வந்த வடிவேலா ;
ஓதுமறை யாக மஞ்சொல் யோகமது வேபு ரிந்து
ஊழியுணர் வார்கள் தங்கள் வினைதீர -
ஊனுமுயி ராய்வ ளர்ந்து ஓசையுடன் வாழ்வு தந்த
ஊதிமலை மீது கந்த பெருமாளே. (க)

394. கோதி முடித்துக் கனத்த கொண்டையர்
கூது விதத்துக் கிதத்து மங்கையர்
கூடிய அற்பச் சுகத்தை நெஞ்சினில் நினையாதே -
கோழை மனத்தைக் கெடுத்து வன்புல
ஞான குணத்தைக் கொடுத்து நின்செயல்
கூறு மிடத்துக் கிதத்து நின்றருள் புரிவாயே ;
நாத நிலைக்குட் கருத்து கந்தருள்
*போதக மற்றெச் சகத்தை யுந்தரு
நான்மு கனுக்குக் கிளத்து தந்தையின் மருகோனே-

* போதக=ஞானகுருவே.

நாடு *மகத்தெற் கிடுக்கண் வந்தது
தீரிடு தற்குப் பதத்தை யுந்தரு
நாயகர் †புத்ரக் குருக்க ளென்றருள் வடிவேலா ;
தோதிமி தித்தித் திமித்த டிங்குகு
டீகுகு டிக்குட் டிகுக்கு டிண்டிமி
தோதிமி தித்தித் தனத்த தந்தவெ ணிசையோடே-
சூழ நடித்துச் சடத்தில் நின்றுயி
ரான துறத்தற் கிரக்க முஞ்சுப
சோபன முய்க்கக் கருத்தும் வந்தருள்
புரிவோனே ;
ஓத ‡வெ ழுத்துக் கடக்க முஞ்சிவ
காரண பத்தர்க் கிரக்க முந்தகு
ஓமெ னெழுத்துக் குயிர்ப்பு §மென்சுட
ரொளியோனே -
‖ஓதி யிணர்த்திக் குகைக்கி டுங்கன
காபர ணத்திற் பொருட் பயன்றரு
ஊதிகிரிக்குட் கருத்து கந்தருள் பெருமாளே.(உ)

குருடிமலை.

[இது கோயமுத்தூருக் கடுத்த துடியலூர் ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபத்தி லுள்ளது.]

395. கருடன் மிசைவரு கரிய புயலென
கமல மணியென வுலகோரைக் -
கதறி யவர்பெயர் செருகி மனமது
கருதி முதுமொழி களைநாடித் ;
திருடி யொருபடி நெருடி யறிவிலர்
செவியில் நுழைவன கவிபாடித் -

* அகத்தெற்கு=அடியேனுக்கு.
† புத்ரக் குருக்கள் = தகப்பன் சாமி.
‡ எழுத்து=மந்திரம். § என் = எனவுள்ள.
‖ ஓதி=ஓதியமரம்.

[தென்சேரிகிரி.]

திரியு மவர்சில புலவர் மொழிவது
சிறிது முணர்வகை யறியேனே ;
*வருடை யினமது முருடு படுமகில்
மரமு மருதமு மடிசாய -
மதுர மெனுநதி பெருகி யிருகரை
வழிய வகைவகை குதிபாயுங் ;
குருடி மலையுறை முருக குலவட
குவடு தவிடெழ மயிலேறும் -
குமர குருபர திமிர தினகர
குறைவி லிமையவர் பெருமாளே.

தென்சேரிகிரி.

[இது கோயமுத்தூர் ஜில்லா, பல்லடம் தாலூகா, கஸ்பா பல்லடத்துக்குத் தெற்கே கஉ - மைல் தூரத்தி லுள்ளது.]

396. எங்கேனு மொருவர்வர அங்கேக ணினிதுகொடு
இங்கேவ ருனதுமயல் தரியாரென் -
றிந்தாவெ னினியஇதழ் தந்தேனை யுறமருவ
என்றாசை குழையவிழி யிணையாடித் ;
தங்காம லவருடைய வுண்டான பொருளுயிர்கள்
சந்தேக மறவெபறி கொளுமானுர் -
சங்கீத கலவிநல மென்றோது முதகிவிட
†தண்பாரு முனதருளை யருள்வாயே ;
சங்கோடு திகிரியது கொண்டேயு நிரைபிறகு
சந்தாரும் ‡வெதிருகுழ லதுவூதித் -
தன்காதல் தனை §யுகள என்றேழு மடவியர்கள்
தங்கூறை கொடுமாமி லதுவேறுஞ் ;

---

* வருடை=மலையாடு. † தண்பு=தன்மை.
‡ வெதிர்=மூங்கில். § உகள=கடக்க.

சிங்கார அரிமருக பங்கேருக னுமருள
 சென்றேயும் அமாருடை சிறைமீளச் -
செண்டாடி அசுரர்களை ஒன்ருக அடியர்தொழு
 தென்சேரி கிரியில்வரு பெருமாளே. (௧)

397. கொண்டாடிக் கொஞ்சு மொழிகொடு
 கண்டாரைச் சிந்து விழிகொடு
 கொந்தாரச் சென்ற குழல்கொடு வடமேருக் -
குன்றேடொப் பென்ற முலைகொடு
 நின்றோலக் கஞ்செய் நிலைகொடு
 கொம்பாயெய்ப் புண்ட விடைகொடு
 பலரோடும் ;
பண்டாடச் சிங்கி யிடுமவர்
 விண்டாவிக் கின்ற மயிலன
 பண்பாவிட் டஞ்செல் மருளது விடுமாறு -
பண்டேசொற் றந்த பழமறை
 கொண்டேதர்க் கங்க ளறவுமை
 பங்காளர்க் கன்று பகர்பொருள் அருள்வாயே ;
வண்டாடத் தென்றல் தடமிசை
 தண்டாதப் புண்ட ரிகமலர்
 மங்காமற் சென்று மதுவைசெய் வயலூரா -
வன்காளக் கொண்டல் வடிவொரு
 சங்க்ராமக் கஞ்சன் விழவுதை
 மன்ருடிக் கன்பு தருதிரு மருகோனே ;
திண்டாடச் சிந்து நிசிசரர்
 தொண்டாடக் கண்ட வமர்பொரு
 செஞ்சேவற் செங்கை யுடையஷண் முகதேவே -
சிங்காரச் செம்பொன் மதிளத
 லங்காரச் சந்த்ர கலைதவழ்
 தென்சேரிக் குன்றி லினிதுறை பெருமாளே. (௨)

கொங்கணகிரி.

[இது கோயமுத்தூர் ஜில்லா திருப்பூர் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து 2-மைல். சேலத்துக் கருகிலுள்ள ராஜபுரத்துக்கு மேற்கு 3-மைலிலும் கொங்கணகிரி என்னும் மலை யொன் றுள்ளது.]

398. ஐங்கரனை யொத்தமன மைம்புலம கற்றிவள
ரந்திபக லற்றநினை வருள்வாயே -
அம்புவித னக்குள்வளர் செந்தமிழ்வ ழுத்தியுனை
அன்பொடுது திக்கமன மருள்வாயே ;
தங்கியத வத்துணர்வு தந்தடிமை முத்திபெற
சந்திரவெ ளிக்குவழி யருள்வாயே -
தண்டிகைக னப்பவுசு எண்டிசைம திக்கவளர்
சம்ப்ரமவி தத்துடனெ யருள்வாயே ;
மங்கையர்சு கத்தைவெகு இங்கிதமெ னுற்றமன
முன்றனைநி னைத்தமைய அருள்வாயே -
மண்டலிக * ரப்பகலும் வந்தசுப ரக்ஷபுரி
வந்தணைய புத்தியினை யருள்வாயே ;
கொங்கிலுயிர் பெற்றுவளர் தென்கரையி லப்பரருள்
கொண்டுஉட லுற்றபொரு ளருள்வாயே -
குஞ்சரமு கற்கிளைய கந்தனென வெற்றிபெறு
கோங்கணகி ரிக்குள்வளர் பெருமாளே.

---

* ராப்பகல் என்பது ரப்பகல் என்றாயிற்று.

தீர்த்தமலை.

[இது சேலம் ஜில்லா மொரப்பூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு 8-மைல் தூரத்திலுள்ள ஹரூருக்கு வடகிழக்கு 9½-மைல். மலையடிவாரத்திலும் மலைமேலும் கோயில்கள் இருக்கின்றன. இதற்கு சைவ-எல்லப்ப நாவலர் பாடிய ஸ்தலபுராணம் ஒன்றுண்டு.]

---

399. **பா**ட்டி லுருகிலை கேட்டு முருகிலை
கூற்று வருவழி பார்த்து முருகிலை
* பாட்டை யறுதின மேற்று மறிகிலை தினமானம் —
பாப்ப ணியனருள் வீட்டை விழைகிலை
நாக்கி னுனிகொடு எத்த அறிகிலை
பாழ்த்த பிறவியி லேற்ற †மனதுநல் வழிபோக ;
மாட்ட மெனுகிறை கூட்டை விடுகிலை
யேட்டின் விதிவழி யோட்ட மறிகிலை
பார்த்து மினியொரு வார்த்தை அறைகுவ
னிதுகேளாய் —
வாக்கு முனதுள நோக்கு மருளுவ
னேத்த புகழடி யார்க்கு மெளியனை
வாழ்த்த இருவினை நீக்கு முருகனை மருவாயோ ;
ஆட்டி வடவரை வாட்டி யரவொடு
பூட்டி திரிபுர மூட்டி மறலியி
ஞட்ட மறசர ணீட்டி மதனுடல் திருநீறாய் —
ஆக்கி மகமதை வீட்டி யொருவனை
யாட்டின் முகமதை நாட்டி மறைமக
ளார்க்கும் வடுவுற வாட்டு முமையவ னருள்பாலா;
சீட்டை யெழுதிவை யாற்றி லெதிருற
ஓட்டி யழல்பசை காட்டி சமணரை
சீற்ற மொடுகழு வேற்ற அருளிய குருநாதா —

---

* பாட்டை = கஷ்டத்தை. † மனது = மனதே!

[கநகமலே.]

தீர்த்த என்தக *மேட்டை யுடனினை
எத்த அருளுட ஞேக்கி அருளுதி
தீர்த்த மலேநகர் காத்த சசிமகள் பெருமாளே.

கநகமலே.

[இடம் விளங்கவில்லே.]

பு. 400. அரிவையர்கள் தொடரு மின்பத்
துலகுநெறி மிகம ருண்டிட்
டசடனென மனது நொந்திட் டயராமல் -
அநுதினமு முவகை மிஞ்சிச்
சுகநெறியை விழைவு கொண்டிட்
டவநெறியின்விழையு மொன்றைத் தவிர்வேனே;
பரிதிமதி நிறைய நின்றஃ
தெனவொளிரு முனது துங்கப்
படிவமுக மவைகள் கண்டுற் றகமேவும் -
படர்கள்முழு வதும கன்றுட்
பரிவினெடு துதிபு கன்றெற்
பதயுகள மிசைவ ணங்கற் கருள்வாயே;
செருவிலகு மசுரர் மங்கக்
குலகிரிகள் நடுந டுங்கச்
சிலுசிலென வலைகு லுங்கத் திடமான -
செயமுதவு மலர்பொ ருங்கைத்
தலமிலகு மயில்கொ ளுஞ்சத்
தியைவிடுதல் புரியு முன்பிற் குழகோனே;
கருணைபொழி கிருபை முந்தப்
பரிவினெடு கவுரி கொஞ்சக்
கலகலென வருக டம்பத் திருமார்பா -
கரிமுகவர் தமைய னென்றுற்
றிடுமிளைய குமர பண்டிற்
கநககிரி யிலகு கந்தப் பெருமாளே.

* எட்டை=விருப்பம்.

புகழிமலை.

[திரிசிராப்பள்ளி ஜில்லா புகலூர் ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து 2-மைல்.]

401. மருவுமலர் வாச முறுகுழலி னாலும்
வரிவிழியி னாலு மதியாலும் -
மலையினிக ரான இளமுலைக ளாலு
மயல்கள்தரு மாதர் வகையாலும் ;
கருதுபொரு ளாலு மனைவிமக வான
கடலலையில் மூழ்கி அலைவேனோ -
கமலபத வாழ்வு தரமயிலின் மீது
கருணையுட னேமுன் வரவேணும் ;
அருமறைக ளோது பிரமன்முதல் மாலும்
அமரர்முநி ராஜர் தொழுவோனே -
அகிலதல மோது நதிமருவு சோலை
அழகுபெறு போக வளநாடா ;
பொருதவரு சூரர் கிரியுருவ வாரி
புனல்சுவற வேலை யெறிவோனே -
புகலரிய தான தமிழ்முநிவ ரோது
புகழிமலை மேவு பெருமாளே.

பூம்பறை.

[இது கொடைக்கானலுக்கு மேற்கு 8-மைல் தூரத்திற் பழநிக்குத் தெற்கே வராககிரிமேல் இருக்கின்றது. பழநியிலிருந்து வராககிரி 4-மைல்; அப்பால் மலைமேற் பத்துமணிநேர பயணஞ் சென்றாற் பூம்பறையை யடையலாம்.]

பு. 402. மாந்தளிர்கள் போல வேய்ந்தவுடல் மாதர்
*வாந்தவிய மாக முறைபேசி -
வாஞ்சைபெரு மோக சாந்திதர நாடி
வாழ்ந்தமனை தேடி உறவாடி ;

* வாந்தவியமாக=பாந்தவியமாக.

[கொடுங்குன்றம்.]

ஏந்துமுலை மீது சாந்துபலி பூசி
எங்குமிடை வாட விளையாடி -
ஈங்கிசைகள் மேவ *லாஞ்சனையி லாமல்
ஏய்ந்தவிலை மாதர் உறவாமோ ;
பாந்தண்முடி மீது தாந்ததிமி தோதி
தாஞ்செகண சேசெ எனவோசை -
பாங்குபெறு தாள மேங்கநட மாடு
பாண்டவர்ச காயன் மருகோனே ;
பூந்தளிர்கள் வீறு வேங்கைகள்ப லாசு
பூங்கதலி கோடி திகழ்சோலை -
பூந்தடமு லாவு கோம்பைகள்கு லாவு
பூம்பறையின் மேவு பெருமாளே.

கொடுங்குன்றம்.

[பிரான்மலை யென்பதும் இதுவே. திருஞானஸம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல்பெற்றது. இராமநாதபுரம் ஜில்லா சிவகங்கைக்கு 22-மைல் தூரத்திலுள்ள திருப்புத்தூர் என்னும் தேவாரம்பெற்ற ஸ்தலத்துக்கு வடமேற்கு 15-மைல். திருப்புத்தூர் தஞ்சைஜில்லா அறந்தாங்கி ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து 27-மைல்.]

403. அனங்க னம்பொன் றஞ்சுந் தங்குங் கண்களாலே -
அடர்ந்தெ ழும்பொன் குன்றங் கும்பங் கொங்கையாலே;
முனிந்து மன்றங் கண்டுந் தண்டும் பெண்களாலே-
முடங்குமென் றன்தொண்டுங்கண்டின் றின்புறாதோ;
தெனந்தெ னந்தெந் தெந்தெந் தெந்தெந் தெந்தெனனு-
தெறிந்த டர்ந்துஞ் சென்றும் பண்பின் தும்பிபாடக்;
குனிந்தி லங்குங் கொம்புங் கொந்துந் துன்றுசோலை-
கொழுங்கொ டுந்திண் குன்றந் தங்குந் தம்பிரானே.

* லாஞ்சனை = லச்சை.

404. எதிர்பொருது கவிகடின கச்சுக்க ளும்பொருது
குத்தித்தி றந்துமலை
யிலைகளென வதிம்ருகம தப்பட்டு நின்றெழுகி
முத்துச்செ றிந்தவட
மெனு*நிகள மவையறவு தைத்திட்ட ணாந்துகிரி
னிற்கொத்து மங்குசமெ ருங்குபாகர் -
எதிர்பரவ உரமிசைது கைத்துக்கி டந்துடல்ப
தைக்கக்க டிந்துமிக
இரதிபதி மணிமவுலி யெற்றித்ரி யம்பகனு
முட்கத்தி ரண்டிளகி
யிளைஞருயிர் கவளமென மட்டித்த சைந்தெதிர்பு
டைத்துச்சி னந்துபொரு கொங்கையானை ;

பொதுவில்விலை யிடுமகளிர் பத்மக்க ரந்தழுவி
யொக்கத்து வண்டமளி
புகஇணைய வரிபரவு நச்சுக்க ருங்கயல்கள்
செக்கச்சி வந்தமுது
பொதியுமொழி பதறஅள கக்கற்றை யுங்குலைய
முத்தத்து டன்கருணை தந்துமேல்வீழ் -
புதுமைதரு கலவிவலை யிற்பட்ட ழுந்தியுயிர்
தட்டுப்ப டுந்திமிர
புணரியுத தியில்மறுகி மட்டற்ற இந்திரிய
சட்டைக்கு ரம்பையழி
பொழுதினிலும் அருள்முருக சுத்தக்கொ டுங்கிரியி
னிர்த்தச்ச ரண்களைம றந்திடேனே ;

திதிதிதிதி திதிதிதிதி தித்தித்தி திந்திதிதி
தத்தத்த தந்ததத
தெததததெதத தெததததெதத தெத்தெத்தெ தெந்ததெதத
திக்கட்டி க்ண்டிகட
ஜெகணகெண கெணஜெகுத தெத்தித்ரி யந்திரித
தக்கத்த குந்தகுர்த திந்திதீதோ -

* நிகளம் = யானைகட்டுஞ் சங்கிலி.

[குன்றக்குடி.]

திகுடதிகு தொகுடதொகு திக்கட்டி கண்டிகட
டக்கட்ட கண்டகட
டிடிடுடு டிடிடுடு டிக்கட்டி கண்டிகட
டுட்டுட்டு டுண்டுடு
திகுகுதிகு திகுகுகுகு திக்குத்தி குந்திகுகு
குக்குக்கு குங்குகுகு என்றுதாளம்;
முதிர்திமிலை கரடிகையி டக்கைக்கொ டுந்துடியு
டுக்கைப்பெ ரும்பதலை
முழவுபல மொகுமொகென வொத்திக்கொ டும்பீரம
கத்திக்க ளும்பரவ
முகடுபுகு வெகுகொடிகள் பக்கத்தெ ழுந்தலைய
மிக்கக்க வந்தநிரை தங்கியாட -
முதுகழுகு கொடிகருட னெக்கத்தி ரண்டுவர
வுக்ரப்பெ ருங்குருதி
முழுகியெழு பயிரவர்க டித்திட்ட கண்டமும்வெ
டிக்கத்து ணிந்ததிர
முடுகிவரு நிசிசரரை முட்டிச்சி ரந்திருகி
வெட்டிக்க ளம்பொருத தம்பிரானே. (௨)

குன்றக்குடி.

[இது இராமநாதபுரம் ஜில்லா திருப்புத்தூருக்குக் கிழக்கு 7-மைல். தேவக்கோட்டைக்கு மேற்கு 15-மைல். இது மயூரகிரி எனவும் பெயர் பெறும். மலை சிறிது; வலம் வரலாம். ஸ்வாமி ஆறு திருமுகங்க ளுடையவர். இதற்கு ஸ்தல புராணம் உண்டு.]

---

405. அழகெ றிந்த சந்த்ர முகவ டங்க லந்த
அமுத புஞ்ச இன்சொல் மொழியாலே -
அடிது வண்ட தண்டை கலிலெ ஹுஞ்சி லம்பொ
டணிச தங்கை கொஞ்சு நடையாலே;

சுழியெ றிந்து நெஞ்சு சுழல நஞ்ச ணைந்து
தொடுமி ரண்டு கண்க ளதனாலே -
துணைநெ ருங்கு கொங்கை மருவு கின்ற பெண்கள்
துயரை யென்றொ ழிந்து விடுவேனோ ;
எழுது *கும்ப கன்பி னிளைய தம்பி நம்பி
யெதிர டைந்தி றைஞ்சல் புரிபோதே -
இதம கிழ்ந்தி லங்கை யசுர ரந்த ரங்க
மொழிய வென்ற கொண்டல் மருகோனே ;
மழுவு கந்த செங்கை அரனு கந்தி றைஞ்ச
†மநுவி யம்பி நின்ற குருநாதா -
வளமி குந்த குன்ற நகர்பு ரந்து துங்க
மலைவி ளங்க வந்த பெருமாளே. (க)

406. ‡ககுபநிலை குலையவிகல் மிகுபகடின் வலியுடைய
தந்தத்தி னைத்தடிவ தொந்தத் திரத்தையுள
அகிலமறை புகழ்பரமர் ஞெகிழிகல கலகலெனும்
அம்பொற் பதத்தர்தரு வம்பொற்பொ ருப்படர்வ
களபபரி மளமெழுகும் எழிலில்முழு குவமுளரி
யஞ்சப் புடைத்தெழுவ வஞ்சக் கருத்துமத
னபிஷேகங் -
கடிவபடு கொலையிடுவ கொடியமுக படமணிவ
இன்பச் சுடர்க்கனக கும்பத் தரச்செருவ
பிருதில்புள கிதசுகமு மிருதுளமும் வளரிளைஞர்
புந்திக் கிடர்த்தருவ பந்தித் தகச்சடர்வ
கயல்மகர நிகரமிக வியன்மருவு நதியில்முதிர்
சங்கிப்பி முத்தணிவ பொங்கிக் கனத்தொளிர்வ
முலைமாதர் ;
வகுளமலர் குவளையிதழ் தருமணமு மிருகமத
மொன்றிக்க ருத்துமுகில் வென்றிட்டு நெய்த்தகுழ
லசையருசி யமுர்தக்ருத வசியமொழி மயில்குயிலெ
னும்புட் குரற்பகர வம்புற்ற மற்புரிய

---

* கும்பகன் பின் இளைய தம்பி = கும்பகர்ணன் தம்பியாகிய விபீஷணன். † மநு = மந்திரம். ‡ ககுபம் = திசை.

[குன்றக்குடி.]

வருமறலி யாணமொடு முடுகுசமர் விழியிணைகள்
கன்றிச் சிவக்கமகிழ் நன்றிச் சமத்துநக
நுதிரேகை-
வகைவனகமெ யுறவளைகள் சழல விடை துவளவித
மூண்டுட்ப்ர மிக்கநஜச கொண்டுற் றணைத்தவதி
செறிகலவி வலையிலென தறிவுடைய கலைபடுத
லுந்திப் பிறப்பறநி னைந்திட்ட முற்றுனடி
வயலிநகர் முருகசெரு முயல்பனிரு காகுமர
துன்றட்ட சிட்டகுண குன்றக் குடிக்கதிப
அருளாதோ;

தகுகுதகு தகுதகுகு திகுகுதிகு திகுதிகுகு
தங்குத் தகுத்தகது திங்குத் திகுத்திகிகு
சகணசக சகசகண செகணசெக செகசெகெண
சங்கச் சகச்சகண செங்கச்செ கச்செகண
தனனதன தனதனன தெனனதென தெனதெனன
தந்தத்த னத்தனன தெந்தத்தெ னத்தெனன
தனனு-
தகுதகு தகுதகுதி திகுதிதிகு திகுதிகுதி
தங்குத் தகுத்தகுகு திங்குத் திகுத்திகுகு
டணணடண டணடணண டிணிணிடி ணிடிணிடிணிணி
டண்டட்ட டட்டடண டிண்டிட்டி டிட்டிடிணி
தாரதா தரதார திரிரிதிரி திரிதிரிரி
தன்றத் தரத்தார தின்றித் திரித்திரிரி
யெனதாளந்;

தொகுதிவெகு முரசுகர டிகைடமரு முழவுதவில்
தம்பட்ட மத்தளமி னம்பட் டடக்கைபறை
பதலைபல திமிலைமுத லதிரவுதிர் பெரியதலை
மண்டைத் திரட்பருகு சண்டைத் திரட்கழுகு
துடர்நிபிட கருடனட்ர் தாகாட மொகுமொகென
வந்துற் றிடக்குடர்நி ணந்துற் றிசைத்ததிர
முதுபேய்கள்-

சனகனரி நெறுநெறென வினிதினிது தினவினைசெய்
வெங்குக் குடத்தகொடி தங்குக் குகுக்குகென
வடனமிடு திசைபரவி நடன்மிட வடவிரவி
திங்கட்ப்ர பைக்கதிர்கள் மங்கப்ர சித்தகுல
துரக்கஜ ரதகடக முரணரண நிருதர்விறல்
மிண்டைக் குலைத்தமர்செய் தண்டர்க் குரத்தையருள்
பெருமாளே. (௨)

407. கடினதட கும்ப நேரென
வளருமிரு கொங்கை மேல்விழு
கலவிதரு கின்ற மாதரொ டுறவாடிக்-
கனவளக பந்தி யாகிய
நிழல்தனிலி ருந்து தேனுமிழ்
கனியிதழை மென்று தாடனை செயலாலே;
துடியிடைது டங்க வாள்விழி
குழைபொரநி ரம்ப மூடிய
துகில்நெகிழ வண்டு கோகில மயில்காடை-
தொனியெழவி ளைந்து கூரிய
கொடுநகமி சைந்து தோள்மிசை
துயிலவச இன்ப மேவுத லொழிவேனோ;
இடிமுரச றைந்து பூசல்செய்
அசுரர்கள்மு றிந்து தூளெழ
எழுகடல்ப யந்து கோவென அதிகோப-
எமபடரு மென்செய் வோமென
நடுநடுந டுங்க வேல்விடு
இரணமுக சண்ட மாருத மயிலோனே;
வடிவுடைய அம்பி காபதி
கணபதிசி றந்து வாழ்தட
வயலிநகர் குன்ற மாநக ருறைவோனே-
வகைவகைபு கழ்ந்து வாசவன்
அரிபிரமர் சந்த்ர சூரியர்
வழிபடுதல்கண்டு வாழ்வருள் பெருமாளே.()

[குன்றக்குடி.]

408. நேசா சாரா டம்பர மட்டைகள்
பேசா தேயே சுங்கள மட்டைகள்
நீசா ளோடே யும்பழ கிக்கவர் பொருளாலே-
நீயே நானே யென்றொரு சத்தியம்
வாய்கூ சாதோ துங்க படத்திகள்
நேரா லேதா னின்றுபி லுக்கிகள் எவர்மேலும்;
ஆசா பாசா தொந்தரை யிட்டவர்
மேல்வீழ் வார்பால் சண்டிகள் கட்டழ
காயே மீதோ லெங்கு மினுக்கிகள் வெகுமோகம்-
ஆகா தாவே சந்தரு திப்பொழு
தோகோ வாவா வென்று பகட்டிக
ளாகா மோகா வம்பிகள் கிட்டிலு முறவாமோ;
பேசா தேபோய் நின்றுறி யிற்றயிர்
வாயா வாவா வென்று குடித்தருள்
போரா லேநீள் கஞ்சன் விடுத்தெதிர் வருதூது-
பேழ்வாய் வேதா ளம்பக டைப்பகு
வாய்நீள் மாளு ளுஞ்சா ளத்தொடு
பேயாளுள்போர்வென்றெதிரிட்டவன்மருகோனே;
மாசூ டாடா டும்பகை யைப்பகை
சூரா ளோடே வன்செரு வைச்செறு
மாசூ ராபா ரெங்கும ருட்பொலி முருகோனே-
வானு டேழ்நா டும்புகழ் பெற்றிடு
தேனு றேசூழ் துங்க மலைப்பதி
மாயூ ராவாழ் குன்றை தழைத்தருள் பெருமாளே. ()

409. பிறர்புக ழின்சொற் பயிலுமி ளந்தைப்
பருவம தன்கைச் சிலையாலே-
பிறவித ருஞ்சிக் கதுபெரு கும்பொய்ப்
பெருவழி சென்றக் குணமேவிச்;
சிறுமைபொ ருந்திப் பெருமைமு டங்கிச்
செயலுமெ ழிந்தற் டமதான-

தெரிவையர் தங்கட் கயலிவி ரும்பிச்
சிலசில புங்கப் படலாமோ;
தெறுவிதவஞ்சக் கபடமொ டெண்டிக்
கிலுமெதிர் சண்டைக் கெழுசூரன்;
கிளையுடன் மங்கத் தலைமுடி சிந்தக்
கிழிபட துன்றிப் பொருதோனே;
குறுமுநி யின்பப் பொருள்பெற அன்றுற்
பனமறு வுஞ்சொற் குருநாதா-
குலகிரி துங்கக் கிரியுயர் குன்றக்
குடிவளர் கந்தப் பெருமாளே. (ரு)

பு. 410. தவள மதிய மெறிக்குந் தணலாலே-
சரச மதனன் விடுக்குங் கணையாலே;
கவன மிகவு முரைக்குங் குயிலாலே-
கருதி மிகவு மயக்கம் படவோநான்;
பவள நிகரு மிதழ்ப்பைங் குறமானின்-
பரிய வரையை நிகர்க்குந் தனமேவுந்;
திவளு மணிகள் கிடக்குந் திருமார்பா-
திகழு மயிலின் மலைக்கண் பெருமாளே. (சா)

411. நாமேவு குயிலாலு மாமார னயிலாலு
நாடோறு மதிகாயும் வெயிலாலும்-
நார்மாதர் வசையாலும் வேயூது மிசையாலு
நாடாசை தருமோக வலையூடே;
ஏமாறி முழுநாளு மாலாகி விருதாவி
லேவாரும் விழிமாதர் துயரூடே-
ஏகாம லழியாத மேலான பதமீதி
லேகியு னுடன்மேவ அருள்தாராய்;
தாமோக முடனாயர் பால்தேடி யுரலூடு
தானேறி விளையாடு மொருபோதில்-
தாயாக வருசோதை காணாது களவாடு
தாமோத ரன்முராரி மருகோனே;

[பொதியமலை.]

மாமாது வனமாது கார்மேவு சிலைமாது
மாலாகி விளையாடு புயவீரா -
வானாடு புகழ்நாடு தேனாறு புடைசூழு
மாயூர கிரிமேவு பெருமாளே. (எ)

பொதியமலை.

[இது பாவநாசம். திருநெல்வேலி ஜில்லாவி லுள்ளது. அம்பாசமுத்திரம் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து 7-மைல். பாவநாசத் தலபுராணத்தைப் பார்க்க.]

412. மைக்க ணிக்கன் வாளி போல
வுட்க ளத்தை மாறி நாடி
மட்டு முற்ற கோதை போத முடிசூடி -
மத்த கத்தி னீடு கோடு
வைத்த தொத்தின் மார்பி னூடு
வட்ட மிட்ட வாரு லாவு முலைமீதே;
* இக்கு வைக்கு மாடை வீழ
வெட்கி யக்க மான பேரை
யெத்தி முத்த மாடும் வாயி னிசைபேசி -
எட்டு துட்ட மாதர் பாய
விச்சை யுற்றெ னுக மாவி
யெய்த்து நித்த மான வீன முறலாமோ;
துர்க்கை † பக்க சூல காளி
‡ செக்கை கக்க தாள வோசை
தொக்க திக்க தோத தீத வெனவோதச் -
சுற்றி வெற்றி யோடு தாள்கள்
சுத்த நிர்த்த மாடு மாதி
சொற்கு நிற்கு § மாறு தார மொழிவோனே;

* இக்கு=தமட. †பக்க=பகுப்புற்ற; முக் கிளையாகப் பிரிந்த.
‡ செக்கை=செங்கை. § மா றுதாரம்=மறு உத்தரம்.

திக்கு மிக்க வானி னூடு
புக்க விக்க மூடு சூரர்
* திக்க முட்டி யாடு தீர வடிவேலா -
செச்சை பிச்சி மாலை மார்ப
விச்சை கொச்சை மாதி னோடு
† செப்பு வெற்பில் சேய தான பெருமாளே. (௧)

413. ‡ வெடித்த வார்குழல் விரித்து வேல்விழி
விழித்து மேகலை பதித்து வார்தொடு
மிகுத்த மாமுலை யசைத்து நூலின்ம ருங்கினுடை -
மினுக்கி யோலைகள் பிலுக்கி யேவளை
துலக்கி யேவிள நகைத்து கீழ்விழி
மிரட்டி யாரையு மழைத்து மால்கொடு
தந்தவாய்நீர் ;
குடித்து நாயென முடக்கு மேல் § பிணி
யடுத்து பாதிகள் படுத்த தாய்தமர்
குலத்தர் யாவரு நகைக்க வேயுடல் மங்குவேனைக் -
குறித்து நீயரு கழைத்து மாதவர்
கணத்தின் மேலென அளித்து வேல்மயில்
கொடுத்து வேதமு மொருத்த னுமென
சிந்தைகூராய் ;
உடுட்டு டுடுடு டுடுட்டொ டோவென
திகுத்த தீதிகு திகுர்த்த தாவென
உடுக்கை பேரிகை தவிற்கு ழாமுமி ரங்குபோரில் -
உலுத்த நீசர்கள் பதைப்ப மாகிரி
துடிப்ப நீள்கட லெரித்து சூர்மலை
யுடைத்து நீதிகள் பாப்பி யேயவ ரும்பராரை ;

---

* திக்க = பலவழியாச் சிதற.

† செப்பு வெற்பு என்பது பொதிய மலை; 'செம்புடற் பொதிந்த தெய்வப் பொதியமும்'-[கல்லாடம்-65].

‡ வெடித்த = நறுமணங் கமழ்கின்ற.

§ பிணி அடுத்து உபாதிகள் படுத்த எனப் பிரிக்க.

[கழுகுமலை.]

அடைத்த மாசிறை விடுத்து வானுல
களிக்கு மாயிர திருக்க ணுனர
சளித்து நாளுமெ னுளத்தி லேமகிழ் முங்குமாரா -
அளித்த தாதையு மிருத்த மாமனும்
அனைத்து ளோர்களு மதிக்க வேமகிழ்
அகத்ய மாமுநி பொருப்பின் மேவிய
தம்பிரானே. (உ)

கழுகுமலை.

[இது திருநெல்வேலிக்கு வடக்கு 28-மைல். நல்லத்தம்புத்தூர் ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து 9-மைல்.]

414. குதலை மொழியினர் நிதிக்கொள் வாரணி
முலையை விலைசெய்வார் தமக்கு மாமயல்
கொடிது கொடிததால் வருத்த மாயுறு துயராலே -
மதலை மறுகிவா லிபத்தி லேவெகு
பதகர் கொடியவா ளிடத்தி லேமிக
வறுமைபுகல்வதே யெனக்குமோஇனி முடியாதே;
முதல வரிவிலோ டெதிர்த்த சூருடல்
மடிய அயிலையே விடுத்த வாகரு
முகிலை யனையதா நிறத்த மால்திரு மருகோனே -
கதலி கமுகுசூழ் வயற்கு ளேயளி
யிசையை முரலமா வறத்தில் மீறிய
கழுகு மலைமகா நகர்க்குள் மேவிய பெருமாளே. (க)

415. முலையை மறைத்துத் திறப்ப ராடையை
நெகிழ வுடுத்துப் படுப்பர் வாயிதழ்
முறைமுறை முத்திக் கொடுப்பர் பூமல ரணைமீதே -

அலைகுலை யக் * கொட் டணைப்ப ராடவர்
மனவலி யைத்தட் டழிப்பர் மால்பெரி
தவர்பொரு ளைக்கைப் பறிப்பர் வேசைக
ளுறவாமோ ;
தலைமுடி பத்துத் தெறித்து ராவண
னுடல்தொளை பட்டுத் துடிக்க வேயொரு
கறுவை வளைத்துத் தொடுத்த வாளியன்
மருகோனே -
கலைமதி யப்புத் தரித்த வேணிய
ருதவிய வெற்றித் திருக்கை வேலவ
கழுகு மலைக்குட் சிறக்க மேவிய பெருமாளே. (௨)

416. கோங்க முகையு மெலிய வீங்கு புளக களப
மேந்து குவடு குழையும் படிகாதல் -
கூர்ந்து குழையை அமளி தோய்ந்து குலவு மினிய
தேங்கு கலவி யமுதுண் டியல்மாதர் ;
வாங்கு பகழி விழியை மோந்து பகலு மிரவும்
வாய்ந்த துயிலை மிகவுந் தணியாத -
வாஞ்சை யுடைய அடிமை நீண்ட பிறவி யலையை
நீந்தி அமல அடிவந் தடைவேனோ ;
ஓங்க லனைய பெரிய † சோங்கு தகர மகர
மோங்கு ததியின் முழுகும் பொருசூரும் -
ஒய்ந்து பிரமன் வெருவ வாய்ந்த குருகு மலையில்
ஊர்ந்து மயிலை யுலவுந் தனிவேலா ;
வேங்கை யடவி மறவர் ஏங்க வனிதை யுருக
வேங்கை வடிவு மருவுங் குமரேசா -
வேண்டு மடியர் புலவர் வேண்ட அரிய பொருளை
வேண்டு மளவி லுதவும் பெருமாளே. (௩)

---

* கொட்டணைப்பர் = கொண்டணைப்பர். † சோங்கு = கப்பல்.

வள்ளியூர்.

[இது திருநெல்வேலி ஜில்லா நாங்குநேரி தாலூகா கஸ்பா நாங்குநேரிக்குத் தென் கிழக்கு 5-மைல். கோயில் மலைமேலிருக்கின்றது. சுப்பிரமணிய ஸ்வாமி ஸந்நிதி விசேடமானது. கோயிலுக் கருகில் இரண்டு அழகிய திருக் குளங்கள் உள்ளன. சித்திரைமாத உற்சவத்தில் அநேகங் காவடிகள் வருகின்றன.]

417. அல்லில் நேருமி னதுதானும் -
அல்ல தாகிய உடல்மாயை ;
கல்வி னேரஅ வழிதோறுங் -
கையு நானுமு லையலாமோ ;
சொல்வி நேர்படு முதுசூரர் -
